342

[illegible]

[illegible] — 1964

7   C 6-8


JL
Y592 5G m211, N28
N34·7-6-8
158912

201

...ட்டிப் பரிசு — விவரத்திற்கு உள்ளே பா...

343

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.
துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி ௭ | சீமுக ௵ ஆனி, ஆடி, ஆவணி௴ | பகுதி ௬, ௭, ௮.

6, 7, 8

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை ... | 129 |
| மதிப்புரை ... | 132 |
| கைத்தறிகளின் தற்கால நிலை ... | 133 |
| நாமகள் விழா ... | 135 |
| விகடத் துணுக்குகள் ... | 137 |
| மாதர் பகுதி: பெண்ணுலகம் ... | 138 |
| குண்டலியோகம் ... | 140 |
| கொடாகண்டன் கொடைவள்ளலானான் ... | 142 |
| இந்திய சரித்திரக் கதைகள் : பிரயாணியின் கனவு ... | 146 |
| செங்குந்த யாத்திரைவாசி ... | 149 |
| போய் வாருங்கள் ... | 151 |
| ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் வரலாறு ... | 153 |
| நமது அதிர்வெடி .... | 157 |
| நேயர்கள் கடிதம் ... | 159 |
| நினைவுக் குறிப்புகள் ... | 162 |
| உலகப் போக்கு ... | 165 |
| வர்த்தமானம் .... | 167 |
| நான்காவது மகாநாட்டு வரவு செலவுக் கணக்கு விவரம் ... | 169 |
| செங்குந்தர் கல்விநிதி உபகாரச் சம்பளம் ... | 173 |
| செங்குந்தர் கிளர்ச்சி ... | 174 |


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 APR 1934
MADRAS

காரியாலயம்:—2/17, பவழக்காரத் தெரு, சென்னை.

## புதிய பட்டதாரிகள்

ஶ்ரு. M. R. பெருமாள் முதலியார், பி. ஏ., (ஹானர்ஸ்)
முத்திபாளையம், கோவை (பி. ஏ. ஹானர்ஸ் பட்டம்)

,, S. வேலாயுத முதலியார், பி. ஏ., (ஹானர்ஸ்)
ஒட்டம் பட்டு, தென்னாற்காடு ஜில்லா (பி. ஏ. ஹானர்ஸ் பட்டம்)

,, C. குமாரசாமி முதலியார், பி. ஏ.,
சிதம்பரம், தென்னாற்காடு ஜில்லா (பி. ஏ. பட்டம்)

,, A. S. நடேச முதலியார், பி. ஏ., எல். டி.,
குடியேற்றம், வடாற்காடு ஜில்லா (எல். டி. பட்டம்)

,, R. பகவதிமுருக முதலியார், பி. ஏ.,
திருநெல்வேலி டவுன் (பி. ஏ. பட்டம்)

,, C. சுப்பிரமணிய முதலியார், எம். ஏ., எல். டி.,
கோட்டாறு (எம். ஏ. பட்டம்)

---

### சங்கக் கட்டண வரவு

| | | | |
|---|---|---|---|
| இராமநாதபுரம் ஜில்லா, மண்டல மாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் 1931, 32-ம் வருட கட்டண வரவு | ரூ. 20 | 0 | 0 |
| ஷை ஜில்லா, இரகுநாதபுரம் செங்குந்தர் சங்கத்தின் 1932-ம் வருட கட்டணம் | ரூ. 5 | 0 | 0 |
| வடஆற்காடு ஜில்லா, அசனம்மா பேட்டை செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் 1933-ம் வருட கட்டணம் | ரூ. 5 | 0 | 0 |
| ஷை ஜில்லா, ஆம்பூர் கஸ்பா செங்குந்த வாலிபர் சங்கக் கட்டணம் 1933-ம் வருஷத்திற்கு | ரூ. 5 | 0 | 0 |

---

### அநுதாபங்கள்

#### கல்லாலம்பூண்டி

திரு. பொன். மு. வே. முனிசாமி முதலியார் காலமடைந்தது கேட்டு நாம் அளவு கடந்த வருத்தமடைகின்றோம். அவர்களை நாம் நேரில் சந்தித்ததில்லையாயினும் மித்திரன் வளர்ச்சியை நாடிப் பெரிதும் உழைத்தவர் என்பது அடிக்கடி பிரசாரகர்களால் நாம் கேட்டு வந்தோம். கல்லாலம்பூண்டியைப் பொருத்தவரை செங்குந்த மித்திரன் வீட்டுக்கு ஒன்று இருக்க வேண்டுமென அவாவி அதற்கேற்ப உழைத்து வந்தார். அன்னார் பிரிவு நமக்குப் பெருத்த நஷ்டமாகும்.

#### திருநெல்வேலி

நமது குல இளஞ்சிங்கங்களுள் ஒருவரும், நிறைந்த அறிவுடையவருமாகிய திருநெல்வேலி வக்கீல் திரு. V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்களது அருமை மனைவியார் உடல் நலிவாயிருந்து சில நாட்களுக்கு முன் இவ்வுலகம் நீத்தமை கேட்டு மிக வருந்துகின்றோம். நமது சமூக முன்னேற்றத்தில் அளவு கடந்த ஆர்வமுடைய திரு. முதலியாரவர்கட்கு நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

#### கருவேந்தநாதபுரம்

திரு. நா. அருணசல முதலியாரவர்கள் 16-10-33-ல் சிவபதமடைந்ததாகக் கேட்டு மிக வருந்துகிறோம். அருணசல முதலியார் திரு. அமிர்தலிங்க முதலியாரவர்களது தந்தையார். தென்னாப்பிரிக்கா ஜோஹானஸ் பர்கில் செங்குந்தர் சங்கம் ஸ்தாபித்து முன்னேற்றக் கிளர்ச்சி செய்வதற்குத் துணைபுரிந்தவரும், அடிக்கடி சந்தாக்களும் நன்கொடையும் வசூலித்து அனுப்பி வந்தவரும் திரு. அமிர்தலிங்க முதலியாரே யாகும். தந்தை பிரிவாற்றாமல் வருந்தும் திரு. முதலியார்க்கு எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இவ்வுலகம் நீத்த இவ்விருவர்களது ஆன்மாவும் சாந்தியுற வேண்டுகிறோம்.

---

### வியாசம் எழுதுவோருக்கு

மித்திரனில் பிரசுரிப்பதற்காக அனுப்பப்படும் சங்க நடவடிக்கைகள், பொதுக்கூட்டங்கள், உபந்யாசங்கள் சம்பந்தமான விஷயங்களை மிகச் சுருக்கமாக எழுதி யனுப்புமாறு வேண்டுகிறோம். இவைகள் சம்பந்தமாக எழுதி யனுப்பப்பெறும் நீண்ட வியாசங்கள் பிரசுரிக்கப்பட மாட்டாதென அறிவித்துக் கொள்ளுகிறோம்.

343

# செங்குந்தமித்திரன்

OFFICE OF THE REGISTRAR
12 APR 1934
MADRAS

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு
ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.
துணையாசிரியர் :—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி—எ] ஸ்ரீமுகஹு ஆனி, ஆடி, ஆவணிமீ [பகுதி சு, எ, அ.

### கடவுள் வணக்கம்

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே. (கந்தரலங்காரம்)

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### 'வந்தால் வா! போனால் போ!'

'இப்படி நீங்கள் நினைப்பீர்களா? இல்லை, ஒருக்காலும் நினைக்கமாட்டீர்கள். என் வருகையை பிரதிமாதமும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருப்பீர்கள். நானோ, தள்ளாடித் தள்ளாடி உங்களிடம் வந்து சேர இரண்டு மாதங்களுக்குமேலாகின்றன. என்னைச் சரியாக போஷித்தால் மாதந்தோறும் முதல்தேதி உங்கள் விருந்தினராயிருப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை' என்று, நமது நண்பர் செங்குந்த மித்திரனார் கூறுகின்றார். போஷிக்க வேண்டியது நமது கடமையல்லவா?

ஓரே வள்ளலாரை எவ்வளவு காலத்திற்கு எதிர்பார்க்க முடியும்? சிறுதுளி பெருவெள்ளம். வருடம் ஒன்றரை ரூபாய்—தினந்தோறும் முக்கால் தம்பிடி—ஒவ்வொருவரும் அளிக்க முன்வந்தால் தளர்வேது; தள்ளாட்டமேது, வீறுநடையும், மலர்ந்த முகமும் அவரிடம் குடிகொள்வது நிச்சயம். இச் சிறு உபகாரம் நமது ஆப்த நண்பருக்கு—குல மித்திரருக்குச் செய்யவில்லை யாயின், குலநலத்திற்கு நாம் வேறு என்னதான் செய்யக்கூடும்; சற்று சிந்தித்துப் பாருங்கள்.

உபசாரஞ் செய்ய இயலாதாயினும் அபசாரப் படாமலாவது இருத்தலாகாதா? நமது மித்திரனாது கஷ்டநிலையில் அவருக்குக் கைலாகு தரவேண்டியது நமது கடமையாயிருக்க நாம் அவரிடமே கடன் பட்டிருப்பது தர்மமாகுமா? ஏழரை ரூபாய், ஆறு ரூபாய், நான்கரை ரூபாய்,—ஆயிரம் பேருக்கு மேல்—அடேயப்பா! எவ்வளவு தொகையாகும். மூன்று ரூபாயும், ஒன்றரை ரூபாயு முடையவர் இன்னும் அநேகர் இருக்கிறார்கள். இந்தத் தொகை எல்லாம் கிடைத்து விட்டால் மித்திரனார்க்குக் குஷால்தான். நவீன நாகரீக அலங்காரம், ஆடையாபரணம், பேச்சு எல்லாம் அவரிடம் நிறைந்துவிடும்.

ஆம், ஆம். இந்த உயரிய நிலையில் அவரைக் கண்டுகளிக்க நீங்களனைவரும் ஆசைப்படுகிறீர்கள். அவரது கடனைச் செலுத்திவிடுங்கள். ஆடி[illegible] 15-ம் நாள் அழகு சோபிக்க; இனிய முகத்துடன் உங்களை வந்து தரிசிப்பார். இதை உங்களுக்கு ஞாபகப்படுத்தவே சந்தா டிமாண்டு தனித்தனியே தபாலில் வருகிறது. எங்கே! அதைப்பார்த்த பின் தங்கள் கடமையை நிறைவேற்றினவர்கள் எத்தனை பேரென அடுத்[illegible]தம் தெரிவிப்போம்.

58712

## தீர்மானங்கள் உருக்கொள்கின்றன

‘[illegible] பணச் செலவுதான்; பலன் என்னமோ பூச்சியமாகவே இருக்கிறது. பண நெருக்கடியான இக்காலத்தில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் செலவுசெய்து கண்ட பலன் என்ன?’ என்று ஒரு சிலர் உபதேசிப்பது நமது காதுகளில் அடிக்கடி அடிபடுகின்றது. மகாநாடுகளுக்காகச் சில ஆயிரங்கள் செலவாவது உண்மையே. என்றாலும், அவர்கள் நினைப்பது போன்று அது அடியோடு பயன் தராமற் போகவில்லை. இதனை நிரூபித்துக் காட்டுவதற்கான அநேக அத்தாட்சிகள் அவ்வப்போது நமது சமூகத்தில் நிகழ்ந்து வருவது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

திருநெல்வேலி திரு. S. பாக்கியநாத முதலியாரவர்களும், தேவக்கோட்டை திரு. S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியாரவர்களும் எழுதிய கடிதங்கள்பிறிதோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளிலிருந்து மகாநாடுகள் எவ்வளவு தூரம் பயன் விளைத்து வருகின்றன வென்பது நன்கு விளங்கும்.

1928-ம் வருடம் ஈரோட்டில் கூடிய நமது முதலாவது மகாநாட்டில் குலாபிமானிகள் சிலரது உள்ளத்தில் குழப்பத்தையும் ஆவேசத்தையும் தோற்றுவித்தற்குக் காரணமாயிருந்த ஒற்றுமை மணம், விதவா விவாகமாகிய தீர்மானங்கள் இப்போது சர்வ சாதாரணமாய் நிறைவேறுவதிலிருந்தும், நாளடைவில் அவை செயலில் உருக்கொள்ளத் தொடங்கியதிலிருந்தும் மகாநாடுகள் எவ்வளவு பயனுடைத்தென்பது தெளிவாய் விளங்குகின்றதன்றோ? முதன் மகாநாட்டுக்குப் பின் பல ஒற்றுமை மணங்கள் நடந்துவிட்டன. அநேக ஊர்களில் சங்கமும் கல்விச்சாலையும் நிறுவப்பட்டன. பலர் பட்டதாரிகளானார்கள். சிக்கனம் அநேக இடங்களில் கையாளப்பட்டது. அவ்வளவோ! இன்று விதவா விவாகமும் நடந்திருக்கிறதென்பதை யுணரும்போது மகாநாட்டுத் தீர்மானங்களுக்குத் திட்டம் வகுத்து வேலை செய்ய வேண்டிய காலம் சமீபித்து விட்டதென்றே நாம் நம்புகிறோம்.

## பிரசவ மாய்விட்டது

நெடுநாளாய்ப் பிரசவ வேதனையிலிருந்த பிண்டம் கடந்த 29-ந்தேதி வெளியாகி விட்டது. புதிய சீர்திருத்தப்படி ஏற்படப் போகும் பொதுத்தேர்தல் நெருங்க நெருங்க இத்தகைய கர்ப்ப வேதனைகளும், பிரசவங்களும் அநேகமாய்த் தோன்றக்கூடும். அனைவரும் எதிர்பார்த்தபடி சென்னையில் காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சி என்றதோர் புதிய அமைப்பு ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தியாரது தலைமையில் ஸ்தாபித்தாய் விட்டது. அக்கட்சியின் ரகசிய நோக்கம் சட்டசபையைக் கைப்பற்றுவதேயாகும். இதுவரை மூச்சு விடாமல் பதுங்கியிருந்த சாமிநாத சாஸ்திரிக்களும், சர்மாக்களும், முத்துரங்கங்களும், சீனிவாச அய்யங்கார்களும் இனி புற்றீசலெனப் புறப்படலா மல்லவா?

## ஸ்தல ஸ்தாபன உரிமைகள்

‘சுதந்திரம், சுதந்திரம்’ என்ற பேரொலி ஒவ்வொரு மேடையிலும் வான்பிளக்கக் கிளம்புகிறது. ஒவ்வொரு பத்திரிகையிலும் மனங்குழையத் தோன்றுகிறது. ஆனால், கையிற் கிடைத்த சுதந்திரங்களோ காற்றில் பறக்கின்றன. கிராம பஞ்சாயத்துகள், யூனியன் போர்டுகள், நகரசபைகள், தாலூக்கா-ஜில்லாக் கழகங்கள், பஞ்சாயத்துக் கோர்ட்டுகள்—எல்லாம் தமது சுதந்திரத்தைக் கையாளு முறையை நோக்குவோர்க்கு நெஞ்சம் நடுக்குறு மென்பதில் ஐயமில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை கட்சிகளும், சுயநலப் பேய்களும், தயவு தாட்சணியங்களும், ரகசியப் பணமுடிப்புகளும் சுதந்திரத்தைச் சூறையிடுகின்றன. பொது நோக்கும், சத்திய நெறியும் தமிழ்நாட்டு ஸ்தல ஸ்தாபனங்களின் கொடிய விரோதிகள்.

எல்லா தேசங்களிலும் கட்சி உண்டு. ஆனால், அவை யெல்லாம் ராஜீயக் கொள்கையினை அடிப்படையாகப் பெற்றனவே யன்றி சுயநல மொன்றையே குறிக்கொண்டவையன்று. தமிழ் நாட்டின் நிலை இதற்கு முற்றும் மாறுபட்டது. அநேக அங்கத்தினர்கள் ராஜீயம் என்றால் ‘அணுவுக்கு எத்தனை’ என்று கேழ்க்கத்தக்க பரந்த ஞானம் படைத்தவர்கள்.

ஒருநாள் அங்கத்தின ரொருவரைச் சந்தித்தோம். அவர் சிறிது உலகஞானம் படைத்தவர்; வாக்கு சாதுரியமுடையவர்; ஒரு கட்சியின் கொரடா. ‘உமது கட்சியின் நோக்கமென்ன?’ என்று அவரைக் கேட்டோம். அவர் சிறிதுந் தயக்கமின்றி ‘எங்கள் கட்சியின் நோக்கமெல்லாம் இப்போது ஓரே நோக்கந்தான். சேர்மன் கட்சியாரது பிரேரணை எனைத்தையும்—நல்லதாயினுஞ் சரி, கெட்டதாயினுஞ் சரி—வீழ்த்த முயற்சிப்பதும், கூடிய சீக்கிரம் சேர்மன் மசாநா முதலியாரைப் பதவியிலிருந்து இறக்குவதற்கான தந்திரங்களைக் கையாள்வதுமே யாகும்’ என்று படபடப்பாகக் கூறினார்.

இத்தகைய மனோபாவ முடையாரது கையில் சிக்கிய சுதந்திர தேவியின் பாடு, அந்தோ—பெரும்பாடுதான்.

பொறுப்பற்ற மகான், அறிவில்லாக் குடுக்கை, அநியாய பகதூரா யிருப்பினும் தனக்கு மட்டும் ஒத்தாசை செய்பவரா யிருந்தால் எந்த அங்கத்தினரும் அவரைச் சிம்மாசனாதிபதி யாக்கத் தயார்; அவர் ஜாடைப்படி கையை உயர்த்தவோ, தாழ்த்தவோ வெட்கப்படுவதுமில்லை.

இப்புண்ணியாத்மாக்களிட மிருந்த சுதந்திரத்தை அரசாங்கத்தார் பிடுங்கிக்கொண்டனரென்றும், கமிஷனர் நியமனம் தங்கள் உரிமைக்கே உலைவைத்து விட்டதென்றும் யாராவது கூறினால் அதற்குச் செவிசாய்க்கவேண்டுவது அவசியமின்றெனவே நினைக்கிறோம்.

மின்சார இஞ்சினீயர் நியமன விஷயமாய்க் காஞ்சீபுரம் நகர சபையார், ஆதியிலிருந்து நடந்து கொண்ட முறை யொன்றே இதற்குப் போதிய உதாரணமாகும். கட்சிப் பிணக்கினால் ஆரம்பமுதல் ஒற்றுமைப் படாத இவர்களுக்கு அரசாங்க நியமனத்தின் பின் உரிமை பறிக்கப்பட்ட தென்ற ஞானம் உதித்திருக்குமானால், அது, தும்பை விட்டு வாலைப்பிடிக்கும் முட்டாள் ஞானமென்றே நாம் கூறுவோம். இதைப் பார்த்த பின்னரேனும் ஒவ்வொரு நகரசபை அங்கத்தினரும் ஒற்றுமையுடன் பொதுநலத் தொண்டாற்ற முன்வருவார்களென எதிர்பார்க்கிறோம்.



## தந்திரம் பலிக்கவில்லை

‘போன மச்சான் திரும்பி வருகிறான் பொக்கை வாயோடே’ என்பதுபோல், லங்காஷயப் பிரதிநிதிகள் வெறுங்கையுடன் இந்தியாவிலிருந்து திரும்பிச் செல்லுகிறார்கள். ‘காக்கை அண்ணே! நீ இவ்வளவு அழகா யிருக்கிறாயே, உன் குரல் எவ்வளவு இன்பமாயிருக்குமோ’ என்று ஏய்த்த நரியின் தந்திரம் ஜப்பானிடம் செல்லவில்லை. ஜப்பான் பிரதிநிதிகளது முதுகைத் தடவிக் கொடுத்து பிரிட்டிஷ் ஜவுளிகளுக்கு இந்தியாவில் அதிக சலுகை பெற்றுக்கொள்ளலாமென நினைத்து வந்த லங்காஷயப் பிரதிநிதிகள் ஏமாற்றத்துடன் செல்கிறார்கள். ஜப்பான் பிரதிநிதிகளிடம் அவர்கள் செய்து கொள்ள முயன்ற சமரச முயற்சி யனைத்தும் வீணாய்விட்டது.

ஆனால், ‘ஏ, அத்தான்! நாங்கள் இருக்கிற வரையில் உங்களுக் கென்ன குறை’ என்று ஏலேலோ பாடத்தக்க முத்தண்ணாக்கள் இந்தியாவில் எப்போதும் இருக்கிறார்கள். பம்பாய் மில்காரர் சங்கத் தலைவர் ஸ்ரீமோடியின் முயற்சியால் கூட்டப்பட்ட இந்திய மில்காரர் கூட்டத்தில் லங்காஷயர் ஜவுளிகளுக்கு இந்திய அரசாங்கம் விதித்திருக்கும் தீர்வையை 25-ல் இருந்து 20-ஆகக் குறைக்கவேண்டுமெனத் தீர்மானித் துள்ளனராம்.

தீர்வையைக் குறைக்குமாறு முயற்சிக்கும் மோடிக்கு ஆங்கிலேயரின் புகழ்மாலை கிடைப்ப தென்னமோ நிச்சயந்தான். அவர், சாஹிப் அல்லது பஹதூராக மாறினாலும் மாறக்கூடும். ஆனால், அது இந்தியாவுக்குப்பெரும் நஷ்டந்தான். இப்பொழுதே லங்காஷயரின் போட்டியை இந்தியா சமாளிக்க முடியாமல் தயங்குகிறது. இன்னும் வரி குறைக்கப்படுமானால் அதன் கதி என்னவாகும்? ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் எப்படியும் சமரசம் ஏற்படுமெனத் தெரிகிறது. அதன்படி, இந்திய பருத்தியை ஜப்பான் வாங்கிக் கொள்வதற்குப் பதிலாக குறிப்பிட்ட அளவுள்ள ஜப்பான் ஜவுளியை இந்தியா வாங்கியே தீரவேண்டும். அத்துடன் லங்காஷயர் துணிகளும் மலிவான விலைக்கு விற்கத் தொடங்கிவிடுமாயின் இந்திய மில் துணிகளோ, கைத்தறித் துணிகளோ செலவாவது மிகவும் கஷ்டமாகும். அப்படியாயின், கைத்தறிகளின் கதி அதோகதி யென்றே நாம் தீர்மானிக்க வேண்டி யிருக்கிறது.




## அருணகிரி நாதர் அருளிச்செய்த திருமுறைத் திரட்டு

இத்திருமுறைத் திரட்டு ஸ்ரீலஸ்ரீ நாகலிங்க முனிவரவர்களால் அழகியதாளில் குறிப்புரையுடன் திருத்தமாக அச்சிட்டு வெளியாக்கப் பெற்றிருக்கிறது. திருப்புகழ், கந்தரலங்காரம் கந்தரனுபூதி முதலிய கௌமார பிரபந்தங்களை அன்றாடம் பாராயணம் செய்வதற்கு இது மிகவும் உபயோகமுள்ளது.

இந்நூலின் பதிப்புரையில், காஞ்சித் தெய்வ கோட்டத் தமர்ந்து முருகக்கடவுளை வந்தனை வழிபாடு செய்யாமற் செய்து வந்த முனிவர் குழாங்கள் திருப்புகழ் முதல் கந்தரனுபூதி ஈறுகவுள்ள செஞ்சொற் பிரபந்தங்கட்கு முறையாகத் திருமுறை கண்டவர்களாவார்கள் எனச் சொல்லப் பட்டிருக்கிறது. இத்திருமுறை வகுப்பின் விபரம் கீழ்வருமாறு:—

திருப்புகழை திருப்படைவீடு, குமரன் கோயில், சங்கரன் கோயில், எங்குமுள கோயில் என நான்கு திருமுறைகளாகவும், திருவகுப்பை ஐந்தாந் திருமுறையாகவும் கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி ஆகிய பிரபந்தங்களை ஆறுந்திரு முறையாகவும் அமைத்துள்ளனர். இவ்வாறு திருமுறைகளினின்றும் திருமுறை வரிசைப்படி தேர்ந்தெடுத்த பாக்களினாலாயதே இத்திருமுறைத் திரட்டாகும்.

இதற்கு திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் எழுதியுள்ள முன்னுரையில் அருணகிரி நாதர் சரித்திரச் சுருக்கம் ஆராய்ச்சி முறையில் எழுதிச் சேர்க்கப்பட்டிருப்பதும், ஸ்ரீலஸ்ரீ முனிவரவர்கள் எழுதியுள்ள பதிப்புரையில், திருப்புகழாசிரியர் முருகக் கடவுளை வேண்டிக் கொண்டபடி கடைசியில் சுவாமிகள் கிளியுருவம் பெற்றார் என்ற கதை தக்க காரணங்களுடன் மறுக்கப் பெற்றிருப்பதும் குறிப்பிடத் தக்கனவாம்.

இப்புத்தகம் முன்னுரை, பதிப்புரை, செய்யு ளகராதி நீங்கலாக 400 பக்கங்களையுடையது.

இதன் விலை ரூ. 2 0 0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர்,
காமாக்ஷிவிலாசம்,
கீழ்ப்பாக்கம், சென்னை.

---

## நாடக போட்டிப் பரிசு ரூபா 25

செல்வம், கல்வி, ஆசாரம், உலகஞானம், ராஜீயம் ஆகிய மக்கட்கு அவசியமான ஒவ்வொரு துறையிலும் செங்குந்தர்களின் நிலை எவ்வாறிருக்கிற தென்பதையும், உலகத்தோடொட்ட அவர்களும் மேனிலை யடைதற்கு இன்றியமையாதனவாகிய சீர்திருத்தங்கள் யாவை என்பதையும் விளக்கவல்ல நாடகங்கள் எழுதியனுப்ப வேண்டும். அவைகளுக்குள் சிறந்த ஒன்றுக்கு ரூபா 25—0—0 பரிசளிக்கப்படும். நாடகம் இரண்டு மணிநேரம் நடிப்பதற்குரியதாய், மாணவர்களுக்கேற்ற தெளிவான நடையில் அமைந்திருக்கவேண்டும். நவம்பர்மீ 30-ந் தேதிக்குள் மித்திரன் காரியாலயத்திற்கு வந்து சேரும் விடைகள் இப்போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும். பரிசு பெறத் தகுதியுள்ளதாக ஒன்றுகூட வராவிட்டால் யாருக்குமே பரிசு கொடாமலிருக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. 'நாடகப் பரிசு', செங்குந்த மித்திரன் ஆபீஸ், பவழக்காரத் தெரு, சென்னை. என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

(இதற்குரிய பரிசுத்தொகை வாலாஜாபாத் இந்துமத பாடசாலையார் தர இசைந்துள்ளார்கள்)



# கைத்தறிகளின் தற்கால நிலை

[திரு. ஸ்ரீதரராவ் விளக்கம்]

இந்தியாவில் செலவாகும் துணிகளில் பெரும் பகுதி கைத்தறியில் நெசவு செய்யப்பட்டதே. வமிச பரம்பரையாக நெசவுத் தொழிலைப் பின்பற்றிவரும் நெசவுத் தொழிலாளரே அந்தத் துணியை சப்ளை செய்து வருகிறார்கள். இந்தியர்களில் பெரும்பாலாருக்கு நெசவுத் தொழிலே ஜீவனத் தொழிலாகவும் இருந்து வருகிறது. ஆயினும், அத்தொழிலாளருக்கு முக்கியமாக மூன்று குறைகள் இருந்து வருகின்றன.

1. நெசவுத் தொழிலாளர் உற்பத்தி செய்யும் துணிகளை இடைத்தரகர்கள் வாங்கி விற்பனை செய்து இலாபமடைகிறார்கள்.

2. நெசவுத் தொழிலாளர் மிக்க வறிய நிலையில் இருந்து வருவதினால், சீர்திருத்த முறையில் நெசவுத் தொழில் செய்ய அவர்களுக்குச் சக்தியில்லை.

3. நெசவுத் தொழிலாளர் கல்வி யறிவில்லாதவர்களா யிருக்கிறார்கள்.

இடைத்தரகர் தொல்லையை ஒழிக்கும் பொருட்டு, கைத்தொழில் இலாகா அதிகாரிகள் முயற்சியினால் பல இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களால் பாராட்டத்தக்க பலன் ஏற்படவில்லை. நெசவுத் தொழிலாளர் வறுமையினால் இடைத்தரகர்களுக்குத் தேவை இருந்துகொண்டே இருக்கிறது. இந்தத் தரகர்களும் வம்ச பரம்பரையாக அத்தொழிலைப் பின்பற்றி வருவதினால் அத்தொழிலில் மிக்க தேர்ச்சி பெற்றவர்களா யிருக்கின்றார்கள். ஆகவே, நெசவுத் தொழிலாளருக்கு அவர்கள் முட்டின்றி வேலை கொடுத்து வருகிறார்கள். நெசவுத் தொழிலுக்குத் தரகர்கள் இருக்க வேண்டியது அவசியமாகவே இருக்கிறது. தரகர்களை ஒழிக்க எத்தனையோ பேர் எவ்வளவோ முயற்சி செய்தும் தோல்வி யுற்றிருப்பதற்கு இதுவே காரணமாகும்.

நெசவுத் தொழிலாளரின் வறுமைக்கு அவர்களுடைய அஞ்ஞானமும் ஒரு காரணமாயிருக்கிறது. 2000 வருஷங்களுக்கு முன் தம் முன்னோர்கள் நெசவு செய்த மாதிரியே இப்பொழுதும் நெசவு செய்கிறார்கள். உடலுழைப்பைக் குறைக்கும் நவீனதறிகள் மூலம் வேலை செய்ய அவர்கள் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. கடைசியாக ஆலைக்காரர் போட்டியும் கைத்தறிக்கு ஒரு பெரிய இடையூறாக இருந்து வருகிறது. தற்காலத்துக் கைத்தறி நெசவு அழியாமலிருப்பதற்குக் காரணங்கள் இரண்டு. முதலாவது காரணம் நெசவுத் தொழிலாளரின் பழைமைப்பற்று; இரண்டாவது காரணம் பொது ஜனங்களின் நாட்டுத் துணி அபிமானம்.

### யந்திரத் தறிகளால் ஏற்படும் நன்மைகள்

கைத்தொழில் இலாகா அதிகாரிகள் நூதனத் தறிகளால் ஏற்படும் அனுகூலங்களைப் பொது ஜனங்களுக்குத் திருஷ்டாந்த மூலம் விளக்கிக் காட்டி வருகிறார்கள். யந்திரத்தறிகளை உபயோகிக்க இப்பொழுது நெசவுத் தொழிலாளர் சிறிது சிறிதாக முன் வருகின்றனராயினும், ஏனைய விஷயங்களில் கர்நாடக முறைகளையே பின்பற்றி வருகிறார்கள். நெசவுத் தொழிலாளரின் பழைமைப் பற்றைப்பற்றி நாம் குறைகூறவும் வழியில்லை. பல நூற்றாண்டு காலமாய், வமிச பரம்பரையாய் அவர்கள் தொழில் நடத்தி வருவதினால் பழைய முறைகளைக் கைவிட அவர்களுக்கு விருப்பமுண்டாகவில்லை. ஆகவே, தரகர் தொல்லையை ஒழித்து, நேரடியாக இலாபம்பெற நெசவுத் தொழிலாளருக்கு உதவிபுரிய கைத்தொழில் இலாகா அதிகாரிகளால் முடியவில்லை. இதுவரை அவர்கள் முயற்சி வெற்றி பெறவில்லையானாலும், வெற்றிபெறக் கூடிய காலம் விரைவில் வருமென்று அவர்கள் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள்.

### யந்திரத் தறிக்கு செலவு அதிகம்

இதுபோன்ற பிரச்சினைகளில் கைத்தொழில் இலாகா அதிகாரிகள் தமது முழு கவனத்தையும் செலுத்தி வருவதினால், கைத்தறிகளை யந்திரத் தறிகளுக்கு நிகராக விருத்தி செய்ய அவர்கள் முயல்வதில்லை. அதிக சிரமமின்றியும் துரிதமாகவும் நெசவு செய்யக்கூடிய ஒரு நூதனத் தறியைக் கண்டுபிடிக்கும் பொருட்டு ஒரு இஞ்சினீயரை சென்னை கைத்தொழில் இலாகா டைரக்டர் நியமனம் செய்திருக்கிறார். ஆனால், அவரால் நூதனத் தறி கண்டுபிடிக்கப்பட்டதாய் சென்ற வருஷத்திய கைத்தொழில் இலாகா ரிப்போர்ட்டு கூறவில்லை. நூதனத் தறியின்

தேவையை எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆயினும், நூதனத் தறிகளை தாராளமாக அமுலுக்குக் கொண்டுவர முயற்சி செய்யப்படவில்லை. கைத்தறி, யந்திரத் தறிகளைவிட மோசமானதென்று அதிகாரிகள் நம்பி, யந்திரத்தறிகளை நெசவுத் தொழிலாளர் உபயோகப்படுத்தும்படி அவர்கள் முயற்சி செய்து வருகிறார்கள். ஆனால் 5 யந்திரத் தறிகள் உள்ள ஒரு சிறு தொழிற்சாலையை நடத்த வேண்டுமானால், ஒரு நிபுணரை நியமனம் செய்தாலல்லாமல் முடியாது. அவருக்குக் குறைந்த பக்ஷம் 60 ரூபாயாவது சம்பளம் கொடுக்க வேண்டும். யந்திரத் தறிகளுக்குப் பழுதேற்பட்டால் நாட்டு வேலைக்காரரால் அதைப் பழுது பார்க்கவும் முடியாது. பம்பாய்க் கம்பெனிகள் மூலந்தான் பழுது பார்க்க வேண்டியதாக இருக்கிறது. இந்த சங்கடங்களுக்கிடையில் யந்திரத் தறிகளை உபயோகித்தாலும் ஒற்றை இழை நூலினால் நெசவு செய்ய முடியாது. கைத்தறியிற்றான் ஒற்றை இழை நூலினால் நெசவு செய்ய முடியும். கைத்தறி உபயோகமற்றதென்றும் அதைச் சீர்திருத்த முடியாதென்றும் அதிகாரிகள் நம்பிக்கொண்டு இருப்பதினால், சென்றகால நூற்றாண்டு காலத்துக்கிடையில் கைத்தறியை விருத்திசெய்ய முயற்சி யெடுக்கப்படவே இல்லை. ஆகவே குடிசைக் கைத்தொழில் விருத்தியடைய வேண்டுமானால் யந்திரத் தறிகளையே யாவரும் கையாள வேண்டுமென்ற முடிவுக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள்.

### கைத்தறியும் நல்லதே

இனி, கைத்தறியைவிட யந்திரத்தறி எந்த அம்சத்தில் மேலானதென்று ஆராய்ந்து பார்ப்போம். யந்திரத் தறியில் நான்கு அல்லது ஆறு கதிர்கள் வேலை செய்ய "டிராப்" பெட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பூவேலைகள் செய்வதற்கு ஒரு மாதிரி யந்திரமும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதை ஓட்டுவதற்கு அவ்வளவு பெரிய திறமையும் தேவையில்லை. மெஷின் தறிகளுக்கு அமைக்கப்படும் யந்திரங்களைக் கைத் தறிகளோடும் இணைத்துப் பல மாதிரித் துணிகளைத் துரிதமாக நெசவு செய்யலாமென்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

### நெசவுத் தொழிலாளர் அலட்சியம்

கைத்தறி நெசவுத் தொழிற்சாலைகளையும் இலாபகரமாக நடத்தலாம். யந்திரத் தறிகளில் நெசவு செய்ய முடியாத விளிம்புக் கரைகளுடன் கைத்தறிகளில் அழகான புடவைகளும் வேஷ்டிகளும் நெசவு செய்யலாம். பரம்பரை நெசவுத் தொழிலாளரின் கைவன்மை உலகப் பிரசித்தமானதாகவும் இருக்கிறது. ஆனால், இந்தச் சீர்திருத்த முறையை நெசவுத் தொழிலாளர் இதுகாறும் என் பின்பற்றவில்லை யென்ற கேள்வி பிறக்கலாம். சீர்திருத்த முறைகளைக் கையாளச் சிறிது பயிற்சி அவசியம். நெசவுத்தொழிலாளர் வறியவர்களாயிருப்பதினால் அந்தப் பயிற்சிபெற சக்தியற்றவர்களா யிருக்கிறார்கள். நெசவுத் தொழிலாளர் அலட்சிய பாவனைக்கும் வறுமையே காரணம். கைத்தொழில் இலாகா முயற்சியும் இதனாலேயே வெற்றி பெறாமலிருக்கிறது.

### இளைஞர்களுக்கு உதவி

நெசவுத் தொழிற் பள்ளிக்கூடங்களில் பயிற்சி பெற்ற அநேக இளைஞர்கள் இப்பொழுது இருந்து வருகிறார்கள். சிலருக்கு மேஸ்திரி உத்தியோகமும் நெசவுத் தொழில் ஆசிரியர் உத்தியோகமும் கிடைத்திருந்தாலும் பெரும்பாலோர் தொழில் இல்லாமலே இருந்து வருகிறார்கள். வேறு கதியில்லாததினால் அவர்களில் சிலர் இதர தொழில்களைப் பின்பற்றவும் தொடங்கிவிட்டார்கள். அவர்களுக்குத் தாமாக நெசவுத் தொழில் செய்ய முடியவும் செய்யாது. ஏனென்றால் பரம்பரை நெசவுத் தொழிலாளரினாலேயே நெசவுத் தொழில் நடத்தப்பட்டு வருகிறது. ஆகவே, நெசவுத் தொழிற் பரீட்சையில் வெற்றி பெற்றவர்கள் பாடு மிகத் திண்டாட்டமாகவே இருந்து வருகிறது.

இந்நிலைமை நெடுங்காலம் நிலைபெற்றிருத்தல் கூடாது. புதுக்கோட்டை சமஸ்தானத்தில் முன்னர் இரண்டு நெசவுத் தொழிற் பள்ளிக்கூடங்கள் இருந்து வந்தன. அவ்விரண்டும் ஒன்றாக சென்ற வருஷத்தில் இணைக்கப்பட்டது. போதுமான அளவுக்கு அதிகாரிகள் உபகாரச் சம்பளம் கொடுத்தும், நெசவுத் தொழில் கற்க மாணவர்கள் முன் வராததினால் அந்தப் பள்ளிக்கூடமும் இப்பொழுது மூடப்பட்டு விட்டது. இந்தப் பள்ளிக்கூடங்களில் கிரியாம்சையில் உபயோகப்படக்கூடிய பயிற்சி அளிக்கப்படவில்லை. இந்த மாணவர்களுக்கு ஆரம்பத்திலேயே கைத்தறியில் வெறுப்புப் பிறந்து விடுகிறது. ஆகவே யந்திரத் தறியில் வேலை செய்யவே அவர்கள் விரும்புகிறார்கள். கைத்தறியோடு யந்திரங்கள் இணைக்கப்பெற்ற பள்ளிக்கூடங்கள் இல்லவே இல்லை. மேலே கூறிய நூதன யந்திரங்களை இணைத்து கைத்தறியைத் தாராளமாக விருத்தி செய்யலாம். அந்த முறைகளைப் பள்ளிக்கூடங்களில் போதனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

ரூபா முப்பது அனுப்புங்கள்.
பரம்பரைப் பொக்கிஷம் உங்களைத் தேடிவரும்.



# நாமகள் விழா

[S. சுந்தரன், அசனம்மாப்பேட்டை]

மக்களை மாக்களினின்றும் வேறாகப் பிரித்துக் கூறுவது, மனவுணர்வு பற்றியேயாகும். மனவுணர்வாவது, தக்கதின்ன தகாதன வின்னவென்றுன்னியறிதற்குக் காரணமாகிய பகுத்தறிவுணர்வாகும். இத்தகைய உணர்வு இல்லாதவர்களை, மக்களெனல் பொருந்தாது. மாக்கள் என்று கூசாது கூறிவிடலாம். அப்பகுத்துணர்வு ஒரு விலங்கினிடம் விளங்கக் காண்போமாயின், அதனை விலங்கென்று வெறுத் தொதுக்காமல், மக்களினத்தொடு சேர்த்து மாண்புறப் போற்றலாம் என்னுமிக் கருத்தினைக் கவியரசராய கம்பர்,

"தக்க தின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்ன லராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்க வேலவ் விலங்கும் புத்தேளிரே"

என்னுங் கம்பராமாயணச் செய்யுளிற் கவினுறக் கூறியுள்ளார். மனத்தை அது சென்ற விடத்திலெல்லாம் செல்லவிடாமல், தக்கதிது தகாததிதுவென்று நடு நிலையினின்று எண்ணிப் பார்த்துத் தீங்குதரக்கூடிய தகாத நெறியில் மனஞ் செல்லுமாயின், அதனை அந்நெறியினின்றும் வலிந்து திருப்பி, நலந்தரக்கூடிய தக்க நெறியிலுய்க்க வேண்டும். இவ்வாறு செய்யாரெனின், உயர்ந்தோரென்று கூறப்படும் மக்களும் விலங்கேயாவர். பிறப்பால் விலங்காயினும் மனுவறத்தின்படி தக்கநெறி புக்கதாயின் விலங்கும் தேவராகும் என்பது இச்செய்யுளின் விழுமிய பொருளாகும்.

இனி, இத்தகைய பகுத்துணர்வு எத்தகையோரிடமமைந்துள்ள தெனக்காணுமிடத்துப் புறனடைபோன்று விலக்காகக் கல்லா மக்கள் சிலரிடமுமமைந்துள்ளதெனினும், சிறப்பாகப்பெரும்பாலும் கற்ற மக்களினிடமே நலந்தீங்கினை—தக்கன தகாதனவற்றை, எண்ணியறியும் திண்ணியவுணர்வு இலங்கக் காண்கின்றோம். விதியுமிதுவேயாகும். இதுபற்றியே தெய்வப் பாவலராய திருவள்ளுவரும்,

"விலங்கொடு மக்களனைய ரிலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர்"

எனத் திருவாய் மலர்ந் தருளினர். இலங்குநூல் கற்றோரே தக்கதின்ன தகாதன வின்னவென்றெண்ணிப் பார்க்கத் தகுதியுடையாராவர். அதனால் அவர்களே மக்களாவர். கல்லாதார் அங்ஙனஞ் செய்ய இயலாமையின் விலங்கினத்தையொப்பர் என்றார்.

இவ்வாறு, மக்களை மக்களாக்குவது கல்வியேயென்பதைக் கண்டுணர்ந்த நாள்முதல், நம் நாட்டவர் அக்கல்வியின் மீது அளவுகடந்த பற்றுவைத்துப் பாராட்டத் தலைப்பட்டார்கள். அப்பாராட்டுதலானது, நாளடைவில் தெய்வத் தொடர்புகொண்டது. மக்களை மக்களாக்கும் ஒரு சக்தியைத் தெய்வமென்றோ, தெய்வத்தினும் மேம்பட்ட தொன்றிருக்குமாயின் அஃதென்றோ கூறினுந்தான் வரு மிழுக்கென்னை? அவ்வளவு மமைவுடையதேயாகும்.

மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண்துஞ்சாது, எவ்வெவர் தீவினையு மேற்கொள்ளாது, செல்வியருமையு நோக்காது, அவமதிப்புக்கொள்ளாது, கருமமே கண்ணாயிருந்து கற்கும் பலரில் சிலர் மட்டும் வியத்தகு மேனிலையடைந்து விளங்கவும், சிலர் தங்கள் முயற்சியினளவே பயனெய்தவும், மற்றுஞ் சிலர் முயற்சி வீணாதலையுங் கண்ட மக்கள், ஒரேசாலையில் ஒரே ஆசிரியரிடத்துக் கற்கு மக்களில் இத்தகைய மாற்றத்திற்குக் காரணம் என்னவென்று எண்ணிப் பார்த்து வேறொன்றும் விளக்கமாகத் தோன்றாமையின், தெய்வத்தின் அருளும், அருளின்மையுமே யென்று கொண்டார்கள்.

அத்தெய்வத்தினையும், ஆண்பாலாகக் கொள்ளாமல் பெண்பாலாகக்கொண்டார்கள். ஆண்மக்களினும் பார்க்கப் பெண்மக்களே அருள் மிகுதியுமுடையராகலின், தங்கள் வேண்டு கோளுக்கிரங்கி யருள் செய்யவேண்டுமென்று கருதிய அத்தெய்வத்தினையும் பெண்பாலாகக் கொண்டார்கள்போலும். கல்வி கற்பதற்கும், கற்பிப்பதற்கும் காலே பெருந்துணையாகவுள்ள தாகலின் அத்தெய்வத்திற்கு உறைவிடம் நாவாகத்தானிருக்கவேண்டுமென்று கருதினார்கள். பூவிலுறைபவளை பூமகள் என்பது போல, நாவிலுறைபவளை நாமகள் என்றார்கள். சிறப்புப் பற்றி உறைவிடம் நாவென்று கொண்டு நாமகள் என்ற பெயரால் வழங்கினும், பொதுவாகக் கல்விக்குத் துணையாய ஏடு, எழுது கோல், முதலியவற்றையும், கலையோடு தொடர்புடைய மற்றுஞ் சில பொருள்களையும் கலைமகள் உறையுமிடமென்று கருதினார்கள்.

இவ்வாறு கல்வியின் அருமையையும், அக்கலைத் தெய்வத்தின் பெருமையையும், கண்டுணர்ந்த நம் முன்னோர்கள், அக்கலைத் தெய்வத்தை

மனத்தாலும், வாக்காலும் வழிபடுவோராயினர். அதோடு ஆண்டுக்கொருமுறை விழாவெடுத்தார்கள். விழாவின்போது ஏடுகளை யெல்லாம் அடுக்கி, எழுதுகோலை வைத்து, பூமாலை புனைந் தேத்திப் புகழ்ந்தார்கள். வண்ணமும், சுண்ணமும், மணங்கெழு சந்தனமும் வாரி யிறைத்தார்கள். இவ்வாறு நம் நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் நாமகள் விழாவைப் பற்றிக் கூற வந்த, 20-ம் நூற்றாண்டுக் கவிஞராய பாரதியார்,

"செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்
வந்த னமிவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங்கு எளிதன்று கண்டீர்
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி யதன்மேல்
சந்த னத்தை மலரை யிறைத்தல்
சாத்தி ரம்இவள் பூசனை யன்றாம்"

என்று நாம் செய்யும் பூசனையின் சிறப்பின்மையைப் பொருந்தக் கூறுகின்றார். மற்றும் நாமகளை வழிபடும் நல்ல முறையை யறிய விரும்புவோர்க்குப் பாரதியார் நன்கு அறிவுறுத்துகின்றார்.

"வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலு முள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வி யிலாததோ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கு மமுதமெ னன்னை
கேண்மை கொள்ளவழியிவை கண்டீர்"


என்னும் ஆர்வ மொழிகள், நாமகளை வழிபடும் நல்ல முறையை நன்கு அறிவுறுத்துவன வாகும். "கோயிலில்லா ஊரிற் குடியிருக்கவேண்டாம்" என்றார் நம்முன்னோர்கள். ஆலயங்கள் அமைப்பதினும் அறிவை வளர்க்கும் கல்விச் சாலைகள் அமைப்பது நூறாயிரமடங்கு மேலானதாகுமென்று கருதிய நமது பாரதியார், கல்வியில்லாத ஊரில் கால்வைத்தலு மாகாதென்பதைக் குறிப்பாலுணர்த்தியதோடமையாது, அவ்வூரைத் தீயிட்டுக் கொளுத்திவிடவேண்டுமென்று கூறுகின்றார். அதுவே நாமகட்குச் செய்யும் நல்ல பணிகளுளொன்றாகு மென்றுங் கருதுகின்றார். வீடுகள் தோறும் கலைகள் விளங்கச் செய்ய வேண்டு மென்றும், வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளியேனும் மிளிரச் செய்ய வேண்டுமென்றும், நாடுமுழுவதிலுமுள்ள ஊர்களிலும் நகரங்களிலும் பலபல பள்ளிகள் அமைக்கவேண்டுமென்றும் பாரதியார் கூறும் நாமகள் வழிபாட்டு முறை நல்லதொரு முறையாகும். இதுவே நாமகளின் நட்பைப் பெறுதற்குச் சிறந்த வழியென்று பாரதியார் கருதுகின்றார். அவர் கருத்திற் கிசைய, வரும்ஆண்டு நாமகளார் விழாவிற்குள் ஊர்கள் தோறும் பள்ளிகள் தோன்றவும், மக்கள் நாவினில் நாமகள் உறையவும் பெருமுயற்சி செய்வோமாக.

---


## கார்த்திகை முதல் தேதி

பல சித்திரப் படங்கள், உலக விநோதங்கள், ஹாஸ்யத் துணுக்குகள், சிறு கதைகள், அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அநுபவக் குறிப்புகள், பலவகைப் பரிசுகள், போட்டிப் பந்தயங்கள் மார்க்கட்டு நிலவரங்கள் ஆகிய அநேக நூதன விஷயங்களுடன் கார்த்திகைமீ முதல் தேதி நமது மித்திரன் தவறாமல் வந்து உங்களைச் சந்திப்பான். அந்தத் தேதியை எதிர் பாருங்கள்.




[பி. சே. மா.]

ராமாயணப் பிரசங்கி:—இதில் எவ்வளவு கல்பனைகள்! என்ன ஆநந்தம்!! எத்தகைய இன்பம்!!!

கூட்டத்திலிருந்த ஓர் குடியன்:—ஏஞ்சாமி! அத்தனை கள்பானைகள் உங்களுக்கு ஏன். எனக்கு ஒன்றுமட்டும் கொடுங்கள், போதும்.

* * *

விருந்தாளி:—ராமா! உனக்கு என்னென்ன கணக்குகள் தெரியும்?

ராமன்:—வகுத்தல் மட்டும்.

விருந்தாளி:—வகுத்தல் மட்டுமா வாத்தியார் சொல்லித் தருகிறார்.

ராமன்:—வாத்தியார் சொல்லித் தரவில்லை. எங்கப்பா—தினந்தோறும்—முறுக்கு வாங்கி வருவார். நானு, அக்கா, தம்பி மூணு பேரும் பங்கு போட்டு போட்டு, வாத்தியாரில்லாமல் வகுத்தல் மட்டும் கத்தூண்டோம்.

* * *

சென்னைக் கடற்கரையில் ஒரு பெரிய தேசீயக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. அச்சமயம் தலைவருக்கு ஒரு கடிதம் வந்தது. அதைப் பார்த்ததும் தலைவர் எழுந்து "கிருஷ்ணையர் வீடு தீப்பற்றி எரிகிறதாம். இங்கு அவர் இருந்தால் சீக்கிரமாய்ப் போகட்டும்" என்றார்.

உடனே கூட்டத்திலிருந்த அநேகர் எழுந்தோட ஆரம்பித்தனர்.

தலைவர்: 'சற்றுப் பொறுங்கள். நான் சரியாய்க் கவனிக்கவில்லை. அது அநந்தராம கிருஷ்ணையர் வீடு' என்றார்.

'அநேக வந்தனம்' என்றுசொல்லி அனைவரும் அமர்ந்தனர்.

* * *

மாமனார்:—என்ன! உன் மனைவி அதிக சுருசுருப்பு உடையவள், அல்லவா?

மருமகன்:—ஆம்! ஆம்! எனக்கு வேண்டும் பொருள்களை என் கண்ணில் படாமல் பத்திரப்படுத்துவதிலும், அவை வேண்டாப்போது நான் காணும்படி வைப்பதிலும் எப்பொழுதும் மிக சுருசுருப்பாகவே இருப்பாள்.

* * *

உபாத்தியாயர்:—மணி! ஏண்டா இன்றைக்கு இவ்வளவு நேரங்கழித்து வந்தாய்?

மணி:—இல்லை சார்! நான் சரியானநேரத்தில் புறப்பட்டும் ஒரு அடி முன்னே நடந்தால் இரண்டடி பின்னால் போய்க்கொண்டிருந்தேன், நான் என்ன செய்வது.

உபாத்தி:—அப்படியானால் இப்பொழுது எப்படி இங்கு வந்து சேர்ந்தாய்?

மணி:—கடைசியாக யோசித்தேன். பின்புறம் திரும்பி வீட்டுப் பக்கம் நடக்க ஆரம்பித்தேன். அதனால் இந்நேரத்திலாவது இங்கு வந்து சேர முடிந்தது.

* * *

நண்பன்:—ஒவ்வொரு பங்கிலும் அரை காலன் பெட்ரோல் வாங்குகிறாயே, மொத்தமாய் வாங்கிக் கொள்கிறது தானே.

மோட்டார் சொந்தக்காரன்:—மோட்டாருக்கு ஏதேனும் விபத்து நேர்ந்தால் எல்லா எண்ணையும் வீணாய்ப் போகுமே. இது உனக்கு எட்டவில்லையோ!

* * *

ராமன்:—நண்ப! என்மகன் சர்வ முட்டாளாயிருக்கிறான். மிகச் சிறிய புத்தகத்திலும் ஒரு பக்கம் படிப்பதற்கு ஒரு மணி நேரம் செலவு செய்கிறான்.

ராமண்ணன்:—இதிலென்ன ஆச்சரியம், என் மகன் ஒரு பக்கத்தில் ஒரு வரியைப் படிப்பதற்கு இரண்டு மணி நேரம் செலவழிப்பது வழக்கமாச்சே.




# பெண்ணுலகம்

[திரு. மு. த. வேலாயுத முதலியார், கோச்சின்சைனா]

"பெண்கள் சமத்துவம்" என்னும் பேரொலி பரவாத ஊர் இல்லை; தேயமில்லை; கண்டமில்லை. யாண்டும், "பெண்களுக்குச் சுதந்தரமளித்தல் பேறுடைத்தாம்" என்னும் வீராவேசம். பெண்கள் ஓட்டுரிமை சம்பந்தமாய் ஏற்பட்ட விவாதத்தால், பிரஞ்சு மந்திரி சபை சென்ற ஆண்டில் வீழ்ச்சி யடைந்தது என்பதைப் பத்திரிகை உலகம் நன்குணரும். உலகின் முற்போக்கை உணர்வோர், பெண்கள் முன்னேற்றம் என்னும் ஒண்மொழிக்கு உறுபகையும் உன்னுவரோ? அங்ஙனம் உன்னிடின் "மாக்கள்" கூட்டத்தினரில் ஓர் அங்கத்தினராய்ச் சேர்ப்பதை விட, நவீன உலகம் என்ன சன்மானம் அன்னோர்க்கு ஆற்ற வல்லது? இற்றைநாளில் "ஆண்களுக்கே சமத்துவம் அம்பலத்திலிருக்க, பெண்களுக்குத்தானா சமத்துவங் கொடுக்க வரப்போகின்றனர் ஆண் குழுவினர்" என பெண் கூட்டத்தினர் எண்ணி, "தன்கையே தனக்குதவி" என்னும் முதுமொழி போல், சமதர்மப் போரில் இறங்கி விட்டனர். அதனால் வெற்றி ஆபரணம் பூண்டனர்—பூணுகின்றனர்.

காலம் செல்லச் செல்ல, பெண்கள் கொண்ட சுதந்தர வேட்கையின் பயனால் பெரும் மாறுதலடைந்து வருகிறது. பெண்களுக்கு இதுவரையில்தான் செய்ய உரிமை யுண்டென்று, கட்டுப்படுத்திய காலம் கடந்துவிட்டது. ஆண் கூட்டத்தினர்க்குப் பெண்குழுவினர் இளைத்தவரல்லர் என்னுங் கொள்கை உலகத்தில் அதிதீவிரமாய்ப் பரந்து வருகின்றது. பெண்களை அடிமைத் தளையில் பிணித்துவைத்து அதற்கேற்ற பலசாத்திர ஞானங்கள் சாற்றி வந்த சழக்கர்கள், இற்றை ஞான்று உயிரோடிருந்திடின்,-உயிர்த்திடின் ஒரு கூட்டத்தினர் மீது, இதுகாறும் சுமத்திவந்த—சுமத்து இற பழிக்கு பெண்ணுலகம் மான நஷ்ட வழக்குத் தொடுக்க முனைந்து நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

பெண்கள் எழுச்சி எங்கும் ஓங்குகிறது; யாண்டும் பல கூட்டங்கள் நடைபெறுகின்றன; அவர்களிடும் தீர்மானங்கள் "மாதர் சுதந்தரம்" என்னும் அடிப் படையைப் பற்றியனவாம். அடுப்பூதிக் கொண்டிருந்து, உலக அநுபவம் தெரியா அந்தக் காலம் மலையேறி பல ஆண்டுகளாயின.

இப்படிச் சொல்வதனால் வெள்ளிவீதியார், ஔவையார், மங்கையர்க்கரசியார் முதலிய இன்னோரன்ன எழிலுறு மங்கையர் எழுந்திட்ட நாடு இந்தியா என்பதை ஒரு போதும் மறந்தேனல்லேன்.

இற்றை நாளில் மேனாட்டுப் பெண்கள், பற்பல வீரச் செயல்களில் வெற்றி அடைந்து வருவதைத் தினமும் பத்திரிகை வாயிலாய் நன்குணரலாம். மேனாடே யல்ல; கீழ்நாடுகளில் மிகத் தீவிரமாய் சமத்துவம் அடைவது ஜப்பான், சைனா முதலிய தேயங்கள் எனப்படும். ஜப்பான் தேசம் ஒவ்வொரு அம்சத்திலும் முன்னேற்றமடைந்து வருவதுந் தவிர, பெண்கள் முன்னேற்றம் பெரிதும் அடைந்து வருகிறது. ஆங்கு, பெண்கள் மிகவும் வீரத்துடன் வண்டிகளுக்குப் பாதை காட்டும் பிரிகேடியர்களாய் இருக்கின்றனர். சீனதேசத்தில் சமீபத்தில் யுத்த வீரர்களுக்குத் தலைவியாய் இருந்தவள் ஓர் பெண்ணணங்காவாள். பற்பல தேயங்களிலும் பெண்கள் ஆகாய விமான ஓட்டிகளாய் இருப்பதைக் கண்டாலே, நங்கைக் குழுவினரின் வீரத்தை நன்குணரலாம். பிரசித்திபெற்ற ஸ்ரீமதிகள் அமி ஜான்சன் ஹில்ஸத் என்னும் ஆகாய விமானிகள் எவ்வளவு வீரத்துடன் தங்கள் விமானங்களை ஓட்டிச் செல்கின்றனர் என்பதை ஊன்றிப் பார்த்திடின், பெண்ணுலகம் எத்தகைய நிலைமையில் மாறிக்கொண்டு வருகிறதென்பதை யூகிக்கலாமன்றோ?

பெண்கள் தீவிர முன்னேற்றத்தை ஞாபகப்படுத்த இக்கட்டுரை எழுத நேர்ந்தமையான், ஓர் பிராஞ்சுப் பத்திரிகையில், இற்றைய பெண்கள் (Les femmes d' aujourd' hui) என்னும் மகுடந்தந்து எழுதப்பட்ட வியாசத்தின் மொழி பெயர்ப்பைக் கீழே தந்து, எனது கட்டுரையையும் ஒருவாறு முடித்துக்கொள்கின்றேன்.



## இன்றைய பெண்கள்

சென்ற இருபதாண்டாக உலகம் முன்னேறிக் கொண்டு வருகிறது. ஆனால், பெண்ணுலகமே பிரமிக்கத்தக்க பெரும் மாறுதலடைந்து வருகின்றது. இம்முன்னேற்றம் நன்மை பயக்க வல்லதா? அல்லது தீமை பயக்க வல்லதா? இவ்விரு விஷயங்களையும் நோக்கும்போது ஒன்றுக்கொன்று முரண்படுகின்றது. ஆனால் ஒவ்வொரு விஷயத்திற்கும் மதிப்பில்லாம லில்லை.

இன்று இவைகளைப் பற்றி விவாதித்து வருவதைப் பார்த்து வருகின்றோம். இப்பொழுதைய பெண்களின் முன்னேற்றத்தையும், ஆண்பெண் இருபாலார்க்கும் எவ்விதத்திலும் உள்ள சுதந்தரம் ஒன்றே என்பதை உன்னி அடைய விழையும் மார்க்கத்தையும், இத்தகைய நெறியால் சித்தியடைந்து பெரும் வெற்றிக்குப் பெண்குழுவினர் வந்ததையும் மாத்திரங் குறிப்பிட விரும்புகின்றோம்.

முப்பது வருடகாலமாக விசேடமாய் மகாயுத்தத்திலிருந்து (great war) அடுப்பூதிக் கொண்டிருந்த பெண்கள் வீரத்துடனும் துணிவுடனும் ஆண்களுடன் போட்டிபோட சமதர்மப் போரில் இறங்கிவிட்டனர். மாதர்கள் வேலைகளைத் திறமையுடன் செய்யவும், வருவாய் தேடவும் ஆசிக்கின்றனர். இவர்களேயன்றி இன்றைய நவீன உலக வாலிபப் பெண்கள் குடும்ப வாழ்க்கையிலேயே சுற்றித்திரிந்ததை விட்டு, சுயேச்சையான வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விட்டனர்.

நாளுக்குநாள் பெண்கள் பலர் டாக்டர்களாகவும், லாயர்களாகவும், உபாத்தியாயினிகளாகவும் அமர்ந்து வருவதைக் காணலாம். பல்கலைக் கழகங்களிலும், சிற்ப சாஸ்திரக் கல்லூரிகளிலும், நார்மல் ஸ்கூல் களிலும், மற்றும் பிற கழகங்களிலும் இடம் பெற்று வருவதைக் காணலாம். மாஜி உள்நாட்டு மந்திரியின் புதல்வியார் ஒருவர் சுரங்க இஞ்சினீயராக இருக்கின்றார்.

முன்னொருகால் கல்வி மந்திரி, பெண்களுக்கு உத்தியோகந் தருவது நல்லதல்ல வென்று சொன்ன நியாயம் ஒழுங்கானதல்ல. காரணம், சட்டத்தால் உள்ள பிரகாரம் பெண்கள் "கட்டாய ராணுவ சேவை" புரியாதது முன்னிட்டு உத்தியோகத்தில் சேர்க்க லாயக்கில்லை என்பதாம். அப்படி யூகிப்பது நியாயமில்லை. பெண்களுக்கு ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் இடம் அளிக்கும் பொழுது, மற்ற உத்தியோகங்களில் அங்ஙனம் இடம் அளிப்பதைப் பற்றி வாதாடி, அவர்களை மற்ற உத்தியோகங்களில் வைக்கும் காலம் சமீபித்து விட்டது.

முப்பது வருட காலத்திற்குள் பெண்கள் புரியும் வேலை மிகவும் பிரசித்தி பெற்று வருகின்றது. 1860-ம் ஆண்டில் பிராஞ்சு தேயத்தில் 40 பெண்களே வேலையிலிருந்தனர். இப்பொழுது 80 லக்ஷம் பேர்கள் வேலையி லிருக்கின்றார்கள். 120,000 பெண்கள் பிராஞ்சு தேயத்தில் பற்பல உத்தியோகங்களில் இருந்து வருகின்றார்கள். 70,000 பெண்கள் கல்வி யிலாக்காவில் வேலை செய்கின்றனர். பாரீஸ்மா நகரத்தில் மாத்திரம் 2,900 உபாத்தியாயினிகள் இருக்கின்றனர். தபால் தந்தி ஆபீசுகளில் 18,600 பெண்கள் இருந்து வருகின்றனர். இவர்களில் 5,342 பேர்கள் போஸ்டாபீசில் மானேஜர்களாகவும், 693 பேர்கள் தபால் கொடுக்கும் லெட்டர் பியோன்களாகவும் இருந்து வருகின்றனர். ரயில்வே இலாக்காவில் 6356 மாதர்கள் உத்தியோகஸ்தராய் இருக்கின்றனர். இவர்களில் 5,300 பெண்கள் டிக்கட் விற்பவர்களாகவும், 142 பெண்கள் சுகாதார அதிகாரிகளாயும் இருக்கின்றனர்.

சர்க்கார் தொழிலாளர்களாக 15,000 பெண்கள் இருந்து வருகின்றனர். சிறைக் கூடங்களில் 600 பேர் ஜெயில் வார்டர்களாக இருக்கின்றார்கள்.

இன்னும் பிரசித்தி பெற்ற உத்தியோகங்களில் இருக்கும் பெண்களைப் பற்றிக் கூறவேண்டுமோ? உள்நாட்டு மந்திரி, கல்வி மந்திரி இவர்களின்கீழ் அநேக மாதர்கள் ஜெனரல் இன்ஸ்பெக்டர்களாக இருக்கின்றனர். உயர்தரக் கல்லூரியில் 46 பெண்கள் புரோபசர்களாக இருந்து வருகின்றனர். 150 ஸ்திரிகள் பாரீஸ் இசைக் கல்லூரிகளில், பாடல், வாத்தியம் முதலியவைகளைப் போதிக்கும் கலாஞானிகளாக மிளிர்கின்றனர் இன்னும் பதினெண்மர், தொழில் இலாக்கா எஜமானிகளாக இருக்கின்றனர்.

சர்க்கார் காரியாலயங்களில் உத்தியோகம் பார்த்துவரும் இக்காரிகைகளே யன்றி, அநேக மாதர்கள் சர்வ சுதந்தரத்துடன், நாடகம், சங்கீதம், ஓவியம், சிற்பம், மற்றும் பிற இலக்கியக் கலைகளிலும் சிறந்து விளங்கி வருகின்றனர். பிராஞ்சு தேயத்தில் சேன் (Seine) டெப்பார்த்மான் (department) என்னும் பிரிவில் மாத்திரம் 120 நங்கையர்கள் பல் கட்டுவதற்கு சலூன் வைத்திருக்கின்றனர். பிராஞ்சு தேயத்தில் மொத்தம் 200 பெண் டாக்டர்கள் இருந்து வருகின்றனர். பாரீஸ் நீதி மன்றங்களில் 70 மாதர்கள் அட்வகேட்களாக இடம் பெற்றுள்ளனர். இன்னும் ஐவர் புத்தகசாலை வைத்துக்கொண்டிருக்கின்றனர். இருவர் சிற்ப சாஸ்திரிகளாக இருக்கின்றனர். இன்னும் பார்மசி வைத்திருப்பவர்கள் எண்ணிலர்.

பண்டைய காலத்தில் ஆண்களுக்கென ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களை இன்றைய நாளில், பெண்கள் நிர்வகித்து வருகின்றனர். இவ்விதமாகவே, ஆண்கள் புரிந்து வந்த ஒவ்வொரு வேலையையும், பெண் கூட்டத்தினர் தாங்களே புரிவதாய் வீரத்துடன் வெளி வருவதே, பெண்ணுலக முன்னேற்றத்தின் அடையாளங்களாம். இதனால் கருதுவது யாதெனின், ஜன சமூகத்தில் மாதர்கள் சமத்துவம் அடையப் பெரிதும் விழைகின்றனர் என்பதே.

# குண்டலியோகம்

"மெய்ஞ்ஞானத்தை, துரியாதீதநிலையை,
பதிஞானத்தை அடைவதற்கான வழி
குண்டலியோகம் ஒன்றேயாகும்."

—சுவாமி விவேகானந்தர்.

குடிலாங்கி, குண்டலினி, புஜங்கி, சக்தி, ஈசுவரி, அருந்ததி என்னும் பெயர்களையுடைய குண்டலி சக்தி மூலாதாரத்தைத் தனதிருப்பிடமாகக் கொண்டு, பிரகாசமுடையதாய், தாமரை நூல் போன்று விளங்கும் ஒரு சக்தி என்று மேலோர் கூறுவர். அதுவே, தேகத்தின்கண்ணிருந்து வெளிப்படும் ஒரு மகத்தான சக்தியாக விருக்கிறது. அது அக்கினிபோலப் பிரகாசத்தையும், பல ஞாயிறுகளின் உஷ்ணத்தையும் உடையதாகச் சொல்லப் படுகிறது. சாதாரணமாய் அது பாம்பு வடிவாய் லிங்கத்தை மூன்றரை சுற்று சுற்றிக் கொண்டு கந்தத்தின்மேலே உறங்கிக் கொண்டிருப்பதாகக் கூறுவர். கந்தமென்பது நான்கு விரற்கடை நீளமும் அகலமும் உடையதாய் குந்தத்திற்கு இரண்டு விரற்கடைமேலும், குய்யத்திற்கு இரண்டு விரற்கடை கீழுமாகவுள்ள ஸ்தானத்திலுள்ளது. குண்டலி உறங்குகையில் தனது வாலைத் தன்வாயினால் பற்றிக்கொண்டு பிரம்மரந்தரத்திற்குச் செல்லும் வழியை, சுழிமுனை நாடியின் அடிப்பாகமாகிய பிரம்மத்துவாரத் தண்டை மூடிக்கொண்டிருக்கிறது. இக்குண்டலி சக்தியைக் காடநித்திரையினின்று எழுப்பி, பிரம்ம நாடியின் வழியாக ஸஹஸ்ராரம் என்னும் மேலாதாரத்திற்குக் கொண்டுபோய் அவ்விடத்திலேயே நிலையாக இருக்கச் செய்வதே ஜீவன் முக்தனாகிய ஒரு யோகி அடையக்கூடிய மேலான லக்ஷிய மாகும். குண்டலி சக்தி சுழிமுனை நாடியின் மூலமாக ஸஹஸ்ராரத்திற்குச் செல்லுகையில்; வழியிலுள்ள ஒவ்வொரு ஆதாரத்திலு மிருந்து அதிகப் பலத்தைப் பெறுகிறது. மேலும் குண்டலி சக்தி மேல்நோக்கி ஓராதாரத்திலிருந்து மற்றொரு ஆதாரத்திற்குச் செல்லும்போது மனதை மறைத்துக் கொண்டிருக்கும் திரைகள் ஒவ்வொன்றாக அகலுவதனால் யோகியானவன் காரணப் பிரபஞ்சத்தைப் பார்க்கிறான். குண்டலி சக்தி ஆக்ஞா சக்கர(ஆதார)த்தை யுறும்போது யோகிக்கு மெய்ஞ்ஞானம் உதையமாகிறது; அது ஸஹஸ்ராரத்தை நண்ணும்போது யோகி சமாதி நிலையை அடைகிறான். இச்சமயத்தில் யோகியானவன் இவ்வுலகத்தை அடியோடு மறந்து, குண்டலி தன் யதாஸ்தானத்திற்குத் திரும்பிப் போய்ச் சேர்கிறவரையில் அதே நிலையிலிருக்கிறான்.

இச்சக்தியை எழுப்பும் முறையைக் குறித்து விவரித்துக் கூறுமுன், இவ்வப்பியாச சம்பந்தப்பட்ட மனித உடல் கூற்றின் பகுதியைக் குறித்துச் சொல்லும் தாந்திரிக சாஸ்திரங்களிலுள்ள அடிப்படையான விஷயங்களைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். முதல் முதல் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது, சக்கரங்கள் அல்லது பத்மங்கள் என்று சொல்லப்படும் ஆறு ஆதாரங்களைக் குறித்தேயாம். அவையாவன: கீழிருந்து கூறுமிடத்து, மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பனவாம் இப்பத்மங்கள் (ஆதாரங்கள்) சுழிமுனை நாடியில் கோத்த மணிகளைப்போல் கீழ்முகமாக நோக்கித் தொங்கிக்கொண்டிருக்கின்றன.

இவற்றுள் முற்பட்டது மூலாதாரமாகும். அது குண்டலி சக்தியின் யதாஸ்தான மாகையால் அப்பெயர் பெற்றது (மூல + ஆதாரம்) அது முக்கோண வடிவாய்த்தேகத்தின் மத்திய பாகத்தில் தலை கீழாக இருக்கிறது. மூலாதாரம் *குய்யத்திற்கு இரண்டு விரற்கடைகீழும், †குதத்திற்கு இரண்டு விரற்கடைமேலும் அதாவது குய்யத்திற்கும் குதத்திற்கும் மத்திய ப்ரதேசத்திலிருக்கிறது. மஞ்சள் நிறமுள்ள பிருதிவி இதன் தத்துவமாகும். இதற்கு நான்கிதழ்களுண்டு. இத்தாமரையின் மத்தியில் செம்பழுப்பு நிறமுள்ள சுயம்பு லிங்க மிருக்கிறது. இவ்விலிங்கத்தின் அடியில் தான் பிரம்மதுவாரமென்று சொல்லப்பட்ட சித்ர நாடியின் அடிப்பாகத்தின் முனை இருக்கிறது. இதன் அதிதேவதை பிரம்மா.

அடுத்த ஆதாரம் சுவாதிஷ்டானம் என்பது. சொந்த இடம் என்பது இதன் பொருளாகும். இது ‡நாபிக்குக் கீழே குய்யப்பிரதேசத்தி லிருக்கிறது. இத்தாமரை ஆறிதழ்களை உடையது. இதன் தத்துவம் அப்பு. நிறம் வெண்மை. இதிலுள்ள அர்த்த சந்திரவடிவாயுள்ள இடத்தில் மஹாவிஷ்ணு, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய தேவதைகள் இருக்கிறார்கள். எதிரில் வருணபகவான் எழுந்தருளியிருக்கிறார். இதன் அதிதேவதை விஷ்ணு.

---

* ஆண்குறி. † ஆசனம் அல்லது அபான வாயில். ‡ கொப்பூழ்.



மூன்றாவது ஆதாரம் மணிபூரகம், கிரணங்கள் நிறைந்ததென்பது இதன்பொருள். குண்டலி சக்தி இவ்வாதாரத்தின்கண் ஒளி வீசுகிறபடியால் இதற்கு இப்பெயர் அமைந்தது. இவ்வாதாரம் சுவாதிஷ்டானத்திற்கு எட்டு விரற்கடைமேலே நாபிப்பிரதேசத்தி லிருக்கிறது. இதன் தத்துவம் தேயு. இத்தாமரை பத்து இதழ்களையும் செந்நிறத்தையு முடையது. இத்தாமரையில் முக்கோண வடிவமான அக்கினி மண்டல மிருக்கிறது. சூரியனுக்குரிய இப்பிரதேசம், ஸஹஸ்ராரத்திலுள்ள சந்திர மண்டலத்திலிருந்து இடைவிடாது ஒழுகும் அமிர்தத்தைப் பருகுவது போல் இழுத்துக் கொள்ளுகிறது. இதற்கு அதிதேவதை ருத்திரன்.

நான்காவது ஆதாரம் அனாகதம் என்பதாம். குண்டலி சக்தி சப்த வடிவாக இவ்வாதாரத்தில் செல்லுகிறபடியால் இதற்கு அனாகதம் என்னும் பெயருண்டாயிற்று. இது இருதயப் பிரதேசத்தில் மணிபூரகத்திற்கு பத்து விரற்கடைமேலே இருக்கிறது. இதுவே இருதயகமலமென மயங்குதல் கூடாது. இத்தாமரையில் பன்னிரண்டு இதழ்களுண்டு. இது புகைநிறமுடையது. தத்துவம் வாயு. முதல் மூன்று ஆதாரங்களின் தலைவனாகிய ஈசன் இதன் அதிதேவதையாகும்.

விசுத்தி என்பது ஐந்தாம் ஆதாரமாகும். அனாகதத்திற்கு 10 விரற்கடை பிரமாணத்திற்கு மேலே கண்டத்தின் அடிப்பாகத்தி லிருக்கிறது. விசுத்தி என்பதற்கு சுத்தமான இடம் என்பது பொருள். இத்தாமரை 16 இதழ்களை உடையது. இதன் நிறம் வெண்மை; தத்துவம் ஆகாசம்; அதி தேவதை மஹேஸ்வரன். இக்கமலத்தின் கண்ணுள்ள முக்கோணப் பிரதேசத்தில் சிவபெருமான் அர்த்தனாரீஸ்வரராக எழுந்தருளியுள்ளார். சிவத்தினருகே ஷாகினி என்னும் சக்தி மஞ்ச உடையோடு வீற்றிருக்கிறாள்.

அடுத்தபடியாக ஆக்ஞை என்னும் ஆறாவது ஆதாரமுளது. இரண்டு இதழ்களை யுடைய வெண்டாமரையாகிய இது புருவமத்தியிலிருக்கிறது. இது பரமகுலமென்றும் முக்தத் திரிவேணி என்றும் சொல்லப் படுகிறது. இது மாணிக்க நிறமுடையது. அதி தேவதை சதாசிவம். மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்னும் நான்கு பகுதிகளையுடைய மனஸ் இதன் தத்துவமாகும். இத்தாமரையின்கண்ணே பிரணவாகார மாயுள்ள தேஜோமயலிங்க மிருக்கிறது. யோகியானவன் கடைசியாக இப்பிரபஞ்ச வாழ்க்கையை விட்டகலும் போது இவ்விடத்தில் தான் பிராணனை வைத்து விட்டுப் பரம்பொருளாகிய பரம புருஷனோடு ஐக்கிய மடைகிறான்.

இப்போது நாம் ஆறு ஆதார(சக்கர)ங்களைப் பற்றி ஒருவாறு தெரிந்துகொண்டோம். ஆயினும் எல்லாவற்றிற்கும் மேலானதும், சிரசின் உச்சிமத்தியிலுள்ளதுமான இன்னொரு ஆதாரமுண்டு. இது 'ஓம்' என்னும் அக்ஷரத்தையும், கோடி சூரியப்பிரசாசத்தையு முடையது. இதன் அதிதேவதை எல்லாத் தேவதைகளும், குரு மூர்த்தியுமாம். இதுவரையில் ஆதாரங்களைப் பற்றிக் கூறினோம். இனி நாடிகளைப் பற்றி ஒருவாறு தெரிந்துகொள்வோம்.

மனிதஉடல் முழுதும் பரவியுள்ள 72000 நாடிகளுள் பதினான்கு முக்கியமானவை. அவையாவன இடகலை. பிங்கலை, சுழிமுனை, சரஸ்வதி, வாருணி, குஹூ, சங்கினி, பயாஸ்வினி, ஆலம்புசா, காந்தாரி, புஷா, ஹஸ்திஜிவா, யசாவினி, விஸ்வோதரி என்பனவாம். இவற்றுள் இடகலை, பிங்கலை, சுழிமுனை என்னும் முதல் மூன்றும் மிகமுக்கியமானவை.

இம்மூன்று நாடிகளுள் சுழிமுனை நாடியானது மூலாதாரத்திலிருந்து மேருதண்டின் நடுவே ஊடுருவி, ஸஹஸ்ராரத்திலுள்ள 12 இதழ்த் தாமரையையுடைய மேருவரையில் செல்லுகிறது. இந்நாடிக்குள் வஜ்ஜிரினி என்னும் ஒரு நாடி இருக்கிறது. வஜ்ஜிரினி நாடிக்குள் சித்ரநாடி அமைந்திருக்கிறது. இந்நாடியின் உட்பாகம் பிரம்மநாடி எனப்படும். இந்த நாடியின்கண்ணுள்ள துவாரத்திற்குப் பிரம்மத்துவாரம் என்று பெயர். இத்துவாரத்தின் வழியாகத்தான் எழுப்பப்பட்ட குண்டலியானது மேற்செல்லுகிறது.

சந்திரகலையாகிய இடகலையும், சூரியகலையாகிய பிங்கலையும் மூலாதார கந்தத்திலிருந்து தோன்றி இங்கு சுழிமுனையோடு கலக்கின்றபடியால் இந்த ஸ்தானம் முக்தத்திரிவேணி என்று சொல்லப்படுகிறது. இதுவே புராணங்களில் கங்கை (இடகலை), யமுனை (பிங்கலை), சரஸ்வதி (சுழிமுனை) ஆகிய மூன்று நதிகள் கூடும் பிரயாகை என்று வர்ணிக்கப் படுகிறது. இடபிங்கலைகள் முறையே அக்நிமயமான சுழிமுனை நாடியின் வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் ஆக்ஞாசக்கரம் வரையில் நேரே ஓடுகின்றன. இங்கு, சுழிமுனை மத்தியிலிருக்க, அவை (இடபிங்கலைகள்) கத்தரிக்கோல் போல் மாறி நாசித்துவாரங்கள் வழியாக, லிங்கஸ்தானத்தின் வலது பக்கத்திலிருந்து தோன்றும் இடகலை இடது நாசி மூலமாகவும், இடது பக்கத்திலிருந்து தோன்றும் பிங்கலை வலது நாசி மூலமாகவும், வெளியாகின்றன. ஆக்ஞாசக்கர(ஆதார)த்தண்டை இம்மூன்று நாடிகளும் ஒன்றுசேரும் (முக்) கூடலுக்குத்தான் முக்தத்திரிவேணியென்று பெயர்.

---

# கோடாகண்டன் கொடைவள்ள லானான்

(பி. சே .மா.)

அவருக்கென்ன குறை. அண்டை வீடு அடைமானம்; எதிர் வீடு ஈடு; கிழண்டை வீடு கிரயம்; மேலண்டை வீடு மேல் கோர்ட்டில் தீர்ப்பு; இன்னும் அநேக வீடுகளின்மேல் வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிகம் வளர்த்துவானேன். அந்த ஊரில் இரண்டொரு வீடுகள்தான் மிஞ்சும்; மற்றவை கிருபாகரருக்குச் சொந்த மெனச் சொல்லி விடலாம்.

அவரிடம் அகப்படாத குடுமி அந்த ஊரில் ஒன்றுமே கிடையாது. அதிலும், நமது முதலியாரிடம் வேறொருவரிடத்திலும் காணமுடியாத ஓர் விசேஷ குணமிருந்தது. அது, அவர் எந்தக் கடவுளிடத்தில் பெற்ற வரமென்று எனக்குத் தெரியவில்லை. மெய்ஞ்ஞானச் செல்வனாகி, வரங்கொடுத்த கடவுளை நான் கண்டு பிடிக்கக் கூடுமானால், அவர் என்னிடம் என்ன பாடு படுவாரென இப்பொழுது சொல்லமாட்டேன். கண்டு பிடிக்க பெரு முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். ஓரே சமயத்தில் பல லோகங்களையும் பார்க்கக் கூடிய பூதக்கண்ணாடி எனக்காகத் தயார் செய்யப்படுகின்றது. ஆனால் அது தயாராகப் பல சதுர் யுகங்கள் ஆகலாம். அதுவரை நாம் சும்மா இருப்பானேன். கிருயாகரர் பெற்ற வரத்தைப் பற்றி வம்பளக்கலாமல்லவா? அவர் பெற்ற அத்தகைய வரம் என்னவென்றால் ஒரு சமயம் அவரிடம் அகப்பட்ட குடுமி மறுபடியும் மீள்வதே கிடையாது. குடுமியைக் கொடுத்து விட்ட ஒருவன் தப்பிப்போக வேண்டுமானால், அவர் தூங்குஞ் சமயம் பார்த்து, குடுமியைச் சிரைத்து அவர் கையோடு விட்டு, மொட்டந் தலையாக முக்காடிட்டுச் செல்ல வேண்டியது தான். அப்படிச் சென்றவர் அந்த ஊரில் அநேகர் உண்டு.

நல்ல காலமாக நான் மட்டும் அவரிடம் அகப்படாமையால் சிறிது தைரியமாகக் காரியங்களை நடத்துவேன். அது அவரது கண்களைக் குத்தியது. அவர் பார்வை முழுதும் என்மீது நாடியது. என் குடுமியைக் கைப்பற்றுவதற்கு அவர் ஏற்ற சமயம் பார்த்துக் கொண்டிருந்தார். நானும் அவருக்குத் தக்க தண்டனை தந்து நற்புத்தி புகட்ட வேண்டு மெனத் தீர்மானித்தவனாய் அதற்கேற்ற உபாயத்தை இராப் பகலாய்ச் சிந்தித்த வண்ணமிருந்தேன்.

* * *

கிருபாகரரிடம் மற்றோர் விசேஷ குணமும் இருந்தது. அதுவே என் எண்ணம் ஈடேற ஒத்தாசையாக இருந்தது. அந்த குணம் என்ன தெரியுமா? யோசனை செய்யுங்கள். கிருபாகரரின் குணங்களைக் கண்டு பிடிக்கும் ஆற்றல் உங்கள் மூளைக்கு இல்லையென ஒப்புக் கொள்ளுகிறீர்களல்லவா? சரி, நானே சொல்லி விடுகிறேன்.

'பகவதி பிக்ஷாந் தேகி' என்ற சொல் அவர் காதில் விழக்கூடாது. தவறி விழுந்து விட்டால் அவர் உத்தரவின்றி—ஏன்—அவருக்குத் தெரியாமலே பற்கள் நறநறவெனக் கடித்துக் கொள்ளும்; கை கால்கள் விரைத்துப் போகும்; 'அடே சோம்பேறிகளே! தண்ட சோற்றுக் கலையும் தடிப்பயல்களே! உங்களை ஒழித்து விடுகிறேன்' என்று சொல்லிக் குதிப்பார். அப்பொழுது அவரது தொந்தி ஒன்றரை முழம் முன்னே வளர்ந்து குலுங்குவது வெகு விநோதமாயிருக்கும். ஒரு முறை அந்த வீட்டை மிதிக்க நேர்ந்த ஏழைகள், தங்கள் உயிருள்ளவரை, மீண்டும் அந்த ஊரில் எந்த காரணத்தை முன்னிட்டும் கால் வைக்க மாட்டார்கள். இத்தகைய கருணையாளருக்குக் கிருபாகரர் என்ற பெயர் மிகப் பொருத்தமான தல்லவா?

* * *

ஓர் நாள் பகல் போஜனத்திற்குப் பின் ஓர் பெரிய ஆலோசனையில் ஈடுபட்டிருந்தேன்.



'தபால்' என்ற சொல் கேட்டது. விரைந்து ஓடினேன். கவரின் மேல் 'அந்தரங்கமானது' (confidential) என்றிருந்தது. ஆவலுடன் பிரித்தேன். கீழ் வரும் விஷயம் காணப்பட்டது.

கிருபாபுரி
21-10-33

தங்கள் உயிர்த்தோழரின் தலைவிதி நிர்ணயம்; இரவு 12 மணிக்கு; காலாடி கட்டத்தில்; வருகை அவசியம். தங்கள் நெம்பர் கி. ந. 98.

இங்ஙனம்,
சாது

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. கடிதத்தைப் பன்முறை படிப்பதிலேயே பொழுது போயிற்று. என் உயிர்த்தோழன் யார்? தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்றவர் எவர்? காலாடி கட்டம் என்பது எங்கே? என்னை அழைப்பதின் காரணம் யாது? கி. ந. 98, இதன் மர்மம் என்ன? ஒன்றும் விளங்கவில்லை. இரவு 11 மணி அடித்தது. மன அமைதியின்றி தெருவில் சென்றேன். 'வாருங்கள்' என்று ஒருவன் அழைத்தான். திகைப்புடன் அவனை நோக்கினேன். 'இப்படியே போங்கள்' என்று வழி காட்டினான். என் சுவாதீனமற்ற நான் சிறிது தூரம் சென்றேன். அங்கே ஒருவன் வேறு வழியில் திருப்பினான். அவ்வாறே ஆங்காங்கு வழிகாட்டப்பட்டு ஓரிடத்தை யடைந்தேன். 'தங்கள் நெம்பரென்ன' என்ற வார்த்தை கேட்டதும் எனக்குக் காலையில் கிடைத்த கடிதத்தின் ஞாபகம் வந்தது. தட்டுத்தடுமாறி கி. ந. 98 என்றேன். உள்ளேபோக அநுமதித்தான்.

அது ஒரு பெரிய தோட்டம். மனதைக் கவரும் பல புட்பச்செடிகளும், கொடிகளும் நிறைந்து மனோரம்மியமாயிருந்தது. அவ்வழகிய தோட்டத்தில், கோவணாண்டிகளும், காஷாயதாரிகளும், பட்டைநாமந்தரித்த பஞ்சைகளும், விபூதி உருத்திராக்க தாரணர்களாய ஒட்டாண்டிகளும், உணவருந்தி பல பகலாயிற்றென்பதை அறிவிக்கும் குழிந்த கண்களும் ஒட்டிய தாடையும் வாடிய முகமுமுடைய ஏழைமக்களும் ஒருங்கே கூடி இருந்தனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட அப்பெருங் கூட்டத்தில் கொஞ்சமேனும் சந்தடி இல்லாமைகண்டு நான் பேராச்சரியமடைந்தேன்.

அங்கு காணப்பட்ட முகங்களுள் ஈஎறும்பு ஆடவில்லை. விரும்பத்தகாத செய்கை புரியத் தயாராயிருப்பவனின் முகத்தை ஒத்திருந்தன. நான் சென்றவுடன் 'கி. ந. 98-ம் வந்து விட்டார், இனி துவக்கலாம்' என்ற கம்பீரத் தொனி கிளம்பியது.

அந்தத்தொனி கிளம்பிய பக்கம் நோக்கினேன்! அங்கு தலைவருக்குப் பக்கத்தில் 'காலாடி கட்டம்—கிருபாகரனது நண்பர்கள் கூட்டம்' என்றெழுதிய ஓர் பலகை தொங்கியது. என் சந்தேகங்களெல்லாம் உடனே பறந்தன.

* * *

பலபல பேச்சுகள்—ஆலோசனைகள்—விவாதங்கள் நடைபெற்றன. பேசும்போது சிலரதுமுகங்கள் கோபத்தால் கறுத்தன. வாயிலிருந்து வந்த வார்த்தைகள் எதிரிலுள்ளோரைத் திடுக்கிடச் செய்தன. ஒவ்வொருவரும் ஆவேசங் கொண்டவர்களைப்போல் ஆடினர். வெகுநேரத்திற்குப்பின் ஒருவித முடிவிற்கு வந்தோம். பிறகு கூட்டம் கலைந்ததே தெரியாது; அவ்வளவு நிசப்தமாகப் பிரிந்து சென்றனர்.

* * *

மறுநாள் இரவு 12 மணி இருக்கும். கிருபாகரன் வீட்டுக் கதவு படபடவெனத் தட்டப்பட்டது. அவ்வீதியில் பெரும்பாலோர் விழித்துக் கொண்டனராயினும் உதவிக்கு ஒருவரும் செல்லவில்லை. கிருபாகரர் வீட்டிற்குள் பரபரப்பு ஏற்பட்டது. 'நீபோ, நீயே போ, நீதான் போ' என்று மாறி மாறிச் சொல்லிய குரல் கேட்டது. கடைசியில் கிருபாகரனே கதவைத் திறக்கத் துணிந்தான். ஆனால், 'இந்நேரத்தில்—இவ்வளவு தைரியமாக—ஒருவரல்ல, பலர்— கிருபாகரன் வீட்டில் கூச்சலிடுவதென்றால்—அது மனிதர்களாக இருக்க முடியாது. பேய் பிசாசுகளே' என்று தோன்றிய எண்ணம் முன்வைத்த காலைப் பின்னே தள்ளின. சிறிது தயங்கினான்.

அச்சமயம், 'கிருபாகரக் கொடியோனே! கதவைத்திற. இல்லையேல் நொறுங்கிப்போகும்' என்ற ஆரவாரம் கிளம்பியது. அது கேட்டதும் கிருபாகரன் தன்னிலை தப்பினான். அவன் கண்முன் பல பேய் உருவங்கள்—அண்டத்திற்கும் பிண்டத்திற்குமாய்—அகோரரூபத்துடன் ஒன்றன்பின் ஒன்றாய்ச் சென்றன. கிருபாகரன் மூர்ச்சையானான்.

சிறிது நேரம் நிசப்தம் குடிகொண்டது. மூர்ச்சை தெளிந்து பார்த்த போது ஈட்டி, வாள், கத்தி, அம்பு, துப்பாக்கி, ரிவால்வர்

ஆகிய கொடிய ஆயுதந்தாங்கியனவாய் தலை முதல் பாதம் வரை செவப்பு அங்கி தரித்திருந்த பல உருவங்கள் எதிரே நின்றிருந்தன. அவற்றுள் இரண்டு கிருபாகாரது இருகரங்களையும் அழுத்திப் பிடித்திருந்தன.

'தாமதம் என்ன? சித்திர வதை செய்யுங்கள்' என்றான் தலைவன். 'ஆம். ஏழைகளைத் துரத்தி ஓடிய இவன் கால்களைச் சிறிது சிறிதாகத் துண்டிக்க வேண்டும்; ஊரிலுள்ள பலருடைய சொத்துக்களையும் வஞ்சனையால் கவர்ந்து, குழந்தை குட்டிகளை வதையவிட்ட இரக்கமற்ற இவன் நெஞ்சத்தை ஊசியால் குத்தவேண்டும்; இவனது பொல்லாக்கண்களைத் தோண்டி எறியவேண்டும்' என்று ஒவ்வொருவரும் அவரவர் மனப்போக்கின்படிக் கூறினர். கிருபாகாரது நெஞ்சம் பயத்தினால் பிளந்து விடும்போலிருந்தது. தன்னைத் தானே சிறிது தைரியப்படுத்திக்கொண்டான். இவர்களிடம் தப்புவதற்கு வேறு வழியில்லை என்றுணர்ந்த கிருபாகரர் 'சற்று தயை செய்ய வேண்டும். நான் செய்ததெல்லாம் கொடுமை என்பதை இப்போதுதான் உணர்கிறேன். பல ஏழைக்குடும்பங்களை நான் நிர்மூலமாக்கி யிருப்பது வாஸ்தவமே; எத்தனையோ குழந்தைகளைப் பட்டினியால் சாகும்படிச் செய்திருக்கிறேன்; பிச்சைக் காரர்களைத் தடியால் அடித்துப் படுகாயப் படுத்தி யிருக்கிறேன். இக்கொடுஞ் செயல்களுக்குப் பரிகாரந் தேடிக்கொண்டு புனிதனாகக் கொஞ்சம் அவகாசம் தாருங்கள்; அதன் பின் நான் உயிர் விடத் தயாராக இருக்கிறேன்' என்றான்.

கூட்டத் தலைவன் சற்று மனம் இளகினவனாய் 'உன் பரிதாப நிலைக்கு இரங்குகின்றேன். உனக்கு ஜாமீனாக வேறொருவரை என்னிடம் நீ ஒப்படைத்தால் சில நாளைக்கு உன்னை விட்டுவைக்கிறேன். அதற்குள் நீ திருந்த வில்லையானால், அவர் உயிரோடு உன் உயிரும் இழக்க நேரிடும். ஜாக்கிரதை. இன்னொரு விஷயம்: நாங்கள் யாரென்று கண்டு பிடிக்கவோ, எங்களுக்குத் தீங்கு செய்யவோ நினைத்தால் அது உன்னால் முடியாத காரியம். ஆகையால் அம்முயற்சியை விட்டுவிடு. சீக்கிரம் ஜாமினுக்கு ஆளை அழைத்துவா' என்றான்.

அதைக்கேட்டதும் கிருபாகரர் மீண்டும் உயிர்பெற்றது போல் மகிழ்ந்தார். உள்ளே ஓடினார். 85 வயது சென்ற பழுத்த கிழமாகிய தனது தாயார் எப்பொழுது பார்த்தாலும் 'அந்தப் பாழும் எமனுக்குக் கண்ணில்லையே. அண்டை வீட்டு அப்பாசாமியை—ஐயோ! என்ன அழகு! என்ன புத்தி! என்ன குணம்!—கல்யாணமான இரண்டு மாதத்தில்—அவன் கைபட்ட பாபத்திற்காக—அந்த லட்சுமி—தங்கக் கட்டி—ராதா—தன் ஆறுவயசில் விதவையாகி, காலமெல்லாம் கஷ்டப்படுமாறு விட்டு அழைத்துச் சென்றானே. ஐந்து பிள்ளைகளின் மத்தியில் ஒரு அருமருந்தாய்த் தோன்றிய கண்மணி—என் கட்டிச் செல்வம்—மீனாவைக் கொண்டு போன குருடன் என்னைக் கொண்டுபோகக் கூடாதா? நடக்க நாடியற்று மூலைக்கு முட்டாய்க் குந்தி கிடக்கும் என் ஓலை அவன் கையில் அகப்படவில்லையே! ஆ, கடவுளே! உனக்குக்கூட கண்ணில்லையா' என்று எப்பொழுது பார்த்தாலும் புலம்பிக்கொண்டிருப்பதால் தனக்குப் பதில் ஜாமீனாகப் போகவோ, அன்றி உயிரையும் கொடுக்கவோ மிகச் சந்தோஷத்துடன் இசைவாள் என கிருபாகரன் எண்ணினான். கிருபாகரர் உள்ளே சென்றதும் 'என்ன அப்பா கூச்சல்? யாருக்குத்தான் இந்நேரத்தில் என்னவேலை?' என்று கிழவிகேட்டாள். கிருபாகரர் நடந்ததைக் கூறி தான் அவர்களோடு போகவேண்டுமெனத் தெரிவித்தான்.

அது கேட்ட கிழவி 'ஐயோ, மகனே! உனக்கு இப்படியா நேர்ந்தது. உன் பிள்ளைகளில் ஒருவனுக்காவது கல்யாணஞ் செய்து பார்க்க நீ கொடுத்துவைக்க வில்லையா? இச்சின்னஞ் சிறு குழந்தைகள் என்ன செய்யும்! நான் இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க நேர்ந்ததே. எனக்குச் சாவு வரவில்லையே' என்று கதறினாள்.

இதுதான் சமயமென எண்ணிய கிருபாகரர் 'துக்கிப்பதற்கு இது காலமல்ல. அவர்கள் அவசரப்படுகின்றனர். நான் அவர்களிடம் ஒரு ஏற்பாடு செய்து வந்திருக்கிறேன். எனக்குப் பதில் ஜாமீனாக ஒருவரை அனுப்பினால், நான் நல்லவனாகத் திருந்தியவுடன் அவரை அனுப்பிவிடுவதாகக் கூறுகின்றனர். எனக்கு ஜாமீனாக நீ........'என்று மேலே சொல்வதற்குள் 'அடே பாவி! பரம சண்டாளா! உன்னைப் பெற்று வளர்த்த தோஷத்திற்கு என்னையே பலியிடப் பார்க்கிறாயே, உனக்கு நான்தானா அகப்பட்டேன். குத்துக்கல்லாட்டம் பெண்டாட்டி இருக்காளே, அவளை அனுப்புறது தானே. தண்டச்சோறு



தின்று கொண்டு வெட்கமில்லாமல் இங்கே வந்து குந்தியிருக்காளே—உன் மாமியார்—அவளைத்தான் அனுப்பேன். என்னைப்போ என்று சொல்ல எவ்வளவு தைரியமடா உனக்கு. நான் இருப்பது கஷ்டமாயிருந்தால், பொழுது விடியட்டும்; எங்கேயாவது தொலைந்து போகிறேன். பிச்சை எடுத்தாவது பிழைத்துக் கொள்கிறேன்' என்று மூச்சு விடாமல் பெரிய ஒப்பாரி வைத்து விட்டாள். அதற்குமேல் அங்கு நிற்க முடியாமல் மனைவி, மாமியார், பிள்ளைகள் எல்லாரையும் ஒவ்வொருவராக விசாரித்தார்; அவர்களனைவரும் கிழவிக்குமேல் பாடம் படித்து விட்டனர். என்ன செய்வார்; பாவம், வேறு வழியின்றி தெருவிற்கு ஓடினார். ஒருவாரமாவது அனுமதிக்க வேண்டுமென்றும் அதற்குள் தன் கொடுமைகளுக்குப் பரிகாரந்தேடிக் கொள்வதாகவும் இரந்து வேண்டினார். எல்லாரும் இசைந்து மறைந்தனர்.

பொழுது விடிந்தது. இராப் பகல் எந்நேரத்திலும் ஏழைகளுக்கு உணவளிக்கப் படும் என்ற பலகை கிருபாகரர் வீட்டின் முன்பு மாட்டப் பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான ஏழைகள் வயிறார உண்டு சென்றனர். தன்னிடம் கடன் வாங்கியவர்கள் நேராக வந்தால் சௌகரியப்படி பைசல் செய்து கொள்ளலாமென்றும், ஜீவனத்துக்கு வழியற்று கஷ்டப்படுவோர் தன் உதவியை எதிர்பார்க்கலாமென்றும் கிருபாகரர் ஓர் தண்டோரா போடுவித்தார்.

இரண்டொருநாளில் எல்லாரும் கடன் தொல்லையிலிருந்து விடுபட்டனர். வியாபாரம், கைத்தொழில், சிற்பம், கலைஞானமாகிய வற்றில் அவரவர்க்கு இஷ்டமான ஒன்றை விருத்தி செய்வதற்கு வேண்டிய ஒத்தாசையைக் கிருபாகரரிடம் பெற்றனர். மக்கள் அபிவிருத்திக்கான பலவகை ஸ்தாபனங்கள் ஏற்பட்டன. ஏழை என்பவரில்லாமல் எல்லாரும் சௌகரியமான நிலையில் விளங்கினர். முன்னிருந்த பாழடைந்த தன்மை நீங்கி நகரம் மிக்க பொலிவடைந்தது. அங்கு வசிப்பவர் முகத்தில் சந்தோஷமும் பிரகாசமும் குடிகொண்டன. வீடுகள் தோறு மிருந்த அழுகைக் குரலுக்குப் பதிலாக எங்கும் சந்தோஷ ஆரவாரம் மிகுதந்து. அது முற்றும் ஓர் புதிய நகரம்போலத் திகழ்ந்தது.

---


## ஸ்ரீ சங்கரர்

### சகல ரோக நிவாரண மருந்துகள்

ஆச்சரியப்படத்தக்க குணம்! பத்தியமில்லை!

ஸ்ரீ சங்கரர் என்ற யோகியால் அநுக்கிரகிக்கப்பட்டு
ஏழு தலைமுறைகளாகக் கையாண்டுவரும் சிறந்த ஔடதங்கள்

மேகம், கிரந்தி, க்ஷயம், குஷ்டம், குன்மம், பித்தம், மூலப்பாண்டு
ஆகிய எல்லா ரோகங்களும் பறக்கும்

ஒரே முறை உபயோகித்து உண்மை அறியுங்கள்.

ஏராளமான அத்தாட்சிகள்! விவரத்திற்கு கேட்லாக்!

40-நாள் சாப்பிடக்கூடிய மேக சிந்தாமணி மெழுகு ரூ. 7
ஷை மேக குஷ்ட நிவாரண கெந்தக மெழுகு 4

தபால் செலவு வேறு. அநுபான விவரம் மருந்துடன் வரும்.

ஆர்டருடன் வெளிநாட்டினர் பூராப்பணமும், உள்நாட்டினர் பாதித் தொகையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

நேடிவ் டாக்டர், T.K. முனிசாமி ஆச்சாரி,
செ. பாளையம் P. O, (வயா) நெல்லிக்குப்பம் S. I.'R

# இந்திய சரித்திரக் கதைகள்

## பிரயாணியின் கனவு

[திரு. ஈ. வே. சோம், கோவை]

(முன் தொடர்ச்சி)

[வடமேற்கு இந்தியாவில் சுமார் 1,000 ஆண்டுகளுக்கு முன், காண்டஹார் நாட்டின் காடுகளினூடே சென்றுகொண்டிருந்த ஒரு குதிரை வீரன், தனது குதிரையைக் கொன்ற சிங்கத்தை வெட்டி வீழ்த்திவிட்டுத்தன் வழியே நடக்குங்கால், பசிக்கு ஒரு மான்குட்டியைப் பிடித்துத் தின்ன நெருப்பில் வாட்டுவதற்கு முயலும்போது, தாய்மான் தன்னைப்பார்த்துக் கண்ணீர் வடித்து நிற்கக் கண்டு மனமிளகி, குட்டியை விடுவித்து அவ்விடத்திலேயே அன்றிரவில் துயின்றான். தூக்கத்தில் அல்லாவின் தூதன் தோன்றி, அவன் இரக்க குணத்திற்கு வெகுமதியாக அந்த ராஜ்யத்தை அவனுக்கு அளித்திருப்பதாகக் கூறின கனவுகண்டான். காலையில் எழுந்து மேலே வழி நடந்தபோது எதிரிட்ட திருடர்கள் எண்மரை தனியனை யெதிர்த்து நிற்க, அவர்கள் இவனைத் தங்கள் தலைவனாகும்படி வேண்டினர். கள்வனாதற்குத் தன் மனச்சாக்ஷி அனுமதிக்காதென அவன் மறுக்க, அவர்கள் அவனை அடிமை வியாபாரி ஒருவனுக்கு விற்றனர். அடிமை வியாபாரி நன்றாய்ப் போஷித்துப் பெருந்தொகைக்கு விற்க நினைத்து ஏமாறும் சமயத்தில், அந்த கோராஸ்ஸன் நாட்டதிபதி அலப்டுகீன் அவ்வடிமை வீரனை விலைக்கு வாங்கிக்கொண்டான்] இனிமேல் படியுங்கள்.

### 3

பேரம் பேசி விலைக்கு வாங்கிமுடிந்ததும், அவ்வடிமையை அதிபதியின் அரண்மனைக்குக் கூட்டிச் சென்றார்கள். முதலில் சேவகர்களோடு ஒருவனாக வைக்கப் பட்டான். ஆனால், அலப்டுகீன் அவனுடைய மேம்பாடு பெறும் குணங்களைக் கண்டு தன் தேக பாதுகாவலனாகக் கூடவே வைத்துக்கொண்டான். அவ்வீரன் வெகு சீக்கிரத்தில் மனதுக்குப் பிடித்த ஒரு பிரியன் ஆகி விட்டான். நாளுக்குநாள் அவன் மேலிருந்த நன் மதிப்பு அதிகரித்தது. அந்நாட்டுத் தலைவன் சில நாளில் ராஜாங்கத்தில் உயர்ந்த பதவி ஒன்றைக் கொடுத்தான். குன்றா ஊக்கமும், அயராத முயற்சியும், தலைவனிடம் தளராத பற்றும் நிறைந்தவனும், உயர்ந்த குணங்களும், கூரிய அறிவும் உள்ள அவ்வடிமையின் குணாதிசயங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டு, அலப்டுகீன் அவனைக் கூப்பிட்டு அவன் பிறப்பு வளர்ப்பைப் பற்றிய விவரங்களை விசாரித்தான். அதற்கு அடிமையின் பதிலாவது:—

என் வரலாறு சுருக்கமானதே. தற்போது யான் அடிமையாய் இருந்தபோதிலும், என் பெற்றோர் பெயரைக் கெடுக்கத்தக்க காரியம் எதையும் நான் செய்யவில்லை. நான் ஏழ்மை நிலைமையிலிருந்தபோதிலும், சுயேச்சையானவனாகப் பிறந்தேன். நான் பேர்ஷிய தேசக் கடைசி ராஜனாகிய எஸ்டிஜேர்ட் வம்சத்தில் வந்தவன். அவ்வரசன் ஓதுமான் தேச காலிபத் சண்டையில் தன்விரோதிகளிடத்திலிருந்து தப்பியோடும்போது மர்வ் என்னும் ஊரில் நீரோட்ட யந்திரசாலை ஒன்றில் கொலை செய்யப்பட்டான் என்பது உமக்குத் தெரிந்து இருக்கலாம். அவர் குடும்பத்தவர் டர்க்கிஸ்டானில் விடப்பட்டு அத் தேசத்தவரோடு கலந்துகொண்டார்கள். அந்த அரசன் வம்சத்தவர் டர்க்குகள் ஆய்விட்டார்கள். ஆதலால் தற்போது நானும் ஒரு டர்க்குதான்.

மிகவும் மெலிந்த குடும்பத்தில் வறுமை முதலிய கஷ்டங்களால் பீடிக்கப்பட்ட சமயத்தில் நான் பிறந்தேன். ஆனால் அக்கஷ்டங்களை மிகவும் முயற்சி செய்து கஷ்டப்பட்டு முன்னுக்குவரத்தீர்மானம் செய்துகொள்ளும்படிச் செய்தன. நான் கடும் பிரயாசைப்பட்டு எல்லாவித உடல் வளத்திற்கான தேகாப்பியாசங்களையும் செய்து உரத்த தேகத்தினனாயும், பல ஆயுதப் பயிற்சி யுள்ளவனாயும் ஆனேன். எல்லாம்வல்ல கடவுளின் அருளால், இயற்கை யன்னையின் அன்பின் மாட்சியால் திடகாத்திர தேகியாயும், திட சித்தமும் தேர்ச்சியும் பெற்ற ஆயுத வீரனாகவும் அதிபால்யத்திலேயே ஆனேன். என் எதிர் காலத்தில் என்னுடைய முடிவை நானே தீர்மானித்துக்கொண்டு நடக்க நான் நிச்சயித்து விட்டேன்.



நன்றாய்க் கற்றுணர்ந்து அனுபவம் நிறைந்த என் தந்தை தரித்திரத்தின் கொடுமையைப் பாராட்டாமல் எனக்கு நற்குணங்களின் அவசியத்தையும், கல்வியையும், அறிவு வளர்ச்சிக் காதாரமானவைகளையும் புகட்டியுள்ளார். ஆதலால் அரசர்களின் சபைகளை அலங்கரிக்கும் பலரைவிட கல்வித் தேர்ச்சி பெற்றிருக்கிறேன் என்று துணிந்து கூறலாகும்.

என் இளமையிலிருந்தே என் மனதிற்குள் யாதோவொன்று, 'இந்த டர்க்கோ மனிதன் மகன் (தான்) நல்குரவிலிருந்து தொந்தரைப் பட்டுச் சாகப் பிறக்கவில்லை—ஆனால் வேறு ஏதோ ஒரு பெரிய காரியத்தைச் சாதிக்க உள்ளவன்' என்று கூறிக்கொண்டே இருக்கிறது. (இதுவரையில் பொய்த்துப் போன) இந்த எண்ணத்தின் பேரில் பத்தொன்பதாவது வயதில் வீட்டைவிட்டு வெளிக் கிளம்பி கஜ்னி சுல்தான் சேனையில் சேர விரும்பி வந்தேன். வழியில் கள்வர் கையில் அகப்பட்டு அதன்பிறகு மிகவும் பெருங்குணம் உள்ள எஜமானனுக்கு அடிமையா யுள்ளேன்' என்பதே.

அலப்டுகீன் அடிமையின் கதையைக் கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டு மேலும் உயர்ந்த உத்தியோகங்களுக்குத் தன் ராஜாங்கத்தில் உயர்த்தினான். அதிபதியின் பிரியத்திற்குப் பாத்திரனான அந்த அடிமை தனக்களித்த சுயேச்சையைக் கெடுபுத்தியின்றி நல்ல தன்மையில் உபயோகித்து, மேலும் அவன் மனதுக் குகந்தவனாக ஆனான். அலப்டுகீனும் சந்தோஷப்பட்டு ராஜாங்கத்தில் மிகவும் உயர்ந்த ஸ்தானமாகிய அமீர்-உல்-உம்ரா அதாவது ராஜசபை பிரபுக்களின் தலைமைப் பட்டத்தை அளித்தார்.

இங்ஙனம் அடிமையாயிருந்த நம்வீரன் கோராஸ்ஸன் நாட்டிலேயே பிரமுகனானான். பிறகு அலப்டுகீனுடைய சர்வ சேனாதிபதியும் ஆனான். அவன் அப்படைவீரர்களைப் பூரண ஒழுங்கிலும், நல்ல யுத்தப் பயிற்சியிலும் வைத்துக்கொண்டு சண்டைகளுக்குப் போய் ஜயத்தோடு திரும்பி வந்தான். சேனாவீரர்களுக்குத் தெய்வம் போல்வானானான். அலப்டுகீனுடைய விரோதிகள் யாவரும் ராஜ தந்திர வல்லவனான இத்தலைவனைக்கண்டு பயந்து அடங்கி நிற்க, நாடு முழுவதும் செழித்து சமாதானமும் சந்தோஷமும் நிலவி நின்றன. அவன் தாழ்ந்த நிலைமையிலிருந்து வெகுவிரைவாக உயர்வு எய்தியது, சன்மார்க்க ஒழுக்கத்தாலும், விடாமுயற்சியுடன் செய்த ஊக்கம் நிறைந்த உண்மை உழைப்பினாலுமே ஆயினும், வெளிப் பார்வைக்கு எதிர்பாராத தெய்வச் செயலாகத் தோன்றியது. அவன் தான் ஆதியில் காட்டில் கண்ட கனவை நினைப்புற்றான். கனவு முற்றுப் பெறக்கூடிய நிலைக்கு வருதலும் அவனுக்குத் தோன்றியது. அவனது உன்னத ஸ்திதியைக் கண்டு மகிழ அவன் தகப்பனுக்கு யோகம் இல்லை. ஆனால் தன்னுடைய தாயைச் சொந்த ஊரிலிருந்து அழைத்து வந்து கொராஸனில் தன்னுடன் சௌக்யமாக வைத்துக்கொண்டான். அத் தாயும் நாட்டு ஜனங்கள் தனது குமாரனை சீரிய குணத்தான், பெருங்கண்யவான் எனப் புகழ்வதைக் கேட்டு,

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்."

என்பதற்கேற்ப மனம் பூரித்து ஆனந்தித்தாள்.

இங்ஙனம் சில வருட காலங்களுக்குள் அப்புதிய மனிதனுடைய வாழ்க்கையில் எத்தகைய மாறுதல்கள் நிகழ்ந்துவிட்டன. தனது எஜமானனது அடிபணிந்த அடிமையான அவனுக்கு மிகவும் சீரிய பெரும் பிரபலமான கனவான் என யாவரும் பணிந்து செல்வதாய் விட்டது. கோராஸ்ஸன் நாட்டு அதிபதிக்குகந்த பிரபு அவன்தான். அவன் தனது அதிபதியின் யோசனைகளுக்கு ஆதாரமாயும், சைனியங்களுக்குத் தலைவனாயும், ராஜ்ய நிர்வாக சபையின் முடிவான தீர்மானங்களுக்குக் காரணபூதனாயும் ஆகிவிட்டான். எப்பொழுதும் அலப்டுகீன் அரசனிடமிருந்து வந்தான். அவனையன்றியும் அவன் ஆலோசனையைக் கேட்காமலும் யாதொரு காரியமும் எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. சந்தோஷமும் சுகமும் நிறைந்தவர்களில் முதன்மையானவன் அவனே. அந்நாட்டதிபதியின் முழுப்பிரியத்திற்கும் பாத்திரனாயும் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்குத் தெய்வம் போன்றவனாயும் நாட்டின் சுற்றுப் பக்கத்திலுள்ள விரோதிகளுக்கு நாகசர்ப்பம் போன்

றும் இருந்ததால் தனக்குப் பூர்த்தியாகவேண்டிய விருப்பம் ஒன்றுமேயின்றி யிருந்தான். மேலும் தனது வாழ்நாள் ஆரம்பத்திலிருந்த நல்குரவும் துன்பமும் பின்வந்த மேனிலைக்குத் தெளிவான அறிகுறியாக இருந்ததை யுணர்ந்தான்.

அலப்டுகீனுக்கு ஒரு அழகிய புத்திரி யிருந்தாள். கோராஸ்ஸன் நாட்டு பராக்கிரமசாலிகளான பிரபுக்கள் பலர் அவளை மணம் செய்துகொள்ள விரும்பினர். ஆனால் அவள் அவர்களில் ஒருவரையும் விரும்பவில்லை. கல்வி கேள்விகளிற் சிறந்த அழகிய அம்மடந்தையை அவளை மணம்புரிந்து கொள்ளத்தக்க நிலைமையிலுள்ள யார்தான் விரும்பாமலிருப்பர்? ஆனால் அவளை அடைவது இலேசான காரியமாக இல்லை. அவள் தகப்பன் சம்பந்தம் செய்துகொள்ள விரும்பிய பலரையும் வெறுத்தவளான ஜகிராபாய் மணம்புரியாக் கன்னியாயிருந்துவந்தாள். அவள் விருப்பமின்மை எங்கும் ஆச்சரியத்துடன் பேசப்பட்டது. ஆயினும் அவள் எவரையும் நேசித்தாளில்லை. அவள் தந்தைக்கு ஒரே குழந்தையாகலின் அவள் மூலமாக வம்ச விருத்தியை எதிர்பார்த்திருந்த அலப்டுகீன் அவள் விவாகம் செய்துகொள்ளாமல் இருந்ததைப்பற்றி விசனமடைந்தான். ஆனால், தன் பிரிய புத்திரியின் மன விருப்பு வெறுப்புகளைக் கட்டுப்படுத்தவும் கண்டிக்கவும் விரும்பாததால் அலப்டுகீன் பேசாமலிருக்கவேண்டி யிருந்தது.

“பெற்றோர்களின் கடமை தம்மக்களை—ஆணையும் பெண்ணையும்—சரிசமத்துவத்துடன் தன்மதிப்பும் தன்னம்பிக்கையும் நிறைந்த சுதந்திர உள்ளுணர்ச்சி குன்றாமல், அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சிக்குணமும் உரம்பெற்று அமையும் வகையில் வளர்க்கவேண்டும். சிறு பிராயத்திலிருந்தே தூய்மையான எண்ணங்களும், வார்த்தைகளும், காரியங்களும், நடவடிக்கைகளும் படியும்படி வளரவிடவேண்டும். தத்தம் சுகாதாரம், ஒழுக்கம், சன்மார்க்க விதிகள் முதலியன பசுமரத்தாணி என பதிவுபெற சந்தர்ப்பங்கள் அமைக்கவேண்டும். எவ்விஷயத்திலும் தெளிவான அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும், அநுபவத்திற்கும் ஒத்த முடிவுகளை அறிவித்து அச்சிறார் சிறுமிகளை வளர்த்தல்வேண்டும். சுதந்திர வாழ்க்கைக்கும், ஆரோக்கியத்திற்கும் பொருத்தமான பழக்க வழக்கங்களே படியவிடவேண்டும். பயங்காட்டி உம்மாண்டி, பேய், பிசாசு, ஐந்து கண்ணன், மியா மியா பூனை, நாய் கடிக்கும் என்ற மூட மிரட்டல்களைக் காட்டி, குழந்தைப் பருவத்திலேயே பயங்கொள்ளிகளாகவும், அடிமை மனப்பான்மை யுடையோராயும் அவர்கள் வளரும்படிச் செய்யலாகாது. மூடப் பழக்க வழக்கங்களும், குருட்டு நம்பிக்கைகளும், சாரத்தைவிட்டு சக்கையைப் பிடித்தழும் அர்த்தமற்றஅறிவாராய்ச்சிக் கோவ்வாத, சுகாதாரத்திற்கும் சுத்தத்திற்கும் விலக்கான சடங்கு முதலியவைகளும் பழக்கத்திற்கு வரும்படி விடக்கூடிய விஷம்போன்ற அறிவை யடக்கும் கட்டுப்பாடுகளைக் கடிதில் களைந்தெறிதல் வேண்டும். உண்மையான தேரிய ஒழுக்க முறைகளைக் கையாண்டு வருதல்தான் அனைத்துயிரும் இன்புற்று வாழும் வழியெனக்கண்டு வாழ வகையமைக்கவேண்டும். ஊக்கமும் விடாமுயற்சியும் இடுக்கணுற்றபோதும் தளராதிருத்தலே மனிதருடைய அறிவுக்கொத்த முடிவு எனக்கொண்டு முயற்சித்தல் நன்னெறியில் ஒழுகும் அறிஞர் முறையெனவும் புகட்டல் வேண்டும். இங்ஙனம் பால்ய பிராயத்தில் ஒழுக்கம், தூய்மை, நேர்மை, சுகவழி முதலியவற்றோடு மக்கள் நிலைமையில் பிறந்த குழந்தைகளை ஆண் பெண் பேதமின்றி பகுத்தறிவுள்ள மக்களாக்கி விடல் அறிவுள்ள பெற்றோர் கடமையாகும். அதன் பின்னர் கல்வி கேள்விகளைக் கொடுக்கும் கடமையை செவ்வையாய்ச் செலுத்திய பெற்றோர், மேலும் தம் மக்களை கட்டுப்படுத்தவோ, தம்முறைக்கு உட்புகுத்தவோ துணிதல் தவறாகும். அறிவைக் கொடுத்தவர் அதன் பிறகு அறிவை அவர்கள் உபயோகித்துக்கொள்ள சந்தர்ப்பமும் சுதந்திரமும் அளிக்கவேண்டும். விவாக விஷயத்திலும், தொழில் விஷயத்திலும் தமது ஆண் பெண் மக்களை வற்புறுத்தல், தமதிச்சைப்படி நடக்கக் கட்டாயப் படுத்தல் அறிவுடையபெற்றோருக்கு அழகாகாது. தம்மக்கள் தவறொழுக்கத்தைத் தழுவா விதமாக வளர்த்துவிட்ட பெற்றோர், பின்னர் அவர்களைச் சுதந்திரர்களாக விடல்வேண்டும். அவர்கள் வாழ்க்கைத் துணைவியையோ துணைவனையோ தேர்ந்தெடுத்துத் தூய வாழ்க்கை நடத்தி, ‘காதலிருவர் கருத்தொருமித்து எஞ்ஞான்றும் ஆதரவு பட்டதே இன்பம்’ என்றபடி இன்பம் துய்த்து வாழ முட்டுக்கட்டை போடல் முறையன்று”.

(தொடரும்)

# செங்குந்த யாத்திரைவாசி

## பல்லூர்ச் செங்குந்தர் படலம்

வீரவாகுதேவர்:—தருமராஜனே! ஆகட்டுமே.

தரும:—அதோ தயாரா யிருக்கிறது பாருங்கள். இத்தெய்வ சபையின்கண் இத்தகைய அகோர காட்சியைக் காட்டத் தகாதாயினும் சந்தர்ப்பம் அவ்வாறு நேர்ந்திருக்கிறது.

நாரதர்:—இல்லை, இல்லை. இது காட்டவேண்டியதுதான். உண்மை, உரியவர்களுக்கு விளங்க வேண்டுமல்லவா! இல்லையேல் ஏழை சொல் அம்பலத்திலேறுமா? நான் கலகக்காரனென்று பேரெடுப்பதோடு வீண் பழிக்கும், சாபத்திற்குமல்லவோ ஆளாக விருந்தேன்.

வீரவாகு:—‘சிவ சிவ! முருக முருக!’ என்று சொல்லிக்கொண்டே கண்களையும், காதுகளையும் மூடிக்கொண்டு நாரதரை நோக்கி, ‘முனிபுங்கவ! முக்காலு முணர்ந்த மூதறிவாள! குந்தர்குலக் குறை யகற்றவந்த குணக்குன்றே! நுமது விரிந்த மனத்தின்கண் உதித்துள்ள தூய எண்ணத்தை இன்றே யுணர்ந்தேன். மாசறு மனத்தோய்! தேசுறு குணத்தோய்! கைம்மாறு கருதாக் கடப்பாடுடையோய்! நும்மாட்டு யாம் என்னாற்ற வல்லேம். இதுகாறும் நும்மனதைப் புண்படுத்தியமைக்கு என் செய்வேன். நும்மைத் தூற்றுவோர் தூய அறிவற்றவரன்றோ’ என்று நாரத முனிவரைப் பலவாறு புகழ்ந்து மன்னிப்பு கேட்டுக்கொண்டு மூடிய கண்களையும் காதுகளையும் திறந்தார்.

எனதரிய குந்தர்குலச் சகோதரர்களே! அப்போது குகப்பிரான் சபையின் அப்புறத்தே கண்ட காட்சி அற்புதக் காட்சியாகவே இருந்தது. ஆஹா! என்னென்று சொல்லுவேன். தலையறுபட்டவர்களும், காலறுபட்டவர்களும், கையறுபட்டவர்களும், காதறுபட்டவர்களும், மூக்கறுபட்டவர்களும், நாக்கறுபட்டவர்களும், உடலறுபட்டவர்களுமாக எண்ணிலர் எதிரே நின்றனர். அறுபட்ட தலை முதலிய உறுப்புக்கள் பல தொங்கிக்கொண் டிருந்தன. குருதியோராறாக ஓடிற்று. என் கண்ணிற்குப் புலனாயதை இதற்குமேல் கூற என் நாவெழாது; எழுத என் கை யோடாது. ஆண்டிருந்தெழுந்த அதிர்தரும் ஓசை (அழுகுரல்) செவி என்னும் பொறியைச் செவிடாக்கிற்று. இடுக்குற்ற தெய்வசபை, ‘கண்ணிற்சிறந்த உறுப்பில்லை என்பதும், செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம், அச்செல்வம் செல்வத்துளெல்லாம் தலை என்றதும் ஈண்டு பொய்த்தனவே. கண், செவி என்னும் இருபொறிகளும் ஈண்டு கண்டு கேட்டோர்க்கு பெருந்துன்பத்தையே விளைவித்தனவாகலின்’ என்று கூறி நடுக்குற்றது. சில நிமிஷங்கள் வரையில் சபை நிசப்தமா யிருந்தது. பின்னர் கீழ்க்கண்டவாறு விசாரணை நிகழ்ந்தது.

சித்திரகுப்தன்:—அடிகளே! இவர்கள் ஒரூர்ச் செங்குந்தரல்லர். பல்லூராராவர்...இ......

வீரவாகு:—ஆஹா! இத்தெய்வ சபையின்கண், மகத்தான வானவர்களும் தாம் வாழ்வான் வாழ்த்துவதும், தாமுயர்ந்து தம்மை யெல்லாம் தொழவேண்டித் தம் தம் மனதைத் தாழ்த்துவதுமாகிய மனவாக்குக் கெட்டாத பரம்பொருள் வீற்றிருக்கும் இச்சபையின்கண் இக்கோர காட்சியைக் கொணர்ந்த னோ! தருமராஜனே! நின் மனத் துணிவுதானென்னே!

தரும:—நடுங்கி ‘அச்சமென்ப தறியாத அண்ணால்! உண்மை கூறிய முனிபுங்கவர் மீதும், அடியேன் மீதும் சாட்டிய பழியை எவ்வாறு நீக்கிக் கொள்வது.’

நாரதர்:—ஆமாம். நன்றாய், தைரியமாய்ச் சொல்லப்பா, தர்மா!.

வீரவாகுதேவர் தலைகுனிந்து மௌனமா யிருந்தார்.

தரும:—அன்றியும் அடிகள் கட்டளையை—இம் மாபெருந் தெய்வசபையில்—மீறவும் கூடுமோ. உள்ளதை உள்ளவாறே காட்டுகிறோம். தங்களுக்கு உண்மையினை வேறெவ்வாறுதான் விளக்கிக் காட்டுவது? அடியேன் செய்த குற்றத்தை மன்னித்தருளி ஒரு க்ஷண நேரமாவது சித்திரகுப்தன் கூறுவதற்கு செவிசாய்த்தருளுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வீரவாகு:—சரி அப்படியானால், சித்திரகுப்த! ஆகட்டும் சீக்கிரம்.

சித்திர:—ஆண்டவரே! என் புன்மொழிக்குச் சிறிது நேரம் செவிசாய்த்து மன்னித்தருளுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். இவர்கள் அனைவரும் செங்குந்தர்கள் என்பது ஈண்டு அடியேன் சொல்லாமலே விளங்கும். ஒரூரார் அல்லர் என்றும் முன்னரே கூறியுள்ளேன். பாபங்களுள் தலைசிறந்து விளங்குவன கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் பஞ்சமா பாதகங்களன்றோ. இவற்றுள்ளும் முதற் பாதகமாகிய கொலைப்பாதகத்தை அளவு கடந்து செய்தவர்கள் இவர்களே யாவார்கள். அது இவர்களுக்குச் செய்துள்ள இந்நரக தண்டனையினாலேயே விளங்கும். அந்தோ பரிதாபம்; உயிர்க்கொலை தெய்வத்திற்குப் பிரியமானது என்ற ஓர் தப்பெண்ணத்தை இவர்கள் தலையில் புகுத்தியவர்தான்

எவரோ. 'தென்கடம்பை திருக்கரக் கோயிலான் தன்கடன் அடியேனையுந் தாங்குதல்' என்ற மறைமொழிப்படி பல்லுயிர்களையும் காக்கக் கடமைப்பட்டுள்ள கடவுள் அவ்வுயிர்களை—நிராதரவான உயிர்களைத் தனது சந்நிதியில் கொலைசெய்து குருதி தோய்வதனால் கோபங் கொள்வதன்றி எவ்வாறு மகிழ்ச்சி யடைவார். கடவுளர் பெயரால் இவர்கள் கொலை செய்த உயிர்களின் எண்ணிக்கை கணக்கி லடங்காது.

நாரதர்:—விவரமாகத்தான் கூறுமே.

சித்திரகுப்தன்.—விவரிக்க எந்நா எழவில்லை. ஆயினும் கூடியவரையில் ஒருவாறு கூறுவேன். ஞாபகம் வந்தபோது ஊர் பெரியதனக்காரர் முதலிய பிரமுகர்கள் பிடாரி கோயிலுக்கு எதற்கோ உற்சவம் ஆரம்பித்து விடுவார்கள். இதனால் ஊர்ப் பொதுஜனங்களுக்குப் பண நஷ்டத்தையும் பலவிதத்திலும் உண்டாக்குவதன்றி பெரும் பாவத்திற்கும் அவர்களை ஆளாக்கி வைக்கிறார்கள். அந்தத் திருவிழா பூர்த்தியாவதற்குள் நூற்றுக் கணக்கிலும், பெரிய ஊராயிருந்தால் ஆயிரக் கணக்கிலும், கோழிகளையும் ஆடுகளையும் தெய்வ சந்நிதியில் சம்மாரம் செய்து விடுகிறார்கள். ஈட்டி எழுபதென்னும் தெய்வீகப் பிரபந்தத்தில் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரால் சைவ பரிபாலனஞ் செய்வோரென்று மிகவும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள செங்குந்தர்கள் தான் இத்தகைய திருவிழாக்களை அடிக்கடி செய்து கடவுளர்களுக்கு நல்ல பிள்ளைகளாய் விட்டதாக எண்ணி யிருக்கிறார்கள்.

அந்தோ பரிதாபம்! கடவுளுக்கு இடவேண்டிய பலியின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்தாரில்லை.

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிரும் தொழும்''

என்னும் மறைமொழியைக் கேட்டுணர்ந்தாரில்லை. 'அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை' என்றபடி, உயிர்களிடத்து அருள் (என்னும் அன்பு ஈன் குழவி) காட்டி வாழாதவனுக்கு மோக்ஷம் கிடைக்காது என்பதல்லவோ ஆன்றோர் கொள்கை. ஆகவே,

'தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.'

(தன் உடலை வளர்ப்பதற்கு வேறோர் உயிரின் உடலைத் தின்பவன் எப்படி உயிர்களிடத்து அருள் உடையவன் ஆவான் என்பது இதன் திரண்ட பொருள்) என்றார் மறையோராதலால் மற்றொரு உயிரின் ஊனைத்தின்று தன் ஊனை வளர்ப்பவனுக்கு அருளென்பது இல்லை யாகவே அவ்வருளால் பெற வேண்டியதாகிய மோக்ஷம் எவ்வாறு கிட்டும்? ஆனால் கிட்டுவது நரகமே என்பதையும் அவர்கள் உணர்ந்தாரில்லை. மனத்தின்கண் தொல்லைநாள் தொட்டு தொடர்ந்து வேரூன்றியுள்ள கார் ஆகும் ஆணவக்காட்டை அதன்கண் நிறைந்து வாழும் யான், எனது, கொலை, களவு, கள், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியமாதியன வாகிய சிங்கம், புலி, கரடி, ஆடு, மான், என்னும் மிருகங்களையும், பொருந்திய கல்லையும், மேடு பள்ளங்களையும், பிறவற்றையும் அழித்தும், கொன்றும், அறக்கண்டும், பிளந்தும், நெஞ்சமென்று சொல்லப்பட்ட பூமி நன்றாகத் தெரியும்படி திருத்தி, மோனமென்னும் விதையை விதைத்து, அன்பென்னும் நீரைப் பாய்ச்சி, வளர்த்து, மாயை என்னும் பறவை நெருங்காதபடி காத்து விளைந்த சிவமென்னும் போகத்தைப் பெறுவதே மோக்ஷ விருப்பமுடையோர் செய்யும் செய்கை என்பதையும் அறிந்தாரில்லை. இவர் செய்யும் இத்தகைய கொடுஞ் செய்கையால் பிறப்பதற்கே ஆளாகி இறக்கின்றதன்றி கொடிய நரகங்களுக்கும் ஆளாகின்றார்கள்.

வீரவா:—இவர்களையோ, பொது ஜனங்களையோ இத்தகைய பாதகத்தினின்று விலக்க இது வரை முயன்றோர் எவருமில்லையோ?

நாரதர்:—பலர் முயன்றார்கள். முயன்றும் பயனில்லை.

வீரவா:—அவ்வாறு முயன்றவர் யார்?

நாரதர்:—ஜீவகாருண்ய சங்கத்தாரும், ஜீவகாருண்ய நண்பர்களும், சைவாச்சாரமுள்ள சில செங்குந்தர்களும் துண்டுப் பத்திரிகைகள் மூலமாகவும், தினசரி முதலிய பத்திரிகைகள் மூலமாகவும், பிரசார மூலமாகவும் முயன்றார்கள். துண்டுப் பத்திரிகைகளை வாங்கிக் கிழித்தெறிவார்கள். தினசரிப் பத்திரிகைகளை வாங்கிப் படிப்போரில்லை. பிரசாரகர்கள் சென்றால் அவர்கள் சொல்லுவதைப் பொதுஜனங்கள் யாரும் கேட்கக்கூடாதென்று திட்டம் செய்துவிடுவார்கள். ஏழைப் பொதுஜனங்கள் என்ன செய்வார்கள் பாவம். அவர்கள் திட்டம் செய்யும் முதலாளிகள், பெரியதனக்காரர்கள் தயவை எதிர்பார்க்கவேண்டி யிருக்கிறது அல்லவா?

---

# போய் வாருங்கள்

[பி. சே. மா.]

விஷயம் எப்படியோ முடிந்துவிட்டது. நண்பரை வழிகூட்டி அனுப்புகிறீர்கள். ஆம், அதோ வருகிறார். பாவம்; துக்கந்தான் அவர் முகத்தில் $62\frac{1}{2}$ பெர்சன்டுக்குமேல் குடிகொண்டிருக்கிறது. இதுவரை மிக்க குஷாலாய்த் திரிந்த தீபாவலித் தேவர் இவ்வளவு வருத்தத்துடன் வருவதற்குக் காரணமென்ன!

ஓஹோ! பாரத நாடே இன்று பரிதவிக்கிறது என்கிறீர்கள்; உண்மைதான். கலம் 3 ரூபாய் விற்ற குருவை நெல் $\frac{3}{4}$ ரூபாய்க்குக் கேழ்ப்பாரற்றுக் கிடக்குமானால் விவசாயிகள் பாடு கஷ்டந்தான். கருணாமூர்த்திகளாய், இந்தியர்களின் நன்மையைப் பாதுகாப்பதற்கென்றே கடவுளால் படைக்கப்பட்டவர்களாயுள்ள நமது அரசாங்கத்தினர், இரண்டொருநாள் தாமதித்தாலும் வட்டி சேர்ந்து ஏழை விவசாயிகள் கஷ்டப்பட நேருமென்ற ஈரநெஞ்சத்தோடு, ஓர் இமைப் பொழுதுந் தாமதிக்காது வாய்தாப் பணத்தைக் கக்கவைத்து விடுகிறார்கள்.

கைத்தொழிலாளிகளின் நிலையோ சொல்ல வேண்டுவதில்லை. நெசவுத் தொழிலைப் பொறுத்த வரையில் ஆலைக்காரர்களுக்கு நூல் விற்று முதலாகின்றதே தவிர, நெசவு செய்வோர்க்குக் கூலி கிடைக்கிற தென்பது குதிரைக் கொம்புதான். மற்ற ஒவ்வொரு தொழிலின் பெருமையும் நெசவுத்தொழிலுக்குத் தம்பியாகவோ — அண்ணாத்தை யாகவோ (உங்கள் இஷ்டப்படி தீர்மானித்துக் கொள்ளுங்கள்) இருக்குமென்பதில் சந்தேகம் வேண்டியதில்லை.

செருப்புக் கடைகள் முதல் செவர்லெட் முதலிய மோட்டார் கம்பெனி வரையில், ஆனா—பாடசாலை முதல் ஆங்கிலக் கல்லூரி வரையில், கோட்டி முதல் துருப்பு (சேனை) வரையில் உள்ள பல தொழிற்சாலைகளிலும், கல்விக் கூடங்களிலும், உத்தியோகங்களிலும் பலருக்குச் சீட்டுக்கொடுத்தாய் விட்டது. தலைச்சீட்டை நம்பிக்கொண்டு அங்கேயே இன்னும் ஓட்டிக்கொண் டிருப்பவர்களுக்குப் பிள்ளையார் குட்டு குட்டி விட்டார்கள். ஊதியத்தில் ஒரு பகுதி குறைக்கப்பட்டது. இவர்களனைவரது நிலைமையும் எப்படி இருக்குமென நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள். காலம் இப்படியே போகுமானால் அடுத்த ஆண்டில் தீபாவலித்தேவரை வரவேற்பதே கஷ்டந்தான்.

தேவர் வருகையால் எத்தனை குடும்பங்களில்போராட்டம்—பூசல்—முணுமுணுப்பு.

* * *

'வருடத்திற் கொருமுறை வருகிறது; ஒரு நல்ல சேலை—இப்போது வாங்கித்தாமல்—எப்போ வாங்கித் தருவீர்களோ? நன்னா இருக்கு, உங்களுக்கு எப்போதுங் கஷ்டந்தான்' என்ற முணுமுணுப்பு அன்று முழுதும் இருக்கிறது. தீபாவலித் தேவர் தெருவில் இருக்கிறார். என்ன செய்வது; வந்த வழியே அனுப்பவேண்டியதுதானே!

* * *

'அப்பா! எனக்குப் புதிய சொக்காய் தைத்துக்கொடு' என்கிறான் உன் மகன். கொஞ்ச நாள் போகட்டும் என்கிறீர். உங்கள் கஷ்டம் ஐந்து வயதுடைய உமது மகனுக்குத் தெரியுமா? 'போ, அப்பா! நீங்கள் நல்ல அப்பா அல்ல' என்கிறான். இந்த அற்ப வஸ்துவை நாம் வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்று எண்ணுகிறீர்; உமது கண்கள் நீரைச் சொரிகின்றன. நீங்கள் வேறு என்ன செய்யக் கூடும்.

* * *

'சாமி! நான் வந்து ஒரு வருடத்துக்கு மேலாச்சுங்க; இதுவரை ஒன்றுமே கொடுக்கலைங்க; ஏதாவது ஒரு துண்டு பார்த்துக் கொடுங்க; உங்க பேரைச் சொல்லி கட்டிக் கொள்றேனுங்க' என்று பல்லைக் காட்டுகிறான் உமது பண்ணையாள். என்ன பதில் சொல்லுவதெனத் தோன்றாமல் விழிக்கிறீர். இப்படிப் பட்ட சந்தர்ப்ப முடையோர் நம்நாட்டில் எத்தனைபேர் இருக்கிறார்கள். அவர்களெல்

லாம் தீபாவலித் தேவரென்றால் இன்னுஞ் சில நாளைக்கு வாராமலிருக்கக் கூடாதா! என்று தானே பிரார்த்திப்பார்கள்.

*  *  *

நான் விசாரித்த வரையில் தன்னைச் சிறப்பாக வரவேற்காத வருத்தம் அவருக்கில்லையாம். அவர் மக்கள் கஷ்டத்தை நன்கு உணர்ந்திருக்கிறாராம். வேறு அவருக்கு என்ன வருத்தம் என்பீர்கள்; நானும் அதைத் தான் சொல்லப்போகிறேன்.

பிரதி வருடம் ஐப்பசிமீ கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி யன்றல்லவா அவர் வருவது வழக்கம். ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி நரகாசுரனைச் சம்மரித்த ஞாபகார்த்தத்திற்காகவே அவரை அன்று வரவெற்கிறீர்கள். அது உங்கள் மூதாதையர் துன்பத்திலிருந்து விடுபட்ட நன்னாளென மகிழ்கின்றீர்கள். ஆனால், நீங்கள் விடுதலைக்குப் பதிலாக அன்று பெரிய விலங்குகளில் மாட்டிக்கொள்ளுகிறீர்களே என்று தான் தேவர் மிக வருந்துகிறார்.

'நாங்களா! விலங்கிலா!' என்று யோசிக்கிறீர்கள். ஆம், ஆம், ஆம் என்று மும்முறை அழுத்தந் திருத்தமாகக் கூற நானுந் தயாராகவே இருக்கிறேன்.

கள்ளரக்கன் அன்று எத்தனை ஏழைகளை ஏய்த்து மயக்கித் தன்னிருப்பிடத்திற்கு அழைத்துச் சென்று விலங்கிட்டான்! எத்தனை வீடுகள் அன்று கொலைக்களமாகத் திகழ்ந்து பாபமாகிய விலங்கைச் சேர்த்தன! எவ்வளவு பணம் டப்டிப்—டபடபா—படபடா—புஸ்புஸ்—கிர்ர்ர் இவற்றிற்காக சீனா முதலிய அந்நியநாடு சென்று நமக்கு அடிமை விலங்கை இறுகப் பூட்டின! நமது நெசவுத் தொழிலாளிகளைப் பட்டினியால் வதைய விட்டு லங்காஷயருக்கும், அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் அனுப்பிய லட்சக்கணக்கான பணம் ஏழைமக்களின் சாபமாகிய விலங்கை நமக்குத் தரிக்கவில்லையா?

தீபாவலித் தேவரைச் சாதாரண முறையிலும் வரவேற்க இயலாத ஏழை மக்களின் காட்சி ஓர் புறமும், படாடோபப் பகட்டர்களாலும் அறிவற்ற தீய செய்கையுடைய பாமர மக்களாலும் நாடுமுழுதுக்கும் ஏற்பட்ட பலவித விலங்குகளின் காட்சி மற்றொரு புறமும் தேவரை வாட்டிய தெனின் அவர் முகத்தில் 62½ பெர்சடுன்க்குமேல் துக்கக் குறி தோன்றியது ஓர் அதிசயமாகுமா?

இனி நமக்கு இத்தகைய தீபாவலி வேண்டாமென்று மித்திரன் எச்சரிக்கிறான். தீபாவலித் தேவருக்கு முழு சந்தோஷ மளிக்கவல்ல உண்மைத் தீபாவளியே நமக்குவேண்டும்.

கள்ளரக்கன் என்றுமே சமீபத்தில் வராதபடி வெதூரம் விரட்டி யடித்து, வாயில்லாப் பிராணிகளின் வசையிலிருந்து நீங்கி, சீனாவும் ஜப்பானும், அமெரிக்காவும் இங்கிலாந்தும் நம் பொருளைக் கொள்ளையிடா வகையில் நாம் செலவழிக்கும் ஒவ்வொரு காசும் நம் நாட்டுச் சகோதர சகோதரிகட்குப் பயன்படுகின்ற முறையில் தீபாவலித் தேவரை இனி வரும் ஆண்டுகளில் வரவேற்று நமக்கும், நம் சமூகத்திற்கும், தேசத்திற்கும் நன்மையுங் கீர்த்தியுந் தேடுவோமாக.

வாழ்க சுதந்தரதேவி!

வாழ்க தமிழ்த்திருநாடு!

---

ஒழுக்கம் உயர்குலத்தில் உய்க்கும்

நிவர்த்தியில்லையென்றிருந்த
யானைக்கால்
நோய்க்கு
அரிய மருந்து
நமது
ஸ்வர்ணகாந்தம்
பத்தியமில்லை
6 வார மருந்து ரூ. 21 0 0
மிஸஸ் டாக்டர்
கண்ணுசாமி,
திருவாரூர்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் வரலாறு

அருணகிரிநாதர் துதி

ஆசிரிய விருத்தம்

கார்முகில் வண்ணனுங் கமலமலர் வாசனுங்
காணவரி தாகிநின்ற
கல்லால மர்ந்தவன் கருணைபெறு மாதர்பால்
கந்தவேட் டுணைவராகச்
சூர்தனை யழிக்கவே தோன்றிமுசு மாமுகன்
துண்டாப் படைத்துணைவராய்ச்
சோணாடு மேவிதரு வாணுமொண்டநவ
சோர்விலாக் குந்தர் மரபில்
சீர்பரவு திலகமாய்த் திருவருணையம்பதியில்
சிவனருளி னுதித்துத்
தென்கடல் கடந்துமுரு கக்கடல்படிந்துலகு
செந்நெனற் பயிர்தழைக்க
வார்குவடு தொறுநின்று வான்திருப்புகழ்மாரி
வருடித்த அருணகிரிமா
வள்ளன் மேகத்தினது வண்டிருப்புகழ்பாடி
வனசமா மலர்சூடுவாம்.

## 1. சுவாமிகளின் அவதாரமும், இடமும், காலமும்

முத்தமிழ் முதல்வனாகிய முருகக் கடவுளுக்கே தமது இருதயத்தை உறைவிடமாக்கி, அவரை அன்போடு வழிபட்டுப் பல்லாயிரம் சந்தப்பாக்களால் பாடி, அந்தமில் இன்பத்து அழிவில் பேறு பெற்ற அநுபூதிமானாகிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள், ஔவை பாடலுக்கு நறுநெய்யால் பெருகிய அழகிய பெண்ணைநதி பாய்வதால் பல் வளப்பம் பெற்றதும், சைவ சமயாச்சாரியருள் இருவர் அவதரித்ததும் ஆகிய திருமுனைப்பாடி நாடென வழங்கும் நடுநாட்டின் கண்ணாய்த் திகழ்வதும், நினைக்க முத்திதருவதும், பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றாயதும், மற்றும் எண்ணிறந்த சிறப்புக்கள் வாய்ந்துள்ளதுமான திருவண்ணாமலையென்னும் திவ்ய திருப்பதியில் உபசுப்பிரமணியராகிய வீரவாகுவாதி நவவீரர் வழிவந்த உத்தம செங்குந்த மரபிலே * மூதண்ட முதலியார் என்னும் சிவனடியார் செய்த அருந்தவப்பயனாய் அவரது மனைவியார் முத்தம்மையார் என்னும் கற்பரசியின் மணிவயிற்றில் இற்றைக்குச் சுமார் 490 வருஷங்களுக்கு முன் அவதரித்தார். அருணகிரிநாதன் அருளால் பிறந்த பிள்ளையாகலின் அதற்கு அருணகிரிநாதனென்றே திருநாமஞ் சூட்டினர்.

## 2. பட்டினத்தடிகளும், அருணகிரியாரும்

கி. பி. 985 முதல் 1013 வரையில் அரசுபுரிந்த இராஜராஜன் சிதம்பராலயத்தில் சேமிக்கப் பெற்றிருந்த தேவார ஏடுகளை அருமுயற்சியுடன் வெளிப்படுத்தி, நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியாரைக்கொண்டு சைவத் திருமுறைகள் பதினொன்றையும் வகுப்பித்தானெனச் சரித்திர ஆராய்ச்சியால் விளங்குகிறது. மேற்சொன்ன திருமுறைகளில் பட்டினத்தடிகள் அருளிச்செய்த நூல்களும் சேர்க்கப் பெற்றிருக்கின்றமையின் பட்டினத்தடிகளின் காலம், திருமுறை வகுத்த 11-வது நூற்றாண்டிற்கு முற்பட்டதாகவே இருந்திருத்தல் வேண்டும். ஆதலின் மேற்கூறியவாறு பதினைந்தாம் நூற்றாண்டில் நிலவிய அருணகிரியார், பதினோராம் நூற்றாண்டிற்கு முன்னரே விளங்கிய பட்டினத்தடிகளின் புதல்வரென (அவ்விருவர் காலத்திற்கும் இடையே சுமார் 500 யாண்டுகள் உளவென்பதை அறியாது) சிலர் கூறி அக்கூற்றை உலகமெங்கணும் பரப்புவாராயினர். சரித்திர ஆராய்ச்சியில்லாத இவர் கூற்று எவ்வகையானும் பொருந்தாதென்பது மேற்கூறியவற்றால் வெள்ளிடை மலைபோல் விளங்கா நிற்கும்.

இத்தகைய புனைந்துரைகள் திருவள்ளுவர், கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்களைப்பற்றியும், மற்றும் பல பெரியோர்களைப்பற்றியும் நம் நாட்டின்கண் உலவி வருவதற்குக் காரணம்

சுவாமிகள், தாமியற்றியருளிய திருப்புகழ்ப் பிரபந்தத்தில் திருவண்ணாமலையின்கண் அரசுபுரிந்த பிரபுடதேவராயன் பெயரை எடுத்தாண்டிருக்கின்றமையின் அவ்வரசன் காலத்தவரெனத் தெரிகிறது. பிரபுடதேவராயன் கி. பி. 1450-ல் அரசாண்டதாகச் சிலாசாசனங்களால் ஏற்படுகிறபடியால் நமது சந்தப்பாவலர் காலமும் அதுவாகவே இருந்திருத்தல் வேண்டுமெனத் தீர்மானிக்க வேண்டி யிருக்கிறது.

---

* மூதண்ட முதலியாரும் அவரது பத்தினியார் முத்தம்மையாரும் புத்திரப்பேற்றை வேண்டித் தமது வாசஸ்தானமாகிய காஞ்சீபுரத்திலிருந்து புறப்பட்டு யாத்திரை செய்து வருங்கால் சில காலம் அருணையம்பதியில் தங்கியிருந்தார்களென்றும், அச்சமயத்தே அருணகிரி நாதனருளால் நமது திருப்புகழாசிரியர் அவர்களுக்குப் புத்திரனாய் அவதரித்தாரென்றும், பின்னர் அவர்கள் அம்மகவிற்கு அருணகிரிநாதன் எனப்பெயரிட்டு அப்பதியின் கண்ணேயே தங்கிவிட்டனரென்றும் ஒரு சாரார் கூறுவர்.

தேச சரித்திரம், பெரியோர்களின் ஜீவிய சரித்திரம் முதலியவற்றை அப்போதைக் கப்போது எழுதிவைக்கும் பழக்கம் நம் முன்னோர்களுக்கு இல்லாமலிருந்ததேயாகும். இதனால் பின் வந்தோர் தமக்குத் தோன்றியவாறும் மனம்போனவாறும் எழுதி வைக்கவும், அவற்றைப் பொது மக்கள் உண்மையென நம்பவும் இடமுண்டாயிற்று.

## 3. பிள்ளைப் பருவம்

இவ்வாறவதரித்த அரும்பெறல் மகவானது நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, தக்கவயதில் பள்ளிக்கனுப்பப் பெற்று, வளர்பிறைச் சந்திரனேபோல் இயற்கையறிவோடு செயற்கையறிவுங்கலந்து, தென்தமிழ் மொழியேயன்றி வடமொழியிலும் அறிவு முதிர்ந்து இளமையிலேயே கல்விக் கடலெனத் திகழ்ந்தது. சுவாமிகள் செய்தருளியுள்ள பிரபந்தங்களில் ஆங்காங்குள்ள வடமொழிப் பதங்களும், தொடர் மொழிகளுமே அவருக்கு வடமொழியில் ஆழ்ந்த ஞானமுண்டென்பதற்குப் போதிய சான்றாகின்றன. அருணகிரியாருக்குக் கல்வியறிவு முதிர்ந்தவாறே தெய்வபக்தியும் வளர்ந்து வந்தது.

## 5. அறுமுகப்பெருமான் அருணகிரியாரை ஆட்கொண்டு அநுக்கிரகித்தது

சுவாமிகள் தாம் செய்த தத்துவ ஆராய்ச்சியினால், சீவன் சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடையது என்ற உண்மையினை அறிந்து கொண்டாராகலின், இனி வாளாயிருப்பின் அகமாடை மடந்தையரென்று அயரும் செகமாயையுள் நின்று தயங்க நேரிடும் என்று அஞ்சினவராய்த் தைலதாரைபோல இடையறாது முருகப்பெருமானையே தியானிக்கலாயினார். அச்சமயம் சுவாமிகள் இருவினையொப்பும் மலபரிபாகமும் பெற்றிருந்தபடியால் செங்கதிர் வேலனாகிய பரமகுருநாதன் அன்னவரை யாட்கொள்ளத் திருவுளங்கொண்டு திருவருளை அவர்பால் செலுத்தியருளினார். உடனே அருணகிரியார் ஞானமுதிர்ந்து பரமாச்சாரியனை நாடினவராய் அண்ணாமலையார் அருந்தளிச்சிகரியின் வடபக்கத்திலுள்ள அறுமுகப்பெருமான் கோயிலை அடைந்து, ஆண்டே சின்னாட்கள்வரை வள்ளிமணாளனையே தியானித்தவாறிருந்தார். அப்போது சேவற் கைக்கோளன் பேரருள் சுரந்து, குருவடிவந் தாங்கி அவரெதிரே தோன்றித் தமது திருக்கரத்தால் திருநீறு பூசி, அருள்நோக்கம் பாலித்துத் திருவடி தீக்ஷை செய்து, ஜெபமாலை தந்து, மூவாசையையு மறுத்துச் 'சும்மாயிரு சொல்லற' என்ற மௌனோபதேசத்தையும் செய்தருளித் திருப்புகழ் பாடும் திறத்தினையும் தந்தருளினார். இவையாவற்றையும் மெய்ப்பிக்கத்தக்க அகச்சான்றுகள் சுவாமி பாடியருளிய பாக்களிலேயே அமைந்திருக்கின்றன. முருகவேளே நமது சுவாமிகளுக்கு முதல் முதல் 'முத்தைத்தரு பத்தித்திருநகை' எனப்பாடுமாறு * அடியெடுத்துக் கொடுத்துத் தமது வேலினால் நாவிற் பொறித்தருளியதாகவும் கூறுவதுண்டு. அது முதலாக அருணகிரிநாதர் அறுமுகப்பெருமானுக்கு அடிமை பூண்டவராய் 'கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழிவதாம் சொல்' என்றபடிக் கற்றவரேயன்றி மற்றவரையும் மனங்கசிந்துருகும் அன்பராக்கவல்ல தெய்வத் திருப்புகழைப்பாட ஆரம்பித்தார்.

## 6. சுவாமிகளின் யாத்திரை

இவ்வாறு பரமகுருநாதனிடம் ஞானோபதேசம் பெற்ற அருணகிரிநாத சுவாமிகள், சைவ சமயாச்சாரியர்களைப் போலவே திவ்யதலங்கள் சென்று முருகக் கடவுளைத் தரிசிக்க வேண்டுமென்கிற கருத்துடையவராய்த் திருபணைநல்லூர், திருவிடைமருதூர், திருவையாறு, வயலூர், விராலிமலை, பழநி, வீரை, மதுரை கொடுங்குன்றம், குன்றக்குடி, திருச்செந்தூர், சக்கிரப்பள்ளி திருப்பூந்துருத்தி, திருவேரகம், திருநாகேசுவரம், இஞ்சிகுடி, திருவாஞ்சியம், எட்டிகுடி, திருப்படிக்கரை, திருவரத்துறை, திருவேற்காடு, காஞ்சீபுரம், உத்திரமேரூர், திருத்தணிகை, வள்ளிமலை, காளத்தி முதலிய அநேக தலங்களுக்குச் சென்று சுவாமிநாதனைக் கண்ணாரக் கண்டு, வாயாரத் திருப்புகழ் பாடி ஆண்டவன் அடிக்கமலங்களில் சூட்டி ஆனந்திப்பாராயினார்.

## 7. பழநிப்பதியும் கலிசைச் சேவகனார் நட்பும்

நமது ஆசிரியர் அருணகிரியார் பல தலங்களில் பாடியருளிய திருப்புகழ்ப் பாக்களுள் பழநியைக் குறித்தவை மிகுந்திருத்தலின் அத்தலத்தினிடத்து விசேஷப்பற்றுகொண்டு அங்கு பல நாட்கள் தொடர்ந்து தங்கியாவது, அடிக்கடி தரிசனார்த்தம் சென்றாவது இருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது. பழநியாண்டவனிடத்து அளவுகடந்த அன்பு பூண்டு பழநிப்பதியில் பற்பல திருப்பணிகளும், அடியார் தொண்டும் இயற்றிவந்த கலிசைச் சேவகன் என்னும் மெய்த்தொண்டரோடு சுவாமிகள் மிகுந்த நட்புகொண்டு அவரது தொண்டினைப் பாராட்டினார் என்பது, கீழ்க்காணும் திருப்புகழ்களாற்போதரும்.

* நாவிற் பொறித்தது காளிதாசர், கம்பர் கதைகளையும், அடியெடுத்துக் கொடுத்தது ஆளுடைய நம்பி, கச்சியப்ப சிவாச்சாரியார், கெனேரியப்பர், சேக்கிழார் முதலியோருக்கு அடியெடுத்துக் கொடுத்ததையும் ஒத்திருத்தல் காண்க.



“வேலைவி டுகந்த காவிரி விளங்கு
கார்கலி சைவந்த சேவகன் வணங்க
வீரை நகர்வந்து வாழ்பழநியண்டர்
—பெருமாளே.”

* * *

“ேர்கலிசை வாழவரு காவேரி சேவகனை
துளமேவும்

வீரஆதி சூரர்கிளை வேர்மாள வேபொருத
தீரகும ராகுவளை சேரோடை சூழ்கழனி
வீரைநகர் வாழ்பழநி வேலாயுதா அமரர்
—பெருமாளே.”

மேலும் இப்பாடல்களால், சுவாமிகளுக்குக் கலிசைச் சேவகனாரிடமிருந்த நட்பின் மிகுதியால் அப்பெரியார் வாசஸ்தலமாகிய வீரை நகருக்குச் சென்று ஆண்டெழுந்தருளியுள்ள பழநியாண்டவரைப் பாடினாரென்றும், 'வீரைநகர் வாழ்பழநி வேலாயுதா' என்றதனால் கலிசைச் சேவகனார் பழநியாண்டவ மூர்த்தத்தினிடத்து கொண்டிருந்த பேரன்பினால் தாம் வாழூராகிய வீரை நகரிலும் பழநியாண்டவ மூர்த்தத்தைப் பிரதிஷ்டை செய்து வணங்கி வந்தாரென்றும், 'கார்கலிசை வந்த சேவகன் வணங்க வீரைநகர் வந்து வாழ்பழநியண்டர் பெருமாளே' என்றதனால் சிறப்பிக்கப்பெற்ற அப்பெரியார் கலிசையென்னு மூரிற்றோன்றி வீரையென்னு மூரைத் தமது வாசஸ்தானமாகக் கொண்டிருந்தார் என்றும் தெரியவருகிறது.

## 8. வயலூரில் சுவாமிகள் சிவகுருநாதனிடம் திருவடி தீக்ஷை பெற்றது

அருணகிரியார் வயலூருக்கு வந்தபோது ஆங்கு அறுமுகப்பெருமான் ஒரு முகத்துடன் மயில்மீதிவர்ந்து, கையில் வேலாயுதந் தாங்கியவராய் அவர் கனவிற்றோன்றி ஆட்கொண்டு, சிவபெருமான் திருநாவுக்கரையருக்குத் திருநல்லூரில் திருவடி தீக்ஷை செய்தருளியதுபோல முருகேசன் நமது சுவாமிகளுக்குத் திருவடி தீக்ஷை செய்து 'அன்பனே! நம்மீது திருப்புகழ் பாடவேண்டுமென்று கொண்டுள்ள பேரவாவினைப் பூர்த்தி செய்கின்றோம். நீ நமது மயில்வாகனத்தையும், நீபமாலையையும், வேலாயுதத்தையும், சீறடிகளையும், பன்னிரு தோட்களையும், செய்ப்பதியினையும் சிறப்பித்து என்றும் திருப்புகழ் பாடுவாயாக' வென்று தாதையைப்போலவே, தமதன்பரது திருவாக்கினின்று வரும் அமிழ்தினுமினிய அருந்தமிழ்ப் பாக்களைக்கொண்டு, பல்கோடி உயிர்களையும் உய்விக்க வேண்டுமென்ற அளப்பரும் பெருங்கருணையினால் கட்டளையிட்டருளினார் இவையனைத்தினையும்,

'கனவிலாள் சுவாமிநின் மயில்வாழ்வும்
கருணைவாரி கூர்ஏக முகமும் வீரமாருத
கழலுநீப வேல்வாகு மறவேனே'

'பக்ஷியெனு முக்ரதுர கமுநீபப்
பக்குவமலர்த்தொடையு மக்குவடு பட்
டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ்
விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே'

என்னும் திருப்புகழ்கள் மெய்ப்பிக்கின்றன.

தாம்பிற தலங்களுக்குச் சென்று பாடியருளிய திருப்புகழ்களிலும் 'வயலூரா' என வருதலினாலும், வயலூரின் வளப்பத்தைப் பல பாடல்களில் சிறப்பித்துப் பாடியிருத்தலினாலும் சுவாமிகள் வயலூரினிடத்து மிகுந்த காதலுடையரென்று தெரிகிறது. 'அருளிற்சீர் பொய்யாத கணபதி, திருவக்கீசன் வாழும் வயலி' என்றோதியிருத்தலின் அத்தலத்தின்கண் ணெழுந்தருளியுள்ள விநாயக மூர்த்தியினிடத்தும், சிவபெருமானிடத்தும் அநுக்கிரகம் பெற்றுள்ளாரென்றும் விளங்குகிறது.

## 9. வடிவேலன் 'விராலிமலைக்கு வா'வென அழைத்தது

திருப்புகழாசிரியர் வயலூரிற்றங்கியிருந்தபோது அவர் முன் சேயோன் “நாம் விரும்பி வாழுமூர் விராலி மலையாகும். ஆண்டு நீ வரக்கடவாய்” என்று கட்டளையிட்டு மறைதலும், *அக்கட்டளையினைச் சிரமேற்றாங்கித் திருமுருகன் திருவருளை வியந்து விராலி மலைக்குப் போய்ச் சேர்ந்தார். சேர்ந்து மயில்மீதிவரும் மன்றாடி மைந்தனைத் தரிசித்து, திருவண்ணாமலையில் தடுத்தாட்கொண்டதன்றி வயலூரிலும் தமது திருமேனியைக் காட்டி விராலிமலைக்கு வாவென அழைத்த அருட்டிறத்தினை நினைந்து நினைந்து, வியந்து, மனங் கசிந்துருகித் திருப்புகழ்பாடி அங்கு சின்னாள் தங்கியிருந்து பின்னர் பிறதலங்களுக்குச் சென்றார்.

## 10. முருகப்பெருமான் விசேட திருக்கோலங்களைக் காட்டியது

சிதம்பரம், திருச்செந்தூர், திருத்தணிகை, கொடுங்குன்றம் ஆகிய தலங்களில் நிருத்த தரிசனமும், சுவாமி மலையில் பாததரிசனமும் கலியுக வரதனாகிய முருகப்பெருமான் அருணகிரியாருக்குக் காட்டியருளியதாகக் கீழ்க்காணும் செய்யுள்கள் சான்று பகர்கின்றன.

*இது, வேதாரண்யத்திலிருந்த அப்பர் சுவாமிகளுக்குத் 'திருவாய்மூர் எம்மூர், ஆண்டு வருதி' யென்று அம்மையப்பன் கட்டளையிட்டு அவரை அழைத்துச் சென்றதை ஞாபகமூட்டுகிறது.

"அருகுகு குகுவென ஆளிவாய்பல
அலகைக ளடைவுட னுடும்ஆட்டமும்
அரனவ னுடனெழு காளிகூட்டமும்
அகலாதே.
அரிதுயில் சயனவி யாளமூர்த்தனும்
அணிதிகழ் மிகுபுலி யூர்வியாக்ரனும்
அரிதென முறைமுறை ஆடல்காட்டிய
பெருமாளே."

* * *

"செந்திலிலும் என்றன்முன் கொஞ்சிநட
னங்கொளும் கந்தவேளே."

* * *

"அமண ருடற்கெட வசியி லழுத்திவிண்
அமரர் கொடுத்திடும் அரிவை குறத்தியொடு
அழகு திருத்தணி மலையில் நடித்தருள்
பெருமாளே"

* * *

"மட்டற்ற இந்திரிய சட்டைக் குரம்பையழி
பொழுதினிலும் அருள்முருக
சுத்தக் கொடுங்கிரியில் நிர்த்தச்
சரண்களைம றந்திடேனே."

* * *

"தகையா தெனக்குன் அடிகாண வைத்த
தனியே ரகத்தில் முருகோனே"

ஆசிரியர் அருளிச்செய்த திருப்புகழாதிய நூல்கள் அவர் காலத்திலேயே போற்றப் பெற்றன.

"பச்சிம தக்ஷிண உத்தர திக்குள
பத்தர்கள் அற்புதம் எனஓதும்
சித்ரக வித்துவ சத்தமி குத்ததி
ருப்புக ழைச்சிறி தடியேனும்
செப்பென வைத்துல கிற்பர வத்தெரி
சித்தவ நுக்ரகம் மறவேனே"

* * *

"யானைக நாம அற்பு தத்தி ருப்புகழ்
தேனூற ஓதி யெத்தி சைப்பு றத்தினும்
ஏடேவு ராஜ தத்தி னைப்ப ணித்ததும்
இடராழி
ஏருத மாம லத்ர யக்கு ணத்ரய
நாறு விகார புற்பு தப்பி றப்பற
ஏதேம மாயெ னக்க நுக்ர கித்தது மறவேனே"

என்னும் திருப்பாக்களால் தமது காலத்திலேயே நாலா திக்குகளிலுமுள்ள பக்தர்கள், சுவாமிகள் நூல்களைப் பெரிதும் புகழ்ந்து போற்றி வந்தார்களென்பதும், மணிவாசகப் பெருந்தகை 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்றோதியவாறு அருணகிரியார் தாம் பெற்ற பேறனைத்தினுக்கும் முருகப்பெருமான் திருவருளே காரணமெனத் தாமே ஒப்புக்கொள்ளுகிறாரென்பதும் வெள்ளிடை மலைபோல் விளங்கும். (தொடரும்.)


# செங்குந்தர் கல்விநிதி

## ஓர் சிறந்த வேண்டுகோள்

அன்பும் அருளும் உடைய ஐயன்மீர்!

தருமம் தலைகாக்கும் என்பது பழமொழி. அத்தருமங்கள் எல்லாவற்றிலும் வித்தியா தருமம் மிகச் சிறந்தது. புத்தி நுட்பம் வாய்ந்த ஏழைச் செங்குந்த மாணவர்களின் கல்வி அபிவிருத்திக் கென்றே சென்னையில் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில் செங்குந்தர் கல்விநிதி திரட்டப்பட்டு வருகின்றது. இதுகாறும் பல ஏழைச் செங்குந்த மாணவர்கள் அக்கல்விநிதியிலிருந்து உபகாரம் பெற்றுப் படித்துப் பட்டம் பெற்றுள்ளனர். அவ்வாறே ஆண்டுதோறும் அநேகர் உபகாரம் பெற்று படித்து வருகின்றனர். இத்தகைய சீரிய வித்தியா தருமத்திற்கு ஒவ்வொருவரும் இயன்ற அளவு ஒத்தாசை செய்யவேண்டியது அவசியமல்லவா? இதைக் கருதியே நமது செங்குந்தர் மகாநாடுகளில் கல்யாணம் சீமந்தம் முதலிய விசேட காரியங்களில் தத்தம்மால் இயன்ற அளவு கல்விநிதிக்கு நன்கொடை வழங்கவேண்டுமெனத் தீர்மானித்துள்ளனர். பெருந்தொகை செலவாகும் ஓர் விசேட காரியத்தில் சொற்ப தொகை கல்விநிதிக்கு வழங்குவது எத்தகைய எளியோருக்கும் கஷ்டமன்று. ஆகையால் நமது ஊரில் அனைவரும் கல்விநிதிக்கு உதவி புரியவேண்டுமென மன்றாடி வேண்டுகிறோம்.

இங்ஙனம்:
செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தார்,
சங்கரநயினார் கோவில்.


# நமது அதிர்வெடி

[பி. சே. மா.]

மேல்நாட்டு நாகரீக உணர்ச்சி குடும்ப ஒற்றுமையைக் கலக்கிறது.

**லால்சந்து நாவல்ராய்.**

இந்நாகரீக உணர்ச்சியே பழங்காலத்திலும் தசரத-கைகேயிக்கும், பாண்டவ-கௌரவருக்கும் லடபுடா உண்டாக்கி யிருக்கவேண்டும்.

* * *

இவ்வுலகில் ஜீவிக்கவும் விதவைக்கு உரிமை யில்லையா?

**ஹரிவிலாச சாரதா.**

அவர்கள் தன்னந்தனியே விதவா உலகத்தில் சிறை வைக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறார் போலும்.

* * *

இம்மசோதாவை ஆதரித்து சட்டசபை தன்னைப் பூரண முதலாளிகள் ஸ்தாபனமெனக் காட்டிக்கொள்ளக் கூடாது.

**ஸி, எஸ். ரங்கையர்.**

தற்போது பூரண முதலாளி ஸ்தாபனமாக இல்லாவிட்டாலும் நிச்சயமாய்ப் பூர்வபட்ச சதுர்த்தசி போன்றதாகவாவது இருக்கிறதென்பதில் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை.

* * *

எல்லோரும் ஆங்கிலேயருடன் ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் ஏகாதிபத்தியம் அபிவிருத்தி யடையும்.

**பீகம்ஷா நவாஸ்.**

நன்றி கெட்ட உலகம்; இவ்வரிய ஞானோபதேசஞ் செய்த தாசானுதாசருக்கு ஓர் உடைந்த சேமங்கலமாவது பரிசளிக்கக் கூடாதா?

* * *

லட்சக்கணக்கான மருந்து வகைகள் நமது கடையில் உள்ளன. விவரம் கேட்லாக்கில் பார்க்கவும்.

**மருந்துக்கடை விளம்பரம்.**

அளவற்ற மருந்து வகைகள் உற்பத்தியாவதிலிருந்து நோய்க்கு மருந்தா? மருந்துக்கு நோயா? என்ற சந்தேகம் டாக்டர்கள் மூளையைக் குடைந்து வருகிறதாகக் கேள்வி.

* * *

கீழ்த்திசை நாடாகிய ஜப்பான், ஐரோப்பிய நாடுகளையும் அமெரிக்காவையும் அதட்டி வாழும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதனால், மேல் நாடுகளின் பெருமையில் மண் விழுந்து விட்டதென்பது மறுக்க முடியாத உண்மை.

**எட்கார் ஸ்னோ.**

சுக்கிரன் கீழ்த்திசையை நோக்கி விட்டான். 'அறுபது வருடம் வாழ்ந்தாருமில்லை; அறுபது வருடம் கெட்டாருமில்லை' என்ற இந்தியர் கொள்கையின் உண்மையை நினைத்துக்கொண்டு சாந்தி யடைவார்களாக.

* * *

பம்பாய் கவர்னரது உத்தியோக காலம் சீக்கிரம் முடிவுக்கு வருவதுபற்றி வருந்துகிறேன்.

**சங்கிலி சமஸ்தானாதிபதி.**

ஒரு செல்லாக் காசுமின்றி பம்பாய்த் துறைமுகத்தில் இறங்கிய கவர்னர், வெகு சீக்கிரத்தில், 3½ லட்ச ரூபாயும், பல வெள்ளிப் பேழைகளும், தங்கச் சாவிகளுங் கொண்டு திரும்புவதென்றால் யார்தான் வருந்தாமலிருக்க முடியும்?

* * *

கிராமவாசிகளை நசுக்கிவரும் கடன் பளுவிலிருந்து அவர்களை மீட்கவேண்டும்.

**கிராம புனருத்தாரணப் பேச்சு.**

'கடன் பளுவை நாங்கள் இறக்கிக்கொள்ளுகிறோம். பாதங்களையும், தொடைகளையும், தோள்களையும், தலையையும் ஒருங்கே அழுத்திவரும் வரிப்பளுவை நீங்கள் இறக்கி விடுங்கள்' என்று கிராமவாசிகள் கூறுகிறார்கள். அந்தப்பருப்பு வேகுமா!

* * *

மேல் நாட்டு நகரசபைகளில் கொடுக்கப்படும் வரிகளில் கால் பங்குகூட இந்த்

தேசத்தில் கொடுக்கப் படவில்லை. ஆனால், அதற்குப் பிரதி பிரயோஜனமாகப் பொது விஷயங்களில் செய்யப்படும் காரியங்கள் அதிகமானதும் ஆச்சரியமானது மாகும்.

சென்னை மேயர்.

மிகுதி முக்கால் பங்கு வரியுங் கொடுக்க முன்வராதது வரிசெலுத்துவோர் குற்றமல்ல. ஸ்தல ஸ்தாபனங்கள் பூராவரியையுந் தீட்டி விட்டால் 365 நாளும் பட்டினி கிடந்தாவது நாங்கள் செலுத்திவிடத் தயாரென அவர்கள் மார் தட்டுகிறார்களே ! கேட்கவில்லையா ?

* * *

சகல பாக்கியங்களிலும் புத்திர பாக்கியமே மேலானது. லோத்ரா அதை அளிக்கவல்ல சக்தி வாய்ந்தது.

வைத்திய விளம்பரம்.

பிரமலோகம் உப்புச் சப்பு இல்லாமல் போய்விட்டதாம். நஷ்ட ஈட்டுக்காக பிரம தேவர் வழக்குத் தொடுக்கப் போவதாக வதந்தி யுலாவுகிறது.

* * *

புராதன காலத்தில் எங்கள் முன்னோர்கள், சுவர்க்கத்தின் எல்லையில் இந்தியா இருக்கிறது என்று சொன்னார்கள்.

ஜப்பான் கோஷ்டித் தலைவர்.

இராஜப் பிரதிநிதியின் சம்பளமும், கவர்னர்களது சம்பளமும் இரட்டிப் பாக்கப்படுமானால் கூடிய சீக்கிரம் சொர்க்கத்திலேயே இருக்கப் பார்க்கலாம். சந்தேகமே வேண்டியதில்லை.


வெளிவந்து விட்டது!

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்

அருளிய

## தெய்வத் திருமறை

இதில் சுவாமிகள் அருளிய திருப்புகழ், திருவகுப்பு, அந்தாதி, அலங்காரம், அனுபூதி ஆகியன ஆறு திருமுறைகளாகவகுக்கப்பட்டுள்ளன. இம்முறையில் இதுவரை இந்நூல் வெளிவந்ததில்லை.

பளபளப்பான காகிதம் 512 பக்கங்கள்

விலை ரூபாய் 2 0 0

காஞ்சி. நாகலிங்க முனிவர்,

'காமாட்சி விலாசம்'

கீழ்ப்பாக்கம் :: சென்னை.



## சிறந்த நூல்கள்

குறைந்த விலை ! நிறைந்த விஷயம் !

| | | | |
|---|---|---|---|
| செங்குந்தர் புராணம் | 0 | 12 | 0 |
| செங்குந்தர் பிரபந்தத்திரட்டு | 1 | 0 | 0 |
| சசிவன்ன போதம் தருக்க போதகாசிரியர் ஆ. செங்கல்வ ராய முதலியார் இயற்றியது | 1 | 0 | 0 |
| செங்குந்த மித்திரன் பைண்டு வால்யூம் மிக அழகான பைண்டு 1928 முதல் 1932 வரை தனித்தனி | 1 | 8 | 0 |

"செங்குந்த மித்திரன்" ஆபீஸ்,

சென்னை.


# போட்டிப் பந்தயம்

அடுத்த இதழைப் பார்க்கவும்

# நேயர்கள் கடிதம்

[திருநெல்வேலி திரு. S. பாக்கியநாத முதலியார் எழுதுகிறார்]

[திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த கோட்டாறு சு. மாணிக்க முதலியார் அவர்கள் புத்திரர் பழனியாண்டி முதலியாருக்குத் திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம் அ. முத்துச்சாமி முதலியாரவர்கள் புதல்வி பார்வதி யம்மாளை இவ்வாண்டு வைகாசிமீ 23-ந் தேதி விவாகம் செய்யப்பட்ட விஷயம் பெரும்பாலோர்க்குத் தெரிந்ததேயாகும். அது சம்பந்தமாய்க் கீழ்க்கண்ட விஷயங்கள் எவரும் அறியவேண்டியது அவசிய மென்றெண்ணி இதை வெளியிடுகிறோம்.]

## கோட்டாற்றில் ஒற்றுமை விவாகம்

நான் திருநெல்வேலி ஜில்லாவிலிருப்பவன். மற்ற ஜில்லாக்களுக்கு நான் போனதில்லை. அங்கு நம்மவர்கள் இருக்கிறார்களென்றே எனக்குத் தெரியாமலிருந்தது. நமது செங்குந்த மித்திரன் வெளிவந்த பின் அதன் மூலமாய்த் தென்ஜில்லாக்கள் முழுதும் நம்மவர்களிருக்கிறார்களென்றும், நமக்குள் வித்தியா பட்டம் பெற்றவர்களும் அநேகர் இருக்கின்றனரென்றும் தெரிய வந்தது.

அன்றியும் இதுவரை கூடிய நான்கு மகாநாடுகளிலும் பல இடங்களிலுள்ள நம்மவர்கள் ஒருங்கே கூடி ஒருவரை யொருவர் நேரில் கண்டு பேசிக்கொள்ளும்படியான சிலாக்கியமும் நமக்குக் கிடைத்தது. பற்பல இடங்களிலிருக்கும் நம்மவர்கள் ஒன்றுகூட நேர்ந்ததால் நமக்குள் பலவித வமிசப் பிரிவினை இருக்கிறதென்பதும் அதனால் அநேக இடைஞ்சல்கள் சம்பவிக்கின்றதென்பதும் உணர்ந்தோம். நாம் எல்லோரும் ஏகமாயிருந்து சமபந்தி போஜனம் செய்வது போல விவாக காரியங்களிலும் பெண் கொண்டு கொடுத்து சம்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்று முடிவு செய்தோம். அம்முடிவானது இனி நாம் அடையவேண்டிய நன்மைகளுக்கு ஒரு அஸ்திவாரமா யிருக்கிறது. மகாநாடுகளின் மூலமாய் நாம் வேறு சில சீர்திருத்தங்க ளடைந்திருந்த போதிலும் ஒற்றுமை விவாக விஷயமா யுண்டான சீர்திருத்தமே எல்லாவற்றிலும் மிகச் சிறந்ததாகும்.

மகாநாட்டுத் தீர்மானத்துக்குப் பின் இதுவரையும் இந்தத் திருநெல்வேலி ஜில்லாவில் யாதொரு ஒற்றுமை விவாகமும் செய்யப்படவில்லை. இந்த ஆண்டில்தான் முதலாவதாக இங்கே ஒன்று நடந்தேறி யிருக்கிறது. அதனால் இந்த வமிசப் பிரிவினை விஷயமாய் மற்ற ஜில்லாக்களில் எவ்வித மிருந்தபோதிலும் திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்த விஷயங்களை மாத்திரம் இப்போது எடுத்துக் கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி ஜில்லாவில்

வடக்குத் தெருவார்
பத்த மடையார்
களக் காட்டார்
வேம்படித் தெருவார்
வேளாக் குறிச்சியார்
பாப்பாக் குடியார்
அத்தாள நல்லூரார்
எட்டையா புரத்தார்

என்ற பல வமிசப் பிரிவினைகளிருக்கின்றன. இந்த வமிசத்தார் யாவரும் ஒன்றாயிருந்து சமபந்தி போஜனம் செய்து கொண்டிருந்த போதிலும் விவாக விஷயங்களில் பெண்கள் கொடுத்து வாங்குவது மாத்திரம் கிடையாது. அந்த வழக்கத்தை ஒழித்து ஒற்றுமை விவாகத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்பதே நமது தலைச் சங்கத்தாரின் பிரதான நோக்கமாகும். அதற்காகவே நம்மவர்களில் கல்விமான்களாயுள்ள அநேகர் கூடின நமது மகாநாடுகளில், அவர்கள் பரஸ்பர விவாகம் செய்யவேண்டியதைப் பற்றி மிகவும் வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள். முற்காலத்தில் நடந்து வந்த அநேக காரியங்கள் இப்போது மாறுதலடைந் திருக்கின்றன வென்பதை நாம் பிரத்தியட்சமாய்க் காண்கிறோம். அப்படியே இந்த விவாக காரியங்களில் முந்தி வமிசப்பிரிவினை ஏற்பட்டிருந்த போதிலும், அதை நிராகரித்து தற்கால நாகரீகத்தின் படிக்கும், நமது தலைச்சங்கத்தாரின் கருத்துப்படிக்கும் நமது மகாநாட்டாரின் தீர்மானப்படிக்கும் நாம் இனிமேல் வமிசபேதமின்றி எல்லோரும் ஏகமாய்க் கலந்து விவாகம் செய்து கொள்ள

வேண்டியது அவசியமாயும் நியாயமாயுமிருக்கிறது.

திருநெல்வேலியிலிருந்து காலஞ்சென்ற கனம் வக்கீல். V. A. பூமிநாத முதலியாரவர்கள் ஜீவதசையிலிருக்கும் போது இம்மாதிரியான வமிசபேதத்தை யொழித்து கலப்பு விவாகத்தை நிலை நாட்ட வேண்டுமென்று அவர் எத்தனையோ முயற்சியெடுத்தார். அதற்கு நானும் பின்னும் சிலரும் உதவியாயிருந்தோம். என்றாலும், அந்த முயற்சி பிரயோஜன மில்லாமற் போய்விட்டது. ஒரு காரியத்தைக் குறித்து முயற்சி யெடுக்க வேண்டியது மனுஷரின் கடமை. அதை முடிவுசெய்ய வேண்டியது கடவுளின் சித்தம்.

அப்போது எவ்வளவோ முயற்சிகள் செய்தும் நடைபெறாத இவ்வொற்றுமைத் திருமணமானது நமது மகாநாட்டுத் தீர்மானத்திற்குப் பின் முயற்சியே யின்றி நிறைவேறுவதைப் பார்க்கையில் நமது பூர்வ அந்தகாரம் நீங்கி, நமக்குள் ஒரு புதிய சுடர் பிரகாசிக்கிறதென்பது நிச்சயமாய் விளங்குகிறது.

இந்தக் கோட்டாற்று விவாகத்தில் மாப்பிள்ளை வீட்டார் களக்காட்டு வமிசத்தைச் சேர்ந்தவர்கள். பெண்வீட்டார் வேளாக் குறிச்சி வமிசத்தைச் சேர்ந்தவர்கள். இவ்விரு வமிசத்தாரும் ஒருமனப் பட்டு பூரண சித்தத்துடன் செய்த இத்திருமணமானது கடவுளால் தெரிந்தெடுக்கப் பட்ட பரிசுத்த விவாகமென்றே நிச்சயிக்க வேண்டியிருக்கிறது. இக்கலியாணத்தில் பெண்பேசித் தாம்பூலம் விளம்பின பின், இதை முடியவொட்டாமல் தடுத்து விடும்படியாக அந்த இரு வமிசத்திலும் சிலர் எழும்பி அதற்கு வேண்டிய சூழ்ச்சிகள் செய்துபார்த்தார்கள். என்றாலும், அவைகள் பயனடையவில்லை. மாப்பிள்ளையின் பிதாவும்—பெண்ணின் தந்தையும் மற்றவர்களுடைய துர்ப்போதனைகளைக் கிஞ்சித்தும் அங்கீகரியாமல் ஒரே பிடிவாதமாயிருந்து விவாகத்தைப் பூர்த்திசெய்தது மிகவும் புகழப்படத் தக்கதேயாகும்.

இந்த சம்பவம் நடந்ததைப் பற்றி திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அநேகருக்கு திருப்திகரமாயிருக்கிறது. ஆனால் சிலருக்கு மாத்திரம் அது சம்மத மில்லாதது போலத் தெரிகிறது. அவ்வாறு சம்மதமில்லாதவர்களின் இருதயங்களில் நம் துணைவராகிய அறுமுகப் பெருமான் புகுந்து ஞானோபதேசஞ் செய்து அவர்களுக்கும் இது திருப்தியாகும்படி அருள் புரிவாராக.

இந்த ஒரு விவாகம் நடந்ததைப் பற்றி மாத்திரம் நாம் சந்தோஷங்கொண்டு மௌனமா யிருந்துவிடக்கூடாது. இனிமேலும் அடிக்கடி இம்மாதிரியான கலப்பு விவாகங்கள் நடந்தேறும்படியாக அங்கங்கேயுள்ள பிரபுக்கள் எழும்பி நம்மவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். கலப்பு விவாகம் ஊர்ஜிதத்துக்கு வரவர வமிசபேதங்களும் கட்சி விவாதங்களும் அடியோடு தொலைந்து நமக்குள் சமாதானம் நிலைத்தோங்கும்.

ஒற்றுமை விவாகங்கள் அதிகமாய்ப் பெருக வேண்டுமானால் ஏழைகளா யுள்ளவர்கள் முயற்சி யெடுப்பது பிரயோஜனப் படமாட்டாது. தனவந்தர்களாயுள்ளவர்கள் எழும்பி முதலாவது சில விவாகங்களைச் செய்து முன்மாதிரி காட்டவேண்டும். அதன் பின் சகலரும் அவ்விதம் செய்ய யாதொரு பயமுமின்றி முன்வருவார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நமது வமிசங்களில் மேற்கண்ட வேளாக் குறிச்சி வமிசத்தார் அம்பாசமுத்திரம், கல்லிடைக் குறிச்சி, தென்காசி, கோட்டாறு முதலிய இடங்களில் இருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த ஜனத்தொகை யுடையவர்கள். இந்த ஜில்லாவில் நமக்குள் முதலாவது உயர் தாக் கல்விப்பட்டம் பெற்றது அந்த வமிசத்திலுள்ள Mr. வள்ளியானந்த முதலியாரவர்கள் தான். இரண்டாவதாகத்தான் திருநெல்வேலியிலுள்ள வக்கீல் Mr. பழனியாண்டி முதலியாரவர்கள் B. A. பட்டம் பெற்றார். மேற்சொன்ன வள்ளியானந்த முதலியாரவர்கள் B. A., B. L., பட்டம் பெற்று திருவாங்கூர் சமஸ்தானத்தில் சிவில் நியாயாதிபதி (District munsiff) என்னும் பதவியிலமர்ந்து அந்த உத்தியோக முறையில் நீதி நெறி வழுவாது நடந்து எங்கும் புகழ்பெற்று காலஞ்சென்றார். இப்போதும் அந்த வமிசத்தில் சுமார் ஏழுபேர் வரையும் உயர்தாக் கல்விப் பட்டம் பெற்றவர்களிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட பெரிய வமிசத்தார் இந்த ஒற்றுமை விவாகத்துக்குமனப்பூர்வமாய் இணங்கி விட்டதினாலே இனிமேலும் இம்மாதிரி விவாகங்கள் யாதொரு தடையுமின்றி நிறைவேறுமென்று நம்புவதற்கு ஏதுவுண்டாயிருக்கிறது.

ஆகையால், சீரிய குல செங்குந்த சிகாமணிகளே! நீங்கள் ஒருமனப்பட்டு ஆங்காங்கு



நமக்குள் பல ஒற்றுமை விவாகங்கள் நடந்தேறுவதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

தேவகோட்டை S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியார் எழுதுகிறார்

## விதவா விவாகமும் நடந்துவிட்டது

நம் செங்குந்த குலந்திகழ்ந்து சீருறச் சென்னையின்கண் நிறுவப்பெற்றுள்ள தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் மாத வெளியீடான செங்குந்த மித்திரனைக் கண்ணுறும் புண்ணியச் சீலர்காள்! நமது மகாநாட்டின் தீர்மானங்களைத் திடமுற நடாத்தும் திண்ணியகாத்திர செங்குந்த குல சிகாமணிகாள்!! நம் மகாநாட்டின் தீர்மானங்களில் முக்கியமானது ஒற்றுமைத் திருமணமும், விதவா விவாகமுமே யாகும். இவற்றுள் ஒற்றுமைத் திருமணம் நமது மகாநாடுகளுக்குப் பின் அநேகம் நடைபெற்று வருகின்றன. ஆனால், விதவாவிவாகம் ஒன்றாவது நடைபெற்றதாகத் தெரியவில்லை. அக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, இராமநாதபுரம் ஜில்லா சேற்றூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த மேட்டுப்பட்டி பிரபல வியாபாரி திரு. S. சங்கரலிங்க முதலியார் அவர்கள் குமாரர் திரு. பழநிச்சாமி முதலியாருக்கும் திருநெல்வேலி ஜில்லா வீரவநல்லூரிலிருந்து தற்சமயம் பாம்பக்கோவில் சந்தையில் வசித்துவரும் திரு. ந. யி. பூ. உ. உலகநாத முதலியாரவர்கள் குமாரத்தி, சங்கர வடிவம்மாளுக்கும் இவ்வருடம் ஆவணித் திங்கள் 22-ம் நாள் விதவாவிவாகம் நடத்தப்பட்டது. எல்லாஜாதியிலுமுள்ள பல பெரியோர்கள் வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்தனர். ஆட்சேபங்களையும் பொருட்படுத்தாது முதன் முதலாக இவ்விதவாவிவாகம் செய்து கொண்ட அம்மணமக்களுக்கு நங்குல முதல்வனாங் குமரக் கடவுள் தீர்க்காயுளுந் திடகாத்திரமும் புத்திரப்பேறும் பெருகத் திருவருள் புரிவாராக. இவ்விதவா விவாகத்தைப் பின்பற்றி செங்குந்தகுலமக்கள் யாவரும் ஐந்தாவது மகாநாட்டிற்குள் அநேக விதவா விவாகங்கள் நிகழ்த்த அறுமுகப் பெருமானருள் சுரப்பாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

## சிக்கனத் தீர்மானங்கள்

உடையார்குடி செங்குந்தர் மகாசபை

[கிராம பிரதிநிதிகளின் சார்பாக 14 பேர் கையெழுத்திட்டு அனுப்பியுள்ளதின் சாரம்]

நாட்டார்மங்கலம், மேலணிக்குழி, லால்பேட்டை, குருங்குடி, உடையார்குடி, பழஞ்சநல்லூர் ஆகிய ஆறு கிராம செங்குந்த மகாஜன பிரதிநிதிகள் கூடி, நமது மரபினர்களின் சுபாசுப காரியங்களின் பழக்கத்திலுள்ளவைகளிலிருந்து திருத்தி அமைக்கப்பட்ட அம்சங்களில் முக்கியமானவைகள்:—

நமதுகுலத்தினர்கள் சுபாசுப காரியங்களில் வரையறையின்றி செலவுகள் செய்வது பலருக்கும் பொருளாதாரக் கஷ்டமும், மனக் கஷ்டங்களும் விருத்தியாகிவரக் காரணமாகிறபடியால்,

1. கிராம தாம்பூலம் நான்கு வெற்றிலை ஐந்துபாக்கும் சம்மந்தம்செய்கிறவர்களுக்கு பனிரெண்டு வெற்றிலை பதினைந்து பாக்கும் வைக்கவேண்டியது. ஒத்தைத் தாம்பூலம் என்பது கிடையாது.

2. பெண் அழைப்பது முதற்கொண்டு முகூர்த்தம் முடியும்வரையில் சராசரி சீவல் தாம்பூலம் நடத்த வேண்டியது. பந்தலில் முகூர்த்த தாம்பூலம் கிராம பத்திவிதிப்படி நான்கு வெற்றிலை ஐந்து பாக்கும் நடத்த வேண்டியது.

3. வரிசை செய்கிறவர்கள் ஒரு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரையில் தான் வரிசை செய்யலாம்.

4. பெண்ணுக்கு பரியம்ரூபா ஐம்பதுக்கு மேல்பட்டும், நகை ரூபா நூற்றைம்பதுக்கு மேல் பட்டும் பெண் வீட்டுக்காரர் கேட்க சுதந்திரம் இல்லை. பெண் அழைப்பதுமுதல் பெண் மாப்பிள்ளை அனுப்புவதெல்லாம் மாட்டு வண்டியில்.

5. பெண் வீட்டில் ஊர்வலம் என்பது கிடையாது. நிச்சயார்த்தத்தில் அம்மான் சேலை உண்டு. மாப்பிள்ளை வீட்டுக்காரர் சேலை கிடையாது. அம்மான்பட்டம் முதல் யாருடையபட்டமும் எட்டணாவுக்குமேல் கொடுக்கப்படாது; பவுன்காசு கட்டக்கூடாது.

6. தீபாவலிக்கு மாப்பிள்ளையை அழைத்துவந்தால் வேஷ்டிகள் தவிர வேறு பாத்திரம் நகைகள் முதலானவரிசை செய்யக் கூடாது. முந்தின மாப்பிள்ளைகளுக்கு வேஷ்டி வரிசைகள் கிடையாது.

---

# நினைவுக் குறிப்புகள்

[பி. சே. மா.]

## கழுவுக்கேற்ற கோமுட்டி

வாய்ப் பேச்சில்—வெளி வேஷத்தில், தற்போது வைதீகம் உயிர்வாழ்கிற தென்பது நம் போன்ற சாதாரண சனங்களின் அபிப்பிராயம். ஆனால், பால்ய விவாகமும்—தீண்டாமையுமே வைதிகத்தின் உயிர்நாடிக ளென்பது மகாகனம்—உபயவே—சாஸ்திரிகள் பலரது சம்மதம். இந்த இரண்டில் ஒன்று வெகு காலத்துக்கு முன்பே ஆட்டங் கொடுத்து விட்டது. ஹரிவிலாச சாரதா அதன் ஆணிவேரைக் களைந்துவிட்டார்.

பொல்லாத பேர்வழியாகிய இந்தக் கிழட்டுக் காந்தி மற்றொன்றிலும் கைவைத்தால், தாடிவாலா (வைதிக தாடி என்பதை மறக்காதீர்கள்) எம். கே. ஆச்சாரியாவுக்குக் கோபம் கிளம்பாமற் போகுமா? கோபமென்றால் எப்படிப்பட்ட கோபம்! ஆளை அப்படியே ஆகாயத்தில் தூக்கியடித்தது. ஒரே பாய்ச்சலில் வெஸ்ட்மின்ஸ்டரில் போய்க் குதித்தார். (மோட்டார், ரயில், கப்பல் பிரயாணங்கள் வைதீகத்திற்கு விரோத மென்பது ஆச்சாரியார் கருத்து) மறு நிமிடமே தன் இரண்டு கொள்கைகளையும் அங்கு நிலைநாட்டத் தொடங்கினார். எங்கே! சீமையிலா! எப்படி! என்று நீங்கள் வியப்படைகிறீர்கள். உங்களுக்கு ஏன் இந்த வியப்பு தோன்றிய தென்பதே மித்திரனுக்கு வியப்பாயிருக்கிறது.

எம். கே. ஆச்சாரியா—ஆச்சாரியா எம். கே., என்று மாறினாலும், அவர் தாடி ஒரு சாணிலிருந்து ஒரு முழமாக நீண்டாலும், இந்தியாவில்—பிடிவாதக்கார பாபுஜி இருக்கும் வரை காரியம் பலிக்காதென அவரது வைதீகஞானம் அவருக்கு உணர்த்தி யிருக்க வேண்டும். 'ஆகட்டும், என் கைவரிசையைக் காட்டுகிறேன்' என்று கிளம்பினார். மேன்மை தங்கிய..............அவர்களுக்குப் பராக்கு பாடியாவது தம் கொள்கையை நிலைநாட்டுவதெனத் தீர்மானித்தார். வெஸ்ட் மின்ஸ்டரில் கால்வைத்த நேரம் அவருக்கு சுபயோகமாக முடிந்தது.

அவருக்கென ஒதுக்கப்பட்ட அறையின் ஜன்னல்களுக்கும், வாசற்படிகளுக்கும் அழகுக்காகத் துணிகளும், படுதாக்களுந் தொங்கின. 'அநாசாரங்களே! அவைகளை அப்புறப் படுத்துங்கள்' என கர்ஜித்தார். எல்லாரும் விழித்தார்கள். நரைத்த நீண்ட தாடி, வளர்ந்து பெருகிய மீசை, காற்றிற் பிசாசுபோல் பறக்கும்வெள்ளிய தலைமயிர், செகப்பும் வெளுப்புமான பட்டை நாமங்கள், மயிரடர்ந்த திறந்த மார்பு, கர்ப்பிணிபோல் வளர்ந்த தொந்தி, 12 முழ வேஷ்டி, வைதீகவார்த்தை எல்லாஞ் சேர்ந்து அவரை அரைப்பைத்திய மென வெள்ளையர்கள் மதிக்குமாறு செய்து விட்டது. 'நான் பைத்திய மல்ல; என்மதம் பிறருடைய துணிகளைத் தீண்டுவதற்கும் இடங் கொடுக்க வில்லை, அவைகளை அப்புறப்படுத்துங்கள்' என்றார். பார்த்தீர்களா! தீண்டாமையை எப்படி அநுட்டித்துக் காட்டினார்.

பால்ய விவாக சங்கதியும் அவ்வளவு ருசிகரமானது தான். 'அநேக வெள்ளைப் பெண்கள் என் விஷயத்தில் கவனஞ் செலுத்தினார்கள்'—இது ஆச்சாரியார் திருவாக்கு. ஆனால், அந்தப் பெண்களிடத்தில் இவர் மட்டும் மூச்சுகூட விடவில்லை, ஏன் தெரியுமா? கருப்புக்கு வெள்ளை பொருத்தமில்லை என்றா? அல்ல, அல்ல! வைதீகம் ஒதுக்கிய நீசர்கள் என்றா? அதுவும் அல்ல. அவர்களெல்லாம் பால்யத்தைக் கடந்த யௌவன ஸ்திரீகளாயிற்றே! என்ன செய்வார், பாவம்!

காரியம் இரண்டும் சாதித்தாய்விட்டது. இனி என்ன வேலை? கங்கைக்கரையில் இப்போது மூக்கைப் பிடித்து ஜபஞ்செய்து வருகிறார். எதற்காக? கடல் கடந்த பாபந்தீர, அத்தகைய பரமாத்மா புனித மடைந்து, கடல் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் பால்யமணம்— தீண்டாமையாகிய தேர்களை நிறுத்தி நிலைக்கச் செய்ய சக்தி பெறும் பொருட்டு சம்மேளனங்களும், சாஸ்திரோக்த சபைகளும் பலோபீஷ்ட யாகங்கள் நடத்த ஏற்பாடு செய்வதாகக் கேள்வி.



## குரங்குப் பிடி

கையில் அகப்பட்ட ஜீவன் அழுகிக் கீழே விழுகிறவரையில் பிடித்தபிடியைக் குரங்குகள் விடுவதில்லையாம். இதைத்தான் மர்க்கட முஷ்டி நியாயம் என்பார்கள். மகாத்மாவின் ஒவ்வொரு செய்கையும் இந்த நியாயத்தைச் சேர்ந்தவை.

மலையாளத்தில் கேளப்பன் தீண்டாதார் ஆலயப் பிரவேச உரிமைக்காக உண்ணு விரதமிருந்தார், 'நிறுத்து; நானும் பின்னால் உன்னோடு சேர்கிறேன்' என்று தந்தி யடித்தார் வழுக்கைத்தலைப் பேர்வழி. அவ்வளவுதான். 'சும்மா யிராதே, கிளம்பு' என்று அவரது அந்தராத்மா அவரைத் துளைத்துவிட்டது. அதைமீறி நடக்க அவரால் முடியவில்லை. எனவே, காங்கிரஸ் சபைகளுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டார். சட்டமறுப்பை ஒருவாறு தணித்தார். தனது உயிர்ப்பொருளான சபர்மதி ஆச்சிரமத்திற்கும் முற்றுப் புள்ளி வைத்தார். ஆசிரம வாசிகளை சென்ற ஆகஸ்டு முதல் தேதியோடு அடித்து விரட்டினார். 'போ உள்ளே' என்று ஹரிஜனங்களையெல்லாம் ஆசிரமத்திற்குள் பிடித்துத் தள்ளுகிறார். அவர் களுக்காகவே ஆசிரமத்தை அர்ப்பணஞ் செய்துவிட்டார். அவரே குறிப்பிட்டிருப்பதைப் பாருங்கள்:—

1. ஹரிஜனக் குடும்பங்கள் வசிக்கவும்,
2. ஹரிஜன ஹாஸ்டல் ஏற்படுத்தவும்,
3. தோலுரித்தல், தோல் பதனிடுதல், பாதரக்ஷை தைத்தலாகிய ஒரு கைத் தொழில் இலாக்கா நடத்தவும் சபர்மதி ஆச்சிரமம் உபயோகப்பட வேண்டும்.

அவரது குரங்குப்பிடி இப்போது விளங்குகிறதல்லவா?

* * *

## தாய் அழ, பிள்ளை அழ

இது தமிழ்நாட்டுப் பழமொழி. இப்பழமொழி வெகு விநோதமானது. தாயாரிடம் பிள்ளைகள் எக்காரியத்தையும் அழுதுச் சாதிப்பது வழக்கம். பிள்ளைகளோ, தாயின் குறிப்பறிந்து ஒத்தாசை செய்யவேண்டியது அவர்களது கடமை. ஆனால், காலம் கலிகாலமல்லவா! எல்லாம் தலைகீழாய்ப் போய்விட்டது. ஆலாபனம் பிடித்தாலொழிய தாய்க்கு இப்போது ஒரு கடித்த கொட்டைப்பாக்கும் லேசில் கிடைப்பதில்லை.

தமிழ்த்தாயும் இதே கதியை யடைந்திருக்கிறாள். அவள் செல்வாக்கு சென்று பல ஆண்டுகளாயின. சோர்ந்த முகம், தளர்ந்த சரீரம், மெல்லிய பேச்சு, குன்றிய நடை—இதுவே தற்கால தமிழன்னையின் நிலை. புதுப் புது அணிகளால் அவளை அலங்கரிப்பாரில்லை. மேல் நாட்டில் ஓங்கி வளரும் நவீனக் கலைகள் தமிழில் இல்லை. ஆங்கிலப் பயிற்சி யின்றி விஞ்ஞானப் புலமை—தாவர ஞானம்—வான நூலறிவு—உயிர் நூலுணர்ச்சி ஒன்றுமே அறியக்கூடாத நிலையில் தமிழர்கள் இன்று இருக்கின்றார்கள். சிறந்த நூல் பல தமிழில் மொழி பெயர்த்தும், ஏனை மொழிகளிலுள்ள நூல்களைப் பயின்று தமிழ் நாட்டின் தகுதிக்கேற்பத் திருத்தி எழுதியும் தமிழ்த்தாயை அலங்கரிக்க வேண்டியது மிக அவசியமாகும். பாரதியார் கருத்துங் கவனிக்கற்பாலது.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்,
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்."

* * *

தமிழன்னையின் ஈனக்குரல், அதோ—கேட்கின்றது.

மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் நிலமிசை யோங்கும்
என்றந்தப் பேதை யுரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ

என்று அவள் கதறும் ஓசை எல்லாருடைய மனதையும் இளக்கிவிட்டது. தமிழர்களும் விழித்து ஓடுகிறார்கள். தமிழ்த்தாய்க்குச் செய்ய வேண்டிய தொண்டு என்னவென்று யோசிக்கப் போகிறார்கள். தமிழ்த்தாயின் அரிய புதல்வராய், இராப்பகல் எந்நேரமும் அவளோடிருந்து அவளுக்குக் குற்றேவலாற்றிவரும் மிகப்பெருங் கிழவர்—மஹாமஹோபாத்தியாயர்—தாக்ஷிணாத்தியகலாநிதி உத்தமதானபுரம் வே. சாமிநாத ஐயரவர்கள் நம்மையெல்லாம் அழைக்கிறார். தமிழன்னையின் தகுதி யறிந்து அவள் நோய்க்குத் தக்க மருந்தளிக்கவல்ல டாக்டர் அவர் ஒருவரே யாகும். அதனால்தான் யூனிவர்சிடியாரும் அவருக்கு டாக்டர்என்ற பட்டம் வழங்கி யிருக்கின்றனர்.

தமிழ்ப் பெருமக்களே! தமிழறிஞர்களே! புலவர்களே! தமிழார்வ முடையவர்களே! உங்

களனைவருக்கும் இது சோதனை காலம். கிழவரின் அழைப்பை அலட்சியம் செய்யாதீர்கள்.

வரும் டிஸம்பர் மாதம் கிருஸ்துமஸ் விடுமுறையில் சென்னைக்கு வந்து சேருங்கள். தமிழன்பர் மகாநாட்டில் உங்கள் யோசனையுங் கூறுங்கள். 'கலைச்செல்வங்கள் யாவுங் கோணர்ந்திங்கு சேர்ப்போம்' என்று தோள் கொட்டுங்கள். நமது அன்னை—தமிழ்த் தேவிக்குப் புத்தமுதும் புதுக்கலையுந் தாருங்கள். இளமையும் எழுச்சியும் பெறச் செய்யுங்கள்.

தமிழ்த்தாயே! புகழ் ஏறிப் புவிமிசை என்று மிருப்பாயாக! வணக்கம். வணக்கம்.

* * *

வந்தது ஆபத்து.

'கள்ளனை நம்பினாலும் நம்பலாம், குள்ளனை நம்பக் கூடாது' என்ற பழங்காலத்துப் பேச்சைப் புதுப்பித்த அண்ணாத்தைகளுக்குப் பரிசு வழங்கவேண்டுமெனத் தீர்மானித்திருப்பதாக வைத்துக்கொள்வோம். பிரைஸ் யாருக்கு விழும்; சொல்லுங்கள் பார்ப்போம். 'ஆங்கிலேயருக்கு' என்கிறீர்கள். மார்க்கு 0 தான். 'அமெரிக்கருக்கு' இல்லை; இதற்கும் 0 தான். இந்த இருவருந் தலைசிறந்த தகல்பாஜிகள் என்று உலகமே சிரிக்கிறதே. சரி, மூன்றாவது நீங்கள் சொல்லக்கூடிய பேர்வழி, ஜப்பான் என்பது தெரியும். ஆம், இந்தக் குள்ளனைக் கண்டு உலகமே இப்போது நடுங்குகிறது.

இந்தியாவை முற்றுகை யிட்டிருந்த இங்கிலாந்து இனிக் கொஞ்சம் நழுவ வேண்டியது தான். ஜப்பான் தன் சாமான்களைக் கொண்டு வந்து இந்தியாவில் திணிக்கிறது. இந்தியா மூச்சுவிடவும் இடமின்றித் தவிக்கிறது. இந்தக் கஷ்டத்தைப் போக்க வழி என்ன? ஜப்பான் சரக்குகளுக்கு வரிப்பளுவென்னும் சாட்டையடி வழங்கப்பபட்டது. பார்த்தது ஜப்பான். 'ஹூம், ஆகட்டும், இந்தியப் பஞ்சே! எங்கள் ஜப்பான் நாட்டில் கால் வைக்காதே' என்றது.

அப்புறம் பாருங்கள். தந்தி மேல் தந்தி பறந்தன. சிம்லாவில் குட்டிமேஜை மகாநாடு கூட்டப்பட்டது. லங்காஷயர்—ஜப்பானிய நரிகளோடு இந்திய ஆலை நரிகளும் மேஜையைச் சுற்றி அமர்ந்தன. 'நம் மூவருக்கும் வயிறு நிரம்பவேண்டும். ஒருவருக்கொருவர் ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. யார் தலையில் கைவைக்கலாம்' என்று யோசிக்கின்றன.

இந்த நரிகளுக்கேற்ற நண்டுகள் யார்? கைத்தறிகள் தான். நெசவாளிகளே! உங்களுக்கு ஆபத்து காத்துக்கொண்டிருக்கிறது. மிக ஜாக்கிரதையா யிருங்கள்.

## கல்வி நிதிக்கு ரூபாய் 150

காஞ்சீபுரத்தில் நடந்த நமது இரண்டாவது மகாநாட்டுச் சமயம், செங்குந்தர் கல்வி நிதிக்கு ரூபா 250 நன்கொடை வழங்குவதாக வாக்களித்த, ஐயங்குளம் திரு. S. லட்சுமண முதலியார் அவர்கள் அப்பொழுதே கொடுத்த ரூபா நூறு போக, மிகுதி ரூபா நூற்றியைம்பதை 25-10-33உ நேரில் கொண்டு வந்து செலுத்தி விட்டார்கள். மற்றும் தமது வருமானத்தின் ஒரு பகுதியை ஆண்டு தோறும் அளித்து வருவதாகவும் உறுதி கூறியிருக்கிறார்கள். செங்குந்த உலகத்தின் அறிவு வளர்ச்சியில் அவர்களுக்குள்ள ஊக்கமும், பற்றும் அளவு கடந்ததாம். அவர்களுக்கு எல்லா வளனும் பெருகுமாறு வேண்டுவதோடு நமது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அமைச்சர்

# உலகப் போக்கு

[பி. சே. மா.]

## அந்தோ! வியன்னா நகரமே!

வியன்னாவுக்கு யோகம்; இந்தியாவுக்குச் சோகம். இரண்டும் ஏககாலத்தில் விளைந்து விட்டது. இவ்விளைவுக்குக் காரணமென்ன?

காஞ்சியில் பிறக்க முத்தி, காசியில் இறக்க முத்தி என்று பழங்காலத்துப் பெரியோர்கள் கூறுவார்கள். காசியுங் காஞ்சியும் அந்தக் காலத்தில் ஈ எறும்புக்குக்கூட திவ்விய க்ஷேத்திரங்களென நன்றாகத் தெரிந்திருந்தது. புட்டிரெட்டிபட்டி என்றால் யாருக்குத் தெரியும்.

ஊர்ச்சிறப்பால்—க்ஷேத்திர மகிமையால் மனிதர்கள் அப்போது நன்மை யடைந்து வந்தார்கள். பல பெரிய க்ஷேத்திரங்களின் பெயர்கள் கர்ப்பத்திலிருந்த பிண்டங்களின் முன்பும் பிரகாசித்துக்கொண் டிருந்தன.

இக்காலத்தில் அநேக பெரிய நகரங்கள் ஒருவருக்குந் தெரியாமல் மங்கிக் கிடக்கின்றன. அப்படிப்பட்ட க்ஷேத்திரங்களில் வியன்னாவும் ஒன்று. ஆஸ்திரியா தேசத்தின் தலைநகரா யிருந்தும் அப்பேரைக் கேள்விப் படாதவர்கள் இந்தியாவில் எத்தனை கோடி யிருக்கிறார்கள்!

ஒருவாரமாக மூலைமுடுக்கிலெல்லாம் வியன்னாவின் பெயர்தான் அடிபடுகிறது. இன்னும் சில நாளைகளுக்கு அப்பெயர் எங்கும் ஒலித்துக்கொண்டே இருக்கும். தேசீயத் தலைவர்கள் எப்பொழுது மேடைமீது நின்றாலும் வியன்னாவின் பெயரை வலிய இழுப்பார்கள். இது வியன்னாவுக்கு வந்த பெரிய யோகந் தான்.

ஆனால், அப்பெயர் எதற்காக அடிபடுகிறது என்று எண்ணும்போது இந்தியா சோகக் கடலில் ஆழ்ந்து விடுகிறது. 'இந்திய சரித்திரத்திலேயே ஓர் புதிய சகாப்தத்தை உண்டாக்க விருந்த ஸ்ரீயுத வித்தல்பாய் படேலை விழுங்கியா நீ பெயரெடுக்க வேண்டும்? என்று வியன்னாவை வெறுக்கிறோம். வியன்னா என்ன செய்யும்?

உடல் நலத்திற்காகச் சென்ற விடத்தில் போராட்டமே மிகுந்து விட்டதென்றும், ஸ்ரீ வி. ஜே. படேல் தைரியமாக மரணத்துடன் போராடி வருகிறாரென்றும், விரைவில் அதில் வெற்றி பெறக்கூடுமென்றும் சில தினங்களாக வந்துகொண்டிருந்த செய்திகள் தெரிவித்தன. இவ்வளவு சீக்கிரமாகக் காலன் அவரை ருசி பார்த்து விடுவானென எவரும் எதிர்பார்க்கவில்லை.

இந்தியாவின் துரதிர்ஷ்டம் இன்னும் அதை விட்டுத் தொலையவில்லை. சென்ற இரண்டாண்டுகளுக்குள் எத்தனைத் தலைவர்களைப்பறிகொடுத்து விட்டது? மோதிலால், லஜபத்ராய், சென்குப்தா, அன்னிபெசண்டு, வித்தல்பாய். அந்தோ! அந்தோ!! அருந்தலைவர்கள் ஒவ்வொருவராக மறைந்து செல்கின்றனரே! இன்று நமது ஒப்புயர்வற்ற தலைவரை இழந்தோம்; வீரத்தியாகியைப் பறிகொடுத்தோம்; இந்தியத் தாயின் கௌரவத்தைக் காத்துவந்த உத்தம புருஷரை வழியனுப்பி விட்டோம்.

இந்திய சட்டசபையில் தெரிந்தெடுக்கப் பட்ட தலைவராக முதன்முதல் பதவி வகித்து அதன் உரிமைக்காகவே போராடி, அதன் உரிமைக்காகவே அப்பதவியை உதறித் தள்ளிய தேசாபிமானி—பாரதத் தாயின் சிறந்த புதல்வர் மறைந்தார். பம்பாய் கார்பொரேஷன் மேயர் பதவி யேற்று, மேயர்களின் கடமையையும், பெருமையையும் நிலைநாட்டிய ஆண்தகையார் நீங்கினார்.

> "நான் ஓர் இந்தியன். இந்தியத் தாயே எனது அன்னை. இந்தியர்களெல்லாம் என் சகோதரர்கள். காங்கிரஸ் எனது செல்வம். இந்திய விடுதலைப் போராட்டமே எனது பிறப்புரிமை. தியாகமே எனது தர்மம்,"

என்று கடைசி நிமிடம் வரையில் கர்ஜித்த வீரர்—படேலின் ஆன்மா சாந்தியுறுவதாக.

## ஆண்டிக்கு வந்த அரச பதவி

வியன்னாவை யடுத்து லியோபால்டுஸ்டாட் என்று ஓர் குக்கிராமம் இருக்கிறது. அக்கிராமத்தின் ஓர் மூலையில் பாழடைந்த பொத்தைக் குடிசை ஒன்று பழைய நிலையைக் காட்டிக்கொண்டு இன்றும் இருக்கப் பார்க்கலாம். அந்தக் குடிசையில் ஒரு பெரிய தேசத்தின்

அரசராய் இப்போது விளங்கும் ஒருவர் ஒரு காலத்தில் வசித்தாரென்றால் அது ஓராச்சரியமல்லவா?

ஹானிஸ்ச் என்ற ஏழை இப்போது அந்தக் குடிசையில் வசித்து வருகிறான். அவன் ஹிட்லரின் பால்யகாலத் தோழன். பால்யத்தில் இருவரும் ஒன்றாய்ச் சமைத்து, ஒன்றாயருந்தி ஒன்றாய் வாழ்ந்த இடம் அந்தப் பொத்தைக் குடிசையே. ஒரே சமயத்தில் எல்லாருக்கும் சுக்கிர திசை யடிப்பதில்லை யல்லவா. ஹிட்லர் மட்டும் ஹெர் ஹிட்லரானார். சர் சான்சலரானார். ஆனால், ஹானிஸ்ச் பழைய ஹானிஸ்சாகவே இருக்கிறான். குடிசையும் தன் பழைமையை விடாமல் பற்றிக் கொண்டிருக்கிறது.

ஹிட்லரும், ஹானிஸ்சும் முதன்முறையாக 1909-ம் வருஷத்தில் ஒரு சத்திரத்தில் ஒருவரை யொருவர் சந்தித்தார்கள்.

ஹிட்லர் அப்போது கந்தலான கால்சட்டையே தரித்திருந்தார். பிச்சை எடுத்து காலட்சேபஞ் செய்து வந்தார். ஹானிஸ்சை ஓட்டலில் சந்தித்த அன்று அவர் முழுப் பட்டினி. ஹானிஸ்ச் வைத்திருந்த ஒரு சிறிய ரொட்டித் துண்டு இருவருக்கும் அன்று உணவாயிற்று.

அது முதல் இருவரும் ஒன்றாக வாழ்ந்தனர். கூலிக்கு மூட்டை சுமந்து சென்றனர். செங்கல் அறுத்தனர் மழைக்காலம் வந்தால் அவ்வேலைகளும் தகராறுதான்.

ஹிட்லருக்குச் சித்திரம் எழுதத் தெரியும் அதுதான் அவரைக் காப்பாற்றியது. கார்டுகளில் அவர் சித்திரம் எழுதித்தருவார். ஹானிஸ்ச் அதை விற்று வருவான். அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு இருவரும் ஜீவித்து வந்தார்கள்.

இவ்வளவு கஷ்டத்துடன் வாழ்ந்து வந்த ஹிட்லர் இன்று ஜெர்மன் ராஜ்யத்தின் தலைவராக விளங்குகிறார். ஹிட்லரின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்.

## 1935-ல் யுத்தமா?

"ஜப்பான், கொரியா, மஞ்சூரியாவிலுள்ள ஜப்பான் சைனியங்களைத் திருத்தி யமைக்க வேண்டும். நினைத்த மாத்திரத்தில் போருக்கு ஆயத்தமாகத் தக்க முன்னேற்பாடுகளைத் தாமதமின்றிச் செய்யவேண்டும். முதல்தரமான 36 யுத்தக் கப்பல்களைப் புதிதா யமைக்கவேண்டும். சீனா, ருஷ்யா, அமெரிக்கா, பிரிட்டனாகிய நான்கு தேசங்களும் ஒன்றாய்ச் சேர்ந்து விட்டதுபோல் தோன்றுகின்றன. 1935-ம் வருடம் கட்டாயம் உலகமகா யுத்தம் வந்தே தீரும்,"—இது ஜப்பான் யுத்த மந்திரியான கவுண்ட் அராக்கி, ஜப்பான் அரசாங்கத்திற்குச் செய்த எச்சரிக்கை. அதன்படி யுத்தம் தோன்றக் கூடுமென்ற அறிகுறிகள் ஒவ்வொரு தேசத்திலும் காணப்படுகின்றன. பாரம் தாங்கமாட்டாமல் பூமாதேவியும் நெடுநாளாகத் தவஞ் செய்து வருகிறாளாம். ஆண்டவன் கிருபை அவளுக்கு ஒரு வேளை வாய்க்கக் கூடும். அதை அறிய வல்லவர் யார்?

## குடியற்ற ராஜா.


குடிகள் இல்லாமல் ஒரு அரசர் இருக்க முடியுமா? இது மிகவும் சிக்கலான விஷயந்தான். இதைக் கேட்டதும் எனக்கு அண்டப் புளுகன் என்ற பட்டங் கட்ட நீங்கள் ஒவ்வொருவரும் தயாராக இருப்பீர்கள்.

கொஞ்சமாவது நிதானமில்லாத உங்களுக்கு அவசர.........என்ற அரைகுறைப் பட்டத்தையாவது கட்டலாமல்லவா? குடிகள் என்றவுடன் நீங்கள் எதையோ நினைத்துக்கொண்டு எனக்குப் பட்டங்கட்ட வந்தால் நான் மட்டும் சும்மா இருப்பேனா? குடிகளில் எத்தனையோவகைக் குடிகள் இருக்கிறார்கள்.

புகைக்குடி, சுருட்டுக்குடி, சிகரெட்டுக்குடி கட்குடி, சாராயக்குடி, கஞ்சாக்குடி இன்னும் என்னென்னமோ குடிகள் இருக்கின்றன. இவற்றில் ஒன்றையும் பெற்றிராத ஓர் அரசர் இருக்கிறார். தற்காலத்துச் சாதாரண ஜனங்களும் இக்குடி ஜனங்களைத் தங்களுக்கு ஆதரவாக எப்போதும் தயாரில் வைத்திருக்கிறார்களென்றால் சிம்மாசனாதிபதிக்கு இக்குடிகள் இல்லாமலிருப்பது மிகக் கேவலமல்லவா?

தற்கால நாகரீக நங்கைக்கு அவர் இருப்பது தெரியாதென்றே நினைக்கிறேன். இவ்வளவு அநாகரீகமான, தன்மதிப்பற்ற மன்னன் யாரென அறிய ஆசைப்படுகிறீர்களா? அவர்தான் தென்னாப்பிரிக்காவில் பெக்குவானாலந்து பிரதேசத்தை ஆண்டுவரும் சுதேச மன்னர் ஸ்ரீஷெக்கடி என்பவராவர். அவர் மிகவும் சுருசுருப்பும் புத்தி நுட்பமும் வாய்ந்த ஓர் இளைஞர்; வயது 27 தான்.

இவர் மாக்கின்டோஷ் என்ற ஆங்கிலேயனைச் சவுக்கால் அடித்ததற்காக பிரிட்டிஷார் அவரைப் பதவியிலிருந்து விலக்கினார்கள். ஆங்கிலேயனென்றால் பக்கா ஆங்கிலேயன்.




## வருடந்தோறும் 49 ஆயிரம்

கிண்டி ரேஸ் கிளப் (குதிரைப் பந்தய சபை) வருடந்தோறும் ஏறக்குறைய நாற்பத்தொன்பதாயிரம் ரூபாய் வருமான வரி செலுத்துகிறதாம்.

* * *

## சிக்கன மசோதா

கல்யாணத்தில் சுற்றத்தார் தவிர மற்றவர்களில் ஐம்பது பேர்களுக்கு மேல் அழைக்கக் கூடாதென்றும், கல்யாண வெகுமதிகளைக் கண்காட்சிபோல் காட்டக் கூடாதென்றும் இந்தூர் சமஸ்தானத்தில் ஒரு சட்டம் செய்திருக்கிறார்கள். மீறுவோர்க்கு 1000 ரூபாய் அபராதமோ சிறையோ விதிக்கப்படுமாம்.

* * *

## ஒரு பிரசவத்தில் 5 குழந்தைகள்

டெல்லிக்குச் சமீபத்திலுள்ள நாவானா கிராமத்தில் ஒரு ஸ்திரீக்கு ஒரே சமயத்தில் 3 ஆண்குழந்தைகளும், 2 பெண்குழந்தைகளும் பிறந்தனவாம். ஐந்தும் உயிரோடிருக்கின்றனவாம்.

* * *

## பாஷா கவிசேகரர்

28-9-33-ல் காளிதாசர் திருநாள் கொண்டாட்டத்தில் சேது சமஸ்தான மகாவித்வான் ஸ்ரீமத் ரா. இராகவையங்கா ரவர்களுக்குப் பாஷா கவிசேகரர் என்னும் பட்டம் சமஸ்கிருத சேவாசமிதியால் அளிக்கப்பட்டது.

* * *

## செத்தவர் பிழைக்கலாம்

நியூயார்க் நகரத்திலுள்ள இருதய ஆராய்ச்சி டாக்டர் ஆல்பர்ட் எஸ். ஹைமன் என்பவரும், மின்சார எஞ்சினீயர் ஸி. ஹென்றி ஹைமன் என்பவருஞ் சேர்ந்து ஹைமன் ஓட்டர் என்ற கருவியைக் கண்டு பிடித்திருக்கின்றனர். நாடித் துடிப்பு அடியோடு நின்று போனவர்களை இறந்தவர்கள் என்று தீர்மானிக்கிறோம். அப்படிப்பட்டவர்களின் நாடியை இந்தக் கருவியைக் கொண்டு மீண்டும் துடிக்கச் செய்யலாமாம். இக்கருவியால் பெரும் பயன் விளையுமென்பது டாக்டர்களது அபிப்பிராயம்.

* * *

## சட்டமெம்பர் பதவி

இந்திய கவர்ன்மெண்டின் சட்டமெம்பரான ஸர். பி. எல். மித்தர் அடுத்த ஏப்ரல் மாதம் பதவியிலிருந்து விலகும்போது அவருக்குப் பதிலாக ஸர். சி. பி. ராமசாமி ஐயர், ஸர். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், வங்காள அட்வகேட் ஜெனரல் ஸர். நிருபேந்திர சர்க்

---

(166-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல சுதேசிப் பெண்களைக் கற்பழித்த மகா மகா பேர்வழி. பலமுறை எச்சரித்தும் திருந்தாத இப்பேர்வழிக்கு பெக்குவானா நாட்டு வழக்கப்படி சவுக்கடி தண்டனை விதித்தால் அது குற்றமல்லவா? இக்குற்றத்திற்காகவே ஷெக்கடி பதவியிலிருந்து தள்ளப்பட்டார். ஆங்கிலேயனுக்குச் சுதேசி மன்னன் தண்டனை விதிப்பதென்றால் பொறுக்கக் கூடியதா? அவர்கள் கடவுள் பிரதிநிதிகளல்லவா?

சுதேசிகளுக்கு எல்லாத் தண்டனையும் ஆங்கிலேயர்கள் விதிக்கலாம். இது கிருஸ்தவ வேத சம்மதம். மார்பினால் நகர்ந்துபோகச் சொல்லலாம். ஒற்றைக் காலால் ஓடச் சொல்லலாம். முடியாதவர்களைப் பிரஷ்டத்தில் சாட்டையால், அடிக்கலாம். ஓர் சுதேசிக்கு இவ்வுரிமைகள் கிடைக்குமா?

ஷெக்கடி மன்னிப்புக் கேட்டதும் பதவி மீண்டும் அளிக்கப்பட்டதாம். எப்படியிருந்தாலும் புலியும் பூனையும் ஒன்றாகுமா? புலி-புலிதான்; பூனை-பூனைதான். சுதேசிகளே! இனி வெள்ளையின் கிட்டே கருப்பு போகப் போகிறது, ஜாக்கிரதை.

கார் ஆகிய மூவரில் ஒருவர் நியமிக்கப் படலாமெனத் தெரிகிறது.

* * *

ஸர். கே. வி. ரெட்டி நியமனம்

ராஜாங்க சபை மெம்பராக ஸர். கே. வி. ரெட்டி நாயுடு நியமிக்கப்பட் டிருக்கிறார்.

* * *

பணப் பிரேமையால் தற்கொலை

கொவ்னோ என்னும் நகரில் ஒரு பெண்ணுக்கு எதிர்பாராத வகையில் ஏராளமான திரவியம்கிடைத்ததாம். அதை என்ன செய்வதென்று தோன்றாமல் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தாளாம்.

* * *

ஐந்தடி வாழைக் குலை

சேலத்தில் நடைபெற்ற விவசாயக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த மாஞ் செடி வகையறுக்களில் ஐந்தடி உயரமுள்ள வாழைக் குலை ஒன்று வைக்கப்பட்டிருந்ததாம். அதில் 18 சீப்புகளில் 200 பவுண்டு எடையுள்ள 250 பழங்கள் இருந்தனவாம்.

* * *

மணிக்கு 190 மைல்

ருஷ்யாவில் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஒரு ரயில் வண்டி, சக்கரங்களே இல்லாமல், பால் பேரிங்குகளின் உதவியால் மணிக்கு 190 மைல் வேகத்தில் ஓடுமாம். அதற்குத் தண்டவாளங்களும் வேண்டியதில்லை.

* * *

அயோவாவில் ஸ்ரீமதி க்ளிண்டன் என்பவளிடம் 21 வருடங்கட்கு முன் பழுத்த ஆப்பிள் பழம் இன்னும் கெடாமல் இருக்கிறதாம்.

* * *

மதுரை ஜில்லாவில் திண்டுக்கல்லுக்குச் சமீபமான தாடிக் கொம்பு—அகரம் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்தாலம்மனுக்கு இவ்வாண்டு புரட்டாசி மீ 23-ந்தேதி முதல் ஐப்பசி 1-ம்தேதி வரை மஹோற்சவம் மிக்க சிறப்பாக நடந்தேறியதென ஷை சந்நிதி மானேஜர் திரு. மா. ச. லெட்சுமண முதலியார் அறிவிக்கிறார்.

* * *

ஆடவன் பெண்ணாக மாறினான்

ஸிந்து பிரதேசத்திலுள்ள ஹைதராபாத்தில் ராபு என்ற பெயருள்ள 18 வயதான முஸ்லீம் வாலிபர் ஒருவர் திடீரெனப் பெண்ணாக மாறிவிட்டனராம். மாதவிடாயும் ஏற்பட ஆரம்பித்து விட்டதாம்.

* * *

பெண் அங்கத்தினர்

தஞ்சை ஜில்லா கல்விச் சபைக்கு மிஸஸ். எஸ். வி. சரஸ்வதி அம்மாள் அரசாங்கத்தாரால் மெம்பராக நியமிக்கப்பட் டிருக்கின்றனர்.

* * *

கிராமங்களில் ரேடியோ

இந்தியாவில் ஒவ்வொரு கிராமத்திலும் ரேடியோ ஸ்தாபித்து சுமார் 25 மைல் சுற்றளவி லுள்ள இடங்களில் நடக்கும் பிரசங்கங்களையும், மற்ற செய்திகளையும் ஜனங்கள் அறிந்து கொள்ளும்படி செய்தால் கல்வியில் விசேஷ அபிவிருத்தி ஏற்படுமென்று ஸ்ரீ ஸி. எப். ஸ்டிரிக்லண்டு என்பார் இங்கிலாந்தில் உபந்யசித்தாராம். அதன்படி ஸர். அக்பர் ஹைதர் இந்தியா திரும்பியதும் ஹைதராபாத்தில் ஏற்பாடு செய்வதாகக் கூறினராம்.

* * *

பம்பாயில் வித்தல்பாய் பிரேதம்

வியன்னாவில் காலஞ் சென்ற வித்தல்பாய் படேலின் பிரேதம் நவம்பர் மீ 9-ந்தேதி பம்பாய்க்குக் கொண்டுவரப்படும்.

* * *

தமிழன்பர் மகாநாடு

வருகிற டிசம்பர் மீ 23, 24 தேதிகளில் சென்னை, பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் தமிழன்பர் மகாநாடு நடைபெறும். சென்னை அரசாங்கக் கல்வி அமைச்சர் திவான்பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியாரவர்கள் தலைமை வகிப்பார்கள். திவான்பகதூர் டாக்டர். ராஜாசர் அண்ணாமலை செட்டியாரவர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார்கள். ஸ்ரீ மகாமகோபாத்யாய. டாக்டர். உ. வே. சாமிநாத ஐயரவர்கள் வரவேற்புத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். தீர்மானங்கள் அனுப்ப விரும்புவோர் மகாநாட்டுக் காரியாலயத்திற்கு 10-ந் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டுமாம்.

* * *

சட்டசபைக் கூட்டம்

சென்னை சட்டசபை அக்டோபர் 30-ந் தேதி கூடும்பொழுது சென்னை கவர்னர் அதை ஆரம்பித்து உபந்யசிப்பார்.



நிலவரிக்கு தானியம்

இவ்வருஷம் மாகாணமெங்கும் நிலவரியில் 100-க்கு 25 வீதம் வஜா செய்யவேண்டுமென்பதாகவும், ஸெட்டில்மெண்டுபடி நிர்ணயிக்கப்பட்ட வரியை ரொக்கமாக அல்லாமல் தானியமாகவே வசூலிக்க வேண்டுமென அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்வதாகவும் திவான்பகதூர் எம். கோபால்சாமி முதலியாரவர்கள் சென்னை சட்டசபையில் தீர்மானம் கொண்டுவரப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

* * *

பற்கள் பிடுங்கப்பட்டன

பண்டித மாளவியாவுக்குப் பல்வலி ஏற்பட்டிருந்ததால் பற்கள் எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டார்.

* * *

சட்டவரம்பு மீறிய பாடசாலை

மிதுனபுரி ஜில்லா நேஷனல் பாடசாலை சட்டவரம்பு மீறிய ஸ்தாபனமென வங்காள அரசாங்கம் விளம்பரப்படுத்தி யிருக்கின்றது.

* * *

பென்ஷன் குறைக்கப்பட்டது

சசிபூஷணதேவ் என்பவர் 50 ரூபாய் பென்ஷன் வாங்கி வந்தார். அவரது குமாரர் தீவாந்திர சிட்சை விதிக்கப்பெற்றதால் பிள்ளையை அடக்க முடியாமைக்காக பென்ஷனை 20 ரூபாயாகக் குறைத்து விட்டனர்.

---

ஆங்கீரஸஞு மாசி மீ 29, 30-ல் (12, 13-3-33) திருவாரூரில் நடந்த

## தென்னிந்திய செங்குந்தர் நான்காவது மகாநாட்டு வரவு செலவுக் கணக்கு விவரம்

### வரவு

திருவாரூர்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சித்தி விநாயகர் | 5 | 0 |
| தி. க. சி. கல்யாண சுந்தர முதலியார் | 151 | 0 |
| சொ. கா. மு. காயாரோகண முதலியார் | 101 | 0 |
| தி. கா. ச. சபாபதி முதலியார் | 201 | 0 |
| தி. கு. ந. நடேச முதலியார் | 25 | 0 |
| கோ. கந்தசாமி முதலியார் | 3 | 0 |
| தி. ச. அரு. குமாரசாமி முதலியார் | 51 | 0 |
| தி. கு. ராம. ராமசாமி முதலியர் | 35 | 0 |
| தி. மு. ராம. முருகைய முதலியார் | 12 | 0 |
| சு. த. மு. தங்கவேல் முதலியார் | 10 | 0 |
| சா. ராம. ராமலிங்க முதலியார் | 8 | 0 |
| தி. சுப்பிரமணிய முதலியார் | 3 | 0 |
| சொ. வேலாயுத முதலியார் | 3 | 0 |
| ராம. அண்ணாமலை முதலியார் | 1 | 0 |
| கெ. சிங்கார முதலியார் | 1 | 0 |
| தி. க. ச. வே. முருகைய முதலியார் | 15 | 0 |
| சு. பா. சோமசுந்திர முதலியார் | 3 | 0 |
| ப. முத்து குமாரசாமி முதலியார் | 3 | 0 |
| க. விநாயக மூர்த்தி முதலியார் | 1 | 0 |

மஞ்சக்கொல்லை

| | | |
|---|---|---|
| அரு. சி. தியாகராஜமுதலியார் | 101 | 0 |
| தி. மு. அரு. தியாகராஜ முதலியார் | [illegible] | [illegible] |
| அ. மு. ச. சோ. அம்பலவாண முதலியார் | 50 | 0 |
| உ. முத்தைய முதலியார் | 5 | 0 |
| அரு. வி. பழனியாண்டி முதலியார் | 5 | 0 |
| ராம. ச. ராமசாமி முதலியார் | 60 | 0 |
| ராம. பி. ராஜகோபால் முதலியார் | 60 | 0 |
| R. விநாயகமூர்த்தி முதலியார் | 15 | 0 |
| பெ. ரீ. நா. ராமசாமி முதலியார் | 5 | 0 |
| தி. குழந்தைவேல் முதலியார் | 5 | 0 |

காரைக்கால்

| | | |
|---|---|---|
| ஆ. முத்துவேலு முதலியார் | 3 | 0 |
| சி. கணபதி முதலியார் | 3 | 0 |
| மு. ராஜகோபால் முதலியார் | 10 | 0 |
| அ. சபாபதி முதலியார் | 8 | 0 |
| வீ. சு. க. சோமசுந்தர முதலியார் | 5 | 0 |
| சி. பொ. கோவிந்தசாமி முதலியார் | 5 | 0 |
| து. சிதம்பர முதலியார் | 5 | 0 |
| மு. ராம. வாசுதேவ முதலியார் | 3 | 0 |
| மு. ராம. மலைப்பெருமாள் முதலியார் | 15 | 0 |
| ச. நடேச முதலியார் | 3 | 0 |
| பொ. வயித்திலிங்க முதலியார் | 5 | 0 |
| மா. உத்தண்டி முதலியார் | 10 | 0 |
| மா. பொ. சொக்கலிங்க முதலியார் | 10 | 0 |
| மா. மு. கந்தசாமி முதலியார் | 5 | 0 |
| ரா. ம. தெக்ஷிணா மூர்த்தி முதலியார் | 3 | 0 |
| உ. துரைசாமி முதலியார் | 5 | 0 |
| ச. ரெத்தினசாமி முதலியார் | 3 | 0 |
| [illegible] துரை முதலியார் | 2 | 0 |
| [illegible] சா. தங்கவேல் முதலியார் | 3 | 0 |
| மு. ராம. முத்தைய முதலியார் | 3 | 0 |

| | | |
|---|---|---|
| **நாகைப்பட்டினம்** | | |
| ரு. மு. நாகரெத்தின முதலியார | 30 | 0 |
| ஜவுளி. அ. ந. அருணசல முதலியார் | 5 | 0 |
| அ. ராம. அருணசல முதலியார் | 5 | 0 |
| **சிக்கல்** | | |
| கி. ரு. நடேச முதலியார் | 5 | 0 |
| **பொருள்வைத்தசேரி** | | |
| சி. த. நா. சிங்கார முதலியார் | 2 | 0 |
| பொ. நாருயண முதலியார் | 20 | 0 |
| நா. வெ. சீனிவாச முதலியார் | 5 | 0 |
| வே. மாணிக்க முதலியார் | 3 | 0 |
| நா. சிங்கார முதலியார் | 2 | 0 |
| சபாபதி முதலியார் | 3 | 0 |
| சி. நாருயண முதலியார் | 2 | 0 |
| சித. ரும. முருகைய முதலியார் | 5 | 0 |
| **மன்னர்குடி** | | |
| பெரி. ராம. நடராஜ முதலியார் | 100 | 0 |
| ந. ஆயியா முதலியார் | 1 | 0 |
| சி. த. காளிமுத்து முதலியார் | 25 | 0 |
| ச. சட்டயப்ப முதலியார் | 2 | 0 |
| ரும. ப. ருமலிங்க முதலியார் | 2 | 0 |
| வீ. பழனியாண்டி முதலியார் | 1 | 0 |
| மா. சேவு முதலியார் | 1 | 0 |
| இ. பக்கிரி முதலியார் | 2 | 0 |
| உ. பொன்னுசாமி முதலியார் | 2 | 0 |
| பொ. வயித்திலிங்க முதலியார் | 1 | 0 |
| ரும. செ. செல்வநாயக முதலியார் | 2 | 0 |
| **மணக்கால்—அய்யம்பேட்டை** | | |
| சொ. சாம்பசிவ முதலியார் | 5 | 0 |
| பெ. நடேச முதலியார் | 2 | 0 |
| வெ. ருமசாமி முதலியார் | 2 | 0 |
| **அம்மாபேட்டை** | | |
| கீழத்தெரு நாட்டாண்மை முதலியார் அவர்கள் மூலம் ஷை கீழத்தெரு வகைக்காக | 20 | 0 |
| மேலத்தெரு. வீ. சொ. மாணிக்க முதலியார் | 15 | 0 |
| வீ. சொ. அண்ணமலை முதலியார் | 10 | 0 |
| ரும. பாவாடை முதலியார் | 10 | 0 |
| தெ. தியாகருஜ முதலியார் | 3 | 0 |
| **வலங்கிமான்** | | |
| K. R. பாலகிருஷ்ண முதலியார் | 10 | 0 |
| அ. சுப்பிரமணிய முதலியார் | 25 | 0 |
| அ. முருகைய முதலியார் | 5 | 0 |
| சொ. ச. கலியப்பெருமாள் முதலியா | 5 | 0 |
| ரெ. கோவிந்த முதலியார் | 2 | 0 |
| மா. வேதய்ய முதலியார் | 2 | 0 |
| மொட்டயப்ப முதலியார் | 5 | 0 |
| சி. சு. முருகைய முதலியார் | 10 | 0 |
| பழனியாண்டி முதலியார் | 3 | 0 |
| து. வெ. மாரிமுத்து முதலியார் | 2 | 0 |
| ஆ. ஷ. கு குப்புசாமி முதலியார் | 35 | 0 |
| **கொடவாசல்** | | |
| ரும. க. ரெத்தின முதலியார் | 35 | 0 |
| ப. சா. சு. ருஜகோபால் முதலியார் | 25 | 0 |
| ரு. ரெ. சாமிநாத முதலியார் | 5 | 0 |

| | | |
|---|---|---|
| நெ. சா. க. உத்திராபதி முதலியார் | 10 | 0 |
| ரும. நாருயணசாமி முதலியார் | 20 | 0 |
| ரு. சிங்காரவேலு முதலியார் | 10 | 0 |
| தா. இ. கோவிந்தசாமி முதலியார் | 5 | 0 |
| நெ. சா. தம்புசாமி முதலியார் | 10 | 0 |
| ப. தி. சி. வீரப்ப முதலியார் | 3 | 0 |
| வசூல் செய்து மணியாடர் மூலம்அனுப்பியது | 50 | 0 |
| [ஷை ரூபாய் ஐம்பதுக்கு அடுத்த பத்திரிகையில் பேர்வழிகளின் விபரம் வெளியிடப்படும்.] | | |
| **மாயவரம் கூரைநாடு** | | |
| தி. வைத்திலிங்க முதலியார் | 25 | 0 |
| பா. யி. அருணசல முதலியார் | 15 | 0 |
| ஷை P. P. சிவ சிதம்பர முதலியார் | 15 | 0 |
| வே. வி. பொன்னம்மாள் | 10 | 0 |
| த. சா. முருக முதலியார் | 10 | 0 |
| அ. குருசாமி முதலியார் | 5 | 0 |
| ச. கு. பாவாடை முதலியார் | 2 | 0 |
| நா. ஷண்முக சுந்தர முதலியார் | 2 | 0 |
| சு. தக்ஷிணமூர்த்தி முதலியார் | 1 | 0 |
| வே. சபாபதி முதலியார் | 10 | 0 |
| ஆ. செ. ஆ. அப்புலிங்க முதலியார் | 1 | 0 |
| ச. பழனி முதலியார் | 1 | 0 |
| சி. த. அ. வீரப்ப முதலியார் | 50 | 0 |
| பெ. கந்தசாமி முதலியார் | 2 | 0 |
| சா. முத்தைய முதலியார் | 2 | 0 |
| **உள்ளிக்கடை** | | |
| நா. வையாபுரி முதலியார், கந்தசாமி முதலியார், சத்திவேல் முதலியார் மூலம் | 10 | 0 |
| **ரெகுநாதபுரம்** | | |
| ச. வைத்திலிங்க முதலியார்வகையரு | 10 | 0 |
| **வங்காரம் பேட்டை** | | |
| தா. ரு. பெரியசாமி முதலியார் வகையரு | 10 | 0 |
| **வாழுமங்கலம்** | | |
| க. பழனியாண்டி முதலியார் | 5 | 0 |
| சி. தியாகருஜ முதலியார் | 5 | 0 |
| வ. வீரப்பெருமான் முதலியார் | 5 | 0 |
| கா. முத்தைய முதலியார் | 5 | 0 |
| ப. ஞானசம்பந்த முதலியார் | 8 | 0 |
| மு. அய்யாசாமி முதலியார் | 3 | 0 |
| ப. க. ருமசாமி முதலியார் | 2 | 0 |
| கு. ப. குழந்தவேல் முதலியார் | 2 | 0 |
| கு. அருணசல முதலியார் | 2 | 0 |
| வி. ருத்திராபதி முதலியார் | 2 | 0 |
| வே. சுப்பிரமணிய முதலியார் | 1 | 0 |
| உ. ப. சாமிநாத முதலியார் | 1 | 0 |
| ப. ரெத்தினசாமி முதலியார் | 1 | 0 |
| **திருமல்ராயன் பட்டினம்** | | |
| க. மு. சு. சுப்பருய முதலியார் | 10 | 0 |
| உ. ஆறுமுக முதலியார் | 5 | 0 |
| சா. ருத்திராபதி முதலியார் | 2 | 0 |
| கோ. சவுந்திரராஜு முதலியார் | 3 | 0 |
| மு. வடமலை முதலியார் | 5 | 0 |
| கு. சா. சு. சாமிநாத முதலியார் | 10 | 0 |



| | | |
|---|---|---|
| க. நாகலிங்க முதலியார் | 2 | 0 |
| வே. சடட்யப்ப முதலியார் | 2 | 0 |
| சா. ம. முருகைய முதலியார் | 10 | 0 |
| வீ. குரு. மு. முத்தைய முதலியார் | 3 | 0 |
| வீ. குரு. சு. நாகப்ப முதலியார் | 10 | 0 |
| வ. ஆதிநாருயண முதலியார் | 5 | 0 |
| நா. கு. ரெத்தினசபாபதி முதலியார் | 3 | 0 |
| ச. நாகலிங்க முதலியார் | 2 | 0 |
| **திருமருகல்** | | |
| ஷண்முகநாதன் கோவில் கக்ஷிக்காரர் மூலம் வரவு | 30 | 0 |
| ருமமடம் கக்ஷிக்காரர்மூலம் வரவு | 25 | 0 |
| முதலியார் கக்ஷிக்காக வரவு | 20 | 0 |
| **திருப்பூண்டி** | | |
| சி. நடருஜ முதலியார் | 1 | 0 |
| வே. முருக முதலியார் | 1 | 0 |
| அ. கோவிந்த முதலியார் | 1 | 0 |
| வே. முத்து முதலியார் | 1 | 0 |
| மா. வயிரவ முதலியார் | 1 | 0 |
| மா. ராமு முதலியார் | 2 | 0 |
| சி. த. ராமசாமி முதலியார் | 1 | 0 |
| கி. ரு. சொக்கலிங்க முதலியார் | 1 | 0 |
| க. சுப்பா முதலியார் | 1 | 0 |
| தெ. பழனியாண்டி முதலியார் | 1 | 0 |
| **மணக்குடி** | | |
| மு. வெ. மாணிக்க முதலியார் | 11 | 0 |
| வெ. ச. ரெங்கசாமி முதலியார் | 7 | 0 |
| க. வீரபத்திர முதலியார் | 3 | 0 |
| பா. காமாக்ஷி முதலியார் | 1 | 0 |
| சி. வையாபுரி முதலியார் | 2 | 0 |
| மு. வெ. நாருயண முதலியார் | 1 | 0 |
| ச. கணபதி முதலியார் | 1 | 0 |
| ச. பா. சிவஞான முதலியார் | 2 | 0 |
| ச. பா. சுப்பையா முதலியார் | 1 | 0 |
| பழ. மன்ன முதலியார் | 7 | 0 |
| வயி. காளிமுத்து முதலியார் | 1 | 0 |
| ராம. கணபதி முதலியார் | 3 | 0 |
| K. S. நடேச முதலியார் | 2 | 0 |
| **மாரியம்மன் கோவில்** | | |
| ஏ. ப. ருத்திராபதி முதலியார் | 10 | 0 |
| சா. நடேச முதலியார் | 25 | 0 |
| கு. மா. ஆறுமுக முதலியார் | 7 | 0 |
| மா. க. சிங்காரவேல் முதலியார் | 5 | 0 |
| ரெ. சி. காத்த பெருமாள் முதலியார் | 35 | 0 |
| **தேவூர்** | | |
| ஆ. ரு. மருதப்ப முதலியார் | 3 | 0 |
| ப. லெ. நாருயண முதலியார் | 1 | 0 |
| சு. காமாக்ஷி முதலியார் | 1 | 0 |
| வி. ஷண்முக முதலியார் | 1 | 0 |
| மருதப்ப முதலியார் | 2 | 0 |
| **விக்கினபுரம் புதுச்சேரி** | | |
| வி. முருகைய முதலியார் | 3 | 0 |
| தெ. காளிமுத்து முதலியார் | 3 | 0 |

| | | | |
|---|---|---|---|
| அ. பொன்னுசாமி முதலியார் | ரூ. 2 | 0 | |
| முரு. நடேச முதலியார் | 2 | 0 | |
| அரு. காளிமுத்து முதலியார் | 1 | 0 | |
| சி. த. க. கோவிந்தசாமி முதலியார் | 3 | 0 | |
| நா. பக்கிரி முதலியார் | 1 | 0 | |
| ந. மாணிக்க முதலியார் | 1 | 0 | |
| **இலுப்பூர்** | | | |
| து. சிதம்பர முதலியார் | 3 | 0 | |
| வீ. வயிரவநாத முதலியார் | 2 | 0 | |
| அ. கந்தசாமி முதலியார் | 2 | 0 | |
| ப. பழனியாண்டி முதலியார் | 1 | 0 | |
| கு. மாப்பிள்ளைசாமி முதலியார் | 1 | 0 | |
| **கீழப்பெரும்பள்ளம்** | | | |
| S. V. வீரபத்திர முதலியார் | 2 | 8 | |
| S. V. முத்துசாமி முதலியார் | 2 | 8 | |
| **மேலப்பெரும்பள்ளம்** | | | |
| கோ. வயித்திலிங்க முதலியார் | 1 | 0 | |
| கோ. அய்யாசாமி முதலியார் | 1 | 0 | |
| ஆ. முத்துவேலு முதலியார் | 0 | 8 | |
| மு. சா. ராஜு முதலியார் | 1 | 0 | |
| **படுதார்கொல்லை** | | | |
| நாட்டாண்மை அ. நாகலிங்க முதலியார் மூலம் ஷை ஊர் பொதுவுக்கு வரவு | 10 | 0 | |
| **செம்மஞர்கோவில்** | | | |
| | ரூ. | அ. | பை. |
| பொன்முத்து வேலாயுத முதலியார் மூலம் வரவு ஷையார் சில்லரையில் வசூல் செய்து அனுப்பிய தொகை கூடுதல் | 35 | 7 | 3 |
| **திருநாகேஸ்வரம்** | | | |
| வ. மு. ந. பொன்னம்பல முதலியார் மூலம் ஷை ஊர் பொதுவுக்காக வரவு | 50 | 0 | 0 |
| **சீர்காழி** | | | |
| அ. பூ. ருஜு முதலியார் | 10 | 0 | 0 |
| V. M. வயித்திலிங்க முதலியார் | 1 | 0 | 0 |
| சு. வீ. சிங்கார முதலியார் | 5 | 0 | 0 |
| சு. வெ. அய்யாத்துரை முதலியார் | 1 | 0 | 0 |
| சி. ச. சட்டயப்ப முதலியார் | 3 | 0 | 0 |
| **இராமேஸ்வரம்** | | | |
| மருத வீரபாண்டிய முதலியார் | 2 | 0 | 0 |
| **திருவையாறு** | | | |
| சி. நா. பழனியப்ப முதலியார் | 10 | 0 | 0 |
| **சுந்தரப்பெருமாள் கோவில்** | | | |
| நாட்டாண்மை ச. ஆறுமுக முதலியார், சொ. கோவிந்தசாமி முதலியார் மூலம் ஷை ஊர் பொதுவுக்கு வரவு | 50 | 0 | 0 |
| **திருவாடானை** | | | |
| செல்லையா முதலியார் | 4 | 0 | 0 |
| T. முத்துசாமி குருக்கள் | 3 | 0 | 0 |
| ஆகமொத்தம் வசூல் | 2412 | 15 | 8 |

## மகாநாட்டின் மொத்த வரவு செலவு விவரம்

| வரவு | ரூ. | அ. | பை. | செலவு | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| திருவாரூர் | 627 | 0 | 0 | செங்குந்தர் கொடி 10-க்கு | 13 | 14 | 0 |
| மஞ்சக்கொல்லை | 386 | 0 | 0 | மளிகை சாமான் வகையறு | 253 | 7 | 9 |
| காரைக்கால் | 104 | 0 | 0 | அரிசி மூட்டை 15 | 113 | 11 | 6 |
| நாகைப்பட்டினம் | 40 | 0 | 0 | சாப்பாட்டு நெய் சேர் 140 | 65 | 10 | 0 |
| சிக்கல் பொருள்வைத்த சேரி | 47 | 0 | 0 | தேங்காய் எண்ணெய் 8 டின் | 37 | 12 | 0 |
| மன்னார்குடி | 139 | 0 | 0 | விறகு டன் 6 உடைகூலி உள்பட | 84 | 0 | 0 |
| அய்யம்பேட்டை | 9 | 0 | 0 | காய்கறி வகையறு | 75 | 11 | 3 |
| அம்மாப்பேட்டை | 58 | 0 | 0 | எலைகட்டு 10 | 32 | 8 | 0 |
| வலங்கிமான் | 104 | 0 | 0 | அப்பளம் | 16 | 0 | 0 |
| கொடவாசல் | 173 | 0 | 0 | மலை வாழைப்பழம் 2000 | 24 | 0 | 0 |
| கூரைநாடு | 151 | 0 | 0 | சமையல் கூலி | 70 | 0 | 0 |
| உள்ளிக்கடை | 10 | 0 | 0 | பக்ஷணங்கள் செய்ய நெய் டின் 4 | 72 | 0 | 0 |
| ரெகுநாதபுரம் | 10 | 0 | 0 | மாவு ஜீனி ரவா வகையறு | 67 | 14 | 6 |
| வங்காரம்பேட்டை | 10 | 0 | 0 | டை கூலி | 32 | 0 | 0 |
| வாழுமங்கலம் | 37 | 0 | 0 | சமையலுக்கு வாங்கிய கூடை தட்டு சில்லரைசாமான் | 24 | 12 | 9 |
| திருமலைராயன் பட்டணம் | 72 | 0 | 0 | புனு டம்ளர் குரோஸ் 1-க்கு | 24 | 2 | 0 |
| திருமருகல் | 75 | 0 | 0 | போஸ்டேஜ் வகையறு சிலவு | 147 | 9 | 3 |
| திருப்பூண்டி | 11 | 0 | 0 | வால்போஸ்டு, பிட்நோட்டீஸ், வரவேற்புப் | | | |
| மணக்குடி | 42 | 0 | 0 | பத்திரம், உபந்யாசம் அச்சுகூலி காகிதம் உள்பட | 276 | 9 | 9 |
| மாரியம்மன் கோவில் | 82 | 0 | 0 | வெளியூர்களில் நன்கொடை வசூல் செய்யசாப்பாடு | | | |
| தேவூர் | 8 | 0 | 0 | முதலிய சிலவு (மதராஸ் போய்வந்தது உள்பட) | 165 | 12 | 9 |
| விக்கினபுரம் புதுச்சேரி | 16 | 0 | 0 | பெட்ரோல் உள்பட மோட்டார் செலவு | 214 | 6 | 0 |
| இலுப்பூர் | 9 | 0 | 0 | சோடா ஷர்பத் வகையறுவுக்கு | 60 | 0 | 0 |
| கீழப்பெரும்பள்ளம் | 5 | 0 | 0 | தொண்டர் உடுப்பு தையல் கூலியுடன் | 189 | 3 | 9 |
| மேலப்பெரும்பள்ளம் | 3 | 8 | 0 | விசிட்டர்களுக்கு பேட்ஜ் | 22 | 6 | 0 |
| படுதார்கொல்லை | 10 | 0 | 0 | புஷ்பம் வகையறு | 94 | 7 | 6 |
| செம்மனார் கோவில் | 35 | 7 | 3 | முத்தைய முதலியார் என்லார்ஜ்மெண்டு | 15 | 0 | 0 |
| திருநாகேஸ்வரம் | 50 | 0 | 0 | புகைப்படமும் அதற்குக் காப்பிகளும் | 55 | 0 | 0 |
| சீர்காழி | 20 | 0 | 0 | காஸ்லைட்டு | 62 | 8 | 0 |
| இராமேஸ்வரம் | 2 | 0 | 0 | மேளம் | 20 | 0 | 0 |
| திருவையாறு | 10 | 0 | 0 | கொட்டகை போட கூலி | 100 | 0 | 0 |
| சுந்தரபெருமாள் கோவில் | 50 | 0 | 0 | அதற்கு அலங்காரத்திற்கு சிலவு | 84 | 8 | 6 |
| திருவாடானை | 7 | 0 | 0 | நாகலிங்க முனிவருக்கு ரயில் சார்ஜ் கொடுத்தது | 10 | 0 | 0 |
| மீதி சாமான் வித்து முதல் வரவு | 68 | 3 | 6 | ஆள்களுக்குக்கூலி சில்லரைச் சிலவு வகையறுக்கள் | 89 | 12 | 6 |
| ஆகமொத்த வரவு ரூ. | 2481 | 2 | 9 | ஆகதொகை ரூ. | 2614 | 11 | 9 |



இம்மகாநாட்டில் அதிகச் செலவான ரூபாய் நூற்று முப்பத்து மூன்றும் அணு ஒன்பதும் மகாநாட்டு வரவேற்புத் தலைவர் தமது சொந்தத்திலிருந்து செலவு செய்திருக்கிறார். மகாநாட்டிற்காக நன்கொடை வழங்குவதாகக் கையொப்பஞ் செய்து இதுவரையிலும் கொடாமல் இருக்கும் அன்பர்களின் பெயர் அடுத்தமாதம் வெளியிடப்படும்.

திரு. நா. சபாபதி முதலியார், வரவேற்புத் தலைவர்.

---

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

### செங்குந்தர் கல்விநிதி உபகாரச் சம்பளம்

[கீழ்க்கண்ட மாணவர்கள் 1933-34-ஆம் வருஷத்துக்கு அவரவர் பெயருக் கெதிரில் குறிப்பிட்டிருக்கும் தொகை அனுமதிக்கப்பட் டிருக்கின்றனர்.]

| | | | |
|---|---|---|---|
| **திருநெல்வேலி ஜில்லா** | | | |
| 1. S. ஷண்முகம், ஜ[illegible]ர் இன்டர் மீடியேட், ஹிண்டு காலேஜ், திருநெல்வேலி | 40 | 0 | 0 |
| **இராமநாதபுரம் ஜில்லா** | | | |
| 2. P. பெருமாள், 6-வது பாரம், S. B. K. ஹைஸ்கூல் அருப்புக் கோட்டை | 21 | 0 | 0 |
| **தஞ்சாவூர் ஜில்லா** | | | |
| 3. K. S. சோமசுந்தரம், 5-வது பாரம், நேஷனல் ஹைஸ்கூல், நாகப்பட்டினம் | 21 | 0 | 0 |
| 4. P. பழனிவேலு, 4-வது பாரம், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம் | 10 | 8 | 0 |
| 5. S. சுந்தரேசன் டை டை | 10 | 8 | 0 |
| 6. N. சந்திரசேகரன், 6-வது பாரம், போர்டு ஹைஸ்கூல், நன்னிலம் | 21 | 0 | 0 |
| **திருச்சி ஜில்லா** | | | |
| 7. M. கருப்பன், 6-வது பாரம், போர்டு ஹைஸ்கூல், அரியலூர் | 21 | 0 | 0 |
| **கோயம்புத்தூர் ஜில்லா** | | | |
| 8. V. N. மாரியப்பன், 4-வது பாரம், முனிசிபல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர் | 21 | 0 | 0 |
| **வடஆற்காடு ஜில்லா** | | | |
| 9. K. ஜெயராமன், 4-வது பாரம், தொண்டைமண்டலம் ஹைஸ்கூல், சென்னை | 21 | 0 | 0 |
| 10. P. M. நரசிம்மன், 5-வது பாரம், போர்டு ஹைஸ்கூல், செய்யாறு | 10 | 0 | 0 |
| 11. K. கணபதி, 6-வது பாரம், டை டை | 21 | 0 | 0 |
| 12. T. பஞ்சாட்சரம், 3-வது பாரம், டை டை | 5 | 0 | 0 |
| 13. A. லோகநாதன், பி. ஏ., சீனியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை | 45 | 0 | 0 |
| **தென்னாற்காடு ஜில்லா** | | | |
| 14. V. பாலசுப்பிரமணியன், 5-வது பாரம், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம் | 21 | 0 | 0 |
| 15. N. சம்பந்தசுவாமி, ஜூனியர் இன்டர் மீடியேட், பச்சையப்பன் கல்லூரி, சென்னை | 40 | 0 | 0 |
| **செங்கல்பட்டு ஜில்லா** | | | |
| 16. N. கணபதி, 3-வது பாரம், பச்சையப்பன் ஹைஸ்கூல், காஞ்சிபுரம் | 11 | 0 | 0 |
| 17. E. கோவிந்தராஜன், 4-வது பாரம், டை டை | 21 | 0 | 0 |
| 18. K. M. ராஜரத்தினம், சீனியர் இன்டர்மீடியேட், பச்சையப்பன் கல்லூரி, சென்னை | 40 | 0 | 0 |
| 19. R. நடேசன், 4-வது பாரம், பச்சையப்பன் ஹைஸ்கூல், காஞ்சிபுரம் | 21 | 0 | 0 |
| 20. S. பாலசுப்பிர மணியன், 5-வது பாரம், டை டை | 21 | 0 | 0 |
| 21. M. S. கிருஷ்ணசாமி, 4-வது பாரம், டை டை | 21 | 0 | 0 |
| **சென்னை** | | | |
| 22. T. சம்பந்தன், 6-வது பாரம், P. S. ஹைஸ்கூல், மயிலாப்பூர் | 15 | 0 | 0 |
| 21. C. K. ருக்மணி, 5-வது வகுப்பு, லேடிவில்லிங்டன் ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி | 20 | 0 | 0 |
| **மலையாளம் ஜில்லா** | | | |
| 24. A. கிருஷ்ணன், 3-வது பாரம், சர்க்கார் ஹைஸ்கூல், சித்தூர், கொச்சி ஸ்டேட் | 11 | 0 | 0 |
| **தஞ்சை ஜில்லா** (அண்ணாமலை யூனிவர்சிடி) | | | |
| 25. க. வெள்ளைவாரணன், வித்வான், மூன்றாவது வகுப்பு, அண்ணாமலை பல்கலைக்கழகம் சிதம்பரம் | 10 | 0 | 0 |
| ஆக மொத்தம் ரூ. | 520 | 0 | 0 |

## மித்திரனில் ஏற்கெனவே வெளியிட்டவர்கள் போக தற்போது பரம்பரைச் சந்தாதாரராகச் சேர்ந்துள்ளவர்கள்

1. ஒ. அ. ஆறுமுக முதலியா ரவர்கள், சென்னிமலை.
2. பி. க. பொன்னம்பல முதலியா ரவர்கள், அசனம்மாபேட்டை.
3. இ. முனியப்ப முதலியா ரவர்கள், மண்டலமாணிக்கம்.
4. கு. நாகசுந்தர முதலியா ரவர்கள், மண்டலமாணிக்கம்.
5. மு. ஆ. பாதம்பிரியா முதலியா ரவர்கள், மண்டலமாணிக்கம்.
6. க. வீ. ம. துரைசிங்க முதலியா ரவர்கள், அபிராமம்.
7. ப. கா. மு. முத்துராம் முதலியா ரவர்கள், அபிராமம்.

## பூராத்தொகை ரூபா 30-ம் செலுத்தியவர்கள்

1. A. K. C. குழந்தைவேல் முதலியா ரவர்கள், அருப்புக்கோட்டை.
2. த. அ. த. சங்கர நமசிவாய முதலியா ரவர்கள், சங்கரநயினார் கோயில்.
3. V. S. செங்கோட்டையா முதலியா ரவர்கள், கோயம்புத்தூர்.

இவர்களனைவருக்கும் நமது மனமார்ந்த நன்றி உரியதாகுக. (ப-ர்.)

# செங்குந்தர் கிளர்ச்சி

## தென்னாற்காடு ஜில்லா

### குருங்குடி செங்குந்தர் கூட்டம்

7-7-33உ இரவு 9 மணிக்கு டாக்டர் பெ. சிங்காரவேலு முதலியார் தலைமையில் கூடியசெங்குந்தர் பொதுக் கூட்டத்தில் திரு. ச. நா. குமரகுரு முதலியார் சமூக சீர்திருத்தம் என்பது பற்றிப் பேசினார். பின்பு, கல்யாணங்களில் கல்வி நிதிக்கு நான்கணா நன்கொடை வழங்கவேண்டுமென்றும், அழகர் கோவில் பலியிடுதலை நிறுத்த வேண்டுமென்றும், சமூகத்தில் சிக்கனத்தைக் கையாள வேண்டுமென்றுந் தீர்மானிக்கப்பட்டு இரவு 11 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

### மணவை செங்குந்த வாலிபர் சங்கம்

21-8-33 காலை மணி 10க்கு சங்கத் தொண்டர்களால் ஊர்வலம் வில் வேல் முதலிய ஆயுதங்களுடனும், தவண்டை மல்லாரி முதலிய வாத்தியத்துடனும் நடைபெற்றபின் இரவு 7 மணிக்குப் பெருமாள் கோவிலில் திரு. ரங்கநாதன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் திரு. இ. அ. சண்முக முதலியார் திரு. ச. நா. குமரகுரு முதலியார், திரு. முத்துசதாசிவ முதலியார் முதலியவர்கள் சமூக முன்னேற்றம் என்னும் விஷயம் பற்றிச் சுமார் 5 மணி நேரம் பேசிய பின் இரவு ஒரு மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:

1. நமது ஊருக்கு ஒரு தலைவராகவும் போர்டு அங்கத்தினராகவும், சிறந்த குலாபிமானியாகவும் விளங்கி வந்த "செந்தமிழ்ச்சரபம்" பொன். மு. வெ. முனிசாமி முதலியார் தேகவியோகமானதைக் குறித்து அவர் குடும்பத்தினருக்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு, அன்னார் ஆன்மா சாந்தியுறுமாறு இச்சங்கம் பிரார்த்திக்கின்றது.

2. தலைவர் திரு. N. A. S. முத்துசதாசிவ முதலியாருக்கு உபசாரப் பத்திரம் வாசித்து வழங்க வேண்டுமென இச்சங்கம் தீர்மானிக்கிறது.

### கல்லாலம் பூண்டி செங்குந்தமகாஜனக் கூட்டம்

ஆகஸ்டு மாதம் கூடிய கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்

1. இச் சங்கத்திற்கு N. A. S. முத்துசதாசிவ முதலியார் அவர்களைத் தலைமை வகிக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறது.

2. கிராம முன்னேற்றங்கருதி ஒற்றுமையாக வாழ்வதற்பொருட்டு ஒரு நாட்டாண்மை, பெரியதனம், (காரியக்காரர்) முதலியோரை நியமிக்க வேண்டுமென்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

3. இனி நடக்கும் சுபாசுபங்களில் ஊர்ப் பொதுப் பணம் வாங்குவதைக் காலத்திற்கேற்ப சிக்கனப் படுத்தவேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

4. நம்மவரில் நடக்கும் கல்யாண முதலிய விசேடங்களில் தலைச்சங்கத்திற்கும் கல்வி நிதிக்கும் 'நாலணா' நன்கொடையாக அளிக்க இக் கூட்டம் ஏற்றுக்கொள்ளுகிறது.

## தஞ்சை ஜில்லா

### தேவூர் செங்குந்த வாலிபர் சங்கம் கூத்தர் திருநாள் கொண்டாட்டம்

இச் சங்கத்தின் ஆதரவில் 1-9-33ல் ஒட்டக்கூத்தர் விழாவின் பொருட்டு ஓர் பொதுக் கூட்டம் வி. ஷண்முக முதலியார் அக்கிராசனத்தின் கீழ் பெரி. வீ. கோவிந்தசாமி முதலியார் நெசவுக் கைத்தொழிற் சாலையில் கூடிற்று.

திரு. தி. சீனிவாச முதலியார் தேவூரின் மீது மூவர் பாடிய தேவாரத்தினைக் கனிவுடன் பாடினார்.



158712

அக்கிராசனர் முகவுரை கூறி முடித்த பின்னர் திரு. ரு. பாலசுப்பிரமணிய முதலியார் கூத்தர் தன் பாலப்பருவம் முதல் செய்த அரும் பெரும் செயல்களையும் கவிதா சாமர்த்தியத்தினையும் விளக்கிக் காட்டினர்.

மற்ற அங்கத்தினர்கள் இவ்விஷயத்தைப் பற்றி உபன்யசிக்குங்கால் இடையிடையே கூத்தரின் வாழ்க்கை விஷயமாகச் சிற்சில தவறான விஷயங்களைப் பிற்காலத்தவர் பொறாமையால் புகுத்தியிருப்பதைக் குறிப்பிட்டனர். பின்பு அக்கிராசனர் இடை யிடையே வந்துலாவிய சந்தேகங்களையும் அப்பெண்ணங்களையும் தன் சாதுரிய மொழி[illegible] ஒழித்து முடிவுரை கூறி முடித்தனர்.

[illegible]கக் காரியதரிசி ரு. பாலசுப்பிரமணிய முதலியார் வந்தனோபசாரம் கூறுங்கால் "நாம் இவ்வாறு மகிழ்வுடன் இந்நன்னாளைக் கொண்டாடக் காரணகர்த்தாவாக இருந்து அறிவுறுத்திய செங்குந்தமித்திரனுக்கும் ஆசிரியருக்கும் என் மனமார்ந்த வந்தனத்தை இச் சங்கத்தின் பேரால் செலுத்துகின்றேன்" என்று முடித்தது யாவரையும் மகிழ்விக்கச் செய்தது. பின்பு அவையோர் அனைவருக்கும் சந்தன தாம்பூலம் வழங்கி இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

13-3-33-ல் நிறுவப்பட்ட இச் சங்கத்தின் நிருவாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

தலைவர் வி. ஷண்முக முதலியார், உபதலைவர் ஆ. பக்கிரிசாமி முதலியார், காரியதரிசி P. பாலசுப்பிரமண்ய முதலியார், உபகாரியதரிசி தி. சீனிவாச முதலியார், பொக்கிஷதார் வீ. கோவிந்தசாமி முதலியார், நிர்வாக மெம்பர்கள்: M. ஆறுமுக முதலியார், N. பழனி முதலியார், S. ஆறுமுகம்.

### மன்னார்குடி செங்குந்த வாலிபர் சங்கம்

சென்றநாளது ஸ்ரீமுகஞு ஆனிமீ 27உ திங்கட்கிழமை மாலை $3\frac{1}{2}$ மணிக்கு பெரிய செங்குந்தர் தெரு பாரதமாதா வாசகசாலையில் மன்னார்குடி நகரபரிபாலன சபை அங்கத்தினரான உயர் திரு. பெரி. ரு. ம. நடராஜ முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் செங்குந்த வாலிபர் சங்கம் ஸ்தாபிக்கும் பொருட்டு ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள் அச்சமயம் உயர் திருவாளர்கள் பெரி. ரு. ம. நடராஜ முதலியார், பிரபல வர்த்தகர் சி. த. காளிமுத்து முதலியார், பிரபல ஜவுளி வர்த்தகர் ரு. ம. பழ. இராமலிங்க முதலியார் ஆகிய மூன்று கனவான்களுக்கும் இச்சங்கத்தாரால் வரவேற்பு நல்லுரை வாசித்தளிக்கப் பெற்று கூட்டம் இனிது முடிவுபெற்றதெனக் காரிய தரிசி க. சுப்ரமணியம் எழுதுகிறார்.

## மதுரை ஜில்லா

### மதுரை, செங்குந்த இளைஞர் சங்கம்

சங்கத்தின் நிருவாகக்கூட்டம் 24-9-33 ஞாயிற்றுக்கிழமை காலை $7\frac{1}{2}$-மணிக்குத் தலைவர் திரு. நா. ப. பழனிக்குமாரு முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் சங்கக்காரியாலயத்தில் நடைபெற்றது. அது சமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. நமது வாசகசாலைக்கு நம்மவர்கள் வருடம் ஒன்றுக்கு ரூ. 1-8-0 செலுத்தி அங்கத்தினராகச் சேர்ந்துகொள்ள வேண்டுமென முன் தீர்மானம் செய்ததில் சரிவர நடைபெறாததால் ஷை. தீர்மானத்தை ரத்து செய்து முந்திய வழக்கப்படி மாதம் ஒன்றுக்கு நான்கு அணா விகிதம் சந்தாச் செலுத்தி அங்கத்தினர்களாய்ச் சேர வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2. சங்கத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை வகிக்குமாறு கேட்டுக் கொண்டு கடிதம் எழுதி யிருப்பதற்கு ஈரோடு, S. மீனாட்சிசுந்தர முதலியார் B. A., L. T., அவர்களிடமிருந்து இதுவரை யாதொரு பதிலும் கிடைக்காததாலும், தீபாவலிப் பண்டிகையை முன்னிட்டு நம்மவர்களின் கடையடைப்புச் செய்ய முடியாததாலும் ஷை விழாக்கொண்டாட்டத்தை அக்டோபர் மாதக் கடைசிவாரத்தில் நடத்த வேணுமாய்த் தீர்மானிக்கப்பட்டது.

3. வாசகசாலையின் நிருவாகி திரு. க. சண்முகவேல் கொண்டுவந்த உபசட்ட திட்டங்களை இச்சங்கம் ஒப்புக்கொண்டது என வாசகசாலை நிருவாகி க. சண்முகவேல் எழுதுகிறார்.

## இராமநாதபுரம் ஜில்லா

### ராஜபாளையம் செங்குந்தர் சங்க ஆண்டுவிழா

ராஜபாளையம் செங்குந்த வாலிபர் வளர்நிலைச் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவிழா செங்குந்தர் வீதியிலுள்ள ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின்முன் அமைக்கப்பட்டுள்ள கொட்டகையில் 8-9-33 வெள்ளிக்கிழமை மாலை காஞ்சீபுரம் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தலைமையில் மிக்க சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கொட்டகை நிறைய ஜனங்கள் குழுமியிருந்தனர். கடவுள் வணக்கமும் வரவேற்பு உபசாரமும் நடந்தபின் தலைவர் தமது முன்னுரையாகத் தலைச்சங்கத்தின் நோக்கம், கிளைச் சங்கங்களின் கடமை, கிராம பொதுப்பணத்தை உபயோகிக்க வேண்டிய முறை, கல்வி கைத்தொழிலாகியவற்றை விருத்தி செய்வதற்கான வழிகள், தேசப்பணியாற்றவும் தேசப்பொருள்களை ஆதரிக்கவும் வேண்டியதின் அவசியம் ஆகிய விஷயங்களைப்பற்றி 3 மணி நேரத்திற்கு மேல் ஓர் விரிவுரை நிகழ்த்தினர். பின்பு திரு. S. பழனியாண்டி முதலியார், திரு. ஆ. வீரபத்திர முதலியார் ஆகிய இருவரும் முறையே 'பெற்றோர் கடமையும் இளைஞர் ஏற்றமும்', 'செங்குந்தர் முன்னேற்றமும் நமது பத்திரிகையும்' என்ற விஷயங்களைப்பற்றி அரிய உபந்யாசங்கள் செய்தனர். அவற்றைத்தழுவி தலைவர் முடிவுரை கூறியபின் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்க புதிய ஆண்டு உத்தியோகஸ்தர்களாக திரு. ச.

கிருஷ்ண முதலியார் தலைவராகவும், திரு. ஜி. குமாரசாமி முதலியாரவர்கள் துணைத்தலைவராகவும், திரு. S. ராமசாமி முதலியாரவர்கள் காரியதரிசியாகவும், திரு. ஜி. அழகிரிசாமி முதலியாரவர்கள் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதும் வந்தனோபசாரம் கூறப்பட்டு சந்தன தாம்பூலம் வழங்க இரவு 12½ மணிக்கு விழா இனிது நிறைவேறியது.

## திருநெல்வேலி ஜில்லா

### சங்கரநயினார் கோவில்
### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

### மூன்றும் ஆண்டு நிறைவுவிழா

ஷை சங்க மூன்றும் ஆண்டு நிறைவுவிழா ஸ்ரீமுக வருஷம் ஆவணி மீ 17, 18உ வெள்ளி, சனிக்கிழமைகளில் தருமர் கோவில் முன் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் காஞ்சிபுரம் திருவாளர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

தெருக்களெல்லாம் ஆர்ச்சுகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ராஜபாளையம், மதுரை, பாம்பக்கோவில் முதலிய இடங்களிலிருந்து சில பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆவணி 17உ மாலை 5 மணிக்குத் தலைவர்கள் தங்கியிருந்த திரு. S. M. திருவுடையா முதலியார் அவர்கள் இல்லத்திலிருந்து மேளவாத்தியம் முழங்க விழா நடைபெறும் பந்தலிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கடவுள் வணக்கத்திற்குப் பின் திருவாளர் த. சங்கர நமச்சிவாய முதலியார் அவர்கள் தனது திறப்புரையை நிகழ்த்தி விழா வைபவத்தைத் திறந்து வைத்தார். தலைவரவர்ளுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்து வழங்கப்பட்டது, தலைவரவர்கள் முன்னுரைக்குப்பின் சங்க அறிக்கை வாசிக்கப்பட்டது. திரு. S. பழனியாண்டி முதலியார் அவர்கள் 'ஈஸ்வரனும் ஜீவர்களும்' என்னும் விஷயத்தைப்பற்றி பேசினார். விழாத் தலைவர் அவர்களுக்கு மாணவர்களால் கதர் சால்வை சூட்டப் பெற்றது.

18-ம் தேதி தேவகோட்டை ஸ்ரீ முருகானந்த வைத்தியசாலை அதிபர் திருவாளர் S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் 'ஜீவ காருண்யம்' என்பதுபற்றி கேட்போர் மனதைக் கவரும்படியாகத் தமது இயற்கையானஇன்சொற்களால் பேசினார்கள். திரு. S. சங்கர சுப்பிரமணிய முதலியார் அவர்கள் 'செங்குந்தரும் கக்ஷிப் பிரதி கக்ஷிகளும்' என்பதுபற்றியும், திரு. S.M. திருவுடையா முதலியார் அவர்கள் 'சீர்திருத்தம்' என்பதுபற்றியும் பேசினார்கள். மாணவர்கள் S. சங்கர நாராயணன், A. சண்முகம், T. M. சங்கரன் முதலியவர்கள் சமூக தேசீய முன்னேற்றத்திற்கான அரிய விஷயங்களைக்குறித்து பேசினார்கள்.

தீர்மானங்கள் நிறைவேறின. விழாத் தலைவர் அவர்கள் இருதின முகவுரை முடிவுரைகளிலும் பேசிய விஷயங்கள் பொன்போல் போற்றத்தக்கது. தலைவர் அவர்கள் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூறப்பெற்று சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிது இரவு 1 மணிக்கு கலைந்தது.

### சங்க மூன்றும் ஆண்டு அறிக்கை

சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மேனொக்கத்திற்கு உதவியாக ஸ்தாபிக்கப்பட்ட இக் கிளைச்சங்கத்தின் சார்பாக நடந்த மூன்று ஆண்டுகளில் அறுபதிற்கு அதிகமான பொதுக்கூட்டங்கள் கூட்டப்பெற்று குலாபிமானிகளாலும், மாணவர்களாலும், வெளியிடங்களிலிருந்து பிரசாரத்திற்கென அழைக்கப்பட்ட பல அறிஞர்களாலும் சமூக சீர்திருத்தத்திற்கான சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்று சீர்திருத்தத்திற்காக அரும்பாடுபட்டுள்ளது. அப்போதைக்கப்போது அரிய விஷயங்களும் வேண்டுகோள்களும் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை வழங்கி வந்ததல்லாமல் விழாக் காலங்களில் சென்னை ஜீவரட்சக சபையிலிருந்து ஏராளமான துண்டுப் பிரசுரங்களையும் சுவரொட்டிகளையும் தருவித்து சுவரொட்டிகளைத் தகுந்த இடங்களில் ஒட்டியும் துண்டு பிரசுரங்களை விழாக் கூட்டங்களில் வழங்கியும் வருவது குறிப்பிடத்தக்கது. சங்க அங்கத்தினர்களில் ஒருவராகிய திரு. S. பழனியாண்டி முதலியார் ஆசிரியராக இருந்து இரவு பாடசாலை நடத்தி வருவது போற்றத்தக்கது. சங்க விருத்தியினை நாடி உழைக்கும் அனைவருக்கும் சங்க நன்றி உரியதாகுக.

### கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களில் சில.

1. சென்னை, தென்னிந்திய மகாஜன சங்கம் ஆற்றிவரும் தொண்டுகளைப் பாராட்டுகிறது.
2. தென்னிந்திய செங்குந்தர் 6-வது மகாநாடு திருநெல்வேலி ஜில்லாவின் சார்பாக கூடுவதாகவும், அம்பாசமுத்திரம் திரு. R. வேலாயுத முதலியார் அவர்கள் பெருந்தொகை வழங்குவதாக வாக்களித் திருப்பதாகவும் அறிந்து இக்கூட்டம் மகிழ்ச்சி யடைகிறது.
3. வட ஆற்காடு ஜில்லாவில் கூடவிருக்கும் தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாட்டில் மாதர் மகாநாட்டையும் கூட்டுமாறு இக்கூட்டம் தலைச்சங்கத்தினரையும், வடஆற்காடு ஜில்லா வாசிகளையும் வேண்டிக்கொள்ளுகிறது.
4. ஆண் பெண் மக்களை ஆரம்பப் படிப்பிற்காவது அனுப்புமாறு பெற்றோர்களை மன்றாடி வேண்டுகிறது.
5. மகமைப் பணத்தை ஏழை மக்களின் கல்வி, கைத்தொழில் முதலிய முன்னேற்றத்திற்குச் செலவு செய்வதே முறை என்று இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறது.
6. தெய்வத்தின் பேரால் பலியிடுதலும் மாமிசம் உண்பதும் நமது குலத்தினருக்கு இழிவைத் தருகின்றபடியால் அப்பழக்க வழக்கங்களை அறவே ஒழிக்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.
7. நமக்குள் ஒற்றுமை மணம் தீவிரமாய் ஏற்படவேண்டுமெனத் தீர்மானிப்பதோடு இதுகாறும் நடந்துள்ள ஒற்றுமை மணங்களைப் பாராட்டி ஷை திருமணங்கள் பெருவாரியாக நடைபெறும்படி தொண்டாற்ற தலைச்சங்கத்தினரை இக்கூட்டம் வேண்டுகிறது.
8. ஹிந்தி நமது தேச பாஷையாக வருமெனக் கருத இடமிருப்பதால் செங்குந்த இளைஞர்கள் ஹிந்தியைப் பயிலவேணுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.
9. சிறப்பாக நமது சமூக முன்னேற்றத்திற்கான எல்லா வேலைகளையும் செய்ய இந்நகரில் நமது இளைஞர்கள் அடங்கிய தொண்டர்படை சேர்த்துத் தக்க பயிற்சி அளிக்க இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

S. பிச்சாண்டி முதலியார்.

## சேலம் ஜில்லா

### திருச்செங்கோடு செங்குந்த வாலிபர் சங்கம்
### ஆண்டுவிழா

நிகழும் 7-6-33 காலை ஷை சங்க முதலாவது ஆண்டு நிறைவிழா இவ்வூர் பாவடித் தெருவு ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் மடாலயத்திற்கெதிரில் அமைந்திருந்த பெரிய பந்தரில் நடைபெற்றது. அவ்வமயம் ஈரோடு மஹாஜன ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் S. மீனாக்ஷிசுந்தர முதலியார் B.A., L.T., அவர்களையும், ஈரோடு ஸ்ரீமான் V. V. C. R. முருகேச முதலியார் அவர்களையும் தொண்டர்கள் அணிவகுத்து அழைத்து வந்தனர்.

காலை 9 மணிக்குக் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விழாவினைச் செங்குந்தர் பஞ்சாயத்து போர்ட்டு தலைவர் (நாட்டாண்மை) ஸ்ரீமான் மு சி அர்த்தநாரி முதலியார் அவர்கள் திறந்துவைத்தார். திரு V. V C. R முருகேச முதலியார் அவர்கள் கொடியை உயர்த்தினார். பிறகு காரியதரிசிஅறிக்கை வாசித்ததும் தலைவர் தமது முகவுரையில் நாம் கல்வியில் பிற்போக்கடைந் திருப்பதைப்பற்றிப் பேசினார். மூவருக்கும் வரவேற்புத்தாள் வாசித்துக் கொடுக்கப்பட்டது. இத்துடன் காலைக்கூட்டம் 12 மணிக்கு முடிவுற்றது. மாலை 2½ மணிக்கு மீண்டும் சபை ஆரம்பிக்கப்பட்டது. திருவாளர்கள் T. M. நடராஜன், T. R. பரமசிவம், K. A. காசிவிஸ்வநாதன், K. வெங்கடாஜல முதலியார், (பள்ளிபாளையம்), E. V. அப்பாவு முதலியார் (ஜம்பை) ஆகியவர்கள் முறையே தேசமும் செல்வமும், சுகாதாரம், வாலிபர் கடமை, ஒற்றுமை, நமது முன்னேற்றம் ஆகிய விஷயங்களைத் தெளிவாகப் பேசினர். தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசியால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு கூட்டம் 6 மணிக்கு இனிது முடிந்தது.

T. M. N. நடராஜன்



## கோயமுத்தூர் ஜில்லா

### சிவகிரி

26-8-33 இரவு 9 மணிக்குச் சிவகிரி மேற்குத் தெருவில் தலைச்சங்கப்பிரசாரகர் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் ஷை சங்கத்தின் சார்பாகக்கூடிய கூட்டத்தில் 'விநாயகர் பிரபாவம்' என்பதைப்பற்றியும் 'செங்குந்தர்களுக்கு ஒழுக்கம் அவசியம்' என்பது பற்றியும் அரிய உபந்யாசம் செய்தார்கள்.

### தாண்டாம்பாளையம்

29-8-33 இரவு 9-மணிக்கு சிவகிரி. திரு. ஆ. செங்கோட முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் 'செங்குந்தர் சீர்திருத்தம்' 'நமது மித்திரன்' என்பவை பற்றி நீண்டதோர் உபந்யாசம் செய்தார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

## அநுதாபங்கள்

### பழநி

சென்ற ஆவணி மீ 22உ புதன்கிழமை காலை 9 மணிக்குப் பழனி பாத்திரக்கடை அ. குழந்தைவேல் முதலியார் சிவபத மடைந்தாரென்றும், புரட்டாசி 2உ உத்தரகிரியை நடந்தேறியதென்றும் அவர் குமாரர் திரு. K. ஆறுமுக முதலியார் அவர்கள் எழுதுகிறார். காலஞ்சென்ற குழந்தைவேல் முதலியார் தமிழ்நூலாராய்ச்சியிற் தேர்ச்சிபெற்று பழனிப்பதியில் விளங்கிய ஒரு செங்குந்த குலதிலகராவர். சில ஆண்டுகளுக்கு முன் மலையாளத்தில் கூடிய செங்குந்த மகாநாட்டிற்குத் தலைமை வகித்தவரும் இப்பெரியாரே யாவர். பழனி முனிசிபல் கவுன்சிலில் ஓர் அங்கத்தினராகவும், பழநி வர்த்தக சங்கத்தில் 9 வருடங்களாகத் தலைவராகவும் இருந்து பொதுநல சேவை செய்து வந்தார். அன்னார் குமாரர் திரு K ஆறுமுக முதலியாருக்கும் பிறருக்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

### இராஜபாளையம்

இராஜபாளையம் திரு. கு. அளகர்சாமி முதலியார், தமது அண்ணச்சி குமாரசாமி முதலியார் சென்ற புரட்டாசி மீ 12உ புதன்கிழமை ஆயுதபூசை யன்று இரவு 10 மணிக்கு சிவலோக பதவி யடைந்த விஷயத்தைத் தெரிவித்திருக்கிறார். திரு. குமாரசாமி முதலியாரவர்கள் சமூகப்பற்றும் தமிழ் மொழிப்பற்றும் நிறைந்தவர். அவ்வூர்ச் சங்கத்தின் தலைவராக இருந்து வந்தார். பிரசாரகர்கள் அவ்வூர் சென்றபோது அவர்களை ஆதரித்து வேண்டிய உதவிகள் புரிந்துள்ளார். அன்னார் பிரிவு நமக்கோர் நஷ்டமாகும். அவரது பிரிவால் வருந்தும் அனைவருக்கும் நமது சோகத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

Registered No. M. 1514


செங்குந்த வியாபாரிகளே !

வியாபார வியவகாரங்களில் உங்களுக்குச்
சென்னையில் வேண்டிய சௌகரியம் எது ?

## செங்குந்தர் விடுதி அல்லவா?

அதற்கெனவே ஏற்பட்டுள்ள

## செங்குந்தர் கட்டட நிதிக்குத்

தாராளமாக நன்கொடை வழங்குங்கள்.

---

## உங்கள் வியாபாரம் விருத்தியாக வேண்டுமாயின்,

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும்,
இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினங்கு,
தென்னாபிரிகா முதலிய வெளி நாடுகளிலும் சென்றுலவு
வதுமாகிய உயர்ந்த தமிழ் மாதப் பத்திரிகை

## 'செங்குந்த மித்திர'னில்

உடனே உங்கள் வியாபாரத்தைப் பற்றி
விளம்பரஞ் செய்யுங்கள்

விளம்பர விகிதம்

| | | ஒரு வருஷம் | ஆறு மாதம் | மூன்று மாதம் | ஒரு மாதம் |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 100 | 50 | 26 | 10 |
| ½ ,, | ,, | 60 | 30 | 16 | 6 |
| ¼ ,, | ,, | 40 | 20 | 11 | 4 |

ஆர்டருடன் பாதிபணம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
2-17, பவழக்காரத் தெரு, சென்னை.


This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras at 31, Armenian St, Madras, and printed by A. Rangaswami at The Progressive Printers, 2-17, Coral Merchant St, Madras.



# செங்குந்த மித்திரன்


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர்:—பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி எ | ஸ்ரீமுகவருஷ புரட்டாசி, ஐப்பசிமீ | பகுதி கூ, ம.


## உள்ளடக்கம்


பத்திரிகாசிரியர் முன்னுரை ... 177
வி. ஜே. படேல் சரிதக் குறிப்பு .... 182
வர்த்தமானம் .... 183
நெற்றிவிழி காட்டினுங் குற்றங் குற்றமே! ... 185
விகடத் துணுக்குகள் ... 188
ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் வரலாறு ... 189
இந்திய சரித்திரக் கதைகள் : பிரயாணியின் கனவு ... 193
நமது அதிர்வெடி .... 196
செங்குந்த யாத்திரைவாசி ... 197
அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்! ... 200
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க நிருவாக சபை .... 201
போட்டிப் பந்தயப் பரிசு ... 202


OFFICE OF THE REGISTRAR OF BOOKS 12 APR 1934 MADRAS

காரியாலயம் :—2/17, பவழக்காரத் தெரு, சென்னை.

# செங்குந்த மித்திரன்

(ஓர் உயரிய மாதாந்த வெளியீடு)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அநுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள்நாடு ரூ. 1—8—0 வெளிநாடு ரூ. 2—0—0

## சந்தாதாரர்களுக்கு

1. செங்குந்த மித்திரனுக்கு ஜனவரி மாதமே (தைமீ) வருட ஆரம்பமாதலால் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி முதலாகவே பத்திரிகைகள் அனுப்பப்படும்.

2. புதிதாகச் சந்தாதாரராய்ச் சேர்வோர் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்.

3. சந்தாதாரர் விலாசம் மாறினால் சந்தா நெம்பரைக் குறித்து இங்லிஷ் மாதம் 10-ந் தேதிக்குள் தெரிவித்து விடவேண்டும்.

4. கடிதம் எழுதும்போதும், சந்தாத் தொகை அனுப்பும்போதும் தவறாமல் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டும். பத்திரிகையின்மீது சுற்றப்பட்டுள்ள விலாசத்திற்கு முன் குறிக்கப்பெற்றிருப்பதே சந்தா நெம்பராகும்.

## விளம்பர விகிதம்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினங்கு, தென்னாபிரிகா முதலிய வெளி நாடுநாடுகளிலும் சென்றுலவுவதுமாகிய உயர்ந்த தமிழ் மாதப் பத்திரிகை 'செங்குந்த மித்திர'னில் உடனே உங்கள் வியாபாரத்தைபற்றி விளம்பரஞ் செய்யுங்கள்.

ஒரு தடவைக்கு முழுப்பக்கம் ரூ. 15 அரைப்பக்கம் ரூ. 8 கால்பக்கம் ரூ. 5.

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.

## கட்டுரை எழுதுவோருக்கு

1. கட்டுரைகள் வரிக்கு வரி இடம் விட்டு, தெளிவான எழுத்தில், காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட் டிருக்கவேண்டும்.

2. வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்ட வல்லதும், மன உற்சாகத்தை எழுப்ப வல்லதும், சிரிப்பை ஊட்டத்தக்கதுமாய் மித்திரனில் 2 அல்லது 3 பக்கத்துக்கு மேற்படாமல் இருக்கக்கூடிய கட்டுரைகளுக்கே பிரசுரிப்பதில் முதன்மை தரப்படும்.

3. கட்டுரையோடு தனிக் கடிதங்கள் எழுதவேண்டியதில்லை. எழுதியவரின் பெயரும் விலாசமும் மட்டும் கட்டுரையின் முகப்பில் குறிப்பிடுதல் போதுமானது.

4. கட்டுரைகளெல்லாம் 'ஆசிரியர்' விலாசத்திற்கே அனுப்பவேண்டும்.

## சங்க அறிக்கைகள்

மித்திரனில் பிரசுரிப்பதற்காக அனுப்பப்படும் சங்க நடவடிக்கைகள், பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள் யாவும் மிகச் சுருக்கமா யிருத்தல் வேண்டும். இவை சம்பந்தமாய் எழுதியனுப்பப்பெறும் நீண்ட வியாசங்கள் இனி பிரசுரிக்க மாட்டாதென்பதை அறிவித்துக் கொள்ளுகிறோம்.

(ப-ர்.)

# செங்குந்த மித்திரன்

12 APR 1934
MADRAS

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.
துணையாசிரியர் :—பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி—எ] ஸ்ரீமுகவருஷ புரட்டாசி, ஐப்பசிமீ [பகுதி கூ, ௰.

### கடவுள் வணக்கம்

மதியால்வித் தகனாகி, மனதாலுத் தமனாகிப்
பதிவாகிச் சிவஞான, பரயோகத் தருள்வாயே
நிதியேநித் தியமேயென் நினைவேநற் பொருளாயோய்
கதியேசொற் பரவேளே கருவூரிற் பெருமாளே. (திருப்புகழ்)

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### விடுதிக்கு வாருங்கள்

சென்ற இதழில் 'வந்தால் வா, போனால் போ' என்று நீங்கள் அலட்சியமா யிராமல் நமது செல்வப் புதல்வனும் செங்குந்த மித்திரனை மிக்க ஆர்வத்துடன் வரவேற்கிறீர்கள் என, மித்திரன் மூலமாகவே அறிந்து ஆநந்தத்தில் மூழ்கிய அவனது போஷகரும் பாதுகாவலருமான காரியாலயத்தார் உங்களுக்குப் பிரதி யுபகாரஞ் செய்வதெப்படி என ஆழ்ந்து கவனித்தார்கள்.

நீங்கள் மித்திரன் வருகையை விருப்புடன் எதிர்நோக்கி, அன்போடு வரவேற்று, பெருமிதத்துடன் கூடிக்குலவுங் காட்சிக்கேற்ப காரியாலயத்தாரும் உங்களை வரவேற்று அளவளாவி, கரைகாணா மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிக் களிக்க அவாவுகின்றனர். இந்த அவா—ஆசை, இன்று நேற்று ஏற்பட்டதன்று. என்று—எப்பொழுது மித்திரனைப் பெற்றெடுத்தனரோ, அன்றே—அந்நிமிடமே இந்த ஆசை உண்டு. இதை நிறைவேற்றுவதெப்படி?

பலமுறை சிந்தித்தனர். அவ்வப்போது முயற்சிகளும் செய்தனர். ஆனால், இத்தனை நாட்களாகச் சிந்தனையும் முயற்சியும் பலன் தாராமற் போயினமை கண்டு மிக வருந்தி வந்தனர். அவர்கள் வருத்தந் தீர, நீங்கள் மகிழ்ச்சி கொண்டாட இவ்வளவு நாட்களுக்குப்பின்பேனும் அது நிறைவேறுவதைக் காண உள்ளம் குதூகலிக்கின்றது.

மித்திரனும், நீங்களும், நாமும் அடிக்கடி ஒன்றாய்க்கூடி நமக்குள்ள சமூக முன்னேற்ற ஆர்வத்தினையும், பெருங் கிளர்ச்சியினையும், ஆழ்ந்த நேச உணர்ச்சியினையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளவும், வெளியூர்களி லிருந்து வர்த்தக மாதியன கருதி சென்னைக்கு வரும் குலாபிமானக் குரிசில்கள், அறிமுகமில்லா விடங்களிற் றங்கி 'மூட்டைகளை யிழப்போமோ? பணத்தைப் பறிகொடுப்போமோ?' என்று ஐயப்பாடுறுதலை அற நீக்கி,

இனிக் கவலையில்லை எனத் தம் சொந்த இருப்பிடமே போல் எந்நேரத்தும் வந்து தங்குதற்கென்றே இம்மாதம் 9-ம் நாள் **செங்குந்தர் விடுதி** திறக்கப்படுகிறது.

அனைவரது நலத்தினையுங் கருதியே மண்ணடிக்குச் சமீபமாய் பவழக்கார வீதியில் 151-ம் எண்ணுள்ள இல்லத்தில் இவ்விடுதி ஏற்படுத்தப்படுகிறது. தங்களை வரவேற்க அன்பர்கள் எப்போதும் அங்கே தயாராக இருக்கின்றார்கள். வருக! தாராளமாய் வருக! தயங்காமல் வருக! என மட்டற்ற மகிழ்ச்சியோடு அனைவரையும் சங்க சார்பாக அழைக்கின்றோம்.

## நியாயக் கட்சியின் நேர்மை

இம்மாதம் 7-ந் தேதி மாலை 5½ மணிக்குச் சென்னை கார்பொரேஷனில் பெரிய அமளி குமளி; தேர்தல் நடிப்பு; ஒப்பற்ற திருவிழா நடைபெற்றது.

இவ்வளவு ஆர்ப்பாட்டங்களிடையே அன்று பிரம்மஸ்ரீ லேடன் பிரபு சென்னை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. சர்க்கரைச் செட்டியார் தோல்வித்தானம் பூண்டார். இக்கோலத்தை நேரில் கண்டவர்களும், பத்திரிகை வாயிலாய்க் கேட்டவர்களும் திகைப்படைந்து விட்டார்களாம். 'உண்மைதானா' என்று அநேகர் இன்னும் தினசரிகளைப் பார்த்துப் பார்த்து மனம் புழுங்குகின்றார்களாம். அவர்களுக்கெல்லாம் 'காரியம் என்னமோ அப்படித்தான் ஆகிவிட்டது; சந்தேகமில்லை; சத்தியம், முக்காலும் சத்தியம்' என்று நாம் தெரிவித்துக் கொள்ளும்போது நமக்கே கொஞ்சம் அருவருப்பாகத்தானிருக்கிறது.

லேடன் வெள்ளையரென்பதிலும் யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை. அசல் வெள்ளையர்; சீமையில் பிறந்து சீமையிலேயே வளர்ந்தவர். சர்க்கரையோ கருப்பு மனித வர்க்கத்தைச் சார்ந்தவர், இந்தியரின் சகோதரர். இந்தியாவில், சென்னை மாகாணத்தில் பிறந்து சென்னையிலேயே வளர்ந்தவர்.

ஒரு வெள்ளையரைத் தேர்ந்தெடுக்கும்படி அத்தனை வெள்ளையர்களா சென்னை கார்பொரேஷனில் அங்கம் வகிக்கிறார்கள் என்று அநேகர் வியப்புறுகிறார்கள். இல்லை; அத்தனை வெள்ளையர்கள் அங்கே இல்லை. ஐந்தில் ஒரு பகுதியினரே இருக்கிறார்கள். மற்ற நான்கு பகுதியினர் அய்யரும், முதலியாரும், செட்டியாரும், நாயுடுவுந்தான்.

இப்போது தெரிகிறதல்லவா, எதனால் சர்க்கரை வீழ்த்தப்பட்டாரென்பது? எதிர்கால உணர்ச்சிபெற்ற நமது பாட்டி ஔவைக் கிழவியார்—பல பல வருடங்கட்கு முன்பே தங்களுக்காகச் செய்துள்ள எச்சரிக்கையை கார்பொரேஷன் அங்கத்தவர்கள் புறக்கணிக்க முடியுமா?

'உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம், உடன் பிறந்தே கொல்லும் வியாதி—உடன் பிறவா, மாமலையி லுள்ள மருந்தே பிணி தீர்க்கும்' என்று அவள் சொல்லி இருப்பதை நாம் பள்ளியிலே படித்து அங்கேயே மறந்து விட்டோம். கார்பொரேஷன் அங்கத்தினர்கள் அவ்வளவு மறதியுடனிருந்தால் பொதுநலத் தொண்டாற்ற முடியுமா?

அவர்களுக்கு ஞாபக சக்தி மிக மிக அதிகமென்பதை அன்று 7-ந் தேதி தேர்தல் விழாவில் நன்கு விளக்கி விட்டார்கள். சர்க்கரைக்கு .........வும், லேடனுக்குக் கைலாகும் ஒரே முகமாய்த் தந்ததிலிருந்து இது நமக்குத் தெரிகிறதல்லவா?

முன்பொருகால் சர்க்கரை காங்கிரஸ் இயக்கத்திலிருந்தபோது இப்பதவியை மோகித்து ஏமாற்றப்பட்டார். அதே வேகத்தில் காங்கிரசை உதைத்துவிட்டு ஜஸ்டிஸ் இயக்கத்தைச் சார்ந்து இதுவரை பற்றிக் கொண்டிருந்த சர்க்கரை இன்று அக்கட்சியினாராலும் புறமுதுகிடப் பட்டார். இது ஓர் சுப செய்தியேயாகும்.

முன்னோர்கள் சென்ற வழியைப் பின்பற்றி நடப்பதில் பழியும் பாவமும் பச்சாத்தாபமும் பார்க்கலாமா? காங்கிரஸ் அன்று காட்டிய வழியை ஜஸ்டிஸ் இன்று பின்பற்றுகிறது. அதிலும் ஒருபடி முன்னேறிச் சென்றிருக்கிறதென்பதை யுன்னுந்தோறும், ஆஹா! பேரானந்தமல்லவா தோன்றுகிறது.

காங்கிரஸ் சர்க்கரைச் செட்டியாரைத் தள்ளிவிட்டு வெங்கடாசலஞ் செட்டியாருக்குக் கைகொடுத்தது. எவ்வகையினும் இரண்டும் செட்டியார்கள்தான். ஜஸ்டிஸ் இப்படிச் செய்ய இசையுமா? செட்டியாருக்கு பதிலாக வெள்ளையரையன்றோ பொறுக்கியெடுத்தது. எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது பாருங்கள்.

* * *



'கவுன்சிலர்களெல்லாம் இன்று தியாகம் செய்திருக்கிறார்கள்; ஐரோப்பியர்கள் அதற்கேற்றபடி நடந்துகொள்ள வேண்டும்' என்று தேர்தல் முடிவில் ஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யரவாள் பேசினார்களாம். இப்பேச்சை காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்களே பரிகசிக்கிறார்களாம். பரிகாசம் எதற்கு! அவரென்ன அவ்வளவு யோசனையற்றவரா? எப்பொழுதும் நம்முடன் வாழ்பவரைப் புறக்கணித்துவிட்டு பல ஆயிர மைல்களுக்கப்புறமிருந்து வந்த அயலாரொருவரை மனப்பூர்வமாய், கிஞ்சித்தும் வஞ்சனையில்லாமல் மேயராகத் தெரிந்தெடுப்பதென்றால் உண்மையில் அது மிகப் பெரிய தியாகந்தானே.

* * *

'பேரோ கங்கா பவானி, குடிப்பதற்கு நீரில்லை' என்பதுபோல் ஜஸ்டிஸ் இயக்கத்தின் செயல்கள் இருக்கின்றனவென்றும், ஜஸ்டிஸ் அல்லது நியாயக் கட்சி என்ற பெயர் அதற்குப் பொருத்தமின்றெனவும் சில ஆண்டுகளாகக் கூறிவந்தவரனைவரும் இத்தேர்தல் சம்பவத்திலிருந்து அதை உறுதிப்படுத்த முயல்கிறார்கள். நம்மைப் பொறுத்தமட்டில் அதை எதிர்ப்பதென்றே முடிவு செய்துள்ளோம்.

இத்தேர்தலில் கீழ்க்கண்ட காரணங்களால் ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்கள் மிகவும் நேர்மையாக நடந்திருக்கிறார்களென நாம் மனப்பூர்வமாய் நம்புகிறோம்.

(1) ஜஸ்டிஸ் இயக்கத்தின் முக்கிய நோக்கமெல்லாம் பார்ப்பனரல்லாத மக்களுக்கு உதவி புரிவது ஒன்றுதான். லேடனை பார்ப்பனரென்று யாராவது நிரூபிக்க முடியுமா?

(2) உருவத்தின் அழகு, நிறம், உயரம் எல்லாவற்றிலும் சர்க்கரையைவிட லேடன் எவ்வளவோ சிறந்தவர்.

(3) 'திருவுடை மன்னனைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்' என்றார் ஆழ்வார். இதன்படி 'ராஜவிஸ்வாச மற்றவர் உயிரற்றவர்' என்பதே இவர்கள் கருத்து. அதை வெளிப்படுத்திக்கொள்ள வாய்த்த இந்நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விடுதல் தர்மமாகுமா?

(4) சர்க்கரை பல வருடங்களாகக் கார்பொரேஷன் அங்கத்தினராயிருந்து பொதுநல சேவை புரிந்தவரென்பதும், லேடன் கார்பொரேஷன் அநுபவம் மிகக் குறைவாகப் பெற்றவரென்பதும் உண்மைதான். கார்பொரேஷனில் குறைந்த அநுபவம் பெற்றிருந்தாலும் ஸிம்சன் கம்பெனியின் அநுபவம் எவ்வளவோ அதிகம். ஒரே தகுதி வாய்ந்தவரை விட இரு தகுதிகள் பெற்றவர் மேலல்லவா?

(5) சர்க்கரை பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர். லேடன் சர்க்கார் ஆதரவில் நியமிக்கப்பட்டவர்.

இவ்வளவு நியாயங்களிடையேயும் ஒரே ஒரு சந்தேகமட்டும் நமக்கு இல்லாமற் போகவில்லை. கார்பொரேஷனில் சிறுபான்மையோராயிருக்கும் வெள்ளை அங்கத்தினரெல்லாம் ஒருமுகமாக லேடனை ஆதரித்துத் தம்மினத்தவர்க்குப் பதவி அளிப்பதிலுள்ள ஆர்வத்தைக் காட்டியபோது பெரும்பாலோராய் வீற்றிருக்கும் ஜஸ்டிஸ் இயக்கத்தினருக்கோ, காங்கிரஸ் அல்லது வேறு கட்சியினருக்கோ உணர்ச்சி ஏற்படாமல் போனதின் இரகசியம் என்ன என்பதுதான் விளங்கவில்லை.

## படமுடியாது இனித் துயரம், படமுடியாது அரசே!

அருட்பெருஞ் சோதி இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய இத்திருவாக்கு, இன்று மூலை முடுக்குகளிலெல்லாம் ஒலிக்கிறது. எல்லாருள்ளத்திலும் இப்போது இதுவே பாராயணமாய் விளங்குகிறது. திடீரெனத் தோன்றிய இவ்வாத்மஞானத்திற்குக் காரணமென்ன?

'எங்கள் துன்பம் அளவிடற் கரியது. பெரிய பெரிய மிராசுதார்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டனர். விவசாயத்தை நம்பினோர் வாழ்க்கை நாளுக்குநாள் கீழ்நோக்கிச் செல்லுகின்றது. சிறிது தயங்கினும் விவசாயிகட்குப் பெருங்கஷ்டம் நேரிடக்கூடும்' என, சேலம் ஜில்லா விவசாயிகள் கூட்டத்தில் சேலம் தாலூகா கழகத் தலைவர் ராவ்சாகிப் எஸ். பி. ராஜமாணிக்கப் பண்டாரம் அவர்கள் கூறினார்.

'மூன்றணா விற்ற ஒரு மரக்கால் நெல் முக்காலணாவிற்கு விற்கும் இக்கொடிய காலத்தில் பழைய தீர்வையே செலுத்த வேண்டுமென வற்புறுத்துவது நீதியாகாது. மிராசுதார்களுக்கு நிலத்திலிருந்து கிடைப்பது ஒன்றுமில்லையாயினும் வரியைச் செலுத்த மாட்டாமல் அடையுந் துன்பமோ அளவு கடந்ததாயிருக்கிறது, என்று திரு. பி. எஸ்.

ராமையா தஞ்சை ஜில்லா கலெக்டரிடம் முறையிட்டார்.

'விவசாயிகள், குடியானவர்கள் இவர்களுக்கு நிவாரணம் அளிக்காவிட்டால் பொருளாதாரக் கஷ்டத்திலிருந்து அவர்கள் உருப்படியாக மீட்சி பெறுவது முடியாத காரியம்' என்று, இந்திய சட்டசபை அங்கத்தினர் திரு. ஆர். எஸ். சர்மா தலைமையில் திருவாரூரில் கூடிய கூட்டத்தில் பல அன்பர்கள் கதறினர்.

'பணக்கஷ்டம் அதிகமாயிருத்தலாலும், மிராசுதார்களிடத்திலிருந்த விற்கக்கூடிய இதர சொத்துக்களெல்லாம் விற்ருய் விட்டபடியாலும் வரிக்காக அவர்களை மேலும் இம்சிப்பது மிக்க துன்பத்தை விளைவிக்கும்' என வடகண்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

'நிலவரி அதிகமாயிருத்தலால் விவசாயிகள் தற்போது மரணத் தறுவாயிலிருக்கிருர்கள். அவர்கள் தாங்கமுடியாத துயரத்தில் ஆழ்ந்து தவிக்கின்றனர். அவர்களுடைய அதிருப்தியும் துயரமும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. இந்தக் கொடுமையை எவரும் சகித்துக்கொண்டிருக்க முடியாது' என்று, வீரகாளம் முழங்குகிருர் பாஞ்சால மாஜி முதன் மந்திரி ராவ்பகதூர் செளதிரி சோடாராம்.

'அடுத்த ஜனவரித் தீர்வையை எவ்வாறு கட்டப்போகிறோம் என்பதே விவசாயிகளின் தற்போதைய சஞ்சலம். வரி குறைக்கப்படவில்லையாயின் விவசாயம் புரிதற்கு வேண்டிய பணம் கையிலில்லாமல் அத்தொழிலையே விவசாயிகள் கைவிட்டு விடுவார்கள். இப்போது வரியைக் கொஞ்சமேனும் குறைக்க மனமிசையாத அரசாங்கம் அப்போது அடியோடு வரியை இழக்க நேருமல்லவா' என சென்னைச் சட்டசபையில் வாதம் செய்கின்ருர் திரு. நாடிமுத்துப் பிள்ளையவர்கள்.

இந்த வாதம், கூக்குரல், கதறல், முறையீடு எல்லாம் எங்கே இருந்து வருகின்றன. விவசாயிகளிடத்திருந்தும், மிராசுதார்களிடத்திருந்துமன்றோ? இவைகளை எப்படி நம்புவது? பாரபட்ச மற்ற பேச்சு இவர்களிடம் எப்படி எதிர்பார்க்கக்கூடும்?

* * *

ஸ்ரீ மைல்ஸ் இர்விங் பொதுநல சேவகர்; நடுநிலை வழுவாத மகான்; விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து உண்மையை மறைக்காமல் வெளியிடவல்ல வீரசிகாமணி; சதா குடிகளோடு பழகி அவர்கள் கஷ்ட நஷ்டங்களை உள்ளபடி உணர்ந்த உத்தம புருடர்; ஈரமற்ற ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்த ஏந்தலார்; அலகாபாத் ரெவின்யூ கமிஷனர் பதவியில் ஆநந்தத் தாண்டவம் புரிபவர்.

இவ்வளவு சிறப்புக்களும் ஒருங்கே அமைந்த ஒருவர் விவசாயிகளைப்பற்றி ஏதேனும் அபிப்பிராயங் கூறுவாராஞல் அதை உண்மையற்ற தென்றோ, நடுநிலை வழுவியதென்றோ கூறமுடியுமா? அவர் சொல்லுவதைக் கவனித்துப் பாருங்கள்.

'அரசாங்கத்தினர் ஜமீன்தாரகளுக்குச் செய்து வரும் உதவியை அவர்கள் நன்கு உணர்ந்து நன்றியுடன் நடந்து கொள்ளுகின்றனர். விவசாயிகளோ, இதற்கு முற்றும் மாறாக தங்களுடைய வரிகளைக் குறைக்க வேண்டுமென எப்போதும் சர்க்காரோடு பலமாய்ப் போராடி வருகின்றனர். உண்மையில் பலர் கூச்சலிடுவது போன்று விவசாயிகளின் நிலை இன்னும் அவ்வளவு மோசமாகி விடவில்லை.'

இதுதான் நமது ரெவின்யூ கமிஷனர் மைல்ஸ் இர்விங் கூறிய அமுதவாக்கு. இதைக் கொள்ளுவதா? தள்ளுவதா?

திரு. நாடிமுத்துப் பிள்ளை கூறுவது போன்று விவசாயத் தொழில் அடியோடு கைவிடப்பட்டு சுத்த சூன்யமாய்—முழு மோசமாய்ப் போனபின் தாராளமாய் உதவி செய்யலாமென்பது கமிஷனர் பதவியில் இர்விங் கண்ட அநுபவமாயிருக்கலாம். இவ்வநுபவ ஞானம் பதவியிலிருக்கும் வரை அவரை விட்டு நீங்காதென்பதை நாம் அறிவோம்.

* * *

'முட்ட நனைந்தவருக்கு ஈரமில்லை, முக்காட்டுக்காரிக்குத் துக்கமில்லை' என்ற நிலைக்கு விவசாயிகளைக் கொணர்ந்து விட்டால் அதன் பிறகு அடிக்கடி அரசாங்கத்திற்குத் தொந்தரவுகள் நேருமென்றே நினைக்கிறோம்.

விவசாயிகளின் நிலவரிதான் சர்க்காருடைய முக்கியமான வருமானம். விவசாயம் பூர்த்தியாகக் கைவிடப்பட்டு வருமானம் குறையுமாஞல் அரசாங்கத்தின் நிலை எப்படியிருக்குமென்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்குமாறு வேண்டுகிறோம். குடிகள் வரிப்பளுவைக் குறைத்து அவர்கள் சுகப்படுமாறு கவனிக்க வேண்டுவது அரசாங்கத்தின் முதற் கடமையாகும்.



சென்ற ஆண்டிலேயே மிராசுதார்கள் வரி செலுத்த மாட்டாமல் கஷ்டப்பட்டனர். பலர் தங்க நகைகளையும் வெள்ளி நகைகளையும் விற்று வாய்தா செலுத்தினர். நகையில்லாதவர்கள் தமது பசுமாடுகளையும் காளைமாடுகளையும் பறிகொடுத்து உழவுக்கு மாடின்றித் தவித்தனர். மிராசுதார்களுக்கு ஏற்படக் கூடிய கஷ்டம் இதைவிட வேறு என்ன இருக்கிறது.

சென்ற ஐந்தாண்டுகளுக்குள் தானிய விலைகள் எவ்வளவு குறைந்து விட்டதென நினைக்கும் போது உள்ளம் குமுறுகின்றது. 48 அணுவிற்கு விற்றநெல் 12 அணுவிற்கு விற்கிறது. நிலக்கடலையின் விலையோ வெட்டுக் கூலிக்கும் காணுத அளவு இறங்கிவிட்டது. பருத்தியோ கேழ்ப்பாரற்றுச் சுகமாய் உள்ள இடத்திலேயே மாருமல் தூங்குகிறது. இந்திய—ஜப்பான் பேச்சு இப்போது முடிவதாய்த் தோன்றவில்லை.

இதோடு போதாக் குறைக்குப் பொன்னியம்மாள் குறையும் வந்து சேர்ந்தது. ஜப்பான் அரிசியும், பர்மா நெல்லும் நம்முடன் போட்டியிடுகின்றன. இந்திய அரிசி விற்பனையற்றுத் தேக்கமாயுள்ள இந்தச் சமயத்தில் ஜப்பான் ஏராளமாய் அரிசியைக் கொணர்ந்து நிரப்புமாயின் விவசாயிகள் நிலை என்னவாகும். செப்டம்பர் மாதத்தில் மட்டும் சென்னையில் 3000 டன் அரிசியும், கராச்சியில் 7000 டன் அரிசியும் ஜப்பான் இறக்குமதி செய்திருக்கிறது. இதே சமயத்தில் இம் மாகாண அரிசிக்கு ஹைதராபாத் சமஸ்தானத்தார் தீர்வையும் விதித்துவிட்டனர். இந்திய அரிசியை இதுவரை ஏராளமாய் வாங்கிவந்த இலங்கை, நெல் சாகுபடி செய்யத் தொடங்கிவிட்டதஞல் நமது அரிசி வாங்குவதைக் குறைத்துவிட்டது.

ஒன்றன்பின் ஒன்ருய் நேர்ந்த இவ்வளவு சங்கடங்களையும் சமாளித்துக் கொண்டு வரும் விவசாயிகள் வரியையும் பழையபடியே செலுத்தவேண்டுமென்ருல், அது எவ்வாறு முடியும்.

கடந்த ஆண்டின் விளைவானது வாய்தாவுக்கும் அறுவடைச் செலவுக்குமே காணவில்லை. கொஞ்சமாக நிலம் படைத்த விவசாயிகள் தங்கள் சொத்தின்பேரில் எவ்வளவு கடன் வாங்கக்கூடுமோ அவ்வளவும் வாங்கிவிட்டனர். அக்கடன்களுக்கே வட்டி செலுத்தப்படாமல் முதலும் வட்டியுமாய் மலைபோல் வளர்ந்து வருகிறது. அதை எப்படித் தீர்ப்பதென்று விளங்காமல் அவர்கள் வருந்துகின்றனர்.

நிலத்தை விற்கலாமெனின் வாங்குவதற்கு ஆளில்லை. நிலமதிப்பும் ஒன்றுக்குப் பாதியாய்விட்டது. இந்நிலையில் ஏழை விவசாயிகள் பலர் மஞ்சள் காகிதத்தின்மீது திருஷ்டி வைக்க நேருமோவென அஞ்சுகின்ருர்களெனின் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சென்ற ஆண்டில் வாய்மூடி மௌனிகளாய்த் தம்மிடமிருந்த சொத்துக்களை விற்று வாய்தா செலுத்தி விட்டதஞலேயே அவர்களுக்குக் கஷ்டமில்லை என்று நினைத்துக்கொள்வது பொருத்த மற்றதாகும்.

இனித்துயரம் படமுடியாது, படமுடியாது என்று, விவசாயிகள் கூக்குரலிடுவது நெஞ்சைப் பிளக்கிறது. வரிப்பளுவை இறக்கி எம்மைக் காப்பவரில்லையோ எனக் கதறுவது காதுகளைத் துளைக்கின்றது.

எறும்பூரக் கல்லுந் தேயுமென்பார்கள். வரிச்சுமையோ இம்மியுந் தேயாது சுயம்பிரகாசமாய் இருந்தபடியே இருக்கிறது. விலைவாசிகள் தலைகீழாய்ப் புரண்டுவிட்டன. அரசாங்கம் இனி மௌனம் சாதிக்காமல் விவசாயிகள் விரும்புகின்றபடி

(1) ரீ சர்வே, ரீ செட்டில்மெண்டுகளைச் சில நாளைக்கு நிறுத்தி வைத்தும்,

(2) நிலவரியை 100-க்கு 50 வீதம் குறைத்துக் கொடுத்தும்,

(3) சென்ற பசலியில் நிறுத்தி வைக்கப்பட்ட $12\frac{1}{2}$ சத விகிதத் தீர்வையைத் தள்ளிக் கொடுத்தும்,

(4) வரியை ரொக்கமாய்ப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாகத் தான்யமாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தும்,

(5) வரி பாக்கிக்காக ஆடு மாடுகளையும் இதர சொத்துக்களையும் ஜப்தி செய்யாதிருக்க உத்தரவு பிறப்பித்தும்,

(6) நீடித்த தவணையின் மீது அவர்களுக்குக் கடன் உதவியும்,

விவசாயிகளின் துன்பத்தைப் போக்கி நாடு செழிப்புறச் செய்யுமாறு அரசாங்கத்தாரைப் பணிவுடன் வேண்டுகிறோம். பி. சே. மா

# ஸ்ரீஜத் வித்தல்பாய் ஜாவர்பாய் படேல்

## 22-10-33-ல் வியன்னுவில் உயிர் நீத்தார்
## 9-11-33-ல் பம்பாயில் பிரேத அடக்கம்

இவர் உண்மை வீரராகவே பிறந்தார்; வீரராகவே வாழ்ந்தார்; வீரராகவே உயிர் துறந்தார். இவரது ஆன்மா வீர சொர்க்கத்தில் இந்தியாவின் விடுதலையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கு மென்பதில் ஐயமில்லை.

'என் தேசத்தார்க்கும், இந்தியாவிலும் உலகமுற்றிலுமுள்ள நண்பர்களுக்கும் எனது வாழ்த்து உரியதாகுக. இந்தியா விரைவில் பூரண சுதந்திர மெய்துமாறு நான் இறப்பதற்கு முன் பிரார்த்தனை செய்கிறேன்'—இதுவே ஸ்ரீஜத் வி. ஜே. படேல் தனது உயிர் பிரிவதற்குச் சற்று முன்பு சொன்ன வார்த்தைகளாகும்.




இவர் உழவுத் தொழிலாளிக்குப் பிறந்த மூன்று புதல்வர்களில் இரண்டாமவர். மூத்தவர் அநேக ஆண்டுகட்கு முன்பே இறந்து விட்டார். வல்லபாய் படேல் மூவரினும் இளையவர். வித்தல்பாயும் வல்லபாயும் இங்கிலாந்தில் பார்-அட்-லா பரீட்சையில் தேர்ச்சி பெற்றுத் திரும்பி பாம்பே உயர்தர மன்றத்தில் வக்கீல் தொழிலை மேற்கொண்டனர். அத்தொழில் அவர்கட்குக் குன்றாச் செல்வத் தைக் குவித்ததெனினும் தேசசேவையின் பொருட்டு அதை உதறித் தள்ளிவிட்டு காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டனர்.

தேசியக் கொள்கையில் இருவருக்கும் பல வித்தியாசங்க ளுண்டெனினும் விடுதலை யொன்றே அவர்களின் கடைசி நோக்கம். வல்லபாய் வரிகொடா இயக்கத்தைப் பர்டோலியில் வெற்றியுடன் நடத்தினர். வித்தல்பாய் சுயராஜ்யக் கட்சி தோன்றும் வரை ஒத்துழையா இயக்கத்தைத் தீவிரமாய் நடத்தினர். ஆனல், தாஸ் இயக்கம் தோன்றியபின் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்து நின்று இந்தியா சட்டசபைத் தலைவராக இருமுறை போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டசபைத் தலைவராக இருந்தபோது



மிகவும் நேர்மையாக நடந்துள்ளாரென்பதை வைசராயும் ஒப்புக்கொண்டிருக்கிறார். அரசாங்க மான்யங்கள் பலவற்றை நிராகரித்தும், எதிர் கட்சியார் பெரும்பாலோரா யில்லாத நாட்களில் அரசாங்கத்தார் கொண்டுவந்த சில சட்டங்களை அநுமதிக்காமல் நிறுத்தியும் தலைமைப் பதவியின் கௌரவத்தைக் காப்பாற்றி வந்தார்.

தேசத் தலைவர்களெல்லாம் 1930-ல் கைது செய்யப்படுவதைக் கண்டு மனஞ்சகியாது தலைமைப் பதவியை ராஜினமாச் செய்து வெளிக்கிளம்பினர். அவர் வைசராய்க்கு எழுதிய ராஜினமாக் கடிதத்தில் வெறும் பொம்மைகளைப்போல் தலைமைப் பதவியில் தான் தலையாட்டித் தம்பிரானயிருக்க விரும்பவில்லை யென்றும், அப்பதவி தனக்கு முள்ளும் கல்லும் நிறைந்ததாகத் தோன்றுகிறதென்றும்' குறிப்பிட்டுள்ளார்.

டெல்லியில் அன்சாரி வீட்டில் 1930-ம் வருடம் நடந்த காங்கிரஸ் நிர்வாக சபைக் கூட்டத்திற்குச் சென்றதற்காகக் கைது செய்யப்பட்டு நீண்ட சிறை வாழ்க்கைத் தண்டனை பெற்றனரேனும், உடல்நலக் குறைவை யுன்னி சீக்கிரத்தில் விடுதலை செய்யப்பட்டார்.

சிகிச்சையின் பொருட்டு வியன்னு சென்று சத்திர சிகிச்சை பெற்று வரும்போதே டாக்டர் அபிப்பிராயத்தையும் மீறி இங்கிலாந்துக்கும், அயர்லாந்துக்கும், அமெரிக்காவுக்கும் சென்று இந்திய கோரிக்கைகளைப்பற்றி பல உபந்யாசங்கள் செய்து ஆதரவு தேடினர்.

உடல் நலம் விரைந்து குணப்படாததைக் கண்டு இம்மாத முதலில் இந்தியா திரும்பிவிட வேண்டுமென்றும், தாய்நாட்டிலேயே உயிர் நீத்தல் வேண்டுமென்றும் விரும்பி யிருந்தார். ஆனல் அவரது எண்ணம் நிறைவேறாமல் சென்ற மாதம் 22-ம் நாள் மாலை 1-30 மணிக்கு வியன்னுவிலேயே இந்தியாவின் விடுதலைப் பிரார்த்தனை செய்துகொண்டே வீரசொர்க்க மெய்தினர்.

## வர்த்தமானம்

### சென்னை மார்க்கட்டு நிலவரம்

**15-11-33**

| சவரன் | | வெள்ளி | |
|---|---|---|---|
| 1-க்கு மொத்த விலை | ரு. 20-10-0 | சீமை கட்டி வெள்ளி 100 ரூ. எடை | ரூ. 57-12-0 |
| 1-க்கு சில்லரை விலை | ரூ. 20-10-6 | ஷை சில்லரை விலை ரூபா எடை | 0-9-6 |

ஐவுளி தினுசுகள்

| | | | |
|---|---|---|---|
| 22 x 22 கிரிப்பாம்பு | (காரிக்கன் மல்) | (பி) | ரூ. 6- 3-0 |
| ஷை | ஷை | ஆவரேஜ் | ரூ. 5-10-0 |
| ஷை | (சலவை மல்) | (பி) | ரூ. 6-12-0 |

நூல் தினுசுகள்

| | | | |
|---|---|---|---|
| 40 நெ. | சீமை 5 ராத்தல் டாக்கிரி கட்டு 1-க்கு | | ரூ. 3-7-6 |
| ஷை | ஷை | சலவை நாக கன்னிகை | ரூ. 4-6-0 |
| ஷை | ஷை | சலவை குஸ்தி | இருப்பில்லை |
| ஷை | ஜப்பான் 10 ராத்தல் கட்டு கலர் பந்து | | ரூ. 6- 9-6 |
| ஷை | மதுரை மில் 5 ராத்தல் கட்டு | | ரூ. 3- 8-0 |
| 30 நெ. | ஷை | ஷை | ரூ. 2-13-0 |
| ஷை | லாயல் மில் | ஷை | ரூ. 2-11-0 |
| 20 நெ. | மதுரை மில் 10 ராத்தல் கட்டு | | ரூ. 4- 4-0 |
| ஷை | ஸ்டேன்ஸ் மில் | ஷை | ரூ. 3-15-0 |
| ஷை | லாயல் மில் | ஷை | ரூ. 4- 1-0 |
| 60 நெ. | சீமை 5 ராத்தல் கட்டு எருதுகாரம் | | ரூ. 5- 7-0 |
| ஷை | ஷை | ஜி. ஜி. | ரூ. 5- 4-6 |
| ஷை | ஷை | அசல் மயில் (சிகப்பு) | ரூ. 10- 0-0 |
| ஷை | ஜப்பான் ஷை | மெர்வி ரைஸ்ட் | ரூ. 5- 1-0 & 6-12-0 |

கப்பல் செய்தி

| கப்பலின் பெயர் | எந்த ஊருக்குப் போகிறது | சென்னையிலிருந்து புறப்படும் தேதி | மணி |
|---|---|---|---|
| S. S. எரின்பூரா | ரங்கூன் | 17—11—33 | காலை 10 |
| S. S. எதியோப்பியா | ஷை | 24—11—33 | ஷை |
| S. S. ரோனு | ஸ்ட்ரெயிட்ஸ் | 21—11—33 | மாலை 4 |
| S. S. ரஜுலா | ஷை | 5—12—33 | ஷை |
| பிரெஞ்சு மெயில் | சிங்கப்பூர், செய்கோன் | 28—11—33 | ஷை |

## இந்தியச் செய்திகள்

### பொப்பிலிக்கு 8 லட்சம்

பொப்பிலி சமஸ்தானத்தின் வருட வருமானம் எட்டு லட்ச ரூபாய். இதில் சிப்பந்தி செலவு, வரிவசூல் செய்ய கோர்ட்டு செலவு, செஸ் இவற்றிற்கு 4 லட்சம் செலவாகிறதாம்.

* * *

### எஸ். ஐ. ஆர். ஒன்றும் நெம்பர்

இந்தியாவில் உள்ள அநேக ரயில்வே கம்பெனிகளில் சென்ற வருடம் லாபத்தில் வேலை செய்தவை இரண்டுதான். இவ்விரண்டில் எஸ். ஐ. ஆர். முதன்மையானது. மற்றவை நஷ்டத்தில் வேலை செய்தன.

* * *

### எம். எஸ். எம். 0—0—0

எம். எஸ். எம். ரயில்வே கம்பெனிக்கு சென்ற வருடம் 19 லட்சம் நஷ்டம். அதற்கு முந்திய வருடத்தில் 14 லட்சம் லாபமாம்.

* * *

### ஜமீன்தார்கள் கூடாது

கீழ் கோதாவரி ஜில்லா ஜமீன் குடிகள் மகாநாட்டில் ஜமீன்தார்களே இருக்கக்கூடாதெனத் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

### கார்ப்போரேஷன் சாக்கடைத் திட்டம்

சென்னை கார்பொரேஷன் சாக்கடைத் திட்டத்திற்காக அரசாங்கத்தாரிட மிருந்து $4\frac{3}{4}$% வட்டி வீதம் 10 லட்ச ரூபாய் கடன் வாங்குவதெனத் தீர்மானித்திருக்கிறது.

* * *

### பஞ்சநதி அணை

பாஞ்சாலத்தில் 47 கண்களுடன்கூடிய மிகப் பெரியதோர் அணை கட்டப்பட்டிருக்கிறது. அதைக் கட்டுவதற்கு 197 லட்சம் செலவாயிற்றாம். பகவல்புரி சமஸ்தானத்தில் மட்டும் அதனால் 10 லட்சம் எக்கர் நிலங்கள் புதிதாகச் சாகுபடி செய்யக் கூடுமாம்.

* * *

### தென்னாட்டில் வெள்ளக் கொடுமை

உடுமலைப் பேட்டைக்கும் பொள்ளாச்சிக்கு மிடையிலும், மணியாச்சிக்கும் செங்கோட்டைக்கு மிடையிலும், விருது நகருக்கும் தென்காசிக்கு மிடையிலும் ரயில்பாதைகளில் பலத்த உடைப்புகள் ஏற்பட்டிருப்பதால் ரயில் போக்குவரத்து தடைப்பட் டிருக்கிறது. அநேக ரயில்வண்டிகள் வெள்ளத்தால் கவிழ்ந்து விட்டன. வெள்ளத்தால் ரயில்வே கம்பெனிக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஜம்னதாஸ் மேத்தா மகாத்மா தவத்தைக் கலைக்க முயலுங் காட்சி.



வசிஷ்டருடைய தவத்தைக் கலைக்க விஸ்வாமித்திரர் அம்பும் கதையும் எறிந்தார் அவை துன்பஞ் செய்யாமல் துகள்துகளாய் அவரது பாதத்தில் விழுந்தன.

# நெற்றிவிழி காட்டினுங் குற்றங் குற்றமே!

[கண்டாச்சிபுரம், திருவாளர். வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள்]

வசந்த காலம்; இரவு பதினொரு மணி இருக்கலாம்; அன்று பௌர்ணமி யாதலால் பூர்ணச் சந்திரன் தன்னுடைய குளிர்ந்த சந்திரிகைகளை நாலுதிசைகளிலும் பரப்பி, இன்பமயமான வெள்ளிய வொளியை வீசிப் பிரகாசித்துக்கொண்டிருந்தான். நறுமணங் கமழும் பெருமணச் சோலைகளினின்றும் மந்தமாருதம் மெல்லென வீசிக்கொண்டிருந்தது. நிசப்தம் எங்கும் குடிகொண்டிருந்தது. மதுரைமா நகரத்தின் மத்தியில், இராஜவீதியில் வானளாவிச் சித்திரவேலைகளாற் சிறந்து, மெல்லிய தென்றலை யலர்த்துங் கொடி மாடமாகிய "பாண்டிய விலாச மந்திரத்"தின் உப்பரிகையில் ஓர் சிறிய விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதனருகில் சேடியர்களால் செம்மையா யலங்கரிக்கப்பட்ட அம்சதூளிகா மஞ்சமொன் றிருந்தது. சுமார் 20 அல்லது 21 என்று மதிக்கக்கூடிய வயதுள்ள ஒரு யௌவன மாது அம்மஞ்சத்தின்மீது சாய்ந்துகொண்டு தன் கையிலுள்ள 'கற்பின் மகத்துவம்' என்னும் புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தாள். அம்மேஜையின்மீது சில சிற்றுண்டி வகைகளும், பழதினுசுகளும், வாசனைத் திரவியங்களும், தாம்பூலமும் வைக்கப்பட்டிருந்தது. ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் பச்சகற்பூரம் குங்குமப்பூ முதலிய பலவித வாசனாதிகள் கலந்த சந்தனக்குழம்பு வைக்கபிபட்டிருந்தது. நாரதருடைய மகதியாழ் தானோ வென்று சந்தேகிக்கக்கூடிய மிக்க அழகு வாய்ந்த வீணையொன்று அதனருகே சாத்தப்பட்டிருந்தது. மார்தளிர் போன்ற நிறம் வாய்ந்த அழகிய மேனியையுடைய அம்மாது சிரோன்மணியின் மேகத்தைப் பழிக்கும் கரிய நறுமணங் கமழுங் கூந்தலானது, அவிழ்ந்து பின்புறமாகத் தரைபுரளத் தொங்கிக்கொண்டு அவளது இயற்கை யழகை விளக்கிக்கொண்டிருந்தது. நீண்ட புருவமும், விசாலித்த நெற்றியும், அதனடுவே கருவண்டெனத் தீட்டப்பட்டிருந்த சிறுநுதற்பொட்டும், மஞ்சட்பூச்சணிந்து பூர்ணச் சந்திரோதயம் போல் விளக்கமுற்று குறுநகை தவழும் அவளது அழகிய முகமும், கொவ்வையங்கனியொத் திலகுமிரு செவ்விய இதழ்களும், முல்லை யரும்பு போன்று பிரகாசம் பொருந்திய வெள்ளிய பற்களும், பொற்கிண்ணத்தை நிகர்த்து நிமிர்ந்து நிற்குங் கொங்கையும், பார்த்தோர் மனம் பரவசப்படும் தன்மையினவாய் வசீகரமுற் றிருந்தன. நீலோற்பலம் போன்று மைதீட்டிய கூரிய பார்வையுடைய அவளது இரு கருவிழிகளும் அவள் கையிலிருந்த புத்தகத்தில் ஆழ்ந்து செல்லாமல் ஏதோ ஒன்றை மிக்க ஆவலுடன் எதிர்பார்ப்பதுபோல் விளங்கிக்கொண்டிருந்தன. பொதுவாகக் கூறுமிடத்து காதலனைப் பிரிந்த காரிகையென உள்ளக் கவலைகொண்ட வெள்ளை யோதிமம்போல் விளங்கினாள் அம்மெல்லி நல்லாள்.

இங்ஙனமிருக்கத் திடீரென மெத்தைப்படிகளில் யாரோ ஒருவர் நடந்துவரும் காலடிச் சத்தம் கேட்டது. சேற்கெண்டையை யொத்த அவ்விளஞ் செல்வியின் விழிகளானது அவ்வழி மேற் சென்றன. மன்மதனோ, மகபதியோ, வையம் புரக்குந் திருநெடுமாலோ அல்லது வள்ளிதோள் மருவும் புள்ளி மயிலன்றானோ வென்று சொல்லக்கூடிய பேரழகினை வாய்ந்த ஆடவனொருவன் மிக்க கெம்பீரத்துடன் உள்ளே வந்து நுழைந்தனன். அவனுக்கு வயது சற்றேறக்குறைய நாற்பதிருக்கலாம். அவனது பரந்த நீண்ட முகமும், உருட்சியான விழிகளும், நீண்ட புருவமும், விசாலித்த நெற்றியும், முறுக்கி விட்ட மீசையும், குளிர்ந்த பார்வையும் அவன் ஒரு உயர்குலத்திற் றோன்றிய தயாள குணத்தன் என்பதை நன்கு விளக்கிக்கொண்டிருந்தன. அவனது பருத்த புயமும், விசாலித்த மார்பகமும், உயரிய கெம்பீரமான தோற்றமும், அவனணிந்திருக்கும் விலை யுயர்ந்த ஆடையாபரணாதிகளும் அவன் ஒரு இராஜகுமார னென்பதைக் காட்டுந் தகைமையதாய் விளங்கின. இத்தகைய உத்தம புருஷன் யார்? இவனே நமது மதுரைமாநகரத்தின் மன்னர் மன்னவனாகிய "வங்கிய சூடாமணி மாறன்". இவன் பக்தி மேலீட்டால் திருவாலவாயுடைய சோமசுந்தரப் பெருமானுக்குத் திருப்பள்ளித் தாமந் தொடுத்துதவுமாறு சண்பகச் சோலை வைத்து விருத்தி செய்து, அதனிடமாகப் புஷ்பிக்கும் சண்பக மலர்களை இறைவனுக்குத் தினந்தோறும் நியமந் தவறாமல் மாலை கட்டிச் சாத்தி கண்ணாரக் கண்டானந்திக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தான். எனவே, இவனுக்கு ஆன்றோர்கள் "சண்பக பாண்டியன்" என்று பெயர் வழங்கி வந்தார்கள். இவன் மலர்களின் வாசத்தை நுட்பமாய்க் கண்டறியும் பேராற்றல் வாய்ந்தவன். சிவனே பரம்பொருள் என்று தேறும் சீரிய சிந்தையுடையவன். இவனது வருகையைக் கண்ட நமது இளமங்கை, பூர்ணச்சந்திரனைக் கண்ட வாரிதிபோல் களிப்படைந்து இன்ப சாகரத்தில் மூழ்கினவளாய், எழுந்து நின்று மிக்க மரியாதையுடன் வணங்கி "நாதா! நமஸ்கரிக்கின்றேன். வேட்டை மேற்சென்ற தாங்கள் இரண்டு நாளாக வராமையால் ஏதேனும் ஆபத்து நேர்க்

திருக்குமோ என்று மனம் பயந்து துன்பவெள்ளத்து ளாழ்ந்திருந்தேன். தங்களைக் கண்டவளவில் எனது துன்பமெல்லாம், பரிதி முன்பட்ட பனியேபோல் நீங்கிப் பரவசத்தினளானேன்" என்று, தனது பவளம் போன்ற குமுதவாயைத் திறந்து சில மொழிகள் கூறி, அருகிலிருந்த சோபாவின்மீது அமரச் செய்தனள். சிற்றுண்டியும் பழவர்க்கங்களும் உண்டு, சிவக்கக் காய்ச்ச பாலைப் பருகிக் களை நீங்குமாறு மிக்க அன்புடன் உபசரித்தாள். மாசிற்கழிந்த மணிபோல் களைதீர்ந்த நமது மன்னன், தனது மனைவியின் பேரழகை இரு கண்களாலும் பருகி, அவளது உள்ளம் நெகிழ்ந்த அன்பெனும் நறவமாந்தி உவகையங்கடலுண் மூழ்கினான். சந்தனாதி வாசனைத் திரவியங்களணிந்து தாம்பூலந் தரித்துப் பின் மனைவியை நோக்கி "ஏ! பெண்ணருங்கலமே! நினது உபசரிப்பினால் கானிற்கடு மிருகங்களை வேட்டையாடிக் களைப்படைந்த எனது உடலின் தளர்ச்சி யாவும் நீங்கி இன்பமுற்றேன். இதோ பூர்ணச்சந்திரன் தனது குளிர்ந்த சந்திரிகைகளை வீசி எவ்வளவு இன்பமாய்ப் பிரகாசிக்கின்றனன் பார்த்தனையா! நமது சண்பகச் சோலைகளினின்றும் மந்தமாருதமாகிய இளந்தென்றல் எவ்வளவு ஆரோக்கியமாக வீசிக்கொண்டிருக்கின்றது பார்! எனது உள்ளங் கவர்ந்த தெள்ளமிர்தமே! அன்றிலும் பெடையும்போல் நமது இருவர் மனமும் ஒருப்படுமாறு, இவ்வீணையை மீட்டி உனது குயில் போலுமினிய குரலால் ஒரு கீதம் பாடுவாயாக!" என்று அடங்கா மகிழ்ச்சி பொங்க மிக்க வினயத்துடன் கேட்டனன் வேந்தன். கொழுநன் குறிப்பின் வழி யொழுகுங் குலக்கொடியாகிய அம்மங்கை நல்லாள், பாண்டியன் பக்கலமர்ந்து, தனது மெல்லிய கைகளினால் வீணையை மீட்டி வெகு இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தனள். நமது அரசதம்பதிகள் சேவலும் பெடையும் போல் அம்மஞ்சத்தின் மீதமர்ந்து "காதலிருவர் கருத்தொருமித் தாதரவுபட்டதே இன்பம்" என்னும் செய்யுளுக் கிலக்காகக் காணப்பட்டனர்.

அவ்வமயம் இளந்தென்றலானது நமதரசியின் மேற்படர்ந்து மோதி மன்னன் முகத்தின்மீது வீசிக்கொண்டிருந்தது. என்றும் நுகர்ந்தறியாப் பரிமளங் கமழும் நூதன நறிய வாடையொன்று, அத்தென்றலின் வழியாய் நமது மன்னர் பிரானின் நாசிக்கேறியது. இப்புதிய நறுமணம் எங்கிருந்து வீசுகின்றதென்று அரசன் ஐயுறலானான். பலவிதமாக யோசித்து முடிவில் அம்மணம் தனது மனைவியின் கூந்தலினின்றும் வெளிப்போந்ததாகவே அரசனுக்குப் புலப்பட்டது. இப்பொழுது ஒரு பெரிய சந்தேகம் நமது மன்னனின் மனத்திற் குடிகொண்டது. புருஷன் வெளிச்சென்றிருந்த காலங்களில், கற்புடை மங்கையர் தமது கூந்தலில் புஷ்பமணிதல் சாலுமோ? நறிய மலர்களணியப் பெற்றிருந்தாலன்றி கூந்தலுக்கு வாசம் எது? கூந்தலுக்கு ஏதேனும் இயற்கையாய் நறியவாசம் உண்டோ? இவ்வாசங் கூந்தலுக்கு இயற்கையோ! செயற்கையோ! வெனப் பல சந்தேகங்கள் மென்மேலும் வேந்தன் மனத்திற் குடிகொண்டன. இந்த ஐயத்தை அக்காலத்திய வழக்கப்படி இராச சபையில் "சிந்தாசமுத்தி" மூலமாய்த் தெளிந்து கொள்ளுகிறதென்று முடிவு செய்து கொண்டு உறங்கலானான். சந்தோஷகரமாகவே அவ்விரவு கழிந்தது.

மறுநாள் பகல் 11 மணிக்கு மதுரைமாநகரத்தின் இராஜதர்பார் மண்டபத்தில் மகுட வர்த்தனர், பட்டவர்த்தனர், மண்டலீகர், மந்திரிப் பிரதானி தளகர்த்தர்கள், சேனாபதியர் முதலிய அரசவைக்களத்தோர் தத்தமக்குரிய ஆசனத்தில் வீற்றிருக்க, நமது சண்பகபாண்டியனு மரசேறு அரியாசனத் தமர்ந்திருந்தனன். அவ்வமயம், மன்னர்பிரானேவலின்படி ஆயிரம் பொன் கொண்ட பொற்கிழி யொன்று அவ்வாஸ்தான மண்டபத்தின் முகவாயிலிலுள்ள ஸ்தம்பமொன்றில் வானுறத் தூக்கப்பட்டது. உடனே "எவனொருவன் அரசனுக்கு மனத்தின்கண் ஏற்பட்ட ஐயம் நீங்குமாறு சிந்தாசமுத்திச் செய்யுள் பாடி, அதனை யரசவையி லொப்பேற்றி மன்னனது மனத்தைத் திருப்தி செய்விக்கிறானோ, அவன் இப்பொற்கிழியைப் பரிசிலாகப் பெறுக" என்று எங்கும் பறையறைவிக்கப்பட்டது. அரசன் கருத்தும் புலவர்கள் கருத்தும் ஒன்றுபடாமல், எண்ணிக்கையற்ற செய்யுள்கள் நிராகரிக்கப்பட்டன. எத்தனையோ புலவர்கள் விழைந்து வந்து ஏமாற்ற முற்றனர். கிழியோ பறிப்பாரின்றி யனேக நாள் அப்படியே தூக்கப்பட்டிருந்தது. இச்செய்தி, யுலகமெலாம் பரவியது. கடைச்சங்கப் புலவர்களாகிய நக்கீரன் முதலிய நாற்பத்தொன்பதின்மராலேயே இவ்வையப்பாடு நீக்கப்படவில்லை யென்றால், ஏனையோர்களால் இஃதியலுந் தன்மைத்தோ?

இஃதிவ்வாறாக, திருவாலவா யென்னும் நமது கூடலம்பதியின்கண் அந்தணாளர் வீதியிலே, ஆதிசைவ மரபிலே, சத்தியம், ஞானம், தவம், பொறுமை, ஈகை முதலிய நற்குணங்கள் சகலமும் நிரம்பப்பெற்று, கல்வி கேள்விகளில் வல்லவனாய், இளம்பிராயந் தொட்டு வறுமையே தனக்குரிய செல்வமாகப் பெற்றவனாய், சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானச் சிறுவனொருவனிருந்தனன். அவன் பிரமச்சாரி யாசிரமத்தை வகித்தவன். அவனுக்கு வயது சுமார் 20 இருக்கலாம். நடுத்தர உயரமும், மெலிந்து நீண்ட சரீரமும் உடையவன். யௌவனத்தின் அழகும், பிராமண தேஜஸும் அவன் முகத்தில் விளங்கிக்கொண்டிருந்தன. ஆனால், "அடுத்தது காட்டும் பளிங்கு, கடுத்தது காட்டும் முகம்" என்றபடி அவனது முகவாட்டத்தால் உள்ளத்தில் அவனுக்கு ஏதோ ஒரு கவலை குடிகொண்டிருப்பதாகக் காணப்பட்டது. அவன் தருமி என்னும் இயற்பெயரை யுடையவன்.



"இல்லற மல்லது நல்லற மன்று" என்னும் நீதி வாக்கியத்தை யோர்ந்து, தன் கருத்திற் கிசைந்த ஒரு நன் மனையாளை வதுவை புரிந்து இல்லறம் நடாத்த எண்ணினானாயினும், வறுமை மேலீட்டால் தமது கருத்து முற்றுப் பெறாமல் கவலை கொண்ட உள்ளத்தினனாய்க் கண்ணுதற்பெருமானைப் பூஜித்து வந்தனன். மதுரை மாறன் சிந்தாசமுத்தியின் பொருட்டு பொற்கிழி தூக்கி யிருப்பது தெரிந்து, வேண்டுவார் வேண்டுவதே ஈயும் பரமேட்டியாகிய கூடல் நாயகனது திருமுன் சென்று "எம்பெருமானே! இல்லற வாழ்க்கையின்றித் தேவரீரை பூஜிப்பதற்கு அருகனில்லையென்று வேதாகமங்கள் முறையிடுகின்றனவே!, அங்ஙனம் ஒரு கன்னிகையை மணந்து கொள்ளுவதற்கு தமியனிடம் பொருட்செல்வமில்லையே! வழுதிமனத்தின் ஐயப்பாடு நீங்க ஒரு செய்யுள் அடியேனிடம் வரைந்து தருதிராயின், அவ்வாயிரம் பொன்னை நான் பெற்று ஓர் அரிவையை மணந்து ஒப்பற்ற இல்வாழ்க்கை எய்தமாட்டேனோ?" என்று முறையிரந்து நின்றான். வேண்ட முழுதுந் தருவோனாகிய விமலன் அவ்வந்தணச் சிறுவனின் வேண்டுகோட் கிசைந்து மனமிரங்கிப் பனையோலை யொன்றில்,

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப் பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின், மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீ யறியும் பூவே"

என வழுதியின் ஐயம் நீங்குமாறு பாண்டிமாதேவியின் கூந்தலினின்றுமே அவ்வாசம் போந்தது, கற்புடை மங்கையர் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு என்னும் பொருள்பட ஒரு செய்யுள் வரைந்து கொடுத்தனர். பிறவிக்குருடன் கண்பெற்றது போலப் பேருவகையில் மூழ்கிய வப்பனவன், பெருமானது திருவருளை வியந்து துதித்து, காலக்கடனை முடித்து சிவபூசை முற்றி, பெரும்புலவர்கள் பல்லோர் நிறைந்திருக்கும் பாண்டியனது கொலுமண்டபம் புகுந்து, மன்னர் பெருமானை நெருங்கி வாழ்த்தி, மிக்க மரியாதையுடன் இறையனா ரருளிய சிந்தாசமுத்திச் செய்யுள் வரைந்த அழகிய பனையோலை நறுக்கொன்றினை ஈந்தனன். தனது உள்ளக்கருத்தைத் தெள்ளிதி னுணர்த்தும் செந்தமிழ்ப் பாடலைச் செழியன் பன்முறை வாசித்துணர்ந்து உவகையங் கடலில் மூழ்கினான். ஆங்கிருந்த புலவர் பெருமக்கள் அப்பாசுரம் சொன்னயம், பொருணயம், யாப்பு, அணி, இலக்கணவமைதி முதலிய சகலமும் பொருந்தியிருப்பது கண்டு, அவ்வந்தணனைச் சிறுவனைப் புகழ்ந்து பாராட்டினர். சபை முற்றிலும் குதூகலங் கொண்டாடிற்று. பொற்கிழியைப் பரிசிலா யெடுத்துக்கொள்ளுமாறு பூசுரனுக்கு அனுமதி யளிக்கப்பட்டது.

(தொடரும்)


# இனித் தயக்கம் என் ?

புதிய வடிவம்! புதிய முறை!

புதிய விஷயங்கள்!

நங்குலப் புதல்வனான 'செங்குந்த மித்திரன்' தனது எட்டாம் ஆண்டு தொடக்கமாகிய வரும் ஜனவரி மாதம் முதல், அனைவரும் திடுக்குறுமாறு புதிய வடிவில், புதிய விஷயங்கள் பல தாங்கி பிரதி மாதம் முதல்தேதி யன்று தவறாமல் உங்களைக் கண்டு களிக்க ஆர்வத்துடன் ஓடி வருவான்.

அவனை நன்கு போஷித்து ஆதரிக்க

இனியும் தயக்க மென்ன ?




[பி. சே. மா.]

காட்டான்:—இதென்ன வேடிக்கே! இந்த வைக்க லய்யாவுங்க நாலுகை சொக்கா போட்டுகினு கிராங்களே!

நகரத்தான்:—கட்சிக்காரர்களிட மிருந்து பணத்தைப் பிராய்ந்து கொட்ட இரண்டு கை போரவில்லையாம். நான்கு கைகள் தரவேண்டு மென கடவுளுக்கு மாதிரி காட்டுகிறார்கள்.

* * *

எஜமானன்:—மந்திரிகள் சம்பளமாகிய ஐயாயிரம் ரூபாய் உனக்குக் கிடைத்தால் அதை நீ என்ன செய்யக் கூடுமென எப்பொழுதாவது யோசித்ததுண்டா?

வேலையாள்:—இல்லைங்கோ, என்னுடைய சம்பளமாகிய ஐந்து ரூபாய் மந்திரிகளுக்குக் கிடைத்தால் அவர்கள் என்ன செய்வார்க ளென நான் அடிக்கடி ஆலோசனை செய்வது உண்டுங்கோ.

* * *

அயலான்:—பையா! உனக்கு எழுதத் தெரியுமல்லவா? இந்தக் கடிதத்தைக் கொஞ்சம் எழுதிக் கொடு.

பையன்:—ஐயோ! எனக்குக் கால் வலிக்கும், நான் எழுதமாட்டேன்.

அயலான்:—என்னடா! கடிதம் எழுதச் சொன்னால் கால்வலிக்கும் என்கிறாய்!

பையன்:—என் எழுத்தை நான்தான் வந்து படிக்க வேண்டும். அப்போது என் கால் நோகாதா?

* * *

பிரயாணி:—ஐயரே! இந்தக் காப்பியில் கொஞ்சங் கூடப் பால் சேர்க்கவில்லையா?

ஐயர்:-அப்படிச் சொல்லாதிங்கோ. பாலாற்றிலிருந்து புதிதாய்ச் சுரந்த பால் நிறைய சேர்த்திருக்கிறேன்.

* * *

கிராமத் தலைவன்:—இந்த மருந்தை எனக்கு எதற்காகத் தருகிறீர்?

வைத்தியர்:—நோயைப் போக்குவதற்கு.

தலைவர்: எனக்கு என்ன நோய் இருக்கிறது.

வைத்:—உமக்கு நோய் ஒன்றுமில்லை. நீர் இருப்பதால் இந்த ஊர் சவலைநோயால் துன்பப்பட்டுக்கொண் டிருக்கிறது.

* * *

ஆசிரியர்:—பூமி ஓயாமல் வேகமாய்ச் சுற்றிக்கொண்டே இருக்கிறது.

ஒரு பையன்:—ஆமாஞ்சார்! அதனால் தான் ராத்திரிகூட நான் கட்டிலி லிருந்து கீழே விழுந்துவிட்டேன் சார்.

* * *

டிராம் வண்டியி லேறிய ஒருவன் தனக்கு உட்கார இடமில்லாததைக் கண்டு ஒரு யுக்தி செய்தான். அங்கு இருந்தவர்களனைவரும் பழக்க மில்லாதவர்களா யிருப்பினும் ஒருவனைப் பார்த்து 'ஓ! நமஸ்காரம். தங்கள் தரிசனம் என்ன சார், கிடைப்பதே அபூர்வமா யிருக்கிறது' என்றான்.

'ஓ வாருங்கோ! நான் இந்தப் பக்கம் அடிக்கடி வருவதில்லை. நிற்கிறீங்களே! உட்காருங்களேன்!' என்று கூறி அவன் நகர்ந்து இடங் கொடுத்தான்.

* * *

ஒரு மரமேறி தேங்காய் அறுப்பதற்கு ஏற ஒன்றும் இறங்க ஒன்றும் கூலி கேட்டான். தோட்டக்காரன் அதற் கிசைந்து ஏறச் சொன்னான். மரமேறி தேங்காய்களை அறுத்துப் போட்டதும் தோட்டக்காரன் ஒன்றை மட்டும் வைத்து விட்டு மிகுதிக் காய்களை எடுத்துக் கொண்டு போவதைப் பார்த்து,

மரமேறி:—இரண்டு காய்களை வைத்து விட்டுப் போங்கோ.

தோட்டக்காரன்:—'இப்போது ஏறியதற்கு மட்டும் தேங்காய் வைத்திருக்கிறேன். அடுத்த மாதம் கொஞ்சம் தேங்காய் அறுக்க வேண்டும். அப்போது இறங்குவதற்குக் கொடுத்து விடுகிறேன். தயவு செய்து அங்கேயே இரு' என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டான்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் வரலாறு

(சென்ற இதழ், 156-ம் பக்கத் தொடர்ச்சி)

## 12. சுவாமிகள் தமது சரித்திர ஆராய்ச்சிக்குரிய அகச்சான்றுகள் ஆங்காங்கு பகர்தல்

அன்பே ஒருருவெடுத்தாற்போன்ற ஆளுடைய அடிகள் தாம் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் உபதேசம் பெற்றதும், தம் பொருட்டுச் சிவபெருமான் நரியைப் பரியாக்கியதும், மண் சுமந்ததும், பிறவும் தாம் பாடியருளிய மனங்கரைத்து மலங்கெடுக்கும் மாண்புடைய திருவாசகத்தின் கண்ணேயே ஆங்காங்கு எடுத்தோதி யிருத்தல்போல நமது சுவாமிகளும், தாம் முருகப்பெருமானிடம் பெற்ற உபதேசம், விசேஷ அநுக்கிரக மாதியவற்றைத் தாம் பாடியருளிய நூல்களில் காட்டியுள்ளார் என்பது மேலே காட்டிய பாக்களாலும் பிறவற்றாலும் நன்கறியலாம். இவையே சுவாமிகளின் சரித்திரத்தை ஒருவாறு தெரிந்துகொள்ள ஆதாரமா யுள்ளன.

## 13. அருணகிரியார் முருக மூர்த்தத்தைத் தேடித்தேடி கண்டகண்ட விடங்களில் பாடினார்

"அருணபுரி வீதியில் நிற்கும் பெருமாளே"

* * *

"அருணை இறையவர் பெரிய கோபுரத்தில் வடபாலமர்ந்த அறுமுகப் பெருமாளே"

* * *

"புலியூர் பரமாகிய வடக்குக்கோபுர வாசலில் மேவிய தம்பிரானே"

* * *

"புலியூரினில் மேலைக்கோபுர வாசலில் மேவிய பெருமாளே"

* * *

"தெற்குக்கோபுர வாசலில் மேவிய பெருமாளே"

* * *

"நாலுகோபுர வாசல் மேவிய பெருமாளே"

* * *

"தச்சூர் வடக்கு மார்க்கத்தமர்ந்த பெருமாளே"

* * *

"அமணர்குல காலனாகும் அரிய தவராஜராஜன்
அவனிபுகழ் சோமநாதன் மடமேவும் முருக."

என்பனவற்றால், நமது பேராசிரியர் கோயில்களில் எழுந்தருளியுள்ள முருகமூர்த்தங்களையே யன்றி, மூலைமுடுக்கு மடம் கோபுரம் தெரு முதலிய பல விடங்களிலுமுள்ள மூர்த்தங்களையும் தேடித்தேடிப் பாடினார் எனத் தெரியவருகிறது. அம்மட்டோ! அறுமுகப் பெருமானிடம் அவர் கொண்டிருந்த அன்புதானென்னே! ஆளுடைய நம்பிகள் திருத்தொண்டத்தொகை பாடியருளிய போது தமக்கு முன்னும், தமது காலத்திலும், மெய்யடியார்களுக்குத் தனித்தனியே வணக்கங் கூறியும், திருப்தி யடையாது படைப்புக் காலந் தொட்டுக் கடையூழி வரையில் திகழும் உண்மைச் சிவனடியார்கள் அனைவருக்கும் வணக்கங்கூற வேண்டுமென்று கொண்ட அளப்பரும் அன்பினால் அன்னோர் அனைவரையும் ஒன்பது தொகுதியினராக்கி,

1. "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"
2. "பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்"
3. "பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கு மடியேன்
4. பரமனையே பாடுவார் அடியார்க்கு மடியேன்
5. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
6. திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கு மடியேன்
7. முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கடியேன்
8. முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
9. அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கு மடியேன்"

எனத் திருவாய் மலர்ந்தாற்போல நமது சுவாமிகளும் தாம் சென்று தரிசித்த பல கோயில்களிலும், மேலே காட்டியபடி வீதிகளிலும், கோபுரங்களிலும், பிறவிடங்களிலும் உள்ள முருகக் கடவுளின் மூர்த்தத்தைத் தேடித்தேடிப் பாடியும் ஆர்வந் தணியாதவராய்,

"ஆறு திருப்பதியில் வளர் பெருமாளே"

* * *

"பலகுன்றிலும் அமர்ந்த பெருமாளே"

எனத் தொகைத்தலங்களைப் பாடியருளினார். எனினும் தாம் இதுவரையில் பாடிய தனித்தலங்கள் தொகைத்தலங்களையே யன்றி வேறிடங்களிலும் வள்ளிமணாளன் எழுந்தருளி யிருத்தல் கூடுமாதலான் அவற்றையும் பாடாது விடுதல் கூடாதெனக்கருதி,

"உலகெங்கு மேவிய தேவாலயந்தொறு பெருமாளே"

எனப்பாடி யருளினார்.

## 14. சுவாமிகள் காலத்துச் சமணர்கள்

திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களால் தமிழ்நாடு முழுதும் பெருந்தொகையினராய்ப் பரவி யிருந்த சமணர்கள், சைவ சமயாச்சாரியர் காலத்தில் சைவராயினர் என அறிகிறோம். என்றாலும் சமணசமயம் அப்போதே அடியோடு அழிந்து போயிற்றென்று சொல்வதற்கில்லை. நால்வர் காலத்திற்குப் பின்னும் பல சைவ சமண வாதங்கள் நிகழ்ந்து வந்தன. அருணகிரிநாதர் காலத்தில் திருவண்ணாமலையிலும் அதைச் சூழ்ந்த ஊர்களி

னும் சமணர்கள் பெருங்கூட்டத்தினரா யிருந்தனர் என்றும், பல சைவ சமண வாதங்கள் நடந்தன என்றும்,

"அமணர்குல காலனாகும் அரியதவராஜராஜன்
அவனிபுகழ் சோமநாதன்"

எனவரும் சுவாமிகளது அருளிச் செயலால் அறிகிறோம். ஈண்டு சோமநாதன் என்பாரை 'அமணர் குலகாலன்' என்றதனால் அத்தகைய வாதங்களில் இச்சைவப் பெரியாரே வெற்றியுற்று அநேக சமணரைச் சைவராக்கினாரென்றும், 'அவனிபுகழ் சோமநாதன்' என்றதனால் அன்னார் செயலைச் சைவஉலகம் சரியென ஏற்று மெச்சிப் புகழ்ந்து கொண்டாடிற்றென்றும் பெறப்படுகிறது. மேலும் சம்பந்தாண்டான் என்னும் ஓர் சமண வேளாளனுக்கும் சுவாமிகளுக்கும் நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் வாதமும் மேலே காட்டிய மதப்போரின் உண்மையினை வலியுறுத்துகிறது. நடுநாட்டின் கண்ணே அவர்கள் அக்காலத்தே பெருந்தொகையினரா யிருந்தனர் என்பதற்கு அன்னார் இன்றும் ஆண்டு பெருங் கூட்டத்தவரா யிருந்து வருதலே போதிய சான்றாகும். ஆங்குள்ள வேளாளர்கள் 'நீர்பூசி வேளாளர்' 'ஜயின வேளாளர்' என இருவகைப்படுவர். சமணர்கள் சிறுகச்சிறுக சைவர்களாக மாறி வருவதாகவும் தெரிகிறது.

## 15. சம்பந்தாண்டானோடு வாதம்

திருவண்ணாமலையில் சுவாமிகள் காலத்தில் அரசு புரிந்துவந்த பிரபுடதேவராயன் என்னும் அரசன் அவையில், நமது திருப்புகழாசிரியருக்கும் சம்பந்தாண்டான் எனப் பெயரிய ஒரு சமண வேளாளப் புலவனுக்கும் பெரிய வாதம் நிகழ்ந்தது. அப்போது அரசன் 'நம்மிருவரில் தம் உபாசனா மூர்த்தியைச் சபையில் வரவழைத்துக் காட்டவல்லவரே வாதில் வெற்றி பெற்றோராவீர்' என்றான். சம்பந்தாண்டான் தேவியையும், அருணகிரியார் முருகப் பெருமானையும் வரவழைத்துக் காட்டுவதாக ஒப்புக்கொண்டனர். சம்பந்தாண்டான் தன்னாலியன்றவரை முயன்றும் தேவி தோன்றினாளில்லை. ஆனால் நமது சுவாமிகளின் வேண்டுகோளுக் கிரங்கி வள்ளிநாயகன் மயில் வாகனனாருடனாய், வேலாயுதந் தாங்கிய கையனாய்ச் சபையில் வந்து காட்சி தந்தருளினான். இதற்கு,

"அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாளம் அவையாட
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வசன மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்
கதைவி டாத தோள்வீமன் எதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்
உததி மீதி லேசாயும் உலகமூடு சீர்பாத
உவணம் ஊர்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜன்
உளமும் ஆட வாழ்தேவர் பெருமாளே"

* * *

"சயில மெறிந்தகை வேற்கொடு
மயிலினில் வந்தெனை ஆட்கொளல்
சகமறி யும்படி காட்டிய குருநாதா"

* * *

"உலகினில் அனைவர்கள் புகழ்வுற அருணையில்
ஒருநொடி தனில்வரு மயில்வீரா"

என்னும் ஆசிரியர் திருவாய் மொழிகளே சான்றாகின்றன.

## 16. பாரதம் பாடிய வில்லிபுத்தூராரோடு வாதம்

மற்றொருமுறை பாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வாருக்கும், ஆசிரியர் அருணகிரியாருக்கும் பிரபுட தேவராயன் அவையின் கண் வாதம் நிகழ்ந்ததாகவும், அச்சமயம் சுவாமிகள் கந்தரந்தாதியை ஆசு கவியாக இயற்றி ஆழ்வாரை உரை கூறச் சொன்னதாகவும், அவ்வாறு அவர் உரை கூறிவருங்கால் "திதத்தத்தத் தித்தத்திதி தாதை" எனவரும் செய்யுளுக்கு உரை கூற மாட்டாராய் மயங்கித் தோல்வி யுற்றதாகவும், தம்மிடத்துத் தமிழ்ப் புலவரெனக் கூறி வந்து தோல்வியுற்றவர் காதினை அறுக்கும் வழக்கமுள்ள வில்லியாரது காதினை அருணகிரியார் கருணையினால் அப்போது அறுக்காது விடுத்ததாகவும் கூறி அதற்கு ஆதாரமாக,

'காசுக்குக் கம்பன் கருணைக் கருணகிரி
ஆசுக்குக் காளமுகில் ஆவனே—தேசுபெறும்
ஊழுக்குக் கூத்தன் உவக்கப் புகழேந்தி
கூழுக்கிங் கௌவையெனக் கூறு'

என்னும் தனிப்பாடலை எடுத்துக் காட்டுவாருமுளர். அன்றியும் அண்ணாமலைக்கு வந்த ஆழ்வார் சைவத் துவேஷம் வெளிப்படக் காட்டிக் கண் பார்வை யிழந்தபடியால், தாம் பாடிவந்த பாரதத்தில் திருவண்ணாமலையையும் பிற சைவத் தலங்களையும் சிறப்பித்துப் பார்வை பெற்றாரென்றும் சிலர் கூறுவதுண்டு. இவற்றை மெய்ப்பிக்கக் கூடிய தக்க ஆதாரங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தென்மொழியிலும், வடமொழியிலும் நிரம்பப் புலமை பெற்றிருந்த (மதத் துவேஷமற்ற பெருநோக்க முடைய) ஆழ்வார் பொது நூலாகிய இதிகாசத்தை உள்ளவாறே இயற்றினாரெனக் கருதலே பொருந்தும்.

## 17. அருணகிரியார் கிளிபதம் அடைந்தார்!

அருணகிரியாரோடு வாதஞ் செய்து தோல்வியுற்றபோது அரசனால் திருவண்ணாமலையினின்றும் அப்புறப்படுத்தப்பட்ட சம்பந்தாண்டான்



அரசனை மறுபடியும் தன்வயப்படுத்திக் கொண்டு அருணகிரியாரை அமரர் நாட்டிலுள்ள பாரிஜாத மலரைக் கொண்டு வரச்சொல்லிக் கேட்குமாறு தூண்டினான். அரசனும் அதற்கிசைந்து அவ்வாறே கேட்டான். அருணகிரியாரும் மறுது அருணைக் கோபுரத்தில் தமது தூலஉடம்பை வைத்து கிளிவுருவெடுத்துத் தேவலோகஞ் சென்றார். இதனை யறிந்த சம்பந்தாண்டான் அரசனிடத்துச் சென்று 'அருணகிரியார் உயிர்துறந்தனர், அவரது உடம்பு கோபுரத்தின் கண்ணே யுள்ளது' எனக் கூறினான். கூறலும் அரசன் உண்மை யுணராதவனாய் அத்தேகத்தைத் தகிப்பித்தான். அதன் பின்னர் அருணைப் பதிமுழுதும் தெய்வ நறுமணம் வீசுமாறு பாரிஜாத மலரோடு திரும்பிவந்த சுவாமிகள் நடந்தவற்றை யுணர்ந்து, அக்கிளி யுருவத்தையே தாங்கினவராய் முருகக் கடவுளிடத்து அமர்ந்துவிட்டனர் என ஒரு பிரபல கதை வழங்கிவருகிறது. அக்கிளி யுருவத் தோடிருந்தே 'கந்தரநுபூதி' என்னும் அரியநூலை இயற்றியருளினார் என்பர் ஒருசாரார்; அதனை மறுத்துக் கூறுவர் மற்றொரு சாரார்.

"பரவ சந்தனிந் துனையு ணர்ந்தொரு
மவுன பஞ்சரம் பயில்த ருஞ்சுக
பதம டைந்திருந் தருள் பொருந்தும
தொருநாளே"

* * *

"துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரு பத்தையுற் றடைவேனோ."

எனவரும் சுவாமிகள் திருவாய் மொழிகளில் "சுகம்" என்னும் சொற்குக் கிளியெனப்பொருள் கொண்டு, கிளி யுருவத்தை ஆசிரியர் விரும்பிக் கேட்டுக்கொண்டபடி தரப்பெற்று மகிழ்ந்தார் எனக்கூறுவர்.

இது முற்றும் பொருந்தாக் கதையாமாறு காண்போம். கதையிற் கூறியபடி தாமே பெறக் கூடிய கிளி யுருவத்தை இறைவனை ஏன் தருமாறு கேட்டுக் கொள்ளவேண்டும்? விரும்பிய கிளி யுருவம் பெற்றும் தமது மானுட உடலைத் தேடிக் காணாமல் ஏமாறுவானேன்? தம் இச்சைப்படிக் கிளி வுருவெடுத்த சுவாமிகள் தமது மானுட உடலைக் காணாதபோது வேறொரு மானுட வுடலை ஏன் எடுத்திருக்கக்கூடாது? மேலே காட்டிய பாக்களில் வரும் 'சுகம்' என்னும் சொல்லிற்குக் கிளியென்று எக்காரணம்பற்றிப் பொருள் கூறுகின்றனரோ தெரியவில்லை. 'சுகபதம்' 'சுக சொருபம்' என்பவற்றிற்கு முறையே 'இன்ப பதம்' இன்பசொருபம்' என ஏன் பொருள் கோடலாகாது? 'கிளிப்பதவி' என்றோர் பதவி யுண்டோ? உண்டெனில் 'குயில் பதவி', 'மயில் பதவி', 'அன்றில் பதவி' முதலிய பதவிகளும் இருத்தல் வேண்டுமன்றோ? இல்லை கிளிப்பதவி மாத்திரமே உண்டெனில் எப்பெரியார் எக்காலத்தில் அப்பதவியை வேண்டி யடைந்தனர் என்னும் கடாவிற்கு விடை பகர்தல் வேண்டுமன்றோ?

மேலும் 'துகளில் சாயுச்சியக்கதியை, ஈறற்ற சொற் சுக சொருபத்தையுற் றடைவேனோ' என்றவிடத்து உருவம் அருவம் ஆதியவற்றைக் கடந்து நிற்கும் ஒரு பரம்பொருளோடு இரண்டறக் கலந்து நிற்றலாகிய சாயுச்சிய கதியை (அதாவது) முடிவில்லாத இன்பசொருபத்தை என்று அடைவேனோ எனக்கூறியதாகப் பொருள் கொள்ளலாமேயன்றி தத்துவாதீதமாயுள்ள பரம்பொருளோடு இரண்டறக் கலந்துநிற்றலாகிய சாயுச்சிய பதவியையும், இருவினை சம்பந்தத்தா லுண்டாகும் உடற்சிறையுட் பட்டதும், அழிதன் மாலையதுமாகிய கிளிப் பதத்தையும் (கிளி உருவம்) ஜீவன்முத்தரான அருணகிரியார் ஒருங்கே தருமாறு இறைவனை வேண்டிக்கொண்டாரென்பது ஒப்புக்கொள்ளக் கூடியதாமோ? வடமொழியின் கண்ணே முறையே 'கிளி', 'இன்பம்' எனப் பொருள் தரும் 'ஶுகம்', 'ஸுகம்' என்னும் இருசொற்களையும் தென்மொழியாகிய தமிழில் 'சுகம்' என்ற ஒரே சொல்லினால் சொல்ல வேண்டியிருத்தலின் ஈண்டு 'சுகம்' என்பதற்கு 'இன்பம்' எனப்பொருள் கூறுதலே பொருத்தமுடைத்தாம்; யாண்டும் யாரும் இன்பத்தையே நாடி நிற்றலின். இதனால் சுவாமிகள் பெற அவாவியது 'சாயுச்சியக்கதியாகிய சுகசொருபத்தை' (இன்ப சொருபத்தையே) எனப்பெறலாம். இல்லாவிடின் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதவையும், முரண்பாடானவையுமான இருகதிகளை ஒருங்கே அடைய விரும்பினாரென்று விபரீதப் பொருள் கொண்டு இடர்ப்படவேண்டியிருக்கும். அது அசம்பாவிதமாம்.

இவ்வாறு, கிளியுருவம் தமக்குக் கிடைத்ததை யுன்னிப் பேரானந்த மடைந்து "ஏழையின் இரட்டை வினையாயதொரு உடற்சிறை யிராமல் விடுவித்தருள் நியாயக்காரன்' எனத் திருவேளைக்காரன் வகுப்பில் நன்றி கூறியுள்ளார் என்றும் மேற்கூறிய அசம்பாவிதக் கூற்றுக்காரர் கூறுவர். மேலே காட்டிய திருவகுப்பில் 'ஏழையின் இரட்டைவினையாய' என்றவிடத்து இருவினைப் பயனாகத் தோன்றும் உடலாகிய சிறையினின்றும் விடுவித்தவன் அதாவது என்னைச் சீவன் முத்தனாக்கியவன் என்ற பொருளை அது தருமேயன்றி கிளி உருவம் தரப் பெற்றமைக்காக நன்றி கூறினார் என்னும் பொருள் தருமாறு யாங்ஙனம்? கிளியுருவம் உடற்சிறையன்றோ? அன்றியும் சுவாமிகள் கடைசிகாலத்தில் பெற்றதாகச் சொல்லப்படும் கிளியுருவத்திற்காக அது பெறு முன்னரே இயற்றியருளிய திருவகுப்பிற் கூறி மகிழ்ந்தாரென்பது எவ்வாறு பொருந்தும்? ஆகவே, இதனால் சுவாமிகள் தாம் சீவன் முத்தநிலை அடைந்ததைக் கூறி மகிழ்ந்தாரென்றே பெற்றாம்.

## 18. இன்பத்துறையினில் எளியரானார்!

சுவாமிகள் அருளிச் செய்த திருப்புகழ் பாக்களில் சிற்றின்பத்தை விஸ்தரித்தும் வெறுத்தும்

கூறியிருத்தல் நோக்கி சுவாமிகள் இளமையில் சிற்றின்பத்தில் மிகுதியும் ஈடுபட்டு, அதனால் நோய் வாய்ப்பட்டு வருந்தி அதனிடத்து வெறுப்புற்று, இறைவன் பால் மனந்திரும்பியதாகச் சொல்லுவதுண்டு. வண்ணப்பாவிற்குரிய விதிபற்றி அகப்பொருட்சம்பந்தமான சிற்றின்பத்திற்குரிய மாதர் அழகு, நடை, உடையாதியவற்றை வருணித்துக் கூறினாரென்றும், மக்களுக்குள்ள மூவாசைகளுள் பெண்ணாசையே தலையாயதாதலால் அதையொழித்தார்க்கே இறைவன் பாதம் சித்தியாகுமென்று உலகத்தார்க்கு எடுத்துக் காட்டவே அதனை விரிவாகவும் வெறுத்தும் கூறினாரென்றும் கொள்ளாது வேறு விதமாகக் கூறுவது பொருந்துவதாகாது.

'கூர்வேல்விழி மங்கையர் கொங்கையிலே, சேர்வேன் அருள்பேரவும் எண்ணுமதோ' என்றாற் போன்ற இடங்களில் பொதுவாக மக்களது மனப்பான்மையைப் பற்றியே எடுத்துக் காட்டியதாகக் கொள்ளவேண்டும். இல்லையேல் தாமியற்றிய அரிய பெரிய நூல்களை உலகத்தார்க்கு உதவுமாறு பொறித்து வைத்தது அனாவசியமாகும். சிற்றின்பத்தை இவ்வாறே பல பெரியோர்களும் வெறுத்துக் கூறியிருத்தலை அன்னார் நூல்களில் காணலாம்.

சிற்றின்பத்தைப் பற்றிக் கூறி யிருத்தலினாலேயே அதில் பெரிதும் ஈடுபட்டுள்ளார் எனக் கொள்வோமாயின் காளத்தி புராணத்தில் பரத்தையர் வீதியைப் பற்றி வருணிக்குங்கால் சிற்றின்ப சம்பந்த மான விஷயங்களை விஸ்தாரமாகக் காட்டிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளையும் பரத்தையர் லோலனென்றே சொல்ல வேண்டும்.

## 19. சுவாமிகள் அருளிச் செயல்கள்

சுவாமிகள் திருப்புகழே யன்றி திருவகுப்பு, வேல்விருத்தம், மயில் விருத்தம், கந்தரநுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி முதலிய அரிய நூல்களையும் இயற்றி நம்போலியர் உய்யுமாறு உதவியுள்ளார் என்பதை அன்பர்கள் பலரும் அறிவர்.

## 20. திருப்புகழின் பெருமையும், பிறவும்

சொல்லழகும், பொருளழகும், நடையழகும், தொடையழகும், ஓசையழகும் ஒருங்கே வாய்க்கப் பெற்றுள்ள திவ்ய திருப்புகழ் பாராயண ஒலி, தற்போது தமிழ்நாடெங்கணும் பரவி யிருத்தலையும், தண்டமிழ் மொழியின் வாசனை யறியாரே யாயினும், திருப்புகழின் பொருளறியாரே யாயினும், திருப்புகழ் ஓதுந்தோறும் குதூகலமிகுந்தவராய்ப் பரவசப்பட்டு ஆனந்தக் கூத்தாடுதலையும் நோக்குங்கால், நமது செந்தமிழ்த் தாய் செழித்தோங்கவும், சைவம் தழைத்து வளரவும், வெற்றிவேலன் திருவடிக் கன்பு பூண்டொழுகும் மெய்யடியார்களெல்லாம் பெருவாழ் வெய்தவும், வானுலக வாழ்வு சிறக்கவும், நமது சுவாமிகள் நந்தமிழ் நாட்டிடை அவதரித்தா ரென்பது சொல்லாமலே விளங்கும். அருணகிரியார் திருவாய்மலர்ந் தருளிய நூல்களை அவர் காலத்திலேயே உலகம் போற்றிப் புகழ்ந்து பாராட்டியதென்று மேலே காட்டியுள்ளோம்.

சுவாமிகளுக்குப் பின் தோன்றிய தாயுமானார் முதலிய பல பெரியார்களும் அவர் திரு முருகனிடத்து வைத்த பேரன்பையும் இறைவன் மாட்டு இவர் பெற்ற பேரருளையும் பிறவற்றையும் பற்றிப் புகழ்ந்து கூறியுள்ளார்கள் என்பதனால் இவரது, பக்தி பெருமை முதலியன நன்கு விளங்கும். திருப்புகழ்தோறும் மகாவிஷ்ணுவைச் சிறப்பித்துப் பாடி. அன்னோனுக்கு மருகனே எனக் கூறியிருத்தலாலும், 'திருவரங்கம் பெரிய கோயில்' 'பெரியபெருமாள்' என்று வழங்கும் வைஷ்ணவ சாம்பிரதாயத்தை யொட்டி 'உரகபடமேலிருந்த பெரிய பெருமாளரங்கர்' என்பன போன்ற இடங்களில் பாடி யிருத்தலாலும் சுவாமிகளுக்கு பிறமதத்வேஷம் என்பதே கிடையாதென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது.

## 21. சுவாமிகள் சாயுச்சிய பதவி யடைந்தது

சுவாமிகள் இறுதியாகப் பாடிய கந்தரநுபூதியில், "முருகன் சரணம் சூடும்படி தந்தது," "சும்மா இரு சொல்லற", "உபதேசம் உணர்த்தியவா", "பேசா அநுபூதி பிறந்தது" எனவருந் திருவாக்குகளே முருகப் பெருமான் அவருக்கு அப்போது திருவடி தீக்ஷைதாராது மௌனோபதேசம் செய்தருளியதை மெய்ப்பிக்கின்றன. அவர் அது முதல் மௌனமாய்ச் சின்னாளிருந்து ஆனி மாதம் மூல நட்சத்திரத்தில் சாயுச்சிய பதவி யடைந்தார். சுபம்!

### திரு நட்சத்திரம்

ஆனிமதி மூலம் அருணகிரி நாதன்
வானிலவு தேவர் வலஞ்செய்ய—மேனிலவு
அத்துவித முத்தி அடைந்தான் முருகனடி
ஒத்துமன மொத்தே யுவந்து.

---

## பிழைதிருத்தம்

சென்ற மாத மித்திரனில் ராப்பர் இரண்டாம் பக்கத்தில் சங்கக் கட்டண வரவு என்பதன் கீழ் இராமநாதபுரம் ஜில்லா இரகுநாதபுரம் சங்கக்கட்டணம் என்பதை அளகன்குளம் சங்கக்கட்டணம் எனத்திருத்தி வாசித்துக் கொள்ளுமாறு வாசகர்களை வேண்டுகிறோம். (ப-ர்)

# இந்திய சரித்திரக் கதைகள்

## பிரயாணியின் கனவு

[திரு. ஈ. வே. சோம், கோவை]

(சென்ற இதழ், 148-ம் பக்கத் தொடர்ச்சி)

அலப்டகீன் ராஜன் தன்னருமைக் குமரியை அறிவுள்ளவ ளாக்கிவிட்டு மண விஷயத்தில் அவள் இஷ்டப்படி விட்டுவிட்டான்.

இதுகாலை பிரபுக்களின் தலைவனான அமீர் உல்-உம்ரா- (நமதுவீரன்) அவளது தந்தையின் அரண்மனையிலேயே வசித்து வந்ததால் ஜகிராவுக்கு அவனைப் பார்க்கும் சந்தர்ப்பங்கள் பல நேர்ந்தன. அடிக்கடி சம்பாஷித்தனர். அச்சம்பவங்கள் இருவருள்ளும் நன்மதிப்பையும், நேசத்தையும் உண்டாக்கின. அடிமையா யிருந்து சில நாட்களுக்குள் மேல் ஸ்தானத்திற்கு உயர்ந்த அவன், நேயத்திற்கு மேற்பட்ட ஒரு பாசம், முடிவாகக் காதல் அவளிடம் தனக்கேற்பட்டிருந்ததை உணரலானான். அவள் பெரிய பிரபுக்களையும் வெறுத்தவள் என்பதை அறிந்திருந்தும், அவள் தன்னைக் காதலிப்பது துர்லபம் என்று தோன்றியபோதிலும், தன் மனத்தகத்தில் பொங்கி எழும்பிய காதற் பெரும் வெள்ளத்திற்குப் பிரதி அவளையும் உணரும்படிச் செய்ய முடியும் என நம்பலானான்.

அவர்கள் அடிக்கடி சந்திக்காம லிருக்க முடியவில்லை. சந்தித்த போதெல்லாம் மனமொருமித்த அவர்கள் உள்ள நெகிழ்ச்சியைக் கண்களினால் தெரிவிக்காமலும், கனிந்த பார்வையாலும் பிரியமான வார்த்தைகளாலும் வெளிப் படுத்தாமலும் இருக்க முடியவில்லை. அவள் தன்னைக் காதலிக்கிறாள் என்று அவ்வீரன் நிச்சயிக்க முடிந்தது. அதைத் தெளிவுறத் தெரிந்துகொண்ட பின்னர், அவள் பால் தான் கொண்டிருந்த மட்டில்லாக் காதலை அவளுக்கு அறிவித்தான். முழு மனதுடன் தானும் அவனை நேசிப்பதாக அவள் பதிலளிக்கவே அவன் ஆனந்த சாகரத்தில் மூழ்கினவனானான்.

'சீமாட்டியே! நான் ஒருகால் அடிமையாயிருந்தவனே யாயினும், ராஜ பரம்பரையில் உதித்தவனாகையால் என் சம்பந்தம் உனது வம்சத்தின் கௌரவத்தைக் குறைத்திடாது. மேலும் நான் கீழ்ப்பட்ட ஸ்திதியி லிருந்து முழு சுவாதந்தர்ய நிலைக்கு என் பிரயாசையால் வந்தவனாதலால் என் சம்பந்தம் இழிவு தராது' எனக்கூறினான்.

'பிரபுவே! மனிதராய்ப் பிறந்தோர் தத்தம் வாழ்நாட்துணையாகக் கொள்பவரைத் தேர்ந்து எடுப்பதில் கவனிக்க வேண்டியது, பிறப்பு நலமல்ல; அன்றி அவர்க்கடங்காத சமூகநிலை கட்டுப்பாடுகளால் ராஜனாகவாவது, பிச்சைக்காரனாகவாவது இருப்பதையல்ல. ஆனால், கூர்ந்து கவனிக்க வேண்டியவை அவன் குணகுணங்களேயாகும். ஒரு செல்வவந்தனை அடைதல் சுலபமே. மேலும், ராஜசபையில் உயர்குலமும், சீரும் சிறப்பும் பெற்றிருப்போரை மணத்தல் அரிதன்று. எனக்கு அவ்விரு தகைமையினரையும் அடைதல் ஒரு சிறிதுங் கடினமல்ல. ஆனால், 'குணமெனுங் குன்றேறி நின்றான் ஒருவனைத் தேர்ந்தெடுத்தலே மிகவும் கடினமானதும் வாழ்க்கையிலேயே அரியது மாகும்' என்று ஜகிராபாய் நவின்றாள்.

'சீமாட்டியே! உனது தந்தையின் கொலுவில் வீற்றிருக்கும் புகழ்பெற்ற சீமான்களினும் யான் அதிகமாகக் குணநலம் பெற்றேனல்லேன். ஆனால் அவர்களுக்கும் எனக்கும் ஒரே வேற்றுமை யுண்டு. அஃதாவது, அவர்கள் பிறப்புரிமையால் கைப்பாடு சிறிதுமின்றி உயர்ந்த அந்தஸ்தும் செல்வப் பெருக்கும் பெற்றவர்கள். யானோ ராஜவம்சத்தில் பிறந்தவனாயினும், தற்போதைய உயர்பதவி, செல்வாக்கு முதலிய அனைத்தையும் அரும்பாடுபட்டுப் பெற்றவன்' என மொழிந்தான்.

'தங்களோடு சந்தோஷமோ, துக்கமோ அனுபவிக்க யான்மனம் ஒருமித்து இருக்க, எனது அறிவிற்சிறந்து அன்பு நிறைந்த தந்தையார் சம்மதித்தால் நான் தயார் தான். எனது அன்பரே! என்பிரிய தந்தை

யார் நான் விரும்பும் வரனைத் தெரிந்து வரித்துக்கொள்ள எனக்கு அறிவும், சுதந்திரமும் அவர் விரிந்த மனப்போக்கினாலும், ஆழ்ந்த அனுபவத்தினாலும் அளித்துள்ளார். அறிவையெனக்கு அளித்த அவர், நான் அதை உபயோகப்படுத்தாமல் தனது அறிவின் அல்லது இஷ்டத்தின் போக்கில் நான் நடக்கும்படி மூடமதி படைத்த பெற்றோர் பலரைப் போன்று என்னை வற்புறுத்தவில்லை. ஆயினும் அறிவும் அனுபவமும் நிறைந்த அவரது ஆலோசனையை, என் பிற்கால வாழ்வின் பெருக்கத்தைக் கோருபவரவர் ஆதலால், கேட்க விரும்புகிறேன். ஒரு மகன் அல்லது மகள் தமது தகப்பனாரிடம் செலுத்த வேண்டிய வழிபாடுகளுக்கும் மேம்பட்டதாக அன்பினாலும், பாசத்தினாலும் கட்டுண்ட ஸதிபதிகளுக்குள் உள்ள கடமைகள் பல. ஆயினும் தந்தைபாற் செலுத்துங் கடமைகளில் ஒருவர் தவறுவாரானால், மற்றொன்றை இனிது செய்து முடிப்பது மிகவும் துர்லபமே' என்று உருக்கமாக ஜகிராதேவி புகன்றாள்.

'அங்ஙனமாயின், யான் அரசனைக்கண்டு நம் பரஸ்பர ஆசையைத் தெரிவிக்கின்றேன். அவர் என்னை நன்கு மதிக்கிறார் என யான் நம்பக் காரணமுளது. ஆனால், அவருக்கு என்மேலுள்ள விசுவாசமும், அவருக்குள்ள குலப்பெருமையும் ஒன்றுடன் ஒன்று எவ்வளவு வரை எதிர்நிற்கும் என்பதை முன்னர் அறிந்து கொள்ளுகிறேன்' என்றான்.

அதே நாள் அமீர்-உல்-உம்ரா, அலப்டுகீன் நவாபின் பேட்டியை அபேக்ஷித்து, அவரிடம் தனிமையாக, தான் ஜகிராதேவியிடம் கொண்டுள்ள மட்டற்ற ஆசையைத் தெரிவித்தான். அவ்வரசனும் ஆச்சரியம் ஒரு சிறிதும் காட்டாமல், 'ஜகிராபாய் எனது ஒரே செல்வக்குழந்தை; மலர்ந்த புஷ்பம் போன்ற அவள், 16 வருடகாலமாக ஆநந்தமும் அன்பும் பரிசுத்தமும் என் மனத்தகத்தே நிரப்பி, என் வாழ்வையே இன்பமயமாக்கி வருகிறாள் என்பதை நீ நன்கு அறிவாய் ஆதலால், அவளைச் சந்தோஷப்படுத்துவது எனது மனப்பூர்வமான பிரியமட்டுமன்றி, எனது நீராக்கடமையும் ஆகின்றது. இதற்கு முன்பே விசாலமான நாட்டையும், பேரதிகாரத்தையும் உடைய மன்னர் நால்வர் அவளை மணமுடிக்க முன் வந்தனர். அவள் அவர்களை அலட்சியம் செய்துவிட்டாள். எனது சமஸ்தானப் பிரமுகர்களில் பலரும் அவளை விவாகம் செய்து கொள்ள பெரிதும் விழைந்தனர். ஆனால் அவர்களும் மறுக்கப்பட்டனர். ஆதலால் இந்தப் பெரும் பொறுப்புள்ளதும், அவள் ஆயுட்காலம் முழுவதும் பாதிக்கக் கூடியதுமான இம் முக்கிய காரியத்தில் அவள் எண்ணத்தைக் கலைக்கவோ, கட்டுப்படுத்தவோ நான் முன்வரமாட்டேன். ஆதலால், என் சம்மதத்தைக் கோருமுன்னரே, அவள் சம்மதத்தைப் பெற்று வருவாயாக' என்று முடித்தார்.

இதை ஆநந்தப் பெருக்குடன் செவிமடுத்த வீரதளபதி, 'நான் என் விருப்பத்தைத் தங்கள் குமரியிடம் குறிப்பிட, அந்நங்கை நல்லாள், பெருமனதுடன் எளியேனாகிய எனது அன்பை ஏற்றுக்கொண்டனள். ஆனால் தங்களது தீர்மானத்தை எதிர் நோக்கி யுள்ளாள். எங்கள் கூட்டுறவை மறுப்பீரேல், என்கதி அதோகதிதான். அதை அநுமதித்து ஆதரிப்பீரேயானால் என் பூரண ஆனந்த வாழ்வு நிச்சயிக்கப்பட்டுவிடும்' எனக்கிளந்தான்.

'அவனுடைய சம்மதம் உண்டானால் என் சம்மதத்திற்குத் தாமதமும் தடையுமில்லை. எல்லாம்வல்ல கருணையங்கடலின் ஆசீர்வாதமும், அதற்கு மேலாக உங்களிருவருடைய சன்மார்க்க ஒழுக்க பலமும் உங்கள் கூட்டுறவைப் பரிமளிக்கச் செய்யட்டும். என் புத்திரி தனது அன்பை ஒரு தகுதியுடைய மனிதனிடம் செலுத்தினாளென அறிய நான் மிகவும் திருப்தி யடைகின்றேன்' என்றிசைத்தான் அலப்டுகீன்.

திருமண மகோற்சவம் உடனே சில நாட்களில் வெகு விமரிசையாகவும், படாடோபமாகவும் நடைபெற்றது. மறுதளிக்கப்பட்ட சில பிரபுக்கள் மணமகனிடம் பொறாமை கொண்டாரேனும் அத்திருமணம் கொராஸ்ஸன் நாட்டினருக்கே ஒரு பேருவகையளிக்கும் சம்பவமா யிருந்தது.

இச்சந்தோட சம்பவத்திற்குப் பிறகு டிரேன் ஸேக்ஸோனியா நாட்டை ஆண்ட அப்துல் மல்லிக் சாமனி என்பவன் இறக்கவே, அந்நாட்டுப் பிரபுக்கள், தங்கள் நாட்டிற்கு அடுத்தபடியாக நியமிக்கவேண்டிய அரசனைப்பற்றித் தீர்மானிக்க அலப்டுகீன் இராஜனிடம் தூதுக்கூட்டம் ஒன்றை அனுப்பினார்கள். சாமினி இராஜ வமிசம் மிகுந்த பாக்கிரமமுள்ளது. ஜனக்கட்டும் நிறைந்தது. அதன் அதிகாரம் காவருஸம், மார்வர்-உல்-நேஹறு, ஜோர்ஜன், கொராஸ்ஸன், சீவஸ்டான், கிஜ்னி முதலான நாடுகளிலும் பரவியிருந்தது. அந்த ராஜாக்கள் போகராவில் ராஜாங்கம் நடத்தி வந்தனர். பொகராவிலிருந்து அலப்டுகீனிடம் பிரபுக்களின் தூதுக்கூட்டம் வந்ததும், அலப்டுகீன் அனுபவசாலியாதலால் சிறிதும் தாமதியாமல் அப்போது பால்யனா யிருந்த மன்சூர் என்னும் ராஜகுமாரன் முடி சூடக்கூடாதெனவும், அவன் சிற்றப்பன் அவசரத்திற்கு அப்போதைக்கு துரைத்தன நிர்வாகத்தைக் கவனித்து வரல் வேண்டும் எனவும் தீர்மானித்தான்.



ஆனால் இத்தீர்மானம் தலை நகரம் போய்ச் சேருமுன்னரே, மற்றொரு கட்சியார் மன்சூர் ராஜகுமாரனை சிங்காதனம் ஏற்றி விட்டனர். முடிசூடின இளவரசன், அலப்டுகீனைத் தனது சபைக்கு வரும்படி உத்தரவும் இட்டான். இதில் ஏதோ சூது இருக்கும் என்று தெரிந்து அலப்டுகீன் பொகராவுக்குப் போகாமல் சாக்குப் போக்குச் சொல்லிவிட்டான். பின்னர் ஹிஜிரா வருடம் 350ல் அல்லது கிறிஸ்தவ காலம் கி. பி. 962ல் அவ்வரசனுக்கு எதிரிடையாக ஒரு படையைத் திரட்டிக்கொண்டு கிஜ்னி நாட்டை அடக்கி, அலப்டுகீன் தனது மருமகனுடைய பெரும் சாமர்த்தியத்தால் அங்கு கஜ்னி ராஜ்யம் என்று தனி அரசு ஒன்றை ஸ்தாபித்தான்.

மன்சூர் ராஜன் இந்த கலகத்தைக் கேட்டு கொராஸ்ஸன் நாட்டின் ஆட்சியைத் தன் கொலுவிலிருந்த பிரபுக்களில் ஒருவனுக்குத் தந்து, அலப்டுகீனைத் தாக்கிச் சிறைபிடிக்க சைனியங்களையும் அனுப்பினான். ஆனால் அச்சேனைகள் திரும்பத் திரும்ப, ஜகிராதேவியின் நாயகனால் சின்னாபின்னமாக முறியடிக்கப்பட்டன. இச்சம்பவங்கள், அவனை சேனாவீரர்களால் முற்றிலும் பின் பற்றத் தக்கவனாக்கின. அவன் போர்க்களங்களி லெல்லாம் ஜயக்கொடி நாட்டினான். மன்சூர் ராஜனுடைய அதிகாரம் சுருங்கலாயிற்று. அவன் தன் நாடு தனக்குத் தக்குமா என்று கலங்கலுற்றான்.

15-வருட காலம் அலப்டுகீன் சுவதந்திரமாக விருந்தான். அடிக்கடி இந்தியரோடும் சண்டையிட்டுவந்தான். அதிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவன் சேனைகள் ஜயத்தையே அடைந்தன. அவன் விருத்தாப்பியம் வரை வாழ்ந்திருந்து, ஹிஜிரா 365(கி. பி. 975)-ல், குடிகள் யாவரும் வருந்த மரணமடைந்தான்.

அலப்டுகீனுக்குப் பிறகு அவன் குமாரன் அபூஜஸரக் முடிசூடினான். உடனே தனது மைத்துனனான அமீர்-உல்-உம்ரா-(நமது பிரயாணி) வுடன் பொகராவிற்குச் சென்றான். மன்சூர் நவாபும் மரியாதையுடன் வரவேற்று கஜ்னி ராஜ்யத்திற்கு அதிபதியாக அபூஜஸாக்கையும், அவனுக்குத் துணையதிபதியாகவும் அவனுக்கேதாவது நேரிட்டால் வாரிசாகவும் சேனாதிபதியாகிய நம் வீரனையும் நியமித்தான்.

இச்சம்பவத்திற்குப் பின் அபூஜஸாக் வெகு நாள் வாழவில்லை. அவனிறந்ததும் ஜகிரா தம்பதிகள், பிரபுக்கள் பிரதானிகள் குடிமக்கள் முதலிய யாவராலும் ஏகமனதாக ராஜ்யாதிபதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனவே, நம்பிரயாணி கஜ்னிக்கு அரசனானான்.

இங்ஙனம் பிரயாணியின் கனவு பலித்தது அவனது இரக்க குணமும், சுதந்திரத்தில் விடாப்பற்றும், தூய சன்மார்க்க ஒழுக்கமும், தளராத விடா முயற்சியும், பொது நல சேவையுமாகிய நற்குணங்களினாலேயே யாகும்.

இவன்தான் மிகப் பெயர்பெற்ற ஸபுக்டுகீன். மேலும் இந்திய சரித்திரத்தில் மிகப் பிரஸித்தியானவனும், இந்தியாவில் முதன் முதலாக ஜயக்கொடி நாட்டின மகம்மதிய ராஜனுமான பெரும் புகழ்பெற்ற கஜ்னிமாஹ்மூத் என்பவனுடைய பிதா இந்த ஸபுக்டுகீனே யாகும்.

நீங்கள் சென்னைக்கு வர நேர்ந்தால்
செங்குந்தர் விடுதிக்கு விஜயம் செய்யுங்கள்

## நமது அதிர்வெடி

எம். எஸ். எம். ரயில்வே கம்பெனிக்கு சென்ற வருடத்தில் 19 லட்சம் நஷ்டம்.

ரயில்வே ரிப்போர்ட்டு.

எஸ். ஐ. ஆர். எப்பொழுதும் லாபத்திலேயே வேலை செய்வதின் மர்மம் இப்போதாவது தெரிகிறதா? முக்கியமான ஸ்டேஷன்களிலெல்லாம் பெரிய ஆலயங்கள் அமைத்து, தடபுடலாகத் திருவிழா விளம்பரம் செய்யுமாறு எம். எஸ். எம். கம்பெனிக்கு நாம் யோசனை கூறுகிறோம்.

* * *

அடுத்த வருஷம் ஆகஸ்டு மாதம் 3-ந்தேதி வரை நான் ஹரிஜன சேவையில் ஈடுபடுவதெனத் தீர்மானித்து விட்டேன்.

மகாத்மா காந்தி.

டிஸம்பர் மாதம் 3-ந் தேதியை 1934-ம் வருட ஆகஸ்டு மாதம் 3-ந் தேதியாக காலண்டர்களில் மாற்றிக்கொள்ள வேண்டுமென வைதீக அங்கத்தினர்கள் ஒரு சட்டம் நிறைவேற்ற முயற்சிப்பதாகக் கேள்வி.

* * *

உண்மை உழைப்பாலும் நாணத்தாலுமே ஜப்பானின் வெளிநாட்டு வியாபாரம் இவ்வளவு தூரம் முன்னேற்ற மடைந்திருக்கிறது.

ஜப்பான் கோஷ்டித் தலைவர்.

இவ்விரண்டு மில்லாமையே இந்தியாவில் பிரிட்டிஷ் வியாபாரக் குறைவுக்குக் காரணமென எவரும் நிச்சயித்துவிட மாட்டார்களென நினைக்கிறோம்.

* * *

புதிய சீர்திருத்தப்படி வரப்போகும் தேர்தலில் தொழிலாளர்களுக்கு 6 ஸ்தானங்கள் கிடைக்கப்போவதால் அதைக் கைப்பற்றுவதற்கென்றே அநேகர் இப்போது தொழிலாளர் பிரதிநிதிகளாகக் கிளம்புவார்கள்.

எஸ். ஆர். வரதராஜுலு.

பிரதிநிதிகளாகக் கிளம்பாமல் தலைவர்களாகவே தோன்ற வேண்டுமென அநேகர் யோசித்து வருகிறார்களாம்.

* * *

தஞ்சைக்கு சமீபமாயுள்ள கள்ளப்பிரம்பூர் கிராமத்தில் நடந்த அடிதடி கலக சம்பந்தமாக ஜில்லா போர்டு மெம்பர் ஸ்ரீ சண்முகம் கைதி செய்யப்பட்டார்.

பத்திரிகைச் செய்தி.

சாந்த மூர்த்தியா யிருந்தவர் இந்த வேலையில் எப்படி இறங்கினாரென அநேகர் ஆச்சரியப்படுகிறார்களாம். அது, ஜில்லா போர்டில் கால் வைத்ததின் பலனாக இருக்கலாமெனச் சிலர் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

* * *

தீண்டாமை அடியோடு ஒழிந்தாலன்றி ஹிந்து மதம் இருக்க முடியாது.

காந்தி மகான்.

தீண்டாமை நீக்கப்பட்டால் ஹிந்து மதமே உயிரற்றதாகிவிடும்.

சிருங்கேரி மடாதிபதி.

இருவரும் பொது மக்களைப் பரீட்சிக்கிறார்கள். இதில் தவறிவிடப் போகிறீர்கள்.

* * *

தீபாவளிக்கு எல்லோரும் வாங்குவது புலிமார்க்கு பீர்.

ஓர் விளம்பரம்.

அந்தக் காலத்தில் வாமனாவதாரமாக வந்த மகாவிஷ்ணுவும், நரகாசுரனும் ஒருவேளை இதைத்தான் அருந்தி யிருக்கவேண்டுமெனச் சிலர் ஆராய்ச்சியில் கண்டுபிடித் துள்ளார்களாம்.

* * *

பிரிட்டிஷார் கையெழுத்திட்ட எந்த ஒரு ஒப்பந்தத்தையாவது அவர்கள் மீறமாட்டார்கள்.

பால்டுவின்.

இந்தியா ஒப்பந்தங்கள் நீங்கலாக என்பது அவர் கருத்தா யிருக்கலாம்.

---

## செங்குந்த யாத்திரைவாசி

### இப்போது காணவில்லையே.

எனதன்பிற்குரிய சகோதரர்களே! கோடிலிங்க முதலியார் அவர்கள் கண்ட கனவைத்தான் இன்னும் சொல்லிக்கொண்டு வருகிறேன். சீக்கிரம் அது முடிவெய்தும். பிறகு என் யாத்திரையில் கண்டவற்றைச் சொல்லுவேன். இடையே யான் அவசியம் சொல்ல வேண்டிய இரண்டொன்றுக்கு இடந்தருமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

யாத்திரை செய்யுங்கால் யான் சந்தித்த சில முக்கியஸ்தர்களை இப்போது காண்கிலேன். இனியும் காணமுடியாது. அதனால் யானடைந்துள்ள ஆருத்துயரத்தை நமது மித்திரன் மூலம் சகோதரர் அனைவருக்கும் தெரிவித்து ஒருவாறு ஆற்றிக்கொள்ளலாம் என்று துணிந்து தங்களை உத்தரவு கேட்கிறேன்.

ஒருவனுக்குச் சந்தோஷ முண்டானபோது அவன் நண்பர், உறவினர்களோடு அதைச் சொல்லுவதால் அது பன்மடங்காய்ப் பெருகுமென்றும், துன்ப முண்டானபோது பந்து மித்திரர்களோடு அதைச் சொல்லிக்கொள்வதால் அது பன்மடங்கு குறையுமென்றும் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன் ஆகையால்தான் தற்போது எனக்குண்டாயிருக்கும் மனத்துயரத்தை உங்களிடம் கொட்டி ஆற்றிற்கொள்ளக் கருதினேன். யாத்திரைவாசியின் இவ்வேண்டுகோளை மறுக்க மாட்டீர்கள் என்ற எண்ணத்தால் கீழ் வருமாறு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முதலாவது, நமது திரு. வீ. இரத்தின முதலியார் (B.A.,B.L., Advocate) அவர்கள் அருமந்த மனைவியார் சில மாதங்களுக்கு முன் இம்மண்ணுலக வாழ்க்கையை நீத்து விண்ணுலகெய்தினர் என்பதே யாம். நமது அட்வொகேட் முதலியார் அவர்களைப்பற்றி யான் ஒன்றுங்கூறவில்லை. காலஞ்சென்ற அவ்வம்மையாரின் அரும்பெருங் குணங்களை எண்ணெடுத்துக் கூறுமற் செல்ல முடியவில்லை. அன்பும், சாந்தமும் அவரிடத்துக் குடிகொண்டிருந்தன. விருந்தோம்பலில் அவ்வம்மையாருக் கிணையானவர் கிடைப்பதரிது. சுருங்கக்கூறின் இல்வாழ்க்கைக்குரிய எல்லா உத்தம குணங்களும் அவருக்கு அமைந்திருந்தன.

இரண்டாவது, வடஆற்காடு ஜில்லா சோளிங்கபுரம் பிரபல வியாபாரி பட்டணம் முனிசாமி முதலியார் சில மாதங்களுக்கு முன் இறைவன் பதமெய்தினார். இப்பெரியார் ஒரு சிறந்த குலாபிமானியாவர். இவரையும் என் யாத்திரையினிடையே கண்டுள்ளேன். சென்ற சட்டசபைத் தேர்தல் சமயத்தில் நம்மவரில் ஒருவரைச் சென்னை சட்டசபைப் பிரதிநிதியாக நியமனம் செய்ய வேண்டுமென்று நமது தலைச்சங்கமும் கிளைச்சங்கங்களும் முயன்றபோது, இம்முதலியார் ஒரு மனு தயார் செய்து, சுமார் 500 கையொப்பங்கள் வரையில் வாங்கி சென்னை அரசாங்கத்தாருக்கு அனுப்பி யுள்ளார். இஃதொன்றே இவரது குலாபிமானத்தை நன்கு விளக்கவல்ல சான்றாகும். செங்குந்த உலகம் இத்தகையாரை இழக்க நேர்ந்தமைக்கு வருந்துகிறேன்.

மூன்றாவதாக, நமதுகுல இளஞ்சிங்கங்களுள் ஒருவரும் கூர்ந்த அறிவாளியுமான திருநெல்வேலி ஜில்லா வீரவநல்லூர் திரு. V. S. சங்கர சுப்பிரமணிய முதலியார் (B.A.,B.L.,) அவர்கள் மனைவியார் பல நாட்களாக தேக நலிவோடிருந்து சில நாட்களுக்கு முன் சிவபத மடைந்தனர் என்பதைக் கேட்டு மிகவும் வருந்துகிறேன். திரு. முதலியார் அவர்கள், சென்னை திருமயிலாப்பூரில் கூடிய நமது மூன்றாவது வாலிப மகாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் என்பதை யான் நண்பர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியதில்லையென்றே எண்ணுகிறேன். பல நற்குணங்களும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற திரு. முதலியார் அவர்களுக்கு நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வோமாக.

இனி கோடிலிங்க முதலியார் கனவைச் சொல்லுகிறேன்.

### வாரணப் படலம்

வீரவாகு:—விஷயம் விளங்கிற்று. நாரதமுனிவருக்கும், தருமராஜனுக்கும் நான் நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இவ்வளவுதானே விஷயம். இனி தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டியதுதான்.

தருமராஜன்:—அபர அறுமுகப் பெருமானே! ஒரேசொல், மன்னிக்கவேணும். இவ்வளவுதானே என்கிறீர்களே. அவ்வாறு எண்ண வேண்டாம். லக்ஷத்தில் ஒரு பங்குகூட இன்னும் விசாரணைக்குக் கொண்டு வரப்பட வில்லையே! ஆயிரக்கணக்கான செங்குந்த சீலர்கள் கோஷ்டிகளும், எண்ணிறந்த வண்டிகளில் அவர்கள் சம்பந்தப்பட்ட ரிகார்டுகளும் இதோ வெளியே காத்துக்கொண்டிருக்கின்றனவே. க்ஷணநேரம் வெளியே வந்து பார்வை யிடும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். உத்தரவுப்படி நடந்துகொள்ள சித்தமாயிருக்கிறேன்.

வீரவாகு:—தருமராஜனே! நான் இல்லையென்று சொல்லவில்லை. விஷயம் நன்றாய்

விளங்கி விட்டது என்பதே என் கருத்து. நாரதர் கூற்று முழுதும் உண்மையே யென்றும், அவர் பரோபகார சிந்தை மிகவும் பாராட்டத் தக்கதென்றும், அவர்மீது நான் முதலில் கோபங் கொண்டது சரியல்ல வென்றும், மனப்பூர்வமாய்த் தெரிந்து கொண்டேன். இவ்வளவு போதாதா? இன்னுமாவேண்டும். அழகாகத் தானிருக்கிறது.

நாரதர்:—சீக்கிரமே யோசிப்போம் என்றால் எப்போது?

வீரவாகு:—முனிவரே! அவசரப்படுவானேன். பொறுப்போம்.

நாரதர்:—'பின்னை யென்பதும் பேசாதிருப்பதும் இல்லை யென்பதற் கடையாளம்' என்றல்லவோ அறவோர் கூறியுள்ளார்.

வீரவாகு:—முனிபுங்கவரே! அப்படியல்ல; சீக்கிரத்திலேயே கவனிப்போம்.

பிரமன்:—நாரதரே! என்ன நீர்கூட இப்படி அவசரப்படுகிறீர்? மறந்தா போய்விடுவார்கள்?

நாரதர்:—என்ன நீர்கூட இப்படிப் பேசுகிறீர். காற்றுள்ள போதல்லவோ தூற்றிக் கொள்ள வேண்டும்? சமயம் பின்னால் வாய்க்குமோ? அடிமேல் அடி யடித்தால்தானே அம்மியும் நகரும். இதென்ன நீரும் இப்படிப் பேசுகிறீர்? இதுதான் நல்ல சமயம். ஆஹா! ஒரு முக்கியமான விஷயம். சித்திரகுப்தன் சொல்ல மறந்தே போய்விட்டான். அதை நானே இப்போது சொல்லி விடுகிறேன். இதோ நிற்கும் பல்லூர்ச் செங்குந்தர்கள் இயற்றிய கொலை வாதங்களைப்பற்றி நாம் சாதாரக் கேட்டோம். அது சம்பந்தமாகத் தான் நானும் சொல்லப் போகிறேன். ஐந்தே நிமிஷம் எனக்குக் கொடுத்தால் போதும். கூடிய வரையில் சுருக்கமாகவும், விளக்கமாகவும், வேகமாகவும் சொல்லி முடித்துவிடுகிறேன். இது வெளி வராவிட்டால் இதுவரை நடந்த விசாரணை முற்றும் பயனற்றதாகவே முடியும். ஆஹா! சமயத்தில் சித்திரகுப்தனும் மறந்தான்; நானும் மறந்துவிட்டேன். பார்த்தீர்களா, என்னதான் கற்றாலும் கேட்டாலும்......

வீரவாகு:—(விஷயம் என்னவோ, உடனே கேட்கவேண்டும் என்ற பேரவாவினால்) நேரமானாலும் ஆகிறது, சொல்லும். அவசியம் கவனித்துக் கேட்கிறேன். நீட்ட வேண்டாம். சீக்கிரம் ஆகட்டும்.

நாரதன்:—இதோ சொல்கிறேன். உத்தரவைத்தான் எதிர்பார்த்திருந்தேன்.

நாரதர் சொற்பெருக்கின் சாரம் :

குந்தர்குல முதல்வர்களாகிய நவவீர சிங்கங்களே! லக்ஷம் வீரர்களே! வடிவேலன் கொடியிற் றிகழும் வயப்பெரும் வாரணத்தரசே! மேலவர்க்கும் மேலவன் இவரும் மேன்மை தங்கிய மறியண்ணலே! வாய்ப்பறையாகவும், நாக்கடிப்பாகவும் யான் சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின். இப்பரம்பொருளின் சந்நிதியில் விசாரணை முழுதும் நேரே கேட்டீர்கள். இதனால் பூலோகத்தில் சூராதிகள் செய்துவந்த அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலைநாட்டும்பொருட்டே தோன்றிய நவவீரர் பரம்பரையினரான செங்குந்தர்கள் தற்போது தர்மத்தைத் தடிந்து அதர்மத்தை நிலைநிறுத்துவதற்கு முக்கிய காரணகர்த்தர்களா யிருந்து வருகிறார்கள் என்பதை நன்குணர்ந்தீர்கள்.

அந்தோ பாவம்! பூலோகத்தில் பல்வகை உயிர்களையும் ஹிம்சித்து வந்த நரகாசுரன் சம்மரிக்கப்பட்ட நாளாகிய தீபாவளி தினத்தை ஒரு புனித நாளாகக் கொண்டாடி, அவன் செய்த கொடுமையா லன்றோ அன்று அவன் அவ்வாறு அழிந்தான் என்பதை யுன்னி அன்றைக்காவது ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கொண்டொழுகாமல் பல்கோடி ஜனங்கள் அன்று நரகாசுரர்களாகி உயிர்களை வதைக்கிறார்கள். இதை யன்றோ இவர்கள் கொடுஞ்செயல் ஒத்திருக்கிறது. வேலி பயிரை மேய்கிறது என்பதற்கு வேறு உதாரணமும் வேண்டுமோ? அதர்மிகளாகிய ஒன்னார் குருதியிற் றோய்ந்து சிவந்த தெய்வீக குந்தத்தை, வீர செங்குந்தத்தை தற்போது நிகரற்ற, வாயற்ற உயிர்களின் குருதியில் தோய்த்தெடுக்கிறார்களே! (மிகவும் கோழைத்தனம். கேளுங்கள்! கேளுங்கள்!) இது என்ன அநியாயம்! கோபுரம் குப்பையாயிற்றே! பிறருக்கும் தீமை விளைவித்துத் தங்களுக்கும் நரக தண்டனையைத் தேடிக் கொள்ளுகிறார்களே! அம்மட்டோ! சுத்த வீரர்களும், தரும சொரூபிகளும், சிவகுமாரர்களுமாகிய தங்கள் மூன்னோர்களின் வீரத்தையும், கீர்த்தியையும், மேன்மையையும் நாசமாக்குகிறார்களே! குற்றமற்ற, வாயற்ற, காப்பற்ற உயிர்களின் சாபனைதான் இவர்களைச் சும்மா விடுமா? தன் அரிய குழந்தைகளாகிய பிராணிகளைத் தன் எதிரில் கொலை செய்வதைக் கண்ட தெய்வத்தின் கோபந்தான் இவர்களைச் சும்மா விடுமா? இவர்கள் கொடுஞ் செயலைக் கண்டு சகிக்கமாட்டாது பரிதபிக்கும் ஜீவகாருண்ய சீலர்களின் கடுஞ்சொற்கள்தான் இவர்களை வாளா விடுமா? குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தற்கரிதன்றோ?

> "கொல்வான் புலாலை மறுக்கானை
> (நினைத்த மாத்திரத்தில்) மெய்கொந்து
> எல்லா உயிரும் அழும்" அன்றோ!

அலை யழுத கண்ணீர் அன்னார் வழிவழி யிர்வதோர் வாளாகாதோ? ஓர்வாளா? இல்லை; பலவாட்களாகு மன்றோ? அலை யன்றோ இவர்களிடையே கக்ஷி, வீண் வழக்கு, தொழிற்கேடு, வறுமை முதலிய பல்லுருக்கொண்டு இவர்களைச் சின்னாபின்னப் படுத்தி நாசமாக்குகின்றன. தெய்வ சந்நிதியில் அளவற்ற உயிர்களைக் கொலை செய்து மகிழும் இவர்களுக்கு உண்மையிலேயே தெய்வ கடாக்ஷ மிருக்குமாயின் கேடிலா[illegible]டிருக்க மாட்டார்களா! [illegible] அதன் சுபாவத்தைத்தானே இவர்களிடை [illegible]



கிறோம். இதுவரை இதை யாராவது யோசித்துப் பார்த்தார்களா? இவர்கள் பிற்போக்கின் காரணத்தைக் கண்டுபிடிக்க முயன்றார்களா?

இத்தகைய விஷயங்களைக் கவனிக்கவேண்டியது நாட்டுக் கூட்டங்களி லன்றோ? இவற்றைப் பற்றி யோசிக்க அவர்களுக்கு நேரமேது! தாம் பூல சண்டைக்கும், கும்பிடு வழக்கிற்கும், நாட்டின் பெருமையை நாட்டுவதற்கும், எங்கள் ஊருக்கு முன்னே திரு. என் சேர்த்தெழுதவில்லை, எங்கள் ஊர்ப்பெயரை பின்னால் ஏன் சொன்னீர்கள் என்பவை போன்றவற்றைப்பற்றிப் பூசலிடுவதற்குமே காலம் போதவில்லையே! அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்! 'யானை வரும் பின்னே மணி யோசை வரும் முன்னே'.

இவை யனைத்தும் ஒருபுற மிருக்க, முக்கியமாய்ச் சொல்லவேண்டிய விஷயத்தைச் சொல்லுகிறேன். வாரணக்கோவும், மறியண்ணலும் நன்றாய்க் கவனித்துக் கேட்கவேண்டும். சிவராத்திரி புண்ணிய தினமாகிய இன்று யான் தென் தமிழ் நாட்டின் கண்ணுள்ள பல சிவதலங்களையும் தரிசித்துக்கொண்டு வந்தேன். வழியில் பல்லாயிரம் வாரணங்கள் (கோழிகள்) ஒரு பெருங் கூட்டம் கூடி பேசிக்கொண்டிருந்தன. மற்றோரிடத்தில் செம்மறியாடுகள் அவ்வாறே கூடி யோசித்துக் கொண்டிருந்தன. அக்கூட்டங்கள் கூடியதற்குக் காரணம் என்ன? எவ்விஷயத்தைப் பற்றி யோசிக்கின்றன என்று தெரிந்துகொள்ளவேண்டி அவ்விடங்களுக்குச் சென்றேன். ஆஹா! யான் இதுவரையில் காணாத காட்சி!! அளவிறந்த சேவல்களும், பெட்டைகளும், குஞ்சுகளும் அங்குக் குழுமி யிருந்தன. கூட்டம் நிசப்தமா யிருந்தது. ஆயினும் ஒவ்வொன்றின் உள்ளத்தின்கண்ணும் கோபமும், ஆத்திரமும் பொங்கி வழிந்துகொண் டிருந்தன. அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஒரு பெருங்கோழி எழுந்து நின்று 'கொக்கறுகோ' என்று மூன்று தடவை உரத்துக் கூவிற்று. மெதுவாகப் பேசிக்கொண்டிருந்த இரண்டொரு கோழிகளும் பேச்சை நிறுத்திக்கொண்டன. பின்னர் அக்கிராசன வாரணம் பின்வருமாறு தன் முன்னுரையைக் கூறிற்று.

சகோதர சகோதரிகளே! நம்முடைய வாழ்க்கை இப்போது மிகவும் ஆபத்தான நிலையிலிருக்கிறது. இதை நீங்களனைவரும் உணர்வீர்கள். 'அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்' என்ற பழமொழி நமது பகைவர்களாகிய மனிதர்களிடையே வழங்கி வருவதை நீங்கள் உணர்வீர்கள். நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், நம்முடைய பெண்டுகளையும் குஞ்சுகளையும் பாதுகாக்க வேண்டுமானால், நம்முடைய சுதந்தரத்தை நிலைநாட்ட வேண்டுமானால் நமக்குள் ஒற்றுமை உண்டாகவேண்டும். மனிதர்கள் தங்களுக்குள் பல காரணங்களால் ஒற்றுமை யின்றி பல ஜாதிகளாகவும், தேசத்தவராகவும், மதஸ்தர்களாகவும், பிரிந்திருந்தாலும் இரக்கமின்றி நம்மைக் கொலை செய்வதில் மாத்திரம் பெரும்பாலும் ஒற்றுமை யுடையவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் வெற்றி பெறுவதற்கு அதுவொரு காரணமாக யிருந்து வருகிறது. நெருக்கடியான சமயத்தில்தான் நமக்கு நல்லறிவு தோன்றி நமக்குள் ஒருவாறு ஒற்றுமை யுண்டாகி இன்று இங்கு குழுமியுள்ளோம். இனி நாம் ஜெயமடைவது திண்ணம். ('கொக்கறுகோ' என்ற பெருங் கூச்சல்) ஒற்றுமையுள்ள இடத்திலேதான் கடவுள் சகாயமுமிருக்கும். ஆகையால் வெற்றிக்கு முதற்காரணம் தேகபலமல்ல, ஆயுத பலமல்ல, துணை பலமுமல்ல, மனவலிவும் ஒற்றுமையுமேயாம். பிறயாவும் வெற்றிக்குத் துணை பலமேயாகும். நமக்குத் துணை ஆண்டவன் ஒருவனே (கொக்கறுகோ இல்லை; இல்லை; கொக்கறுகோ) நாம் அனைவரும் ஒருமனப்பட்டு ஒற்றுமையாயிருந்து நம் குறையை நிவர்த்திக்க முயல்வோமானால் ஆண்டவன் நமக்கு உடனிருந்து துணை புரிவார். ஆகையால் நாம் (வேண்டாம்; வேண்டாம்) கூட்டத்தில் பெருங் குழப்பம்—சிறிது நேரம் கழித்து தலைமை வாரணம் 'கொக்கறுகோ' என்று மும்முறை கத்தி கூட்டத்தில் அமைதியை உண்டாக்கிப் பேசத்தொடங்கிற்று. நீங்கள் படும் கஷ்டத்தா லுண்டான ஆத்திரத்தால் யோசிக்காது இவ்வாறு கூச்சலிடுகிறீர்கள்; கலையாதீர்கள், ஒற்றுமையை இழக்காதீர்கள், எதிரிகளுக்கு இடங்கொடுக்காதீர்கள்.

மத்தியில் ஒரு கோழி எழுந்து 'கொக்கறு— நீங்கள் சொல்லும் தெய்வம் நமது விரோதிகளுக்குத்தானே துணை யிருக்கிறது 'கொக்கறு— என்றது. அதைக்கேட்ட தலைமை வார— ஒற்றுமை யுடையவர்களுக்கே துணைபுரி— என்று நான் முன் சொன்னதை நீர் கவனிக்க வேண்டும் 'கொக்கறுகோ' என்று சமாதானம் கூறி கூட்டத்தை அடக்கி நம்மை நாம் காப்பாற்றிக் கொள்வதற்கான முறைகளைப்பற்றி நண்பர் பேசுவார், அனைவரும் அமைதியாகக் கேட்க வேண்டும் 'கொக்கறுகோ' என்று சொல்லி முடித்தது.

---

## தமிழ் 'வித்வான்' பட்டதாரிகள்

1. அ. முத்தைய முதலியார், சிதம்பரம்.
   (இவர் வித்யா விநோதர். வயது ஐம்பதுக்கு மேலாகியும் தாமாய்ப் படித்து வித்வான் பரீக்ஷைக்குச் சென்று வெற்றி பெற்றார்.
2. முருகேச முதலியார், மௌன சுவாமிகள் மடம், சிதம்பரம்.

# அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்!

## பேசும் இயந்திர மனிதன்

சிகாகோ நகரில் நடந்த 1உலகபொருட் காட்சிக்கு வந்திருந்த பல அபூர்வமான இயந்திரங்களில் பேசும் மனிதனும் ஒன்று. இது டெலிபோனில் பேசுகிறது. பிறர் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் அளிக்கிறது. சிகரெட் கொடுத்தால் அதைப் புகைத்து புகையை வெளியில் விடுகிறது. கண்களை சிமிட்டிக்கொண்டு பிறருடன் கை குலுக்குகிறது. பாடும்படி கேட்டால் பல சங்கீதங்களை அருமையாகப் பாடுகிறது. பொதுவாக மனிதர்களைப்போல் சகல காரியங்களும் செய்கிறது. ஆயினும், இது மின்சார ஒளிகளால் அமைக்கப்பட்ட ஒரு இயந்திரந்தான்

* * *

## ஒரே பொருளால் 3 உபயோகம்

புது மாதிரியான தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதைக் கொண்டு வெகு தூரத்திலுள்ள பொருளையும் நன்றாகக் காணக்கூடும். இதற்குள் பாட்டரி போட்டு 'டார்ச் லைட்'டாக உபயோகிக்கலாம். அன்றியும் அதன் முன் பக்கமுள்ள கண்ணாடியில் பஞ்சு, கயிறு, காகிதம் இவற்றை சூரிய ஒளியைக் கொண்டு பற்ற வைக்கவும் உபயோகப்படுகிறதாம்.

* * *

## மோட்டார் படகு

முற்றிலத்திலும் தரையிலும் ஓடக்கூடிய மோட்டார் படகு ஒன்றை ஸ்ரீ பி. டி. பார்னர் கட்டி முடித்திருக்கிறார். அது தரையில் மணிக்கு 45 கற்று வேகத்திலும், நீரில் 12 மைல் வேகத்திலும் ஓடுமாம்.

* * *

## சைகிலில் ரேடியோ

சைகிலில் போய்க்கொண்டிருக்கும் போதே ரேடியோ மூலமாக சங்கீதம் கேட்டுக்கொண்டே போகுமாறு அமெரிக்காவிலும், ஐரோப்பாவின் பல பாகங்களிலும் ரேடியோவை சைகிலில் அமைத்திருக்கிறார்களாம்.

* * *

## ஆடையிலும் சர்வாதிகாரம்

ஜர்மனியில் அனைவரும் ஒரே மாதிரியான உடை உடுக்கவேண்டுமென சான்சலர் ஹிட்லர் உத்தரவு பிறப்பித் திருக்கிறார். பகலிலும் இரவிலும், ஆண்களும் பெண்களும் தரிக்கக்கூடிய உடைகளின் நிறம் முதலியவற்றைக் காட்டுவதற்காக பெர்லினில் மாதிரி உடைகள் கடைசியாக வைக்கப்பட் டிருக்கிறதாம்.

## இதாலியின் விவாக மகோற்சவம்

இதாலியின் ஜனன விகிதம் மிகக் குறைந்துவிட்டதால் அக்டோபர் 30-ந் தேதி கவர்ன்மெண்டார் ஒரு பெரிய விவாக மகோற்சவம் நடத்தி ஏககாலத்தில் ரோமாபுரியில் 2000 திருமணங்கள் செய்து வைத்தனர். தம்பதிகளை தேவாலயத்தி லிருந்து கவர்ன்மெண்டு ஸ்தலத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் சென்று அவர்கள் ஒவ்வொருவருக்கும் தன் படமொன்றையும் 500 லயர்களையும் இதாலித்தலைவர் முஸோலினி சன்மானம் செய்தனராம்.

* * *

## 72 மணி நேரம் நீந்திய நிபுணர்

27-9-32-ல்ஸ்ரீமான் பி. கே. கோஷ் 72 மணி 18 நிமிஷ நேரம் ஜலத்தில் இடைவிடாமல் நீந்தி ஜலத்தில் அதிக நேரம் நீந்துவதில் முதன்மையானவர் என்ற பிரக்யாதி பெற்று விட்டார். அவருக்கு 7 தங்கப் பதக்கங்களும் ஒரு வெள்ளிப் பதக்கமும் தனிப்பட்டவர்களால் சன்மானம் செய்யப்பட்டது. வங்காளி கிளப் ஒரு தங்கப் பதக்கம் பரிசளித்தது.

* * *

## 1 லட்சம் வகை வண்ணாத்திப் பூச்சிகள்

ஸ்விட்சர்லந்து இயற்கை ஆராய்ச்சிக்காரரான ஸ்ரீ எம். புருஹ-ஓஸ் டாபர் 1 லட்சம் வகையான வண்ணாத்திப் பூச்சிகளை சேகரித்திருக்கிறாராம்

* * *

## அதிசய ஊற்று

ஜப்பானில் அதிசய நீர் ஊற்று ஒன்றிருக்கிறது. அதில் பலவித உலோகங்கள் கலந்து வருகிறது. அந்த ஊற்று ஜலம் நிரம்பிய குளத்தில் ஸ்நானம் செய்வதால் அநேக கடுமையான வியாதிகளெல்லாம் பறந்து போகின்றனவாம்.

* * *

## கண்ணாடிப் பாதை

ஜெக்கோஸ்லோவாகியாவில், மோட்டார் பந்தயம் ஓடுவதற்காக வழுக்காத கண்ணாடியால் பெரியசாலை ஒன்று அமைத்து வருகிறார்கள்.

* * *

## உலகத்தில் பெரிய குடும்பம்

சிரியாவில் ஹேஹு என்னும் கிராமத்தில் வசிக்கும் ஹாஜஅகமது என்பவர் குடும்பந்தான் உலகிலேயே மிகப்பெரியது. அவருக்கு இருமனைவிகள் உண்டு. முதல் மனைவி மூலம் 31 குழந்தைகளும், இரண்டாவது மனைவி மூலம் 12 குழந்தைகளும் பிறந்துள்ளன. இந்த 48 குழந்தைகளில் 38 ஆண்கள், 5 பெண்கள். எல்லாக் குழந்தைகளும் உயிரோடிருக்கின்றன.

## முதலை வயிற்றில் தங்கம்

இந்தியர்களால் கொல்லப்பட்ட ஒரு பெரிய முதலையின் வயிற்றில் 50 தங்கப் பவுன்கள் இருந்தனவாம்.

* * *

## வயிற்றில் 51 சாமான்கள்

மற்றொரு முதலையின் வயிற்றில் கீழ்க்கண்ட 51 சாமான்கள் இருந்தனவாம்.

| | |
|---|---|
| பெரிய பித்தளை வளையங்கள் | 11 |
| கயிற்றுக் கட்டுகள் | 3 |
| கண்ணாடி கழுத்துமாலை | 1 |
| கைகால் எலும்புகள் | 14 |
| முதுகெலும்புகள் | 3 |
| சணல் கயிற்றுக்கட்டு | 1 |
| பெரிய கற்கள் | 18 |

இதுவன்றி இன்னும் அநேக சிறிய சாமான்களும் பறவைகளின் எலும்புகளும் இருந்தனவாம்.

* * *

## வஞ்சம் தீர்த்த பாம்பு

ஜப்பல்பூருக்குச் சமீபமான ஜோரா ரயில்வே ஸ்டேஷன் பாலத்தருகிலுள்ள ஒரு வயலில் கோவிந்தன் என்பவன் புல் அறுத்தபோது ஒரு நல்ல பாம்பு தென்பட்டது. அதை அரிவாளால் குத்த சிறிது காயத்தோடு தப்பி ஓடிவிட்டது. கொஞ்ச நேரத்திற்குப் பின் கோவிந்தன் நிழலில் பல நண்பர்களோடு இந்த சம்பவத்தைச் சொல்லிக்கொண் டிருந்தபோது பாம்பு தங்களை நோக்கி வரக்கண்டு ஓடிவிட்டனர். ஆனால் அதே இரவு அவன் படுக்கைக்குப் போகும் போது இந்தப் பாம்பு திடீரெனத் தோன்றி கையில் கடித்துவிட்டது ஆஸ்பத்திரிக்கு உடனே அழைத்துச் செல்லப்பட்டு தக்க மருந்துகளால் அவன் உயிர் காப்பாற்றப்பட்டதாம்

---

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க நிருவாக சபைக் கூட்டம்

6-11-33உ மாலை 6 மணிக்கு, சென்னை அரண்மனைக்காரன் வீதி பளையகாட் கம்பெனிக் கட்டடத்தில் திரு. S. குழந்தைவேலு முதலியாரவர்கள் தலைமையில் நிகழ்ந்த நிர்வாக சபைக் கூட்டத்திற்குத் திருவாளர்கள் திருவாரூர் தி. நா. சபாபதி முதலியார், உன்னிலூர் R. மாணிக்க முதலியார், S. குழந்தைவேல் முதலியார், ம. சண்முகசுந்தர முதலியார், V. ரத்தின முதலியார், மா. அ. கனகசபை முதலியார் வந்திருந்தனர். கீழ்க்கண்ட விஷயங்கள் முடிவு செய்யப்பெற்றன.

(1) மித்திரன் பணக் கஷ்டத்தை அநுசரித்து திரு. T. N. சபாபதி முதலியாரவர்கள் மாதம் ரூபா 150 வரையில், 6 மாத காலம், கடனாக உதவுவதாக வாக்களித்தது நன்றியுடன் அங்கீகரிக்கப்பட்டது.

(2) மாதாந்தரம் கூடும் நிர்வாக சபைக் கூட்டத்தில் அந்தந்த மாத வரவு செலவுக் கணக்குகள் ஒப்புவிக்கப்பட வேண்டும்.

(3) துணையாசிரியராக இருந்த திரு. ஜே. தங்கவேல் முதலியாரவர்கள் அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்து விட்டதால் அவருக்குப் பதிலாக திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் துணையாசிரியராக நியமிக்கப்படவேண்டும்.

(4) ஆபீசில் வேலை செய்துவரும் திரு. தி. சண்முக முதலியாரவர்கள் 15-11-33 முதல் பணமுடையைக் கருதி நிறுத்தப்படவேண்டும்.

(5) திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் சங்க ஆபீசி லிருந்துகொண்டு சங்கம், கல்விநிதி, மித்திரனது சாதாரண—பரம்பரைச் சந்தாக்கள் இவற்றின் கணக்குகளைத் தனித்தனி குறித்து வரவும், சங்கக் கடிதப் போக்குவரத்துக்களைக் கவனித்து வரவும், மித்திரனை நடத்தி வரவும் ஏற்பாடு செய்ய முடிவு செய்யப்பட்டது.

(6) திரு. ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள் ராஜிநாமா செய்த சங்க அமைச்சர் பதவிக்கு அடுத்த பொதுக்கூட்டத்தில் நிர்ணயிக்கப் படும்வரை திரு. திரு. நா. சபாபதி முதலியாரவர்கள் இருக்க வேண்டுமென்று முடிவு செய்ததோடு, இதுவரை அமைச்சராயிருந்து உழைத்து வந்த திரு. சண்முகசுந்தர முதலியா ரவர்களுக்கு மிக்க நன்றியைச் செலுத்துவதாகவுந் தீர்மானிக்கப்பட்டது.

## சிறு கதைப் பரிசுகள்

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்டவல்ல சிறு கதைகளுக்கு அவ்வவற்றின் தரத்திற்கேற்றபடி ஐந்து ரூபாய் வரையில் பரிசளிக்கப்படும். கதைகள் சொந்தக் கற்பனையாகவும், இரசனை நிரம்பியதாகவும், மித்திரனில் 2 அல்லது 3 பக்கங்களுக்கு மேற்படாததாகவு மிருத்தல் வேண்டும். கதையின் அமைப்பு, தமிழ் நடையின் போக்கு, இன்பச்சுவை இவைகளைக்கொண்டே பரிசுத்தொகை தீர்மானிக்கப்பெறும். மித்திரனில் பிரசுரிப்பதற்கு யோக்கியமான கதைகளுக்குமட்டும் அவை பிரசுரிக்கப்பட்டவுடன் பரிசுத்தொகை அனுப்பப்படும். கவரின்மேல் 'சிறு கதைகள்' என குறிப்பிட வேண்டும்.

# விடுபட்ட எழுத்துப் போட்டிப் பந்தயம். பரிசு ரூ. 15

### பிரவேசக் கட்டணமில்லை

விடை கண்டுபிடிக்கும் விதம்:—கீழே குறித்துள்ள 6 வார்த்தைகளில் ஒவ்வொன்றிலும்—இவ்வாறு கோடிட்ட இடத்தில் ஒரெழுத்து மறைந்திருக்கிறது. அதற்கு நேரே கொடுத்திருக்கும் குறிப்பைக்கொண்டு சரியான வார்த்தையைக் கண்டு பிடிக்கவேண்டும்.

உதாரணம்:—முதலாவதாக கு—வி என்றிருக்கிறது. அதற்கு நேரே கொடுத்துள்ள குறிப்பில் இளமை என்றிருப்பதைக் கொண்டு சரியான வார்த்தை குழவி என்றறியலாம். மற்ற வார்த்தைகளையும் இவ்வாறே கண்டு பிடிக்கவேண்டும்.

### நிபந்தனைகள்

1. ஒருவர் எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். ஆனால் எல்லா விடைகளும் அச்சிட்ட கூப்பனிலேயே எழுதியனுப்ப வேண்டும். கூபன் கிடைக்காவிட்டால் விடைகளைத் தனிக்காகிதத்தில் எழுதி அத்துடன் கூப்பன் கிரயமான இரண்டணாவுக்குத் தபால் பில்லைகள் சேர்த்தனுப்ப வேண்டும்.

2. பத்திராதிபரின் விடைகள் ஒரு கவரில் சீல் வைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்விடைக்கு எழுத்துக்கு எழுத்து சரியாயிருக்கும் விடைக்கே பரிசு தரப்படும். சரியான விடைகள் ஒன்றுக்குமேல் வந்தால் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

3. விடைகள் 'விடுபட்ட எழுத்துப் போட்டிப் பந்தயம்' செங்குந்த மித்திரன் ஆபீஸ், பவழக்காரத் தெரு, சென்னை என்ற விலாசத்திற்கு 5-12-33-க்குள் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

### போட்டிப் பந்தய

| வார்த்தைகள் | குறிப்புகள் |
|---|---|
| (1) கு — வி. | இளமை. |
| (2) க — சு. | விஷம். |
| (3) — ன்னர். | பகைவர். |
| (4) கா — சி. | ஓர் க்ஷேத்திரம். |
| (5) — திர்ப்பு. | நடுக்கம். |
| (6) — ப்பிலி. | திப்பிலி. |

158912

விடுபட்ட எழுத்துப்போட்டிப் பந்தயம்

விடை கூபன்

1..........................................................

2..........................................................

3..........................................................

4..........................................................

5..........................................................

6..........................................................

பெயர்.................................................

விலாசம்...............................................

..........................................................


## செங்குந்தர் விடுதி

சென்னை மண்ணடிக்குச் சமீபமாய் பவழக்காரத் தெருவில் 151-ம் நெ. இல்லத்தில் நிகழும் கார்த்திகைமீ 9உ (24—11—33) செங்குந்தர் விடுதி திறக்கப்படுகிறது.

சென்னைக்கு வருகின்ற செங்குந்தர்கள் இனிக் கஷ்டமின்றி அங்கு தாராளமாய்த் தங்கக்கூடுமென்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

அமைச்சர்.




| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |